# ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மேதை

பாகம்-1






பாபநாசம் குறள்பித்தன்

# ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மேதை
## (பாகம் 1)


கவிஞர் பாபநாசம் குறள்பித்தன்

சென்னை பப்ளிகேஷன்
11, நானா தெரு, பாண்டிபஜார்,
தி.நகர், சென்னை - 17

# நூல் விவரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மேதை (பாகம் 1) |
| ஆசிரியர் பெயர் | : | கவிஞர் பாபநாசம் குறள்பித்தன் |
| மொழி | : | தமிழ் |
| முதற் பதிப்பு | : | 2009 |
| நூலின் அளவு | : | 1 x 8 டெம்மி |
| அச்சு எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கம் | : | 192 பக்கங்கள் |
| பைண்டிங் | : | சாதா அட்டை |
| வெளியிட்டோர் | : | சென்னை பப்ளிகேஷன்<br>11, நானா தெரு, பாண்டிபஜார்,<br>தி.நகர், சென்னை - 17. |
| நூலின் விலை | : | ரூ.100/- |
| ஒளி அச்சு | : | ஹர்ஷவர்தினி கிராப்பிக்ஸ்,<br>சென்னை. |
| அச்சிட்டோர் | : | அம்சா ஆப்செட்ஸ், சென்னை. |

## என்னுரையாக...



இந்நூலிற்கான தேடலின்போது...
சிலரைப் பார்த்தேன்; சிலரைப் படித்தேன்;
சிலரைப் பகுத்தேன்; சிலரை வகுத்தேன்;
சிலர் வழி நடக்க நினைத்தேன்...!

சிலர் கவிதையாக இனித்தார்கள்;
சிலர் புதையலாக கிடைத்தார்கள்;
சிலர் விதையாகச் சேர்ந்தார்கள்;
சிலர் என்னுள் விளைந்தார்கள்!

சிலர் கைதொழ வைத்தார்கள்;
சிலர் விழிகசிய செய்தார்கள்;
பலர் இதயத்தில் நிலைத்தார்கள்;
நின்றார்கள்...!

அப்படி இனித்தவர்களை;
கிடைத்தவர்களை;
என்னுள் நின்று நிலைத்தவர்களை எல்லாம்
இந்நூலிலே பதியன் போட்டிருக்கிறேன்;
பதிவு செய்திருக்கிறேன்...

இது ஒரு காலக் கண்ணாடி -
எல்லோரும் முகம் பார்க்கலாம்...
இது ஒரு வழிகாட்டி -
எல்லோரும் இதன்வழி நடக்கலாம்...!

இது ஒரு தொகுப்பு நூல் என்றாலும்
கடினமான உழைப்பு நூல்...!
படிப்பவர் உணரலாம்!


ஒரு துளி தேனிற்காக
ஒரு நூறு மைல் பயணிக்கும்
தேனீயின் தேடலில் எழுந்த
தேன்கூடு இது...!

நான்...
பல ஆண்டுகளாய்
பாதுகாத்த செய்திகள்;
பலரது படைப்புகளின் வழியே
எடுத்த குறிப்புகள்...
இந்நூலிற்காக பல நூறு

நூல்களின் தேடலில்
கிடைத்த விபரங்கள்...
எல்லாமும் இங்கே... இங்கே...
இடம் பிடித்துள்ளன!

பதிப்பாளர்; பாவலர்;
**திரு.பெ.மயிலவேலன்**
என் நன்றிக்குரியவர்!

திண்டுக்கல்லில் உள்ள
தன்னார்வத் தொண்டு நிறுவனமான
**'அமைதி அறக்கட்டளை'க்கும்**



எனது முயற்சியிலும்
வளர்ச்சியிலும்
மலர்ச்சியிலும்
மகிழ்வு பெறுகின்ற...
ஏழை எளியவர்களுக்கு - சென்னையில்
இலவச ஆம்புலன்ஸ்
சேவை செய்துவரும்
**திரு.டாக்டர் பி.ஆர்.எம்.எம்.**
**சாந்தகுமார் லலிதா**
தம்பதியினருக்கும்
இந்நூலை காணிக்கையாக்கி
மகிழ்கிறேன்!

எப்போதும் போல்
எனது எழுத்திற்கும்
இதயத்திற்கும்
துணை நிற்கின்ற - என் உயிர்
துணைவியார்
நீலா கண்ணனுக்கு - என்
வாழ்த்தும், வணக்கமும்!

நட்புடன்,
***குறள்பித்தன்.***

***13/1, 2-வது குறுக்குச் சந்து,***
***வெள்ளாளர் தெரு,***
***கோடம்பாக்கம்,***
***சென்னை - 600 024.***
***செல்: 94444 54335.***

பொருளடக்கம்

## ஜனவரி


| | | |
|---|---|---|
| *1.* | குறள்... | *11* |
| *2.* | சாதனை | *12* |
| *3.* | வீரவேங்கை | *13* |
| *4.* | வாழவேண்டும்! | *14* |
| *5* | தத்துவம்... | *15* |
| *6.* | திருமணமே... | *16* |
| *7.* | சாவ்லா | *17* |
| *8.* | வீரத்திலகம்! | *18* |
| *9.* | குணங்கள் | *19* |
| *10.* | நானே புனிதன்! | *20* |
| *11.* | இராஜதந்திரி | *21* |
| *12.* | ஏளனம் | *22* |
| *13.* | மில்லர் | *23* |
| *14.* | அஷ்டவதானி | *24* |
| *15.* | மார்ட்டின் | *25* |
| *16.* | பாடகி | *26* |
| *17.* | என் தலைவர் | *27* |
| *18.* | எளிமை | *28* |
| *19.* | நீராவி | *29* |
| *20.* | தந்தையைப்போல... | *30* |
| *21.* | 'தமிழ் ஒளி' | *31* |
| *22.* | மதகுரு | *32* |
| *23.* | நான் ஆடா...? | *33* |
| *24.* | வீரர்... | *34* |
| *25.* | முதன்முதலில்...! | *35* |
| *26.* | இளமையில்... | *36* |
| *27.* | நின்றுகொண்டே... | *37* |
| *28.* | லாலா...! | *38* |
| *29.* | டால்ஸ்டாய் | *39* |
| *30.* | கதை எழுத... | *40* |
| *31.* | காதல் மாளிகை | *41* |

## பிப்ரவரி


1. தனிமம் ........................................ 42
2. சத்தியாக்கிரகம் ........................................ 43
3. வேதியியல் ........................................ 44
4. தனியான கழுகு ........................................ 45
5. சக்கரம் ........................................ 46
6. நடிகர்... ........................................ 47
7. 'வேலை' ........................................ 48
8. கேப்டன்... ........................................ 49
9. மருதமலை ........................................ 50
10. என் உயிர்...! ........................................ 51
11. உழைப்பு ........................................ 52
12. மன்னிப்பு... ........................................ 53
13. அறிவு விளக்கு ........................................ 54
14. பைத்தியக்காரன் ........................................ 55
15. 'ஆட்டம்' ........................................ 56
16. நீண்ட தொடர்... ........................................ 57
17. அம்மா...! ........................................ 58
18. 'நீலவிழி' ........................................ 59
19. 'சிறப்பதிகாரம்' ........................................ 60
20. சிவகவிமணி ........................................ 61
21. கழிவில்... ........................................ 62
22. இளமையிலேயே... ........................................ 63
23. 'புரணமைப்பு' ........................................ 64
24. கடல் வாழ்க்கை ........................................ 65
25. ஓவியம் ........................................ 66
26. 'குரோம்வெல்' ........................................ 67
27. மனிதரும்... ........................................ 68
28. தன் சுதந்திரம்... ........................................ 69
29. 13 வயதில்... ........................................ 70

## மார்ச்


| | | |
|---|---|---|
| 1. | பாகவதர் | 71 |
| 2. | 'ஊரும் பேரும்' | 72 |
| 3. | டாடா ஏர்லைன்ஸ் | 73 |
| 4. | நானா | 74 |
| 5. | ஈ.வெ.கி. | 75 |
| 6. | மார்க்கெஸ் | 76 |
| 7. | கதிர்வீச்சு | 77 |
| 8. | கனவுக்கன்னி | 78 |
| 9. | தனித்தே... | 79 |
| 10. | ஆனந்தவிகடன் | 80 |
| 11. | தபோவனம்... | 81 |
| 12. | ஊதா நிறம்... | 82 |
| 13. | பேஸ்வர் | 83 |
| 14. | ஒளி என்பது... | 84 |
| 15. | பெருமகன் | 85 |
| 16. | சுகம்! | 86 |
| 17. | கோல்பு | 87 |
| 18. | 'டு மச்' | 88 |
| 19. | போலீஸ் நீதிபதி | 89 |
| 20. | குகா | 90 |
| 21. | ஆரியபட்டா | 91 |
| 22. | பியானோ... | 92 |
| 23. | அஞ்சல்காரன் | 93 |
| 24. | மணிக்கொடி | 94 |
| 25. | நாட்டுப்புற... | 95 |
| 26. | சாஸ்திரிகள் | 96 |
| 27. | 6 வயதில்... | 97 |
| 28. | ஆத்மாவின் பாடல் | 98 |
| 29. | கின்னஸ்... | 99 |
| 30. | சாது | 100 |
| 31. | ஜெருசலேம் பரிசு | 101 |

## ஏப்ரல்

| | | |
|---|---|---|
| 1. | இதயத்துடிப்பு | 102 |
| 2. | மனை(வி) விளக்கு | 103 |
| 3. | முதல் தலைவர் | 104 |
| 4. | 'ரேடியோ டான்ஸ்' | 105 |
| 5. | ஆன்டிசெப்டிக் | 106 |
| 6. | மாவீரன் | 107 |
| 7. | மரணகீதம் | 108 |
| 8. | சின்னமேரியே | 109 |
| 9. | அரிராம்சேட் | 110 |
| 10. | நீராவிக் கப்பலின் தந்தை | 111 |
| 11. | பயம்... | 112 |
| 12. | கரந்தைத் தமிழ்ச்சங்கம் | 113 |
| 13. | 'திரைலாஜி' | 114 |
| 14. | பிச்சை | 115 |
| 15. | மோனாலிசா | 116 |
| 16. | பிச்சையெடுத்து | 117 |
| 17. | மாணிக்கனார் | 118 |
| 18. | கொலை வழக்கு | 119 |
| 19. | செக் புத்தகம் | 120 |
| 20. | ஒரே மதிப்புதான். | 121 |
| 21. | 15-வயதிலேயே | 122 |
| 22. | புத்துலக சிற்பி... | 123 |
| 23. | கலப்புத் திருமணம்! | 124 |
| 24. | 'எக்ஸ்ட்ரா முந்தானா?' | 125 |
| 25. | மணி ஒலித்தது! | 126 |
| 26. | உலகம் மட்டும் | 127 |
| 27. | தந்தி | 128 |
| 28. | ரவிவர்மா | 129 |
| 29. | தன்மானக் கவிஞர் | 130 |
| 30. | மகளைவிட... | 131 |


## மே


| | | |
|---|---|---|
| 1. | ஹனிமூன் லேன் | 132 |
| 2. | பதேர் பாஞ்சாலி | 133 |
| 3. | படிப்பு முடியட்டும் | 134 |
| 4. | ரெட்டி | 135 |
| 5. | மூலதனம் | 136 |
| 6. | விவசாயிகள் | 137 |
| 7. | கீதாஞ்சலி | 138 |
| 8. | ஜனாதிபதி | 139 |
| 9. | பொதுநலத் தொண்டர் | 140 |
| 10. | நீதி அரசர் | 141 |
| 11. | 10 நாவலே | 142 |
| 12. | கவி மேதை | 143 |
| 13. | இசைக் கலைஞர் | 144 |
| 14. | மகாராணி | 145 |
| 15. | பிராட்வே | 146 |
| 16. | பாம்பன் பாலம் | 147 |
| 17. | அம்மை | 148 |
| 18. | கல்வியும் நல்வாழ்வும் | 149 |
| 19. | தங்கமணி | 150 |
| 20. | ஜென்னி-ரோமன் | 151 |
| 21. | 'நெவர் லவ் ஸ்ட்ரே ஜீசர்' | 152 |
| 22. | உடன்கட்டை... | 153 |
| 23. | சீசர் | 154 |
| 24. | பிராவ்தாவில் | 155 |
| 25. | டிட்டோ | 156 |
| 26. | கான்வித் த விண்டு | 157 |
| 27. | தணிகையை மீட்டவர் | 158 |
| 28. | மனித மரம் | 159 |
| 29. | இளையவர்... | 160 |
| 30. | 4000 பேர் | 161 |
| 31. | காலத்தின் கோலம்! | 162 |

## ஜூன்


| | | |
|---|---|---|
| 1. | பெண்தானே... | 163 |
| 2. | டைனமோ | 164 |
| 3. | இராணுவத்தலைவர் | 165 |
| 4. | டாக்டர் நாயுடு | 166 |
| 5. | காயிதே மில்லத் | 167 |
| 6. | சின்ன பீரிடு மண் | 168 |
| 7. | வண்ணக்கலப்பு | 169 |
| 8. | திவான் | 170 |
| 9. | இரயில்... | 171 |
| 10. | 'பலி' | 172 |
| 11. | 11 வயதிலேயே | 173 |
| 12. | இசை மேதைகள் | 174 |
| 13. | மணிக்கருவி | 175 |
| 14. | ஆவி இயந்திரம் | 176 |
| 15. | நம்பிக்கை | 177 |
| 16. | ஜோஷ்வா | 178 |
| 17. | ஸ்டாவன்ஸ்கி | 179 |
| 18. | சேலம் வீரர் | 180 |
| 19. | எளியோரின் நண்பன் | 181 |
| 20. | 7 கம்பிகள் | 182 |
| 21. | சிவப்புக் கையுறை | 183 |
| 22. | இளம் இத்தாலி | 184 |
| 23. | நட்சத்திர விஞ்ஞானி | 185 |
| 24. | கவியரசர் | 186 |
| 25. | தமிழுக்குழைத்த... | 187 |
| 26. | சிலம்புச்செல்வர் | 188 |
| 27. | அதிசயப்பெண் | 189 |
| 28. | 'எமிலி' | 190 |
| 29. | புள்ளியியல்... | 191 |
| 30. | கவிதை ஆராய்ச்சி | 192 |

# குறள்...




திருக்குறளை முதன் முதலில் ஜெர்மன் மொழியிலும், இலத்தின் மொழியிலும் 1856-இல் மொழி பெயர்த்தவர் இந்தியாவிற்கு சமயப்பணியாற்ற வந்த மறைதிரு.கேரல் க்ரால் என்பவர்தான்.

'லிப்ஸிக்' என்னும் நகரில் கல்வி பயின்ற இவர் 1870-இல் குரு பட்டமும் பெற்றார். அதே ஆண்டில் நவம்பர் 19-இல் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்.

இந்தியா வந்த கேரல் க்ரால், தமிழைக் கற்று, அவரது சமயப் பணிக்கிடையே திருக்குறளை மொழிபெயர்த்ததோடு, இலண்டனிலும், லிப்சிக் நகரிலும் வெளியிடப்பட்டது என்பது, அக்கால கட்டத்தில் சாதாரண செயல்பாடா, என்ன...?

திருக்குறளோடு இவர் தமிழ்த் தொண்டு முற்று பெற்றிடவில்லை... 'கைவல்ய நவநீதம்', 'பஞ்ச தசகப் பிரகர்ணா', 'ஆத்ம போதப்பிரகாசிகா' ஆகிய மூன்றும் முதல் பாகமாகவும், இரண்டாம் பாகத்தில் தமிழ் எழுத்துக்களிலேயே 'கைவல்ய நவநீதம்' அச்சிடப்பட்டு, அதற்கான ஆங்கில மொழி பெயர்ப்பும் இவ்வறிஞரால் நடந்திருக்கிறது. மேலும், 'சிவஞான சித்தியார்' என்னும் தமிழ் சைவ நூலையும் இவர் மொழியாக்கம் செய்திருக்கிறார்.

'இந்தியாவின் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்' என்னும் நூலை எழுதிய ஆல்பர்ட் ஸ்வெட்சர், கேரல் எழுதிய திருக்குறள் மொழியாக்கத்தைப் படித்ததனால்தான், அவர் எழுதிய நூலில் திருக்குறளைப் பற்றி பாராட்டி எழுதிட முடிந்தது என்றால், அது மிகையல்ல.

ஒன்பது ஆண்டுகள் சமயப்பணியும், தமிழ்ப்பணியும் ஆற்றிய கேரல், தரங்கம்பாடியில் 1879 ஜூலை 15-இல் இயற்கை எய்தினார்.

இந்தச் சமயத் தொண்டர் சேக்ஸனியிலுள்ள ம்யூஜெல்ன் என்னும் ஊரில் இன்றுதான் (01.01.1838) பிறந்தார்.

❑

## ஜனவரி-2 சாதனை

டாக்டர் ஐசக் அசிமோ, பல்வேறுபட்ட நிலையில் கட்டுரைகளையும் சிறுவர்களுக்கான மாயாஜால கதைகளையும், புதிர் கதைகளையும் எழுதியிருக்கிறார்.

இவர், தன் நண்பர்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் 90,000 கடிதங்களை எழுதியிருக்கிறார்.

இவர், தான் எழுதிய படைப்புகளை 500 தொகுதிகளாக வெளியிட்டு சாதனை புரிந்திருக்கிறார்.

இவர் காலத்தில் மூன்று சிறந்த எழுத்தாளர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களில் இவரும் ஒருவர்.

சிறந்த அறிவியல் மேதைகளை எல்லாம் வரலாற்று குறிப்புகளோடு தொகுத்து வெளியிட்டிருப்பது போலவே, பறவைகள், விலங்குகளின் வாழ்க்கை வரலாற்றையும் தொகுத்து எழுதி வெளியிட்டிருக்கிறார்.

'விஞ்ஞான வழிகாட்டி', 'இயற்பியலைப் புரிந்துகொள்வோம்', 'விஞ்ஞானமும் கண்டுபிடிப்பும்' - இந்த மூன்று நூல்களுமே இவரை உலகப் புகழுக்குரியவராக ஆக்கியது.

அமெரிக்காவில் இருந்த, அமெரிக்க மனிதநேய அமைப்பிற்குத் தலைவராக இருந்ததைப் பெருமையாக இவர் கருதினார்.

இவர் பல்வேறு விருதுகளைப் பெற்றவர்.

இந்த அறிவியல் எழுத்தாளர் ரஷியாவில் இன்றுதான் (02.01.1920) பிறந்தார்.

❒

அமெரிக்காவின் புகழ்பெற்ற கவிஞரான பிலிப் பிரெனவ் என்பவரும் இன்றுதான் (02.01.1752) பிறந்தார்.

❒



## ஜனவரி-3 வீரவேங்கை

குறுநில மன்னர்களின் குறுக்கு புத்தியால், வெள்ளையர்கள் விரித்த சதிவலையில் சிக்கிக் கொண்ட வீரவேங்கை கட்ட பொம்மனின் உயிர் பறிக்க வெள்ளை ஓநாய்கள் தூக்குக் கயிற்றைக் காட்டி நின்றனர்.

அது கேட்ட வீரமறவன் வீரபாண்டியன் எந்தவிதமான கலக்கமுமின்றி; நடுக்கமுமின்றி; தயக்கமுமின்றி தூக்கு மேடையை நோக்கி நடந்தான்.

வழியில் நின்றிருந்த, கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்த குறுநில மன்னர்களான குள்ளநரிகள் தான் தலை கவிழ்ந்து நின்றிருந்தனர்.

இனத் துரோகிகள் நம்மைக் காட்டிக் கொடுத்ததோடு அவர்கள் தங்களையே அழித்துக் கொள்ளப் போகிறார்களே...'' என்று தனக்குள் எண்ணிக் கொண்டான்.

புளிய மரத்தில் கயிறு தொங்கிற்று, அதனடியில் நாற்காலி ஒன்று... அதன் அருகில் சென்ற அவன் அங்கு நின்றவர்கள் அனைவரையும் பார்த்து, ''நான் இறக்கப் போவது பற்றி உண்மையில் துளிகூட வருந்தவில்லை. வெள்ளையரின் ஆட்சியிலிருந்து நமது நாடு விடுதலை பெற வேண்டும் என்ற எனது எண்ணம் நிறைவேற உங்கள் ஒத்துழைப்பு மனப்பூர்வமாக கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நான் அனைவரிடமிருந்தும் விடை பெறுகிறேன். எனக்கு ஏற்பட்டு உள்ள இந்த முடிவு பற்றி யாருமே வருந்த வேண்டாம்...'' என்று கூறியபடியே நாற்காலியின் மீது ஏறி தூக்குக் கயிற்றை எடுத்துத் தன் கழுத்தில் மாட்டிக் கொண்ட அவன், நாற்காலியைக் காலால் உதைத்துத் தள்ளினான். அவ்வளவுதான்.

அந்த ஒப்பற்ற வீரனின் உயிர்ப் பறவை பறந்து போயிற்று.

தமிழ் நாட்டின் முதல் விடுதலை வீரனான வீரபாண்டிய கட்ட பொம்மன் பாஞ்சாலங்குறிச்சியில் இன்றுதான் (03-01-1760) பிறந்தான்.

❐

உயிருடன் கொளுத்தப்பட்ட ரோமானியச் சிந்தனையாளரும், அரசியல்வாதியுமான ஸிஸரோவும் இன்றுதான் (03-01-கி.மு.106) பிறந்தார்.

❐

## ஜனவரி-4 வாழவேண்டும்!

ஜே.சி.குமாரப்பா சிறந்த கிறிஸ்துவர். பின்னாளில் காந்தியடிகள் வடிவிலே கிறிஸ்துவை காண்பதாக கூறி அவரிடம் உண்மையான அன்பை செலுத்தினார். அவரிடம் உங்களுக்கு கிறிஸ்துவ மதத்தின்மீது இளம் பருவத்தில் பற்று எப்படி ஏற்பட்டது என கேட்டபோது அதற்கு அவர்தன் பதிலை தந்தார்.

“எங்களுடைய இளமை காலத்தில் எங்கள் அம்மா ஒரு நாள் எங்கள் வீட்டில் அனைவருக்கும் சுவையான உணவு களை ஆக்கித் தந்து, வயிறு நிறைய எங்களை சாப்பிடச் செய்தார். இன்று என்னம்மா விஷேசம்?’’ என்று எல்லோரும் கேட்டோம்.

அதற்கு எங்கம்மா, “நாம் அனைவரும் இப்போது திருப்தியாக சாப்பிட்டோம். இந்த உணவு நமக்கு மன நிறைவையும், மகிழ்ச்சியையும் தருகிறது. இந்த நேரத்தில் உங்களிடம் உங்கள் அம்மா எதைக் கேட்டாலும் அதை தருவதற்கு சம்மதமாய் இருப்பீர்கள். நாம் வயிறாற சாப்பிட வசதி இருப்பதால் திருப்தியாக சாப்பிட்டு விட்டோம். ஆனால் உலகத்தில் பல பாகங்களில் ஒருவேளை உணவு கூட இல்லாமல் பல கோடி மக்கள் பெரும் துன்பத்திலே வாழ்கிறார்கள். அவர்களும் நம்மை போல நிறைவாக சாப்பிட்டு வாழ்வதற்கு நாம் நம்மால் ஆனதை செய்ய வேண்டாமா? நீங்கள் எல்லாம் உங்கள் பங்கிற்கு அவர்களுக்காக என்ன தருவீர்கள்?’’ என கேட்டார்.

அன்றைய கால கட்டத்தில் நாங்கள் அனைவரும் எங்கள் செலவுகளில் எதுஎது அனாவசியமானது என்பதை யோசித்துப் பார்த்து, அந்த செலவுகளை தவிர்த்து அந்த பணத்தை உங்களிடம் தருகிறோம். அதை நீங்கள் ஏழை களுக்காக எப்படி பயன்படுத்த முடியுமோ அப்படி பயன்படுத்துங்கள்’’ என்று சொன்னோம்.

அன்று எங்கள் அம்மா எங்கள் வயிறை நிறைய வைத்து ஏழைகளின் பசியை நினைவுபடுத்தியபோதுதான் பிறருக்காக நாம் வாழ வேண்டும் என்ற கிறிஸ்துவ மதத்தின் தத்துவம் எங்கள் மனதிலே ஆழப் பதிந்தது என ஜே.சி.குமாரப்பா கூறியிருக்கிறார்.

இவர், இன்று தான் (04-01-1892) பிறந்தார்.

❑

## ஜனவரி-5 தத்துவம்...

ருடால்ஃப் அய்க்கன், இளமையிலேயே தந்தையைப் பிரிந்ததால் அன்னையின் அணைப்பிலே வளர்ந்தார். கல்வி பயின்றார். இளமையில் இவர் இதயம் கணிதத்தில்தான் கருத்தூன்றியிருந்தது. வில்ஹெம்ராய்ட்டர் என்ற நூலக நிபுணரின் தூண்டுதலால்தான் மதம், மற்றும் தத்துவம் போன்ற நூல்களைக் கற்கத் தொடங்கினார். தத்துவப் படிப்பு இலக்கியச்சுவையைத் தந்துவிட்டது.

19-வயதில் தத்துவ விளக்கத்தில் பி.எச்.டி. பட்டம் பெற்றார். அதன் பிறகு சில காலம் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார்.

இந்த வேளையில்தான் இவருக்கு நூல் எழுதும் ஆசை அரும்பியது. முதன் முதலாக அரிஸ்டாட்டலின் தத்துவத்தை விளக்கி 1870-இல் இரு நூல்கள் வெளியிட்டார்.

அதுவே அவருக்குத் திருப்புமுனையாக அமைந்தது. 1871-இல் பாசல் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

இரண்டு ஆண்டுகளுக்குப்பின், ஜீனா பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராகப் பொறுப்பேற்று 1920 வரையில் அங்கேயே இருந்தார்.

இவர் தத்துவ சிந்தனைகளை மட்டும் எழுதவில்லை. ஆவி தொடர்பான ஆராய்ச்சியிலும் ஈடுபட்டு புகழ் பெற்றார். தத்துவமேதைகளின் பட்டியலில் இவரது பெயரும் இடம் பெற்றது. இந்த தத்துவமேதை 1908-இல் நோபல் பரிசையும் பெற்றார்.

இவர், கிழக்குப் பிரைஸ்லாந்திலுள்ள ஆரிச் என்ற ஊரில் இன்றுதான் (05-01-1846) பிறந்தார்.

❒

அமெரிக்காவின் புகழ்பெற்ற கடற்படைத் தளபதியும், மாவீரனுமான ஸ்டீபன் டெக்காட்டர் என்பவரும் இன்றுதான் (05-01-1779) பிறந்தார்.

❒

## ஜனவரி-6 திருமணமே...

இளமையில் ஓவியர் கஸ்டவ்டோர், துடுக்குத்தனம் கொண்டவராக இருந்தார்.

வண்ண வண்ண ஓவியங்களைத் தீட்டுவது போலவே கேலிச் சித்திரங்களையும் தீட்டிக் காட்டுபவன்தான் ஓவியன் என்று எண்ணியிருந்த காலத்தில் வாழ்ந்தவன் அவன். எனவே தான் அன்றாட நிகழ்ச்சிகளையும், அரசியல் பின்னணி களையும் அவன் ஓவியங்களாகத் தீட்டி, மக்களை அசத்தினான்.

இத்தகு சிறப்பு மிக்க ஓவியங்கள், அவனது உற்ற தோழனான பிலிப்பான் மூலம் மாதம்தோறும் பத்திரிகையில் வெளிவந்தன; புகழ் சேர்த்தன. இலக்கிய ஓவியப்பணியும் அவரை வெகுவாக உயர்த்தியது.

நாவலாசிரியரான சர்வென்டஸ் எழுதிய ‘டான்குயிக்ஸாட்’ என்னும் நகைச்சுவை நவீனத்திற்கு ஓவியம் தீட்டியது இவனது தூரிகைதான். மேலும், டெனிசன் போன்ற ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளுக்கெல்லாம் உயிர்த்துடிப்பான எழிலோவியங்களைத் தந்தவனும் இவன்தான்.

*1869*-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் பிரெஞ்சு நாடு அவனை அதிகாரப்பூர்வமாகத் தன்நாட்டு ஓவியப் பிரதிநிதியாக ஏற்று சிறப்பித்தது. இத்தகு சிறப்புமிக்க ஓவியனான கஸ்டவ், 51 ஆண்டுகள் வாழ்ந்த வாழ்வில் திருமணமே செய்து கொள்ள வில்லை. வாழ்நாள் எல்லாம் ஓவியக்கலை என்றே வாழ்ந்தான்.

பிரெஞ்சு நாட்டு ஓவியனான இவன், இன்றுதான் (06-01-1832) பிறந்தான்.

❒

முதன் முதலாகப் பலூனில் வெற்றிகரமாகப் பறந்து ஜாக்விஸ்மாண்ட் கோல்ஃபியரும் இன்றுதான் (06-01-1745) பிறந்தார்.

❒

பிரபல அமெரிக்கக் கவிஞரான கார்ல் ஸாண்ட்பர்க்கும் இன்றுதான் (06-01-1878) பிறந்தார்.

❒

## ஜனவரி-7 சாவ்லா

படிப்பில் அவள் முதல் இடத்தில் இருந்தாள். விளையாட்டில் ஈடுபட்டாள்; நடனத்தில் நாட்டம் கொண்டாள்; அறிவியலில் அளவுகடந்த அளவில் ஆர்வம் கொண்டாள், தற்காப்புக் கலையான கராத்தேயிலும் கால்பதித்தாள்; கை அசைத்தாள். இப்படி எத்துறையிலும் முத்திரை பதித்த பெண் யார்...? அவள் தான் கல்பனா சாவ்லா!

விண்கலத்தில் பறந்து, இந்தியாவின் பெருமை சேர்த்து மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சில் நிறைந்து இருக்கும் மாணிக்கச் சுடர்.

இவர், கர்னாலிலுள்ள தாகூர் பால நிகேதன் பள்ளியில் 1978-இல் பள்ளிப் படிப்பை முடித்தார். 'விமானப் பொறியியல் பட்டப்படிப்பை முடித்தார். 'பஞ்சாப் இன்ஜினியரிங் கல்லூரியில் சிறிது காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

அமெரிக்காவிலுள்ள ஆர்லிங்டன் பல்கலைக் கழகத்தில் 1984-இல் 'ஏரோதோ ஸ்பேஸ் இஞ்சியரிங் துறையில் எம்.எஸ். பட்டமும், அந்நாட்டிலுள்ள 'கொலோராடா பல்கலைக் கழகத்தில் ஏரோ ஸ்பேஸ் இஞ்சினியரிங் துறையில் டாக்டர் பட்டமும் பெற்றார். இதே ஆண்டில் கலிபோர்னியா விலுள்ள எம்.சி.ஏடி இன்ஸ்டிடியூட்டில் அறிவியல் ஆய்வாளராகப் பொறுப்பேற்றார்.

1994-இல் அமெரிக்கக் குடியுரிமைப் பெற்று, விமானப் பயிற்சி பெற்று... படிப்படியாக அத்துறையில் முன்னேறி, கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ் 107-இல் இரண்டாம் முறையாக 2004 ஜனவரி 16 அன்று விண்வெளிப் பயணத்தை மேற்கொண்டு, 16 நாட்கள் விண்ணில் வெற்றிகரமாக ஆய்வை முடித்துக் கொண்டு 2003 பிப்ரவரி 1 அன்று மண்ணைத் தொடுவதற்கு 16 நிமிடங்களே இருக்கும் வேளையில்... அந்தோ விண்கலம் வெடித்துச் சிதறியது... உடன் சென்ற ஆறு பேருடன் கல்பனா சாவ்லாவும் தனது இறுதிப் பயணத்தைத் தொடர்ந்தார்.

இந்த சாதனைப் பெண் அரியானா மாநிலம் கர்னால் என்ற நகரில் இன்றுதான் (07-01-1961) பிறந்தார்.

❑

## ஜனவரி-8 வீரத்திலகம்!

பலர் உலகில் வாழ்கிறார்கள். சிலர் வரலாறாய் மாறுகிறார்கள். அவர்களில் பத்மஸ்ரீ அம்புஜம் அம்மையாரும் ஒருவர்.

அண்ணல் காந்தியடிகளின் அன்புக்குப் பாத்திரமாகி, நாட்டுப்பணிக்காக நாளும் பொழுதும் உடலாலும், உள்ளத்தாலும் பாடுபட்டு வாழ்ந்தவர்; உயர்ந்து சிறந்தவர், இவ்வீரப் பெண்மணி.

இந்தியச் சுதந்திர வரலாற்று ஏட்டைப் புரட்டினால் இவரது பெயரும் அதில் பதிவாகி இருப்பது புலனாகும். இவரது வாழ்க்கை சுதந்திர இயக்க வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகும்.

அண்ணல் காந்தி, அருமை நேரு, சுட்டெரிக்கும் சுதந்திர வீரர் சுபாஷ் சந்திரபோஸ் போன்ற விடுதலை வீரத் தலைவர்களுக்கெல்லாம் தமது வீட்டில் விருந்து கொடுத்து மகிழ்ந்து பேறுபெற்ற மங்கையர்த்திலகம் திருமதி.அம்புஜம் அம்மையார்.

பெண் குலத்திற்கு ஒரு மாணிக்கமாகி, நாட்டுப் பற்றுக்கு ஒரு நல்ல பெண்மணியாகி, சமூகத் தொண்டில் சரித்திரமாகி தமிழ் நெஞ்சங்களில் எல்லாம் தன்மான உணர்வினை ஊட்டி நிற்பவர்தான் இவர்.

திருமதி.அம்புஜம் அம்மையார் கலந்து கொள்ளாத போராட்டங்களே தென்னாட்டில் குறைவு என்றே கூறலாம்.

பெண்ணுரிமைக்காக முன் நின்றார். அன்னிய துணி பகிஷ்கரிப்பில் முன் நின்றார். உண்ணாவிரதப் போராட்டமா; உப்பு சத்தியாகிரகப் போராட்டமா; அங்கேயும் முன் நின்றார்.

கதராடையோடும், வெள்ளையரை வெளியேற்ற விழிகளிலே கனல் ஏற்றி வீரப் போர் நடத்திய இந்த வீரத்திலகம் இன்றுதான் (08.01.1899) சென்னையில் பிறந்தார்.

❑

புகழ்பெற்ற அமெரிக்கப் பாடகரான எல்வின் பிரிஸ்லி என்பவரும் இன்றுதான் (08.01.1935) பிறந்தார்.

❑

## ஜனவரி-9 குணங்கள்

ஹர்கோபிந்த கொரானா மரத்து நிழலில் நடந்த பள்ளி ஒன்றில் படித்தவர். இவரது நம்பிக்கையும் உழைப்பும், அறிவுத் திறனும் லாகூர் பல்கலைக் கழகத்தில் ரசாயனத்தில் எம்.எஸ்.ஸி., இங்கிலாந்தில் லிவர்பூல் பல்கலைக் கழகத்தில் பி.எச்.டி. போன்ற பட்டங்களைப்பெற்றுத் தந்தன.

பின்னர், அமெரிக்கா, மஸாசூஸட்ஸ் தொழில் நுட்பக் கழகத்தில் தமது விஞ்ஞான ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்.

முன்னதாக பிரிட்டிஷ் கொலம்பியா விஸ்கோன்ஸின் பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகப் பணிபுரிந்தும் இருக்கிறார்.

இந்த அறிவியல் மேதைக்கு நோபல் பரிசும் கிடைத்தது. எதற்காக அந்தப் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது...?

பாரம்பரிய குணங்களை நிர்ணயிப்பவை ஜீன்கள். இந்த இவரின் ஆய்வு புதிய உயிரியல் விஞ்ஞானத்தின் புதிய சிந்தனை.

பாரம்பரிய குறைபாடுகளை நீக்க முடியும் என்ற நம்பிக்கை விதையை நட்டவர், கொரானா.

ஜீன் எனப்படும் மரபுக்கூற்றை செயற்கையாகத் தொகுத்துத் தந்த முதல் விஞ்ஞானமேதை இவரே.

இயற்கை யான ஜீன் போலவே இவரது தொகுப்பும் அமைந்ததுதான் - அவருக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது!

பஞ்சாபில் - ரெய்ப்பூர் என்ற குக்கிராமத்தில் இந்த மேதை இன்றுதான் (09-01-1922) பிறந்தார்.

❑

அமெரிக்காவின் 37-வது ஜனாதிபதியான ரிச்சர்ட் எம்.நிக்சனும் இன்றுதான் (09-01-1913) பிறந்தார்.

❑

## ஜனவரி-10 நானே புனிதன்!

கிக்கோரி ராஸ்புதீ. இவர் ஒரு ஆன்மிகவாதி. விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். சைபீரியாவைச் சேர்ந்தவர். 18 வயதில் மடாலயத்தில் சேர்ந்தார்.

அங்கே இருந்தபடியே தன்னைப் போல் உள்ள ஆன்றோர்களைச் சந்தித்தார்.

1889-இல் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து, மூன்று குழந்தைகளுக்குத் தந்தையாகவும் ஆனார்.

கிரீஸ் ஜெருசலம் போன்ற நாடுகளுக்குப் புனிதப் பயணம் சென்று வந்த பிறகு, 'தன்னை நாடி வரும் பக்தர்களின் நோய்களைப் போக்குவேன், அவர்களின் துன்பங்களைத் தீர்ப்பேன், அவர்கள் வேண்டுவதை எல்லாம் கொடுப்பேன்' என்று பொதுமக்களிடம் அறிவித்தார்.

அத்தோடு நில்லாது, தான் ஆண்டவனின் அருள் பெற்றவர், புனிதர் என்றும் தன்னைச் சொல்லிக் கொண்டதோடு -

'ஜபத்தால் எல்லாவித துன்பங்களையும் நம்மால் போக்கிக் கொள்ள முடியும் என்றும் மருத்துவர்களைத் தொந்தரவு கொடுக்காமல் ஜபத்தில் ஈடுபடுதலே சிறந்தது' என்றும் அடிக்கடி சொல்லி வந்தார்.

தன்னை நாடி வரும் நோயாளிகளை எல்லாம் இவர் இயற்கை மருத்துவத்தாலேயே குணப்படுத்துகின்ற ஆற்றல் பெற்றிருந்தார்.

ஒருமுறை, இவரை நாடி, ஆயிரக்கணக்கான தேனீக்கள் கொட்டிக் கொண்டிருக்கும் மனிதர் ஓடி வந்தார். ஈக்களின் கொட்டுதல் தாங்க முடியாது அவர் துடித்துக் கொண்டிருந்தார்.

தன்னை நாடிவந்த அந்த மனிதரை நெருங்கி வாயால் ஊத, தேனீக்கள் பயந்து, அவரை விட்டுப் பிரிந்து சென்றனவாம்.

இவர் ரஷிய நாட்டில் இன்றுதான் (10.01.1863) பிறந்தார். ❒

## ஜனவரி-11 இராஜதந்திரி

அலெக்சாண்டர் ஹமில்டன். இவர் ஒரு எழுத்தாளர், சட்ட நிபுணர், அரசியல்வாதி, இராஜதந்திரி, இராணுவ அதிகாரி. அமெரிக்காவின் அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களுள் இவரும் ஒருவர்.

அமெரிக்க அரசின் முதல் நிதி நிலை செயலர் இவரே. இவர்தான் அமெரிக்க வங்கியை முதன்முதலில் திறந்து வைத்தார்.

இவர்தான் ‘பெடரலிஸ்ட் பார்ட்டி’யைத் தொடங்கி வைத்தவர். இவர் இறப்பு வரை இவரே இக்கட்சியைத் தன் கீழ் வைத்திருந்தார்.

ஆரம்ப நிலையில் வளர்ச்சி பெற முடியாத நிலையில் இருந்த தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு நிதி உதவியளித்து மேன்மைப்படுத்தினார்.

வங்கிகளின் பயன் மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினார்.

மையக்கூட்டாட்சி அரசமைப்புக்கு இவரே தந்தையாக இருந்தவர். அந்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் பாடுபட்ட தோடு, நாட்டின் பாதுகாப்புத் துறையை வலிமைப்படுத்து வதிலும் முன்நின்றார்.

தந்தை ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவர். தாய் பிரான்ஸைச் சேர்ந்தவர். கலப்பு மண தம்பதியினருக்குப் பிறந்தவர் இவர்.

இவர், கொலம்பியா பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்றார். படிக்கும்போதே வியாபாரத்தில் நாட்டம் கொண் டிருந்தார். இளமையிலேயே இவரைவிட பெரியவர்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்கின்ற ஆளுமைப் பெற்றிருந்தார்.

இவர் பிரிட்டனில் இன்றுதான் **(11.01.1755)** பிறந்தார்.

❒

கனடாவின் முதல் பிரதமரான ஸர் ஜான் மெக்டோ னர்லட் என்பவரும் இன்றுதான் **(11.01.1815)** பிறந்தார்.

❒

பெர்னார்ட் டிவோட்டோ என்ற புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளரும் இன்றுதான் **(11.01.1897)** பிறந்தார்.

❒

## ஜனவரி-12 ஏளனம்

விவேகானந்தர் ஒரு சமயம் இரயிலில் பயணம் செய்துகொண்டு இருந்தார். அவர் துறவி என்பதால் கையில் காசு வைத்துக்கொள்ளவில்லை. அதே பெட்டியில் அவருக்கு எதிரே அமர்ந்திருந்த செல்வந்தர் இருவர் அவ்வப்போது அந்த ரயில் ஸ்டேஷனில் நிற்கும் பொழுதெல்லாம் விதவிதமான பலகாரங்களை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

ஒரு கட்டத்தில் அவர்கள் விவேகானந்தரைப் பார்த்து, ''என்ன சாமியாரே! இரண்டு காசு சம்பாதிக்க படித்தால் எங்களைப்போல நீரும் வேண்டியவைகளை திருப்தியாக வாங்கிச் சாப்பிடலாம் அல்லவா'' என ஏளனமாகப் பேசினார்கள். விவேகானந்தர் மவுனமாய் இருந்தார்.

இரயில் நின்ற சிறிது நேரத்தில் பிளாட்பாரத்தில் ஒரு மனிதர் கையில் ஏதோ பொருள்களை துணியால் மூடிக்கொண்டு வந்தபடி, ''விவேகானந்தர் சுவாமி எங்கே இருக்கிறார்? சுவாமி எங்கே இருக்கிறார்?'' என்று சத்தமிட்டுக் கொண்டே வந்தவர், விவேகானந்தர் இருந்த பெட்டியில் அவரைக் கவனித்துவிட்டு, ''சுவாமி! இங்கேதான் இருக்கிறீர்களா?'' என்று சொன்ன படியே பெட்டியில் ஏறி வந்து தான் கொண்டு வந்த பண்டங்களை எல்லாம் அவர் முன்னே படைத்தார். இதைக்கண்டு அந்த இரு செல்வந்தர்களும் திகைத்தனர். விவேகானந்தரும் திகைத்தபடி, ''நீங்கள் யார், இந்த பலகாரங்களை யாருக்காகக் கொண்டு வந்தீர்கள்?'' என அந்த நபரைப் பார்த்து விசாரித்தார்.

அதற்கு அந்த நபரோ, ''சுவாமி! நான் இந்த இரயில் நிலையம் அருகே பெரிய பலகாரக்கடை வைத்திருக்கிறேன். சற்று நேரத்திற்கு முன்பு கடையில் அதிக வியாபாரம் இல்லாத நிலையில் சிறிது கண்ணயர்ந்தேன். அந்த சமயம் உங்களைப் போன்ற ஒருவர் என் கனவில் தோன்றி, ''என்ன நீ இங்கே தூங்கிக் கொண்டு இருக்கிறாய்? வரப்போகிற இரயிலில் விவேகானந்தர் பசியோடு வந்து கொண்டிருக்கிறாரே, அவரைப் போய் நீ கவனிக்க வேண்டாமா? என்று கேட்பதுபோல் கனவு தோன்றவே திடுக்கிட்டு விழித்தேன். உடனே கடையில் இருந்து பலகாரங்களை எடுத்துக்கொண்டு தங்களைச் சந்திக்க ஓடி வந்தேன்'' என்று கூறினார்.

இதைக்கேட்டு, சற்று முன் ஏளனம் பேசிய செல்வந்தர்கள் விவேகானந்தரிடம் மன்னிப்புக் கேட்டார்கள்.

இந்த ஈர இதயம் கொண்ட விவேகானந்தர் வங்கத்தில் இன்றுதான் **(12.01.1863)** பிறந்தார்.

❐

## ஜனவரி-13 மில்லர்

வீரமாமுனிவர், கால்டுவெல், ஜி.யூ.போப் முதலிய மேல்நாட்டு மேதைகள் தமிழுக்குச் செய்த தொண்டு வானவில்லாய் வரலாற்று ஏடுகளில் வண்ணமாய் ஒளிவீசிக் கொண்டு இருக்கின்றன.

இவர்களோடு இந்த வரலாற்றுப் பட்டியலில் ஸ்காட் லாந்தைச் சேர்ந்த டாக்டர் மில்லரையும் இணைத்துக் கொள்வது நன்றியுடன் கூடிய கடமையாகும்.

மில்லரின் தந்தை பெரும் செல்வந்தராக இருந்ததோடு, பல கப்பல்களுக்கு சொந்தக்காரராகவும் இருந்தார். மில்லர் பள்ளிக் கல்வியை முடித்து, கல்லூரியில் சேர்ந்து, மதம் குறித்த செய்திகளோடு இலத்தீன், கிரீக், இயற்கைச் சரித்திரம், கணிதம், இயற்கைத் தத்துவம், நல்லொழுக்கத் தத்துவம், தர்க்கம் முதலியவற்றை விரும்பி கற்றார்.

மதம் தொடர்பான அறிவை பெற்றிருந்ததால், மில்லர் எடின்பரோவில் இருந்த பிரீசெயின்ட் ஜார்ஜ் சர்ச் என்னும் ஆலயத்தில் இருந்த பாதிரியாருக்குச் சிலகாலம் உதவியாக இருந்து வந்தார். பின்னர் செயிண்ட் டேவிட்மிஷனுக்கு அதிகாரியாக இருந்தார்.

1835-ஆம் ஆண்டு செயிண்ட் ஆண்ட்ரூஸ் மாதா கோயிலின் சார்பாகச் சென்னை - வேப்பேரியில் ஒரு பள்ளி தொடங்கப்பட்டது. இந்தப் பள்ளியின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்வதற்காக 1837-இல் ஸ்காட்லாந்திலிருந்து ஆண்டர்சன் என்பவர் வரவழைக்கப்பட்டார்.

நிர்வாகத்தை ஏற்றாரே தவிர கல்வியின் தரம் கூடவில்லை. பள்ளிதான் பல இடங்களுக்கு மாறியது. இந்நிலையில் பள்ளியின் நிருவாகக் குழு கூடி, மில்லரிடம் பள்ளியை ஒப்படைக்க முடிவெடுத் தனர். அதன்படியே செய்தனர். 1862-இல் மில்லர் சென்னைக்கு வந்தார். பொறுப்பேற்றார்.

இவரின் பார்வையின் கீழ் பள்ளியும் வளர்ந்தன; கல்வியும் வளர்ந்தது. பள்ளி கல்லூரியானது. அப்போது அவருக்கு வயது இருபத்து நான்கே! இன்று சென்னை யிலுள்ள புகழ்மிக்க கல்லூரிகளில் ஒன்றான, சென்னை கிறித்துவக் கல்லூரி டாக்டர் மில்லரின் கொடையே!

இக்கல்வி மேதை, ஸ்காட்லாந்து நாட்டிலுள்ள கெய்த்னஸ் மாநிலத்தில் தர்ஸோ என்னும் நகரில் இன்றுதான் (13-01-1838) பிறந்தார்.

❑

## ஜனவரி-14 அஷ்டவதானி

இவரை பல்துறை வித்தகர் என்று சொல்லலாம். யார் அவர்...? ஆல்பெர்ட் ஷ்வைட்ஸர்தான் அவர். பாரிசிலும் பெர்லினிலும் மதக்கல்வி பயின்று தேர்ச்சி பெற்ற இவர், ஸ்ட்ராஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் மதத் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றியவர். இந்த நிலையில் அவருக்கு நாட்டம் ஏற்பட, ஆர்கன் எனப்படும் இசைக்கருவியில் இசைப்பதில் நல்ல தேர்ச்சி பெற்றார். அதில் உலக அளவில் புகழும் பெற்றார்.

1905-இல் மதத்துறைப் பணியிலிருந்து விலகி மருத்துவம் கற்றார்; பட்டம் பெற்றார். இந்த நிலையில் ஆப்பிரிக்கா விலுள்ள லாம்பரின் என்ற சிறிய ஊருக்குச் சென்று தன் சொந்தப் பணத்தைக் கொண்டு ஒரு மருத்துவமனையைத் தோற்றுவித்தார். மக்களின் மருத்துவச் செலவை சமாளிக்க இடையிடையே ஐரோப்பாவுக்குச் சென்று தமது இசை நிகழ்ச்சியை நடத்திப் பணம் கொண்டு வருவார்.

ஒரு துறவியைப் போல வாழ்ந்து ஏழை, எளியவர் களுக்காக தன் சுக துக்கங்களை எல்லாம் மறந்து சேவை செய்து வந்த அவருக்கு நோபல் பரிசும் கிடைத்தது. அவரது மனைவி கணவரின் இலட்சிய தொண்டிற்காகவே நர்ஸ் பயிற்சி பெற்று உடனிருந்து பணியாற்றினார். வன விலங்குகளும், கொடிய விசப்பாம்புகளும், அழுக்கும் அறியாமையும் கொண்ட மக்களும் உள்ள அந்த ஊரில் இந்த இலட்சியத் தம்பதி, எதிர்ப்படும் துன்பங்களை இன்முகத்துடன் ஏற்று பணிபுரிந்தனர்.

இவர் மருத்துவம், தத்துவம், இசை மட்டும் பயில வில்லை. விவசாயம், தச்சுவேலை, கட்டட வேலை, தோட்டக் கலை ஆகியவற்றை அறிந்தவர். மேலும் கால்நடைகளுக்கும் மருத்துவம் பார்த்த இவர், ஏழாவது வயதிலேயே பாடல்களை இயற்றத் தொடங்கினார். உலகில் உள்ள அனைவருக்கும் தங்கள் தொண்டு சென்றடைய வேண்டும் என்று வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தார்.

அஷ்டவதானியான இவர் இன்றுதான் (14.01.1875) பிறந்தார்.

❑

சி.டி. தேஷ்முக் நீண்ட நாட்கள் ரிசர்வ் பாங்க் கவர்னராக இருந்து பின்னர் நிதி மந்திரியாகவும் இருந்த இவரும் இன்றுதான் (14.01.1896) பிறந்தார்.

❑

## ஜனவரி-15 மார்ட்டின்

அமெரிக்காவிலிருந்த நிறவெறியை எதிர்த்துப் போராட ஆயுதங்களை ஏந்தாமல், அகிம்சையை இதயத்தில் ஏந்தி வெற்றி கண்டவர், மார்ட்டின் லூதர் கிங். காந்தியடிகளின் கொள்கையில் ஈர்க்கப்பட்டு அவர் வழியில் வெற்றி பெற்றவர் இவர்.

மத போதகராக ஆலயத்தில் பணியாற்றி வந்தவர், தம் இனத்தவர் படும் தொல்லைகளையும், அவமானத்தையும் மனம் கலங்கி மக்களுக்காக பாடுபடத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். இவரது அறப்போராட்டம் அகில மக்கள் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது.

நிறவெறி அதிகமாக இருந்தது, அமெரிக்காவின் தென் மாநிலங்களில்தான். அமைதியாகப் போராடிய நீக்ரோக்கள் வன்மையாகத் தாக்கப்பட்டனர். மார்டினை கொன்றுவிடவும் பல்வேறு முயற்சிகள் நடைபெற்றன.

அவர் வீட்டின் மேல் குண்டுகள் வீசப்பட்டன. இப்படி அளவுக்கு மீறி கொடுமைப் படுத்தப்பட்ட போதும், வன்முறையில் ஈடுபடக்கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அவரது பொறுமையும், அறிவும் வெள்ளையர் பலரையும் அவரது சீடர்களாக்கின. அவருக்குத் துணை நின்றனர்.

ஆயிரக்கணக்கான மக்களை ஒன்றுகூட்டி தலைநகரை நோக்கி அவர் நடத்திய மாபெரும் நடைப்பயணம் அமெரிக்க ஆட்சியாளர்களையே உலுக்கியது.

அரசு, நீக்ரோக்களுக்குப் பல உரிமைகளை அளிக்க முன்வந்தது. எதிரிகளையும் அகிம்சை வழியில் வெற்றி பெறலாம் என்பதை நிரூபித்துக் காட்டியவர், மார்ட்டின்.

39 வயதிற்குள் அவர் ஆற்றிய பணிகள் அதிகம். இந்த மாபெரும் தலைவர் இன்றுதான் **(15.01.1929)** பிறந்தார்.

❑

பிரெஞ்சு மொழியில் மிகச் சிறந்த நாடகங்களை எழுதி, புகழ்பெற்ற மோலிர் என்பவரும் இன்றுதான் **(15.01.1622)** பிறந்தார்.

❑

## ஜனவரி-16 பாடகி

இதல் மெர்மான். இவள் நியூயார்க் நகரில் பிறந்த பாடகி, நடிகை.

இவளது குரல் வளமையில் மக்கள் மயங்கிப் போவார்களாம்.

இவள், ஜெர்மன் நாட்டு பாதிரியார் ஒருவருக்கும், ஸ்காட்டிஸ் பெண்மணிக்கும் பிறந்த அழகு தேவதை.

இவளது திரை உலக வாய்ப்பு என்பது அவ்வளவு எளிதாகக் கிடைத்துவிடவில்லை.

அந்நாட்டிலுள்ள 'லாஸ்கி ஸ்டுடியோ' வாசலின் முன்னே பலநாள் தவம் கிடந்திருக்கிறாள்.


இவள் மேடையில் பாடிய காலங்களில் 'மைக்' இல்லை. இருந்தபோதும் இவள் குரல்வளம் பலரை ஈர்த்திருக்கிறது.

இவள் ஒரு இசைக் கம்பெனியில் சேர்ந்து இருக்கிறாள். அங்கே மேடை நிகழ்ச்சிகளிலும் நாடகங்களிலும் பாடி நடித்துள்ளாள்.

திரைப்படத் துறையில் இவள் எதிர்பார்த்த பெரும் புகழும், பொருளும் கிடைக்காததால், மீண்டும் மேடைப் பாடகியாக மேடையில் தோன்றத் தொடங்கி புகழும் பெற்றாள்.

இவர் தந்தையும் ஒரு இசைக் கலைஞர் என்பதால், இவளோடு அவரும் நிகழ்ச்சிகளுக்குப் போவார்.

இந்தப் பாடகி நியூயார்க்கில் இன்றுதான் **(16.01.1908)** பிறந்தார்.



## ஜனவரி-17 என் தலைவர்

**1964**-ஆம் ஆண்டு பெரியாரின் 86-வது பிறந்த நாள் விழாவில் பெரியார் முன்னிலையில் பெரியாரைப் பாராட்டிப் பேச எம்.ஜி.ஆர். வந்திருந்தார்.

தனது உரையின் இடையில், ''எனக்கு இரண்டு தலைவர்கள் உண்டு. ஒருவர் கலைவாணர் என்.எஸ்.கே.; இன்னொருவர் அறிஞர் அண்ணா'' என்று எம்.ஜி.ஆர். சொன்னதும் கூட்டத்தினிடையே சலசலப்பு ஏற்பட்டது. பின் அவரே, ''அந்த இருபெரும் தலைவர்களைத் தந்தது பெரியார் அவர்கள்தான்...'' என்று எம்.ஜி.ஆர். அவர்கள் குறிப்பிட்டதும் கூட்டத்தினரிடையே உண்டான கையொலியினால் அரங்கமே அதிர்ந்தது.

'மக்கள் சக்தியே மகேசன் சக்தி' என்று நாளும் பொழுதும் மக்கள் நலனையே நாடிய மக்கள் திலகம் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இன்றுதான் **(17.01.1916)** பிறந்தார்.

❐

**பெ**ஞ்சமின் பிராங்க்ளின் புகழ்பெற்ற அமெரிக்கர். அமெரிக்க சுதந்திரத்தில் கையெழுத்திட்டவர் இவர். சிறுவனாக இருக்கும்போது அரித்மெடிக் கணிதத்தில் தோல்வியானவர். 'உருப்பிடாத பிள்ளை' என்று அவரது தந்தையார் பத்தாவது வயதிலேயே பள்ளியைவிட்டு நிறுத்தி, ஆட்டு ரோமம் கத்தரிக்கும் தொழிலில் விட்டுவிட்டார்.

கடையில் மெழுகு வர்த்தி, சோப்பு போன்றவற்றைத் தயாரிக்கும் சிறிய வேலையில் சேர்க்கப்பட்டார். ஆனால், இவர் பெரியவரான பிறகு புகழ்பெற்ற விஞ்ஞானியாகவும், ராஜதந்திரியாகவும், தேசத்தலைவராகவும் விளங்கினார்.

இந்த அறிவுலக மேதையும் இன்றுதான் **(17.01.1706)** பிறந்தார்.

❐

**பி**ரிட்டிஷ் இராஜதந்திரியும், பிரிட்டனின் பிரதமருமான டேவிட் லாயிட் ஜார்ஜும் இன்றுதான் **(17.01.1863)** பிறந்தார்.

❐

## ஜனவரி-18 எளிமை

மும்பையின் உயர்நீதி மன்றத்தில் மகாதேவ கோவிந்த ராணேடே நீதிபதியாகப் பதவியில் இருந்தார். அவர் உலகெங்கும் புகழ்பெற்றவர்.

எளிமையின் ஏந்தலாகவும், கருணையின் வடிவாகவும் வாழ்ந்து வந்தார். தான் செல்வந்தர் என்ற அகந்தையுமின்றி இருந்தார்.

ஒருநாள் அவர் நடந்து வரும் வழியில் ஒரு காட்சி.... ஒரு வயதான கிழவி சாலையில் கனமான விறகுச் சுமை ஒன்றினை வைத்துக் கொண்டு, சாலையில் போவோர் வருவோரிட மெல்லாம் தூக்கிவிடச் சொல்லி உதவி கேட்டுக் கொண் டிருந்தார்.

ஒருவரும் உதவி செய்வதாகத் தெரியவில்லை... கிழவி வேதனையோடு நின்றிருந்தார்...

அதற்குள் நீதிபதி அவரருகே நெருங்கிவிட்டார்... அவரை யார் என்று அறியாத கிழவி... “ஐயா, தயவு செய்து உதவி செய்யுங்கள். இந்தச் சுமையைத் தூக்கிவிடுங்கள். உங்களுக்குக் கோடிப் புண்ணியமாகப் போகும்...” என்று அவரிடமும் வேண்டினார்.

உடனே புகழ்பெற்ற நீதிபதியான ராணடே, எதையும் யோசிக்காமல், கீழே குனிந்து அந்த விறகுச் சுமையை தூக்கி கிழவியின் தலைமேல் வைத்தார். பின்னர் அங்கிருந்து ஏதொன்றும் அறியாதவர் போல் அங்கிருந்து விடை பெற்றார்.

அவருடைய பரிவான குணமும்; கனிவான இதயமும், பெரிய பதவியிலிருக்கிறோம் என்ற ஆணவமும் அற்ற அவரை போற்றுதலுக்குரியவராக நமக்குக் காட்டுகிறது.

பொருளாதார நிபுணராகவும் இருந்த இந்த நல்மனக்காரர் மும்பையில் இன்றுதான் **(18-01-1842)** பிறந்தார்.

❑

## ஜனவரி-19 நீராவி

ஜேம்ஸ்வாட் எளிய குடும்பத்தில் பிறந்தார். பள்ளியில் படிக்கும்போதே கற்பனையோடு, கதைகள் சொல்வதும், எதிர்காலத்தில் புதிய கண்டுபிடிப்புகளால் உலகம் எப்படி எல்லாம் உயரும் என்றும் சொல்வார். தன்னுடைய இருபதாவது வயதில் இரும்புப் பட்டறையில் பணியில் சேர்ந்தார். அங்கே சிறுசிறு கருவிகள் செய்யவும் பயிற்சி பெற்றார். சுரங்கங்களில் பிஸ்டன் முறையில் இயங்கும் நீராவி இயந்திரங்களை கூர்ந்து பார்த்தார். அது பற்றி நிரம்ப அறிந்து கொண்டு, நிலக்கரி போன்ற எரிபொருளை அதிகம் பயன்படுத்தாமல் இயந்திரங்களைப் பயன்படுத்துவது பற்றி ஆராய்ந்து வழி கண்டுபிடிக்கவும் விரும்பினார். அதனால், தன் ஊருக்கு அருகாமையில் இருந்த கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் வேலைக்குச் சேர்ந்தார். அங்கே பரிசோதனைச் சாலையில் ஆறு ஆண்டுகள் பணிபுரிந்து, நீராவி இயந்திரத்தைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டார்.

நீராவியைக் குறைவாகப் பயன்படுத்தி அதிக சக்தியைப் பெறும் புதிய நீராவி இயந்திரத்தைத் தாமே தயாரிக்க விரும்பியதால், அங்கிருந்து விலகி, இரும்புத் தொழில் குறித்த தொழிற்சாலை ஒன்றில் சேர்ந்து வேலையுடன் தனது ஆய்வையும் தொடர்ந்தார். 1765-இல் அவருடைய ஆய்விற்கு விடை கிடைத்தது. நீராவி எப்போதும் விரியும் தன்மை யுடையதாதலால் காற்று இல்லாத வெற்றிடத்திற்கு உடனே நீராவி செல்லும். இப்படி விரைந்து செல்லும் நீராவியை காற்று நீக்கப்பட்ட பாத்திரத்துடன் இணைந்துள்ள உருளையுடன் இணைக்க வேண்டும். இப்படிச் செய்தால் வெப்பம் குறையாமல் ஆவி இறுகி உருளை வேகமாகச் செயல்படும். இந்த முடிவைப் பரிசோதித்துப் பார்த்து வெற்றியும் பெற்றார்.

ஜேம்ஸ்வாட் நீராவி இயந்திரத்தை முதன் முதலில் கண்டுபிடித்தவரல்ல என்றாலும், முன்பிருந்தவற்றில் பல மாறுதல்களைச் செய்து நீராவியின் சக்தியைப் பயன்படுத்தி எல்லாவகையான கருவிகளையும் இயங்கச் செய்ததே அவருடைய மாபெறும் வெற்றியாகும். புதிய தொழில்களை நம்பிக்கையுடன் தொடங்க இன்றும் நம்பிக்கையைக் கொடுத்தவரும் கொள்கையை உருவாக்கித் தந்தவரும் அவரே!

இந்த மாபெரும் தொழில் மேதை ஸ்காட்லாந்து - கிரீனாக் என்னுமிடத்தில் இன்றுதான் (19-01-1736) பிறந்தார்.

❒

## ஜனவரி-20 தந்தையைப்போல...

ஜோஹனஸ் ஜென்ஸனின் தந்தை விஞ்ஞானம், வரலாறு போன்றவைகளில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். தந்தையைப் போல தானும் ஆகவேண்டும் என்ற எண்ணத்தில், பள்ளிப் புத்தகங்களைவிட அதுபோன்ற நூலை தேடிப் படிக்கத் தொடங்கினார். அதே நேரத்தில், குறிப்பாக விவசாயிகளின் நிலையை கவனமாகக் கவனித்து வந்தார்.

ஜென்ஸனுக்கு 11 வயது நிரம்பும் வரை வீட்டிலேயே கல்வி கற்பிக்கப்பட்டது. அவரது 17-வது வயதில் கத்தோலிக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். பின்னர் 1893-இல் கோபன ஹேகன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அங்கே, மருத்துவம் பயின்றாலும், அவர் இதயம் முழுவதும் இலக்கியத்துறையே நிறைந்து இருந்தது. புகழ்பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகளை தேடிப்பிடித்துப் படித்தார்.

ஜென்ஸன் மாணவராயிருந்த காலத்தில் பணத் தேவைக்காக துப்பறியும் நாவல்களை எழுதி வந்தார். அதே காலத்தில் டேனிஷ் என்ற பெயரில் ஒரு நாவலையும் எழுதினார்.

அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு அமெரிக்காவுக்குப் பயணப்பட்டார். அங்கே டேனிஷ் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதைக் கண்டு பெருமையோடு ஊர் திரும்பியவர், ‘‘அய்னார் எல்கோயர்’’ என்ற ஒரு நாவலை எழுதினார். அந்த நாவல் 1897-இல் வெளிவந்தது. நாவலில் கிடைத்த புகழால், மருத்துவத் துறைக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, முழுநேர எழுத்தாளர் ஆனார்.

பல படைப்புகள் வெளிவந்து ஜென்ஸன் புகழ்பெற்று இருந்தாலும், 1898-இல் அவர் எழுதிய ‘ஹிம்மர்லாந்து மக்கள்’ என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலே அவருக்கு பெரும் புகழைத் தேடித்தந்தது. அந்த மகிழ்ச்சியில் ‘மன்னரின் வீழ்ச்சி’ என்ற நாவலை 1901-இல் வெளியிட்டபோது, ‘டென் மார்க்கின் தலைசிறந்த வரலாற்று நாவல்’ என்னும் சிறப்பையும் அந்நாவல் பெற்றது.

‘எண்ணத்தின் நிலைகள்’ என்ற ஒரு பயண நூலையும் அற்புதமாக எழுதிமுடித்த நிலையில், ஜென்ஸனுக்கு நோபல் பரிசும் கிடைத்தது.

இந்த எழுத்தாளர், டென்மார்க்கைச் சேர்ந்த வடக்கு ஜத்லாந்தில் ஹிம்மர்லாந்து எனும் நகரில் இன்றுதான் (20.01.1873) பிறந்தார்.

## ஜனவரி-21 'தமிழ் ஒளி'

கவிஞர் ஷெல்லி, ஓர் உணர்ச்சி பெட்டகமாகவும், ஐம்புலன்களின் ஏகபோக அடிமையாகவும் வாழ்ந்தவன். அதனால்தான், காதல், பெண் என்று தான் வாழ்ந்த காலம் முழுதும் வெறிபிடித்து அலைந்தான். காதலில் பல துரோகங் களைக் கூடச் செய்தான்.

ஆனால் இங்கே ஒரு கவிஞர்... உங்களைக் கைபிடித்து காலமெல்லாம் வாழ்வேன் என்று கூறிய காதலி, இல்லத்தாரின் இடற்பாடால் உள்ளத்தை மாற்றிப் போட்டதால் - அப்பெண் மனம் மாற; தன் காதல் முறிந்து போனதோடு, பெண் வீட்டாரின் எதிர்ப்பையும் எதிர் கொள்ள முடியாமல், அந்தக் காதலன், இழந்த காதலோடு, இடம் பெயர்கிறான். காதலி இருந்த இதயத்தில் இப்போது கவிதைகள் வளரத் தொடங்கியது... இந்நிலைக்கு ஆளான கவிஞர் யார்...?

தமிழ் ஒளி (விஜயரங்கம்)தான்.

புதுவையிலுள்ள பிரெஞ்சு மொழிப் பள்ளியில் படித்த இவர், உயர்தரக் கல்வியைக் கற்கவே கல்லூரியில் பயின்றிருக்கிறார். அக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த பாவேந்தரின் அறிமுகம் அங்குதான் தமிழ் ஒளிக்குக் கிடைத்திருக்கிறது. பின்னர், பாவேந்தர் நடத்திய 'குயில்' பத்திரிகையில் பணி செய்தபடியே, படிப்பையும் தொடர்ந்ததோடு, சுயமரியாதைக் கவிதைகளையும் எழுதத் தொடங்கினார். தஞ்சை - கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து புலவருக்குப் படித்தார், தமிழ்ஒளி. அவ்வேளையில் இவர் எழுதிய 'சிற்பியின் கனவு' நாடகம்தான் பின்னாளில் 'வணங்காமுடி' திரைப்படமாக வெளிவந்து அவரை வெளிச்சமாக்கியது.

1947-இல் சென்னைக்கு வந்த கவிஞர் தன்னைப் பொதுவுடைமைக் கருத்துக்களில் மனம் பதித்து செயல்படத் தொடங்கினார்.

'முன்னணி', மனிதன் போன்ற பத்திரிகையில் பணியாற்றிய கவிஞர், 'வீராயி', 'கவிஞனின் காதல்', 'திருக்குறளும் கடவுளும்' போன்ற பல நூல்களையும் எழுதினார். 'புத்தர் பிறந்தார்' - என்ற காவியத்தை எழுதத் தொடங்கிய கவிஞர் தமிழ்ஒளி. அக்காவியம் நிறைவு பெறும் முன்னே காசநோயும், காதல்நோயும் கைபிடித்து 41 வயதுக்குள் அழைத்துப்போயின.

இந்தத் தமிழ் வெளிச்சம் குறிஞ்சிப்பாடி அருகிலுள்ள ஆடூரில் இன்றுதான் (21-01-1924) பிறந்தது.

❏

## ஜனவரி-22 மதகுரு

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்தவர், பப்ரீசியஸ் ஐயர். இவர் தமிழகம் வந்து ஆற்றியுள்ள சமூகத் தொண்டும், தமிழ்த் தொண்டும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இவர் சீசன் என்ற ஊரில் கல்வி கற்றதும், ஹாலெயில் மதக் கல்வியையும் கற்றார். பின்னர் 1739-இல் கோப்பன் ஹேகனில் மதகுருவானார்.

தரங்கம்பாடியிலுள்ள டச்சுத் திருச்சபைக்கு 1742-இல் வந்தவர், சில ஆண்டுகளுக்குப் பின் சென்னையிலுள்ள ஆங்கிலத் திருச்சபைக்கு வந்தார்.

சென்னையை பிரெஞ்சுக்காரர்கள் 1746-இல் பிடிக்கவே, பப்ரீ தமது குழுவினரோடு பழவேற்காடு சென்று தங்கினார். மூன்றாண்டுகளுக்குப்பின் மீண்டும் சென்னை வந்தார்.

பனிரெண்டு ஆண்டுகளுக்குப்பின் முஸ்லீம்களின் படையெடுப்பு அதைத் தொடர்ந்து காலரா போன்ற தொற்றுநோய்கள், பஞ்சம் எல்லாம் மக்களைச் சூழ்ந்து, துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் ஆட்படுத்தியது. இந்த வேளையில் ஜாதி, மத பேதமின்றி பப்ரீ ஆற்றிய தொண்டை அளவிட இயலாது.

பிறருக்கு உதவுவதற்காக பலரிடம் கடன் வாங்கிக் கொடுக்க, அவர்கள் ஏமாற்றிவிட சிறை இவரை அழைத்துக் கொள்கிறது. அங்கேதான் தமிழும் ஆங்கிலமுமாக இருக்கிற அகராதி ஒன்றினை எழுதினார். 1776-இல் இதனை அச்சிலும் ஏற்றினார்.

இவர், பல கிறித்துவ நூல்களை எழுதி உள்ளார். பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் இவரால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டது. பிரார்த்தனைப் புத்தகம் ஞானாபரணப் பெட்டி, முதற்பால், பாப்பு மார்க்கம் போன்று பல நூல்களை எழுதியுள்ளார்.

இந்த போதகர் ஜெர்மனி - கிளீபர்கு என்னும் ஊரில் இன்றுதான் (22.01.1711) பிறந்தார்.

## ஜனவரி-23 நான் ஆடா...?

1929-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு வந்த நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் தலைமையில் ஒரு தொண்டர்படை நிறுவப்பட்டது. இதை அறிந்த பிரிட்டிஷ் அரசு இத்தொண்டர்படை சட்ட விரோதமானது எனக்கூறி தலைவர் சுபாஷ் சந்திரபோஸைக் கைது செய்து, அவருக்கு 6 மாத காலச் சிறைத்தண்டனை கொடுத்தது.

தண்டனை அளித்த ஆங்கிலேய மாஜிஸ்திரேட்டிடம் சுபாஷ், "எனக்கு ஆறுமாத தண்டனைதானா? இக்குறைந்த தண்டனை பெற நான் ஆடு, கோழியா திருடினேன்?" என்று கேட்டார்.

நீதிமன்றத்தில் இருந்த வழக்கறிஞர்கள் இதைக்கேட்டுக் 'கொல்'லென சிரித்தே விட்டார்கள்.

இதுவும் அவரே...

நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் இங்கிலாந்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போது, "ஜனநாயகத்தையும், சுதந்திரத்தை யும் ஆதரிப்பதாகக் கூறும் இங்கிலாந்து, இன்னும் இந்தியாவை அடிமையாக வைத்துள்ளது. ஏதாவது ஒருநாள் எங்கள் நாட்டை எங்களிடம் ஒப்படைத்தே தீர வேண்டும்" என்று முழங்கினார்.

கூட்டத்தில் இருந்த ஆங்கிலேயர் ஒருவர், "எங்கள் சாம்ராஜ்ஜியத்தை அவ்வளவு சுலபமாக அழித்துவிட முடியாது. சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம் ஆயிற்றே இது" என்று பெருமை அடித்துக்கொண்டார்.

சுபாஷ் அமைதியாகக் கூறினார்: "ஆம்! சூரியன் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் மறையாததற்குக் காரணம் என்ன தெரியுமா? இருட்டில் பிரிட்டிஷ்காரர்களான உங்களை நம்ப முடியாது என்பதற்காகத்தான்..." என்றார்.

இந்த விடுதலைப்போராட்ட வீரர் வங்கத்தில் இன்றுதான் (23.01.1930) பிறந்தார்.

❑

இன்று எல்லோரும் விரும்பி வரையும் நவீன ஓவியங் களை முதன்முதலாக வரைந்து புகழ்பெற்றவரான எட்வர்ட் மனே என்ற பிரெஞ்சு நாட்டு ஓவியரும் இன்றுதான் (23.01.1832) பிறந்தார்.

❑

## ஜனவரி-24 வீரர்...

இடித் வார்ட்டன் ஒரு எழுத்தாளர்.

இவர் கதைகளில் மேல்தட்டு மக்களை வஞ்சகப் புகழ்ச்சியோடு வர்ணிப்பதில் கைதேர்ந்த பெண் எழுத்தாளர். சமுதாயத்திற்கும், தனிமனித உணர்வுகளுக்கும் இடைப்பட்ட போராட்டமே இவரது கதைக் களமாகும்.

சமுதாயத்தில் மிகவும் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு ஐரோப்பிய நாட்டிலிருந்து ஒரு ஆசிரியையை வரவழைத்து கல்வி கற்பிக்கப்பட்டதாம்.

1885-இல் வங்கி ஒன்றில் பணியாற்றும் ஒருவரை இவர் மணந்தார். சமூக அக்கறை கொண்ட இவர் நிரம்ப எழுத விரும்பினார். அந்த வேளையில் நரம்புத் தளர்ச்சி வந்துவிட, எழுத்து தடைபட்டுப் போயிற்று.

இவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், 'நீங்கள் தொடர்ந்து எழுதினால்தான் குணம் ஆகும்'' என்று அறிவுரை கூற, மீண்டும் தொடர்ந்து கவிதை, கதை என்று எழுதத் தொடங்கினார். 1890-இல் இவரது சிறுகதைத் தொகுப்பு வெளிவந்து, இவரது 'ஹவுஸ் ஆஃப் மிர்த்' என்ற நாவலே இலக்கிய உலகில் ஓர் இடத்தைத் தந்தது.

அந்தப் பெண் எழுத்தாளர் நியூயார்க்கில் இன்றுதான் (24.01.1862) பிறந்தார்.

❒

ஸ்பெயின் நாட்டிடமிருந்து தென் அமெரிக்காவின் பெரும்பகுதியை மீட்டுத்தந்த விடுதலைப் போராட்ட வீரர் சைமன் பொலிவார் என்பவரும் இன்றுதான் (24.01.1783) பிறந்தார்.

❒

புகழ்பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியர் அலெக்சாண்டரும் இன்றுதான் (24.01.1802) பிறந்தார்.

❒

அட்லாண்டிக் பெருங்கடல் மீது முதன்முதலாக பறந்த பெண் விமானியான அமிலியா ஏர் ஹார்ட் என்பவரும் இன்றுதான் (24.01.1897) பிறந்தார்.

❒

## ஜனவரி-25 முதன்முதலில்...!

இந்நாளில் தொடர்கதையின்றி வெளிவரும் வார, மாத இதழ்களே இல்லை என்று சொல்லலாம். இதற்கு எல்லாம் முன்னோடியாக முதன் முதலில் தமிழில் வெளிவந்த தொடர்கதை - 'கமலாம்பாள் சரித்திரமே. இந்த நாவலை அந்த நாளில் எழுதிய எழுத்தாளர், பி.ஆர்.இராஜம் ஐயர்தான்.

முதன் முதலில் தமிழில் உரைநடையில் வீரமாமுனிவர் 'பரமார்த்த குரு கதை'யை எழுதினார். இதுவே உரைநடைத் தமிழில் வெளிவந்த முதல் படைப்பிலக்கியமாகக் கருதப் படுகிறது.

இதன் பின் உரைநடைத் தமிழ் வளர்ச்சியில் வெளிவந்த இரண்டாவது நாவல் வீராசாமி செட்டியாரின் 'வினோதரச மஞ்சரியாக'வும் வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திர'மாகவும் வளர்ந்து, பின்னர், இராஜமையரின் 'கமலாம்பாள் சரித்திர'மாக மிளிர்ந்தது.

அந்த மூவரும் பக்குவப்பட்ட ஒரு வயது வந்த பிறகே படைப்பிலக்கியத்தைப் படைக்கத் தொடங்கினார்கள். ஆனால், இராஜமையாரோ தம் இருபத்தோரம் அகவையிலேயே எழுதிவிட்டார்.

இவர் சென்னையிலுள்ள கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்து சரித்திரத்தை முதல் பாடமாக எடுத்துப் படித்து 1889-இல் பி.ஏ.பட்டம் பெற்றார்.

பின்னர் சமய நூல்கள் பலவற்றை படித்ததோடு, குறிப்பாக வேதாந்த நூல்களை விரும்பிப் படித்தார் - ஞானமார்க்கத்தில் ஈடுபட்டார்.

'பிரம்மவாதின்', 'பிரபோத சந்திரிகை' போன்ற ஆங்கில, தமிழ் மாத இதழ்களில் அறிஞர்கள் போற்றுமளவிலே கட்டுரைகளை எழுதி வந்ததோடு, 'பிரபுத்த பாரதா' என்ற ஆங்கில மாத இதழில் ஆசிரியராகவும் பணியாற்றினார். குடற்சிக்கல் நோயின் காரணமாக மிக இளம் வயதிலேயே இவர் இயற்கை எய்தினார்.

இந்த எழுத்து மேதை மதுரை - வத்தலகுண்டு என்னும் ஊரில் ஒரு விவசாயி குடும்பத்தில் இன்றுதான் (25-01-1872) பிறந்தார்.

❒

ஸ்காட்லாந்து நாட்டுக் கவிஞரான ராபர்ட் பர்ன்ஸ் என்ற கவிஞரும் இன்றுதான் (25-01-1759) பிறந்தார்.

❒

## ஜனவரி-26 இளமையில்...

பெரும் செல்வமிக்கக் குடும்பத்தில் ராபெர்ட் பாயில் பிறந்தார். அவர் இளமையிலேயே அறிவின் ஒளி வீச்சாய்த் திகழ்ந்தார்.

அவர் இளமையில் ஆங்கிலம் கற்றதோடு லத்தீனையும் பிரெஞ்சையும் கற்றார். பின்நாளில் கற்ற மொழிகளோடு ஈபுரு மொழி, கிரேக்க மொழி, ஸிரியா நாட்டு மொழிகளையும் கற்று, தன் மொழியாற்றலைப் பெருக்கிக் கொண்டார்.

இக்காரணத்தால் அவர் பைபிளை அதன் மூலமொழி களின் மூலமாகவே தெளிவாக கற்க முடிந்தது. அதன் வழியே தெளிவும் பெற்றார்.

பாயில் தனது எட்டாவது வயதில் ஈட்டன் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு மூன்றாண்டு காலம் பயின்ற பிறகு, அப்படிப்பை நிறுத்திவிட்டு, ஐரோப்பாக் கண்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்யுமாறு அனுப்பப்பட்டார். ஆங்கிலச் செல்வந்தர்களின் கல்விக்கு இப்படியான பயணம் பெருமை யளிக்கும் பயிற்சி என்று அக்காலத்தில் எண்ணப்பட்டது. ஆனால், பதினொரு வயதுப் பிள்ளைக்கு சாதாரணமாக இப்படி பயிற்சியளிப்பது என்பது பாயிலுக்கு மட்டுமே நடந்துள்ளது.

*1641*-இல் பாயிலுக்கு பதினான்கு வயது. இத்தாலிக்குச் சென்றார். அங்கே புகழ் பெற்ற அறிவியல் கண்டு பிடிப்பாளரான கலீலியோவைச் சந்தித்தார். அப்போதே தன் வாழ்நாளை விஞ்ஞானத்துறையிலேயே இணைத்துக் கொண்டு கழிக்க வேண்டுமென்று உறுதி கொண்டார். அதற்கான முயற்சியில் ஈடுபட்டு தம் ஆய்வுகளை அகலப் படுத்திக் கொண்டார். அதன் பயனாக...

'பாயில்விதி' என்னும் புகழ்பெற்ற விஞ்ஞான உண்மையை அறிந்து உலகிற்குக் கூறினார். அது ஒரு கணித விதி. அழுத்தத்துக்கு ஆட்படும் போது வாயுக்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றன என்பதை அது விளக்குகிறது. 'பாயில் விதி' என்பது முதலில் பரிசோதனை முறையால் கண்டு பிடிக்கப்பட்டது. பின்பே அது அதன் கணித வடிவத்தைப் பெற்றது.

இந்த மேதை அயர்லாந்திலுள்ள மண்ஸ்ட்டெர் என்னும் இடத்தில் இன்றுதான் **(26-01-1627)** பிறந்தார்.

❑

## ஜனவரி-27 நின்றுகொண்டே...

சார்லஸ் லட்விட்ஜ் டாட்சன், ஆங்கிலம், லத்தின் மொழிகளில் குழந்தை இலக்கியம் படைத்தவர். இவரது புனைப்பெயர் லீவிஸ் காரோல். இந்தப் பெயரில் குழந்தைகளுக்கு கதைகள் எழுதி புகழ்பெற்றார்.

எம்.ஏ. பட்டம் பெற்ற இவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. இவர் தன் வாழ்க்கையை கணித விரிவுரையாளராகத் துவங்கினார்.

இவரது முதல் புத்தகம், ‘‘ஆலிஸ் அட்வென்சர்ஸ் இன்வொண்டர் லாண்ட்’’ எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் மொழியாக்கம் பெற்றுள்ளது. ‘துருதி லுக்கிங் கிளாஸ்’, ‘தி ப்ளாக் செக்’ ஆகிய கதைகள் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

இவரது முதல் நூல், மவுன மற்றும் பேசும் திரைப்படங்களாக மீண்டும், மீண்டும் உருவாக்கப்பட்டன. வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது. திரைப்படங்கள் சின்னத்திரைப் பெட்டிகளில் ஒளிபரப்பப்பட்டன. கார்டூன் படங்களாகவும் பல்வேறு மொழிகளில் தயாரிக்கப்பட்டன.

இவர் கதை எழுதும் முறையே விசித்திரமானது. ஆமாம்! நின்றுகொண்டே எழுதும் பழக்கம் உடையவர், சார்லஸ். அதற்கென சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட மேஜையில் வியக்கும்படியான பேனாக்கள், பென்சில்கள், பென்சில் சீவிகள் முதலியவைகளை சேகரித்து வைத்திருப்பார். புகைப்படக் கலையில் விற்பன்னர். திக்குவாய்க்காரர்; பேசும்போது தயங்கித் தயங்கி பேசுவார். தாய் மீது அளவு கடந்த அன்பு கொண்டவர்.

குழந்தைகளுக்கு நிறைய நூல்களை எழுதி உலகப் புகழ்பெற்ற சார்லஸ் இங்கிலாந்திலுள்ள ‘டாரஸ்பரி’ என்னுமிடத்தில் இன்றுதான் (27.01.1832) பிறந்தார்.

❑

ஆஸ்திரிய நாட்டு இசையமைப்பாளரான மோஸார்ட் என்னும் இசை மேதையும் இன்றுதான் (27.01.1756) பிறந்தார்.

❑

## ஜனவரி-28 லாலா...!

லாலாலஜபதிராய், இளமையில் தாயிடமிருந்து ஆன்மிக குணங்களையும், தந்தையாரிடமிருந்து இந்து மத சீர்திருத்த ஆர்வத்தையும், தேச பக்தியையுமே பெற்றார். பள்ளிப் படிப்புகள் முடிந்ததும் ராய் லாகூர் சென்று அரசினர் கல்லூரியில் சேர்ந்து சட்டம் படித்து தேர்ந்தார். வழக்கறிஞரானார்.

அந்த வேளையில் ஆர்ய சமாஜத்தில் இதயம் பதித்தார். அதை நிறுவிய சுவாமி தயானந்த சரஸ்வதியை சந்தித்தார். லாகூரில் அவர் நினைவாக 'தயானந்தர் ஆங்கிலோ வேதக் கல்லூரியை தோற்றுவித்து அதன் வழியே தேசியக் கல்வியை உருவாக்க பாடுபட்டார்.

*1888*-இல் இந்திய தேசியக் காங்கிரஸ் ஆண்டுக் கூட்டம் அரசின் எதிர்ப்புக்கிடையே அலகாபாத்தில் நடந்தது. அதில் கலந்து கொண்டது முதல் காங்கிரஸ் அரசியல் இயக்கத்தில் தன்னை முழுதுமாக ஈடுபடுத்திக் கொண்டார்.

அரசு அமைத்த பஞ்ச கமிஷன் முன்பு தீரமுடன் மக்கள் படும் அல்லல்களையும், தொல்லைகளையும் அடுக்கடுக்காக எடுத்துரைத்தார். துன்பப்பட்ட மக்களின் துயர் போக்க ஆரிய சமாஜத்தின் வழியே பணம் வசூலித்து ஏழை எளியவர் களுக்குப் பேருதவி புரிந்தார். ராய் அவ்வப்போது அரசாங்கத்தை எதிர்த்து வந்ததால், ஒருமுறை அவரை மாந்தலே நகருக்கு நாடே கடத்தியது. இந்திய மக்களின் துன்பத்தை எடுத்துரைக்க இங்கிலாந்தும் சென்றார். அமெரிக்காவும் சென்று அங்கு ஆறு ஆண்டுகள் இருந்தார். இந்திய நிலை குறித்து அங்கே சொற்பொழிவும் நடத்தினார். பல நூல்களும் எழுதினார்.

*1921*-இல் தடைகளைத் தகர்த்து பஞ்சாப் மாநிலக் காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டி தலைமை வகித்ததற்காக சிறை சென்றார். அங்கே உடல்நலம் குன்றியதால் விடுதலையானார்.

இப்படி இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட லாலா லஜபதிராய். பஞ்சாப் மாநிலம் - லூதியானா மாவட்டத்தில் ஜக்ரவுன் என்ற ஊரில் இன்றுதான் **(28-01-1865)** பிறந்தார்.

## ஜனவரி-29 டால்ஸ்டாய்

பிரான்சில் பிறந்த இவரின் எதிர்கால கல்விக்காக 1880-இல் பெற்றோர்கள் பாரிசுக்குக் குடி பெயர்ந்தனர். சிறுவயதில், 'ரொமின் ரோலந்து'வின் இதயம் இசையில் இணைந்திருந்தது. மகனின் மனம் கண்ட தாய் அவருக்கு பியானோ கற்றுக் கொடுத்தார். அச்சிறு பருவத்திலேயே பீதோவனின் இசை அவரைக் கவர்ந்தது. இந்த ஆர்வம் கல்லூரிக் காலத்திலும் தொடர்ந்தது. அவர் ரோமில் வரலாற்றுத் துறையில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்து படித்த காலத்தில் அவர் மனம் ஆய்வுத் துறையில், ஈடுபட மறுத்ததால், வரலாற்று நிகழ்வுகளைப் பின்புலமாகக் கொண்ட நாடகங்கள் எழுதுவதில் நாட்டம் செலுத்தினார்.

ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே ஆய்விலும், நாடகம் எழுதுவதிலும் ஈடுபட்டார். 1895-இல் இவருக்கு டாக்டர் பட்டம் கிடைத்தது.

இவரது நாடகமான 'தாந்தன்' உலகப் புகழ்பெற்ற நாடக வரிசையில் இடம் பெற்றது. 1794-ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதம் பிரெஞ்சு நாட்டில் நடைபெற்ற புரட்சியை மையமாக வைத்து இது எழுதப்பட்டது. 1900-இல் வெளிவந்த போதிலும், 1920-இல்தான் இது புகழ்பெற்றது. இந்நாடகம் உலகப் புகழ்பெற்றது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நடிகர்கள் மேடையில் தோன்றி நடித்தனர்.

தாந்தன் முதன்முதலாக 1900 டிசம்பர் 29-இல் பாரிஸ் நகரில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து ஐரோப்பாவின் பல மேடைகளைக் கண்டது. உலகப் புகழை அது தந்தது. நோபல் பரிசையும் அளித்தது.

'பிரெஞ்சு நாட்டின் டால்ஸ்டாய்' என்று மாக்ஸிம் கார்க்கியால் புகழப்பட்ட இவர், தென் பிரான்சில் கிளமெஸி என்ற சிறு நகரில் இன்றுதான் (29.01.1866) பிறந்தார்.

❑

அமெரிக்க புரட்சி எழுத்தாளர் தாமஸ் பெயின் என்ற புகழ்பெற்ற ஆசிரியரும் இன்றுதான் (29.01.1737) பிறந்தார்.

❑

அமெரிக்காவின் 25-ஆவது ஜனாதிபதியான வில்லியம் மெக்கன்லே என்பவரும் இன்றுதான் (29.01.1843) பிறந்தார்.

❑

## ஜனவரி-30 கதை எழுத...

கின்னஸ் சாதனையில் இடம் போட்டவர் என்று கூறத்தக்கவர் அமெரிக்க அதிபர்களில் ஒருவரான ரூஸ்வெல்ட். காரணம் நான்குமுறை இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இவர் ஒருவரே. இரண்டு தடவைக்கு மேல் யாரும் தேர்ந்தெடுக்கப் படக்கூடாது என்று இப்போது அரசியல் சட்டத்திருத்தம் கொண்டு வந்ததால், இனியும் யாரும் இச்சாதனையை முறியடிக்க முடியாது.

வழக்கறிஞராக இருந்த நிலையில் ரூஸ்வெல்ட் அரசியலுக்குள் வந்தார். இவர் வந்த வேளையில் பொருளாதார சீர்கேட்டில் நாடு இருந்தது. பொருளாதாரத்தை சீர்படுத்தி மீண்டும் செல்வம் கொழிக்கும் நாடாகத் தம்மால் செய்ய முடியும் என்று மக்களுக்கு வாக்களித்தார்.

வெற்றியும் பெற்றார். உலகப்போர் வந்தபோது அதில் நேரடியாக அமெரிக்கா இறங்காமல் இருந்துகொண்டு, பிரிட்டனுக்கு வேண்டிய உதவிகளை மட்டும் செய்து வந்தார். ஆனால் ஜப்பான் பேர்ள் ஹார்பரை தாக்கியபோது, அமெரிக்கா போரில் குதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. போர் சாதனங்களை அப்போது பெருமளவில் உற்பத்தி செய்ததன் காரணமாக பொருளாதாரம் உயர்ந்தது. ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்குவதில் முக்கிய பங்கு பெற்றவர் இவர்.

வாலிபப்பருவத்தில் சினிமாவுக்கு கதை எழுதிப் புகழ்பெற வேண்டுமென்ற ஆசை இவருக்கு மிகுதியாக இருந்தது. முயற்சிகள் முனை முறிந்து போயின. கடைசிவரை ஒரு கதைகூட ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அரசியலில் சக்கரவர்த்தியாக உலகில் உலா வந்தார்.

போலியோ நோயினால் பாதிக்கப்பட்டு தம் வாழ்நாளின் பெரும்பகுதியைச் சக்கர நாற்காலியில் கழிக்க வேண்டியிருந்த ரூஸ்வெல்ட்டின் சாதனை சரித்திரம் வியப்பிற்குரிய ஒன்றாகும்.

இந்த அரசியல் மேதை இன்றுதான் **(30.01.1882)** பிறந்தார்.

❑

## ஜனவரி-31 காதல் மாளிகை

சேன்கிரே. இவர் வீர சாகச கதைகளையே எழுதிவந்த எழுத்தாளர்.

மீன் பிடிப்பதிலும், பேஸ் பால் விளையாடுவதிலும், எழுதுவதிலுமே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். பிற்காலத்தில் இந்த மூன்றினாலும்தான் இவரின் புகழும் ஓங்கியது.

இவர் பேஸ் பால் விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது கொடுத்த உதவித் தொகையால் இவர், வென்ஸ்லிவேனியா பல்கலைக் கழகத்தில் பல் மருத்துவம் படித்தார். 1896-இல் மருத்துவப் பட்டம் பெற்றார்.

எழுத்திலும், பல் மருத்துவப் பணியிலும் ஓய்வு கிடைக்கும்போது, தன் நாட்டிலுள்ள 'தெலவார்' என்ற ஆற்றை நோக்கி தூண்டிலோடு போய்விடுவாராம். அங்குதான் இவருக்கு தன் காதலியும், எதிர்கால மனைவியுமான 'டோலி' என்ற பெண்ணைச் சந்தித்திருக்கிறார்.

அவள் வசதிபடைத்த வசந்த மங்கையாவாள். அவளின் பொருளாதார உதவியோடுதான் இவரது கவிதை நூல்கள் கண் விழித்திருக்கின்றன.

இப்படித்தான் இவர் மீன் பிடித்த முதல் கதையும் வெளிவந்தது.

தன் மனைவியின் அன்பில் நனைந்த இக்கவிஞர், அவளுக்காக, சிறந்த பொறியாளரைக் கொண்டு தீப்பிடிக்காத ஒரு பெரிய மாளிகையையே கட்டினார்.

இது, மனைவி உயிரோடு இருக்கும்போதே கட்டப்பட்ட காதல் மாளிகை. கவிதை மாளிகை!

இம்மாபெரும் கவிஞன் ஒகியோ என்ற நாட்டில் இன்றுதான் (31.01.1872) பிறந்தார்.

❐

பிரான்ஸ் ஸுபர்ட் என்ற புகழ்பெற்ற ஆஸ்திரியன் இசையமைப்பாளரும் இன்றுதான் (31.01.1797) பிறந்தார்.

❐

## தனிமம்




செய்ன்ட்டு பீட்டர்ஸ் பெர்க்கிலுள்ள உயர்தர பள்ளி ஒன்றில், ட்மீட்டிரி மென்டெலெயெப் படித்தார். கணிதம், பௌதிகம், இரசாயனம் என்னும் அறிவியல்களை ஆழ்ந்து அங்கு கற்றார். முதல் மாணவராகத் தேறி, பட்டமும் பெற்றார்.

ரஷியாவின் தென் பகுதியிலுள்ள கிரைமீயாவுக்குச் சென்று விஞ்ஞான ஆசிரியராக பணியேற்றார். ரஷியாவில் அந்நாளில் உயர்தர விஞ்ஞானக் கல்வி கற்க வாய்ப்புக்கள் ஒன்றும் இல்லை.

ஆகவே, பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் சென்று அத்தகைய கல்வியைக் கற்பதற்கு தமது அரசாங்கத்திடம் இருந்து, அனுமதி பெற்றார். பாரிஸ் நகரில் அவர் ஹென்றி ரேனா என்னும் இரசாயனப் பரிசோதனையாளர் ஒருவரிடம் சில காலம் உடனிருந்து பயிற்சிப் பெற்றார். பிறகு ஹைடெல்பர்க் நகரில் அவர் சொந்தத்தில் சிறியதாக ஒரு சோதனைச் சாலையைப் படைத்துக் கொண்டார்.

அவ்வேளையில், ‘நீரோடு ஆல்கஹால் இணைதல்’ என்னும் நூல் ஒன்றை எழுதி இரசாயனத்துறையில், டாக்டர் பட்டம் பெற்றார்.

1865-இல் செயின்ட் பீட்டெர் ஸ்பெர்க் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவி கிடைத்தது. விஞ்ஞானத் துறையில் அவர் தலைசிறந்த மேதை என்பதை அங்கு உணர்த்தினார். தனிமங்களைப் பற்றி ஆய்வு செய்து தன் புகழை நிலைநாட்டினார், லெயெப்.

கிழக்கு சைபீரியாவிலுள்ள டோபால்ஸ்க்கு என்னும் ஊரில் இம்மேதை **(01-02-1834)** பிறந்தார்.

❐

அமெரிக்க இசையமைப்பாளரான விக்டர் ஹெர்பெர்ட் என்பவரும் இன்றுதான் **(01-02-1859)** பிறந்தார்.

❐

## பிப்ரவரி-2 சத்தியாக்கிரகம்

இராஜகுமாரி அம்ருத்கௌர், இராஜவம்சத்தைச் சேர்ந்தவர். இராஜ குடும்பத்தில் பிறந்தாலும் எளிய வாழ்வு, ஏழையர் நலன் என்று வாழ்ந்தவர்.

இவர் பள்ளிப்படிப்பை முடித்ததும் மேற்படிப்புக்காக இலண்டன் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்திற்கு தமது தந்தை, ஏர்ணாம் சிங்கபூர் தாலாவால் அனுப்பி வைக்கப் பட்டார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின் இலண்டனில் இருந்து தாய்நாடு திரும்பிய இராஜகுமாரிக்கு அரண்மனை சுகபோக வாழ்க்கைப் பிடிக்காமல், திருமணமும் செய்து கொள்ளாமல் தாய்நாட்டு விடுதலைக்கும், ஏழை எளியோர்க்கு தொண்டு செய்வதையுமே தாம் விரும்பினார்.

விடுதலைப் போரில் ஆண்களும், பெண்களும் அணி திரண்டு நின்றபோது இவரும் அவ்வணியில் இணைந்து கொண்டார். தங்கள் மாளிகையில் வந்து தங்கிய காந்திஜியை நேரில் கண்ட இராஜகுமாரிக்கு சுதந்திர எண்ணம் மேலும் வளர்ந்து, காந்தியுடன் சேர்ந்து ஆசிரம வாழ்க்கையில் பாடுபடத் தொடங்கினார்.

பெற்றோரை இழந்த குமாரி, பந்தபாசங்களில் இருந்து விடுதலைப் பெற்று நாட்டு விடுதலைக்காக முழுமூச்சாக ஈடுபட்டார்.

1930-ஆம் ஆண்டு நடந்த உப்பு சத்தியாக் கிரகத்தில் கலந்து கொண்டு முதலில் அந்த மன்னின் மகள் சிறை சென்றார். இதன் பின் நடந்த பல போராட்டங்களில் ஈடுபட்டு பல முறை சிறைவாசம் கொண்டார்.

முதன் முதலில் சுதந்திர இந்தியாவில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் நல்வாழ்வுத்துறை அமைச்சராக ஆனார். 1956-இல் அகில இந்திய மருத்துவக் கழகம் அமைந்தது. அதன் முதல் தலைவியாக நியமிக்கப்பட்டார்.

இந்த மன்னரின் மகளும், விடுதலை வீராங்கனையுமான இராஜகுமாரி இன்றுதான் (02-02-1889) பிறந்தார்.

❑

## பிப்ரவரி-3 வேதியியல்

விஞ்ஞானி டி.ஆர்.சேஷாத்திரி இளமைக் கல்வியை ஸ்ரீரங்கத்திலும், திருச்சியிலும் முடித்து, சென்னை மாநிலக் கல்லூரியில் பட்டமும் பெற்றார்.

இங்கிலாந்து மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

ஆந்திர பல்கலைக் கழகத்திலும், டெல்லி பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

மலர்களின் பல்வேறு வண்ணங்களுக்கான காரணங் களையும், தேக்கு மரத்தை கரையான் அரிக்காமல் இருப்பதன் காரணமென்ன என்பது பற்றியும், செடி, கொடிகளின் மருத்துவ குணங்களையும் சில செடி, கொடிகளில் காணப் படும் நச்சுத்தன்மைக்கான வேதியியல் காரணம் குறித்தும் ஆய்வு செய்தார்.

தாவரங்களையும், மரங்களையும் அரித்துப் பாழாக்கும் வேதியியல் சேர்மங்களைக் கண்டறிந்து அவற்றை நீக்கி பயிர்களை பாதுகாக்கும் முறையை உலகிற்கு அறிவித்தார்.

புதுதில்லி பல்கலைக் கழகத்தில் வேதாந்த கழகத்தைத் தோற்றுவித்தார். கரிம வேதியியலை அறிமுகப்படுத்தினார்.

ஆந்திரா, பனாரஸ், டெல்லி, ஒஸ்மானியா போன்ற பல்கலைக் கழகங்கள் இவரின் அறிவாற்றலைப் பாராட்டி 'டாக்டர்' பட்டம் தந்து சிறப்பித்தன.

பத்மவிபூஷன் பட்டம் பெற்ற இவர், தமிழ் நாட்டில், குளித்தலை எனும் ஊரில் இன்றுதான் (03-02-1900) பிறந்தார்.

❑



## பிப்ரவரி-4 தனியான கழுகு

சார்லஸ் அக்ஸ்டஸ் லின்பர்க் என்பவர் முதன் முதலில் அட்லாண்டிக் பெருங்கடலை இரண்டு நாள் தொடர்ந்து பறந்து விமானத்தில் கடந்தார்.

இவர் அமெரிக்க விமானி. இரண்டாவது உலகப்போரில் விமானப்படையில் இருந்து இவர் ஆற்றிய வீரச் செயல் போற்றத்தக்கதாக இருந்திருக்கிறது. தந்தை சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர்.

வழக்கறிஞராகப் பணியாற்றினார். அமெரிக்க நாட்டில் காங்கிரஸில் இருந்தார்.

தாய், பள்ளி ஆசிரியை. இரசாயனப் பாடத்தைக் கற்பித்தவராக இருந்தார்.

பெர்க், சொந்தமாகவே விமானம் வைத்திருந்ததால், இளமையிலேயே விண்ணில் பல சாகசங்களையும், வீர விளையாட்டுக்களையும் செய்து காட்டி பலரை வியப்பில் ஆழ்த்தி இருக்கிறார்.

விமானப் பயிற்சிப் பள்ளி ஒன்றையும் நடத்தி வந்திருக்கிறார்.

இதற்கு முன் இச்செயலில் பலர் கடந்து இருந்தாலும் அவர்கள் எல்லாம் குழுவாகச் சென்றார்கள். ஆனால், இவர் அப்படி அல்ல.

இந்தச் சாதனையில் இவர் மட்டுமே தனித்துச் சென்றார். இந்த ஒரு சாதனையே இவரை உலகப் புகழ்பெறச் செய்தது.

இந்த சாதனைப் படைத்த சார்லஸை பத்திரிகையாளர்கள் ‘லக்கி லின்டி’ என்றும் ‘தனியான கழுகு’ என்றும் பாராட்டினர். இவரது இளமைச் சாதனையைக் கண்ட ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் மிகுத்துப் பாராட்டி பரிசுகள் தந்தார்கள்.

உலகப்போரில் அமெரிக்காவை எதிர்த்து பிரச்சாரம் செய்ததால், அவர்களுக்கு எதிராளியாக ஆனார்.

மர விமானம் முதல் சூப்பர்சானிக் வரை தயாரிக்கும் விமானக் கூடத்தில் ஆலோசகராக இருந்தார்.

இந்த சாதனை விமானி அமெரிக்காவில் இன்றுதான் **(04.02.1902)** பிறந்தார்.

❏

## பிப்ரவரி-5 சக்கரம்

ஜான் பாய்ட் டன்லப்பின் முன்னோர்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள்.

டன்லப்பிற்கு விலங்கு, பறவைகளுக்கு மருத்துவம் பார்க்க விருப்பமாக இருந்தது. அறிவியலிலும் ஈடுபாடு கொண்டார். 19 வயதில் கால்நடை மருத்துவச் சான்றிதழ் பெற்றார்.

அயர்லாந்து சென்று 27 வயதில் கால்நடை மருத்துவராகப் பணியேற்றார்.

டன்லப் மருத்துவம் பார்க்காத விலங்குகளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு செயல்பட்டார். மருத்துவம் பார்க்க செல்லும்போது, அவர் இருசக்கர குதிரை வண்டி களிலேயே சென்று வருவார்.

அதில் சுருள் கம்பிகள் பயன்படுத்தப்பட்டிருக்கும். அந்தச் சக்கரங்கள் ஏதாவது கல்லில் மோதும் நேரத்தில் பலத்த அதிர்ச்சியை உண்டாக்கும். இந்த நிலையை எப்படித் தவிர்ப்பது என்று சிந்திக்கலானார். அப்போது அவருக்கு வயது 47. மருத்துவத்தை ஒதுக்கி வைத்து, மேற்பணியில் ஈடுபட்டார்.

அதற்காக அவர் பதினாறு அங்குல மரச்சட்டம் ஒன்று செய்தார். மெலிதான ரப்பர் தாள் ஒன்றை வாங்கி வந்து அதில் காற்றுப் புகும்படி செய்தார். அதனுள் காற்று நுழைய ஒரு வாயையும் வைத்தார்.

தன் மகன் கால்பந்துக்குக் காற்று அடிக்கும் பம்பைக் கொண்டு அதனுள் காற்றைச் செலுத்தினார். பின் அதன் வாயைக் கட்டினார். அதைத் தன் மகனின் மூன்று சக்கர வண்டிச் சக்கர விளிம்பைச் சுற்றிப் பொருத்தினார். 1887-இல் இது நடந்தது. வண்டியை ஓட்டிப் பார்த்தார். அவருக்கு நிறைவாக இல்லை. பின் பல்வேறு சோதனைகளைச் செய்தார்.

இன்று நாம் சொகுசாக சைக்கிளிலும், பைக்குகளிலும், கார்களிலும் செல்கிறோம் என்றால் அவரின் உழைப்பும் சிந்தனையும்தான். இப்படித்தான் 1889-இல் டன்லப் கம்பெனி அவர் பெயரில் உருவானது.

இன்று நாம் சொகுசாக பயணம் செய்யக் காரணமான ஜான் பாய்ட் டன்லப் ஸ்காட்லாந்திலுள்ள ஆய்ர்ஷயரில் இன்றுதான் (05.02.1840) பிறந்தார்.

## பிப்ரவரி-6 நடிகர்...

ரெனால்டு வில்சன் ரீகன், அமெரிக்காவின் சிறந்த நடிகர் மட்டுமல்ல. அந்நாட்டின் ஜனாதிபதியாகவும் இருந்தவர்.

நடிகராக இருந்து முதன் முதலாக அரசியலில் ஈடுபட்டு உயர்ந்தவர் இவரே. இவர் நடிகர் சங்கத்தில் தலைவராகவும், சிறந்த நடிகராகவும், சிறந்த பேச்சாளராகவும் இருந்தவர். இவரது பேச்சு வன்மையே இவருக்கு செல்வாக்கை ஏற்படுத்தியது.

முதன் முதலில் குடியரசு கட்சியின் ஜனாதிபதியானவர் இவர்தான். இவர் ஜிம்மி காட்டரை எதிர்த்து அவரைத் தோற்கடித்து வெற்றி பெற்றார்.

பொருளாதாரத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய இவரது பொருளாதாரக் கோட்பாட்டிற்கு 'ரீகனாமிக்ஸ்' என்ற கோட்பாடே உண்டாயிற்று.

பணவீக்கம், வருமானவரி குறைப்பு, வட்டி குறைப்பு, இராணுவத்தைப் பலப்படுத்தல் போன்ற செயலோடு சமூக பாதுகாப்புக்கு வேண்டிய வழிவகைகளையும் செய்தார்.

மேலும், நீதித்துறை கூட்டமைப்பு போன்ற நிலை களையும் சீர்படுத்தினார்.

'கூட்டமைப்பு அரசியல் முறைதான் பொருளாதார பிரச்சனைகளுக்கு தீர்வாகும்' என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்தார். வெளிநாட்டுக் கொள்கைகளிலும் மாற்றங் களைக் கொண்டு வந்தார். மக்களிடையே நல்ல ஆதரவும் ஏற்பட்டது.

பொதுவுடமை எதிர்ப்பும், அமெரிக்க முதலாளித் துவத்திற்கு ஆதரவும் கொடுத்து வந்தார். இதுவே தமது தாரக மந்திரமாகக் கொண்டிருந்தார்.

இவர் இன்றுதான் கலிபோர்னியாவில் **(06.02.1911)** பிறந்தார்.

❒

இங்கிலாந்து அரசியான அன்னியும் இன்றுதான் **(06.02.1665)** பிறந்தார்.

❒

அமெரிக்காவின் புகழ்பெற்ற அரசியல் தலைவரான ஆரன் பர்க் என்பவரும் இன்றுதான் **(06.02.1756)** பிறந்தார்.

❒

## பிப்ரவரி-7 ‘வேலை’

சிங்க்ளேர் லெவிஸ், மிகவும் பின்தங்கிய ஒரு சிற்றூரில் பிறந்தார். பயனுள்ள நூல்களைப் படித்தால் அறிவு மேம்படும் என்று இளமையிலேயே நினைத்தார். அதனால் நூல்களைத் தேடிப் படித்தார். படித்த தாக்கம் அவருக்குள் கவிதை எழுதும் ஆற்றலை வளர்த்தது. கவிதை என்றால் அவருக்கு உயிரானது.

பதினேழாவது வயதில் ஆபர்லின் அகாதமியில் சேர்ந்தார். அதையடுத்து அவர் யேல் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அவ்வேளையில் கவிதைகளை எழுதினார். அவைகள் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. பல பேராசிரியர்கள் புகழ்ந்து பாராட்டினர்.

அத்தோடு, ‘ட்ரான்ஸ் அட்லாண்டிக் டேல்ஸ்’ பத்திரிகை யின் துணையாசிரியர் பதவியும் தேடி வந்தது. லெவிஸ் 1908-இல் பி.ஏ. பட்டம் பெற்றார். அவர் பட்டம் பெற்று வெளியே வந்ததும், ஐரோப்பாவிலுள்ள வாட்டர்லூ, சான் பிரான்சிஸ்கோ மற்றும் வாசிங்டன் ஆகிய நகரங்களில் பிரதான செய்திப் பத்திரிகைகளில் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார்.

எந்தப் பத்திரிகைகளிலும் நீண்ட நாள் நிலைத்தது இல்லை. ஒன்று அவராகவே விலகி வந்துவிடுவார். இல்லை யென்றால், ஆசிரியருடன் கருத்து வேறுபாட்டால் வெளி யேறுவார். ஐந்தாண்டு காலம் எவ்விதப் பயனுமின்றி காலம் கடந்தபின் 1912-இல் முதன்முதலாக ஒரு நூல் வெளிவரும் வாய்ப்பு வந்தது.

‘ஹைக்கும் விமானமும்’ எனும் பெயரில் சிறுவர்களுக்காக எழுதப்பட்ட அந்த நூல், ‘டாம் கிரஹாம்’ என்னும் புனைப் பெயரில் வெளிவந்தது. அதை அடுத்து ‘நமது திருவாளர் ரென்’ என்ற அருமையான நூல் ஒன்று இயற்பெயரில் வெளிவந்தது; அவருக்குப் புகழ் சேர்த்தது.

அந்த வெற்றியைத் தொடர்ந்து, 1951-இல் ‘வல்லூறின் வழக்கு’ வெளிவந்தது. இந்த நாவல் அவருக்கு பெரும் புகழைச் சேர்த்தது. லெவிஸை ஒரு படைப்பாளராக இலக்கிய உலகம் ஏற்றுக் கொண்டது. 1917-இல் வெளிவந்த ‘வேலை’ என்ற நாவல்தான்.

இந்த எழுத்தாளரின் உழைப்புக்கும், ஆற்றலுக்கும் நோபல் பரிசும் தேடி வந்தது. இந்த எழுத்தாளர் இன்றுதான் (07.02.1885) பிறந்தார்.

## பிப்ரவரி-8 கேப்டன்...

இராணுவத்தளபதி, வில்லியம் டெக்மெக் சொ்மான். இவரது ஒன்பது வயதில் தந்தை இறந்தார். இவரை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்தவர் செனட்டார் தாமஸ் ஈவிங் என்பவரே.

1840-இல் கல்லூரியில் பட்டம் பெற்ற இவர் முதன் முதலில் தரைப்படையில் வீரராகச் சேர்ந்தார். மெக்சிகன் போரில் இவரது ஆற்றல் மிக்க வீரத்தைக் கண்டு கலிபோர்னி யாவில் பட்டம் கொடுத்து சிறப்பித்தனர்.

பின்னர் - கேப்டனாகிய நிலையில் பதவியை வேண்டாம் என கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறி, கலிபோர்னியா விலேயே வாழ்ந்து கொண்டிருந்தார்.

அந்த வேளையில் வங்கித்துறைப் பாடமும், சட்டமும் படிக்கத் தொடங்கியவர், அதில் முழுமையான வெற்றி கிட்டாமல் அதை விட்டு விலகினார்.

1859-இல் மீண்டும் இராணுவக் கல்விக் கழகத்தில் கண்காணிப்பாளராக பணியில் சேர்ந்தார். இந்தப் பணியை விட்டு நீங்கி, இராணுவக் கூட்டமைப்பில் தன்னார்வ அடிப்படையில் தொண்டு செய்தார்.

இப்படி இராணுவத்துறையில் பல்வேறு நிலையில் பதவிகளை வகித்த வில்லியம், தனது இறுதி நாளில், தாமே இராணுவப்பள்ளி ஒன்றினை 'லிவன் ஒர்த்' என்ற இடத்தில் தொடங்கி நடத்தத் தொடங்கி பயிற்சி அளித்து வந்தார்.

இந்த இராணுவ வீரர் கலிபோர்னியாவில் இன்றுதான் (08.02.1820) பிறந்தார்.

❒

ஆங்கில எழுத்தாளரும், அரசியல் கட்டுரையாளருமான ஜான் ரஸ்கினும் இன்றுதான் (08.02.1819) பிறந்தார்.

❒

அறிவியல் புதினங்களை எழுதிப் புகழ்பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியரான ஜூலஸ் வெர்ன் என்பவரும் இன்று தான் (08.02.1828) பிறந்தார்.

❒

## பிப்ரவரி-9 மருதமலை

மதுரமான இசைக்குச் சொந்தக்காரர் இசைமேதை மதுரை சோமு என்றால் அது மிகையல்ல. 'மருதமலை மாமணியே முருகையா...' என்ற இவரது பாடலை செவியுணர்வு உள்ளவர்கள் எல்லாம் இன்றும் மகிழ்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாராவது மறுக்க முடியுமா...? மேடைகளில் மட்டுமே பாடவிருப்பம் கொண்ட இவரை, இந்த தெய்வீகத் திருப்பாடலப் பாட வைத்தது, தேவர் போன்றவர்கள்தான். திரை உலக வரலாற்றில் இந்தப்பாடல் நிலையான புகழ் பெற்றது.

மதுரை சோமு என்று அழைக்கப்படும் இவர் மதுரைக்குச் சொந்தமானவர் இல்லை. இவர் பிறந்தது சுவாமிமலை. குடிபெயர்ந்த இடம் மதுரை. இவர் மனைவி பிறந்த ஊர் தஞ்சை மாவட்டம் - பாபநாசம் வட்டத்தில் உள்ள திருக்கருகாவூர்.

இளமை காலத்தில் இவர் இசை பயின்றது, சுவாமிமலை அருட்பா கலைஞர் சீனிவாசம் பிள்ளையிடம். அந்த வேளையில் இவர் இசை மட்டும் கற்றுக்கொள்ளவில்லை. காவிரி மணல் வெளியில் மல்யுத்தப் பயிற்சியையும் கற்றுக் கொண்டார்.

மேடை கச்சேரியாளர்கள் பெரும்பாலும் சாஹித்திய அடிப்படையில் நிகழ்ச்சிகளை நடத்தி முடிப்பார் களாம். ஆனால் இவரின் பாணி மாறுபட்டிருக்குமாம்.

காம்போதி, சங்கராபரணம், மலையமாருதம் ஆகிய ராகங்களில் மணிக்கணக்காகப் பாடக்கூடிய ஆற்றல் பெற்றவர், மதுரை சோமு.

எந்த ஒரு ராகத்தை எடுத்துக் கொண்டாலும் இவருடைய குரல் வளத்தில் அது நிறைவைப் பெற்றுவிடும் என்பது இசை வல்லுநர்களின் கணிப்பு.

இவர் ஐ.நா.சபையில் பாடியிருக்கிறார், பத்மஸ்ரீ பட்டமும் பெற்றிருக்கிறார்.

இந்த இசை மேதை சுவாமிமலையில் இன்றுதான் (09-02-1919) பிறந்தார்.

❑

## பிப்ரவரி-10 என் உயிர்...!

ஒரு யூதர் குடும்பத்தில் போரிஸ் பாஸ்டர் நாக் தோன்றினார். அவரது தந்தை மாஸ்கோ கலைக் கல்லூரியில் பேராசிரியராக இருந்தார். இவர் ஓவியர் டால்ஸ்டாயின் உருவத்தை வரைந்து புகழ்பெற்றவர். இவர்கள் வீட்டிற்கு ரஷ்ய இலக்கியவாதிகள் அடிக்கடி வருவார்கள்.

அப்போது பாஸ்டர் நாக் சிறுவனாக இருந்தபோதிலும் அவர்களைப் போல் தானும் எழுத்துலகில் புகழ்பெற வேண்டும் என்று எண்ணுவார். குறிப்பாக டால்ஸ்டாய் வந்து போகும்போது அந்த எண்ணம் வளரும்.

ஆயினும் அவருக்கு இசையிலும் ஈடுபாடு இருந்ததால் ஆறு ஆண்டுகள் இசையை முறையாகக் கற்றுத் தேர்ந்தார். அவருடைய இலக்கியப்பணி 1913-இல் இருந்துதான் தொடங்கியது. ‘மேகங்களில் இரட்டையர்’ என்ற முதல் கவிதை வெளிவந்தது.

அதுவே இவரை பெரும் இலக்கிய வாதிகளுக்கு எளிதாக அறிமுகப்படுத்தி விட்டது; புகழ்க்கொடி படரத் தொடங்கி விட்டது. 1971-இல் ‘முட்டு கட்டைகளுக்கு மேலே’ என்ற தலைப்பில் இரண்டாவது கவிதைத் தொகுப்பு கண் விழித்தது. எல்லோரும் இத்தொகுப்பை புகழ்ந்து பேசத் தொடங் கினார்கள். எழுத்துத்துறையில் எழுச்சியோடு பாஸ்டர் நாக் எழுதத் தொடங்கினார். 1922-இல் ‘சகோதரி என் உயிர்’ என்ற படைப்பு அவரின் புகழை மேலும் புகழ் சிகரத்தில் வைத்தது.

கவிதைகளை எழுதிக்கொண்டு இருந்த பாஸ்டர் நாக் முதன்முறையாக ‘டாக்டர் ஷிவாகோ’ என்ற நாவலை எழுதினார். நாவல் உலகிலும் அவர் புகழ் கூடியது. இந்த நாவல், டால்ஸ்டாயின், ‘போரும் அமைதியும்’ நாவலுடன் ஒப்பிட்டுப் பேசும் அளவிற்கு புகழப்பட்டது. இந்த நாவல் 1958-இன் இறுதியில் பதினெட்டு மொழிகளில் வெளியிடப் பட்டது.

கவிஞராகவும், நாவலாசிரியராகவும் இருந்து புகழ்பெற்ற போரிஸ் பாஸ்டர் நாக், மாஸ்கோவில் இன்றுதான் (10.02.1890) பிறந்தார்.

## பிப்ரவரி-11 உழைப்பு

ஏராளமான சாதனங்களைக் கண்டுபிடித்தார். ஒட்டுப் பதிவு இயந்திரம், தந்தியை அச்சிடுதல், மைக்ரோ போன், கிராமபோன், பேசும் சினிமா போன்றவை இவற்றுள் சில. மின்சார பல்பைக் கண்டுபிடித்தது அவரது மிகப்பெரும் சாதனைகளில் ஒன்று.

இளம் வயதிலேயே ஆராய்ச்சி அறிவுடன் விளங்கி வந்தார் என்றாலும், ஆராய்ச்சிக்கூடம் அமைத்து தன் ஆராய்ச்சிகளைத் தொடர அவருக்கு வசதி கிடையாது. எனவே இரயில்வே நிலையத்தில் தனியாக கழற்றிவிடப்பட்ட சரக்கு இரயில் பெட்டி ஒன்றைத் தன் ஆராய்ச்சிக்கூடமாக வைத்துக்கொண்டு, அதில் ஆராய்ச்சிகளைத் தொடங்கினார்.

ஒருநாள் எதிர்பாராமல் அவர் வைத்திருந்த விளக்கு அந்த காலி இரயில் பெட்டியில் தீப்பிடிக்கக் காரணமானதன் விளைவாக, இரயில்வேயைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் ஓடிவந்து சிறுவன் எடிசனை ஓங்கி அறைந்ததன் மூலம் அவர் காதே பழுதுபட்டுப் போனது.

அவரைப்போல அயராமல் முயற்சியில் ஈடுபடுபவர் யாரும் இல்லை. ஏனெனில் அவர் ஒவ்வொரு புதிய சாதனங்களையும் கண்டுபிடிப்பதற்காக சுமார் பத்தாயிரம் முறை முயன்று தோற்றுவிடுவாராம். ஒரு மின் விளக்கைக் கண்டுபிடிக்க பத்தாயிரம் முறை பலவித முயற்சிகளில் ஈடுபட்டு, கடைசியில் அவர் பல்பைக் கண்டுபிடித்தாலும், எவ்வளவு கஷ்டப்பட்டு விட்டோம் என்று அவர் ஒருநாளும் அலுத்துக் கொண்டது இல்லை.

'நான் பத்தாயிரம் முறை முயன்று தோற்றதை பெரிய சிரமமாக எண்ணிப் பார்த்ததில்லை. என்னுடைய கடுமையான உழைப்பு மூலம் அந்த பத்தாயிரம் முறைகள் தவறு என்பதை கண்டுபிடித்திருக்கிறேன் என்றே எண்ணுவேன்' என்று அவரே சொல்கிறார். இத்தகைய தீவிர முயற்சி, சகிப்புத் தன்மையோடு இருந்தால் எவரும் வெற்றிபெற முடியும்.

12 வயதில் ஆராய்ச்சியைத் தொடங்கி, 84 வயது வரை இடைவிடாது உழைத்த தாமஸ் ஆல்வா எடிசன், அமெரிக்காவில் இன்றுதான் (11.02.1847) பிறந்தார்.

## பிப்ரவரி-12 மன்னிப்பு...

மன்னிப்பதன் மூலம் மன்னிக்கிறவன் உயருகிறானோ, இல்லையோ, மன்னிக்கப்படுகிறவன் உயருகிறான்: எனவே பழியுணர்ச்சி, பகையுணர்ச்சி இன்றி மன்னிப்பது மிக மிக அவசியம்.

ஆப்ரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த போது, அவர் ஒரு கொள்கையில் மிக உறுதியாக இருந்தார். தம்மிடம் கருணை மனு கேட்கும் மரண தண்டனைக் கைதிகளை மன்னித்துத் தண்டனைக் காலத்தைக் குறைத்து விடுவார். மரண தண்டனையை நீதிமன்றங்கள் விதித்தாலும் அவர் ஜனாதிபதி என்கிற அதிகாரத்தை உபயோகப்படுத்தி ரத்து செய்வார். அதற்காக அவரைக் கடுமையாக பலர் விமர்சனம் செய்தார்கள்.

ஒரு யுத்தம் முடிந்து போர்க்களத்தை அவர் பார்வையிட்ட போது, ஒரு ராணுவ வீரன் தன் கழுத்தில் இருந்த செயின் லாக்கெட்டை முத்தமிட்டபடி செத்துக் கிடந்தான். அந்த லாக்கெட்டில் அவன் மனைவி அல்லது காதலி படம் இருக்கலாம், அதை அவர்களிடம் சேர்க்க வேண்டும் எனக் கருதி லாக்கெட்டை எடுத்த லிங்கன் அதிர்ந்து போனார். காரணம் அதில் இருந்தது ஆப்ரகாம் லிங்கனின் படம்.

விசாரித்தபோது உண்மை தெரிந்தது. அவன் மரண தண்டனை பெற்ற குற்றவாளி. லிங்கனால் மன்னிக்கப்பட்டுச் சிறைத் தண்டனை பெற்றிருந்தான். போர் வந்தது. சிறைக் கைதிகளுக்கு ராணுவப் பயிற்சி தரப்பட்டு போரில் ஈடுபடுத்தப் பட்டனர். போரில் அவன் நாட்டுக்காகத்தன் உயிரைத் துறந்து தியாகி ஆகிவிட்டான்.

அதே உயிர் மரண தண்டனை மூலம் போயிருந்தால் அவமானம். அது நாட்டுக்காகப் பிரிந்தால் வெகுமானம். மன்னிப்பு அவனைத் தியாகி ஆக்கிவிட்டது. அந்த நன்றி உணர்வில் அவன் லிங்கன் படத்தை முத்தமிட்டபடி இறந்து போனான். மன்னிப்பதன் மூலம் துரோகிகளை தியாகிகள் ஆக்கலாம் என்ற உயர்ந்த - சிறந்த பண்பினை உலகிற்கு உணர்த்திய மேதை ஆப்ரகாம் லிங்கன்.

அமெரிக்காவின் 16-வது ஜனாதிபதியான ஆப்ரகாம் லிங்கன் இன்றுதான் **(12.02.1809)** பிறந்தார்.

❐

பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த இயற்கை ஆய்வாளரான சார்லஸ் டார்வின் என்பவரும் இன்றுதான் **(12.02.1809)** பிறந்தார்.

❐

## பிப்ரவரி-13 அறிவு விளக்கு

'பாரத கோகிலா', 'இந்தியாவின் வானம்பாடி', 'கவிக்குயில்' என்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றவர், சரோஜினி நாயுடு.

இவர் ஒரு வீராங்கனை. பெண்பாற் புலவர்; சமாதானப் புறா; மாதர் விடுதலைக்கு அரும்பணியாற்றியவர்; எல்லோருக்கும் நண்பர்; தத்துவஞானி; வழிகாட்டி; தேச விடுதலையில் அகிம்சையைக் கடைபிடித்தவர் என்றால் மிகையன்று.

செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். பல்வேறு பட்டங்களைப் பெற்றவர். பதின்மூன்று வயதிலேயே ஆங்கிலத்தில் கவிதை புனைந்தவர். காந்தியடிகளைத் தலைவராக ஏற்று விடுதலைப் போரில் கலந்துகொண்டு, சிறை சென்றவர். அவர் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி இது...

கவியரசி சரோஜினி தேவி, ஒரு சமயம் பொதுக்கூட்டம் ஒன்றில் தலைமைதாங்கச் சென்றார். அவர் கும்மிருட்டில் கூட்டத்திற்குள் நுழைந்ததும் எதிர்பாராத நிலையில் மின்விளக்கு நின்றுபோனது. கூடியிருந்த கூட்டம் 'விளக்கு... விளக்கு...' என்று கூக்குரலிட்டது. விழாவிற்கு ஏற்பாடு செய்தவர்கள் ஒன்றும் புரியாத நிலையில் தவித்தார்கள்.

நெஞ்சுறுதி வாய்க்கப்பெற்ற கவிக்குயில் இருட்டைக் கண்டு சிறிதும் அஞ்சாமல், தலைமை தாங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த மேடை மீதுள்ள மேசை அருகே சென்றார். குழப்பமும், பதட்டமும் நிலவிய கூட்டத்தில் சிம்மக்குரலில் பேசத் தொடங்கினார். விளக்கு எங்கே என்றவர்களுக்கு விளக்கம் கொடுக்கத் தொடங்கினார்.

''விளக்கு... விளக்கு...' என்று அறியாக் குழந்தைகள் போன்று கூக்குரலிடத்தான் தெரிகிறதே தவிர, விளக்கு இன்றேல் என்ன செய்வது என்று தெரியவில்லையே! கையோடு நான் ஒரு விளக்கினைக் கொண்டு வந்திருக்கிறேன். எனது அரசியல் ஆசான் மகான் காந்திஜி தந்துள்ள 'அறிவு விளக்கு ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறேன்...' என்று கூறியதும், கூட்டத்தில் அமைதி நிலவியது.

இந்த வானம்பாடி வங்காளத்தில் இன்றுதான் **(13.02.1879)** பிறந்தார்.

## பிப்ரவரி-14 பைத்தியக்காரன்

"இவன் பைத்தியக்காரனாக இருக்கிறானே. நம் கண்ணிற்கு சூரியன் சுற்றுவது, பூமி அப்படியே அசையாமல் இருப்பது. அப்படியிருக்க கற்பனைக் கதை சொல்வதுபோல சொல்லிகிட்டு இருக்கான்..." இப்படி ஒருவரைப் பற்றி, ஊரே மேலே கூறியபடி பேசியது.

பேசப்பட்டவர் விஞ்ஞானி கோபர்னிகஸ். அவர்கள் பேச்சைக் கேட்டு சிரித்தபடியே, "இவர்கள் எதை வேண்டுமாலும் பேசிக் கொண்டு இருக்கட்டும். நான் சொன்னவை உண்மை என்று இவர்கள் ஒருநாள் உணர்வார்கள்..." என்று சொல்லியபடியே வழக்கம்போல் தன் ஆய்வினைத் தொடர்ந்தார்.

இந்த உலகம் பற்றிய புதிருக்குச் சரியான விடை கண்டுபிடித்துத் தந்த ஒன்றுக்காகவே மனித சமுதாயம் இந்த மகத்தான விஞ்ஞானிக்கு கடமையும் - நன்றியும் கூற கடமைப்பட்டிருக்கிறது.

கோபர்னிகஸ், கொலம்பஸ் இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். கொலம்பஸ் ஒரு புதிய கண்டத்தைக் கண்டுபிடித்தார். கோபர்னிகஸ் புதிய ஒரு அறிவியல் தத்துவத்தைக் கண்டுபிடித்தார்.

டெலஸ்கோப் கண்டுபிடிக்கப்படாத காலத்திலேயே விஞ்ஞானக் கருவிகளின் துணையின்றி, முப்பது ஆண்டுகால ஆய்வின் விளைவாக சுற்றிவிட்டப் பம்பரம்போல் பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றி வருகிறது. சந்திரன் பூமியைச் சுற்றுகிறது என்று ஒரு புதிய கோட்பாட்டை உலகிற்குச் சொன்னார்.

சூரியனும் மற்ற எல்லாக் கோள்களும் பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன என்று அதுவரை உலவி வந்த கருத்தை அடியோடு அழித்துப் போட்டவர், கோபர்னிகஸ்.

போலந்து நாட்டில் இந்த மேதை இன்றுதான் (14-02-1473) பிறந்தார்.

❑

அமெரிக்காவில் புகழ்பெற்று விளங்கிய நடிகர் பாரிமோர் என்னும் நடிகரும் இன்றுதான் (14-02-1882) பிறந்தார்.

❑

## பிப்ரவரி-15 'ஆட்டம்'

கலீலியோவின் தந்தை இசை மேதையாகவும், கணித மேதையாகவும் இருந்தார். இசையும், கணிதமும வாழ்க்கைக்குத் தேவையான செல்வச் செழிப்பைத் தராது என்பதால், தன் மகனை பெரும் வியாபாரியாக ஆக்க வேண்டுமென்று விரும்பினார். கலீலியோவோ தன் எண்ணப்படியே மருத்துவம் படிக்க விரும்பினார். தந்தையும் இசைந்தார். அதன்படியே பைசா நகரப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்.

சிறுவயதில் கிறித்துவ தேவாலயத்துக்கு கலீலியோ செல்வது வழக்கம். அப்படி ஒரு நாள் சென்றபோது, மடாலயப் பொறுப்பாளர் பல கிளைகள் கொண்ட மெழுகுவர்த்தித் தாங்கியில் மெழுகுவர்த்திகளைப் பொருத்தி விளக்கு ஏற்றிக் கொண்டிருந்தார். அதைக் கூரையில் இருந்து தொங்கிக் கொண்டிருந்த சங்கிலியில் மாட்டினார். அது சிறிது நேரம் ஊஞ்சலைப்போல் இப்படியும் அப்படியும் ஆடியது. இந்த ஊசல் ஆட்டத்தைக் கூர்ந்து கவனித்தார். பதினேழு வயதான, கலீலியோ. ஊசல் ஆட்டத்தின் கால அளவு ஒரே அளவாக இருப்பதைக் கண்ட அவர் அது சரிதானா என ஆராயத் துடித்தார்.

கடிகாரம் இல்லாத காலம் அது. ஓர் உத்தி அவருக்குத் தோன்றியது. மனிதர்களின் நாடித் துடிப்பு ஒரே சீராக இருக்குமென்னும் மருத்துவ அறிவு அவருக்குக் கை கொடுத்தது. ஒவ்வொரு ஊசலாட்டத்தையும் நாடித்துடிப்பைக் கொண்டு அளந்து பார்த்தார்.

ஊசலாட்டம் பெரியதாய் இருந்தாலும், சிறியதாய் இருந்தாலும் ஒரே கால அளவு இருப்பதையும் உணர்ந்தார். இதை மையமாகக் கொண்டு நாடித் துடிப்பை அளக்கும் 'நாடி மானி'யைக் கண்டுபிடித்தார். இக்கண்டுபிடிப்பின் துணையைக் கொண்டுதான் பின்னாளில் சுவர்க்கடிகாரம் உருவாக்கப் பட்டது. இன்றைய பெண்டலக் கடிகாரத்திற்கு அடித்தளம் அமைத்துத் தந்தார், கலீலியோவே.

இந்த மாபெரும் மேதை இத்தாலியிலுள்ள பைசா நகரில் இன்றுதான் **(15-02-1564)** பிறந்தார்.

❑

கண்டுபிடிப்பாளரான சைரஸ் மெக்கார்மிக் என்பவரும் இன்றுதான் **(15-02-1809)** பிறந்தார்.

❑

## பிப்ரவரி-16 நீண்ட தொடர்...

ஹாரூக் பியூமாண்ட், இவர் அமெரிக்க தொலைக் காட்சி நடிகர். இயக்குநர். நிகழ்ச்சி அமைப்பாளர்.

தொலைக்காட்சியில் வெளிவந்த ஒரு தொடரில் (*1957* முதல் *1963* வரை) ஆறு ஆண்டுகள் தொடர்ந்து நடித்ததின் மூலம் இவர் புகழ் உயர்ந்தது. அத்தொடரின் பெயர் 'லீவ் இட் டு பீவர்.'

உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்து 'ஷாட்ட மூஹா' என்ற பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார்.

படிக்கும் காலத்தில் இவர் சிறந்த கால்பந்து வீரராக இருந்து பல பரிசுகளைத் தட்டியிருக்கிறார்.

தென் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் *1946*-இல் இறையியல் பாடத்தில் முதுநிலைப் பட்டமும் பெற்றார்.

சில ஆண்டுகள் சர்ச்சில் பாதிரியாராகவும் பணியாற்றி யுள்ளார்.

இவர் *36* திரைப்படங்களில் நடித்தார். இருந்தும் இவருக்குப் புகழ் சேர்த்தது, தொலைக்காட்சி தொடர்களே.

இந்த நடிகர் அமெரிக்காவில் இன்றுதான் (*16.02.1909*) பிறந்தார்.

❑

அமெரிக்க நாட்டு வரலாற்றாசிரியர் ஹென்றி ஆடம்ஸ் என்பவரும் இன்றுதான் (*16.02.1838*) பிறந்தார்.

❑

அமெரிக்காவின் புகழ்பெற்ற நடிகையான காதரின் கார்னல் என்பவரும் இன்றுதான் (*16.02.1893*) பிறந்தார்.

❑



## பிப்ரவரி-17 அம்மா...!

கணவர் ஒரு மகான் என்று அறிந்ததும், தம் ஊரில் இருந்த சாரதாமணி தேவியார் தனக்குள் 'இனியும் அவரைப் பிரிந்து இருக்கக் கூடாது' என்று தீர்மானித்து, கால்நடையாகவே தம் கணவர் இருந்த தட்சினேஸ்வரம் வந்து சேர்ந்தார்.

"உங்களுடைய வழியில் குறுக்கிட நான் விரும்பவில்லை. இங்கிருந்து உங்களுக்குச் சேவை செய்ய எனக்கு அனுமதி அளியுங்கள். நானும் ஈசுவர பஜனையில் காலம் கழிக்கிறேன்" என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு அவர் சம்மதிக்கவே, சாரதாமணி தேவியும் ஆலயத்திலேயே தங்கி பூஜை, தியானம், வழிபாடு முதலிய வற்றில் ஈடுபட்டார். இவ்வேளையில் ஒரு நாள் மார்வாடி அன்பர் ஒருவர் அங்கு வந்து, பரமஹம்சரிடம் பத்தாயிரம் ரூபாய் கொடுக்க முன் வந்தார். பரமஹம்சரோ என்றும் பணத்தைக் கையாலும் தொடாதவர். அப்படியே அதைத் தொட்டுவிட்டாலும் அவருடைய நாடி நரம்புகள் புடைத்துவிடுமாம்.

"எனக்குப் பணத்தாசை காட்டுகிறாயா? எல்லாத் துன்பங் களுக்கும் அதுதானே மூலம்? பரம்பொருளைத் தேடுவோரின் வழியில் அது முள்ளைப் போன்றதாயிற்றே...?" என்றார்.

"ஐயனே! எண்ணெய் நீரோடு கலப்பதில்லை. அதுபோல தங்கள் மனமும் விஷய வாசனைகளோடு கலக்க முடியாது" என்றார் மார்வாடி.

"அப்படி சொல்லாதே. எண்ணெயும் நீரும் உடனே கலந்து போகாவிட்டாலும், சிறிது காலமானால் கலந்து விடுகின்றன. அதைப்போலவே விஷய வாசனைகளோடு தொடர்பு கொண்டால் காலப்போக்கில் மனம் அவற்றில் மூழ்கிவிடும்...." என்றார், இராமகிருஷ்ணர்.

"இதோ பணத்தைக் கொடுத்துவிட்டேன்" என்று பணத்தை வைத்துவிட்டு எழுந்தார், மார்வாடி.

இதைக் கண்டதும் இராமகிருஷ்ண பரமஹம்சர் விம்மி விம்மி அழுதாராம்... "அம்மா! இம்மாதிரி மனிதர்களை என்னிடம் ஏன் அனுப்புகிறாய்? என்னையும் உன்னையும் பிரித்துவைக்க இப்படி முயல்கிறார்களே" என்று கூறி ஓவென்று அரற்றினாராம். அது கண்டு திடுக்கிட்ட மார்வாடி இராமகிருஷ்ணரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாராம்.

இவ்வுலகில் யாவற்றையும் துறந்து வாழ்ந்த மகான் இராமகிருஷ்ணர் வங்கம் - தேரேப்பூர் கிராமத்தில் இன்றுதான் **(17-02-1836)** பிறந்தார்.

## பிப்ரவரி-18 'நீலவிழி'

அமெரிக்காவின் ஒகியோ மாநிலத்தைச் சேர்ந்த டோனி மாரிஸன், லொரைன் என்னுமிடத்தில் பிறந்தார். உள்ளூர் பள்ளியில் படிப்பு முடித்து, வாஷிங்டனிலுள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் பட்டக் கல்வியைத் தொடங்கினார்.

அங்கே நாடகக் குழுவில் இணைந்து கலைச் சேவையையும் தொடங்கினார்.

**1953**-இல் பி.ஏ. முடித்து, பின் கார்னெல் பல்கலைக் கழகத்தில் **1955**-இல் எம்.ஏ. பட்டமும் பெற்றார். பின் பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார். இந்த நிலையில்தான் இவர் எழுத்துலகில் புகுந்தார்.

அப்போதுதான் அவர் ஹெரால்டு மாரிஸன் என்பவரை மணந்து இரு குழந்தை களுக்கும் தாயானார். ஏனோ மண வாழ்வில் தொடர முடியாமல் கணவரை விட்டுப் பிரிந்தார்.

மண வாழ்க்கை தடம் மாறிப் போனாலும், மனம் கலங்காமல் எழுத்துத் துறையிலும், கல்லூரிப் பணியிலும் ஈடுபட்டு வந்தார். எழுத்துலகில் இவர் முப்பது வயதிற்கு மேல்தான் பேசப்பட்டார்.

முதல் நாவல் 'நீலவிழி' என்பதாகும். இரண்டாவது நாவல் 'சூலா'. இவரது புகழ் உலகெலாம் பரவ முன்நின்ற நாவல் 'சாலமன் கீதம்' என்பதாகும். இந்த அற்புதமான நாவல்தான் இவருக்கு நோபல் பரிசையும் பெற்றுத் தந்தது.

இந்த எழுத்தாளர் இன்றுதான் **(18.02.1931)** பிறந்தார்.

❒

இங்கிலாந்தின் முதல் அரசியான முதலாம் மேரியும் இன்றுதான் **(18.02.1516)** பிறந்தார்.

❒

மின்சார பாட்டரியை உருவாக்கிய இத்தாலி நாட்டுக் கண்டுபிடிப்பாளரான வோல்ட்டாவும் இன்றுதான் **(18.02.1745)** பிறந்தார்.

❒

## பிப்ரவரி-19 'சிறப்பதிகாரம்'

பதிப்பு வேந்தர் உ.வே.சாமிநாதய்யர் பத்துப்பாட்டைச் செம்பதிப்பாகப் பதிப்பித்தார். தமிழர் நாகரிகம். பண்பாடு ஆகியவற்றை அதன் வாயிலாக உலகம் உணர்ந்தது. உ.வே.சாவின் உழைப்பு மட்டும் இல்லை என்றால் பல இலக்கியங்கள் இன்று நம் கண்ணில் படாமலேயே காணாமல் போயிருக்கும். சங்க இலக்கிய ஏடுதேடும் வேளையில் உ.வே.சா பட்ட துன்பங்களும், ஏமாற்றங்களும் ஏராளம்.

''ஒரு சமயம், ஐயர் அவர்கள் திரிகூடராசப்பக் கவிராயரை உடனழைத்துக் கொண்டு, அம்பாசமுத்திரத்திற்குப் போனார். இருவரும் அங்குள்ள சைவர்களின் குரு ஒருவர் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கே குருவைக் கண்டார்கள். அவரும் வரவேற்று, என்ன விசேஷம்?'' என்று கேட்டார்.

''உங்களிடம் ஏட்டுச் சுவடிகள் இருப்பதாகக் கேள்விப் பட்டோம். அவற்றைப் பார்க்கலாமென்று வந்தோம்....'' என்றார், ஐயர்.

''அப்படியா? உங்களுக்கு என்ன வேண்டும்?'' கேட்டார், குரு.

''சிலப்பதிகாரம் வேண்டும்....'' என்றார், ஐயர். ''சிறப்பதிகாரமா? இருக்கும்...'' என்ற அழுத்தம் திருத்தமாகச் சொன்னார், குரு. சிறப்பதிகாரம் அல்ல; சிலப்பதிகாரம்...'' என்றார், ஐயர். ''சிறப்பதிகாரம் என்றுதான் சொல்ல வேண்டும்; நீங்கள் சிறுபிள்ளை; உங்களுக்குத் தெரியாது...'' என்று கூறினார், குரு. அது கிடக்கட்டும். புத்தகத்தைக் காட்டச் சொல்'' என்றார், கவிராயர்.

''அவ்வளவு சுலபமாகக் காட்ட முடியுமா? இப்போ தெல்லாம் அவற்றைத் தொடலாமோ? சரஸ்வதி பூஜை யில்அர்ச்சனைப் பண்ணிப் பூஜை செய்து எடுக்க வேண்டும்'' என்றார். சைவ குரு. அதன் பிறகு அவர் பையனைத் தனியே அழைத்து, ''அந்தப் புத்தக ஏட்டைக் காட்டு...'' என்று அதிகாரத்தோடு கூறினார், கவிராயர். அந்தப் பையன் கவிராயரின் உதவிபெற்று வாழ்கிறவர்கள் அவர்கள் என்பதால், அவன் மறுக்காமல் ஏட்டுப் பிரதிகளை எடுத்துக் காட்டினான்.

அவை சிறப்பதிகாரமுமல்ல, சிலப்பதிகாரமுமல்ல. அந்திமக்கிரியை பற்றிய ஏடுகளும், ஆகம ஏடுகளுமே என்றறிந்த உ.வே.சா. அவர்களும், கவிராயரும் ஏமாற்றத் தோடு வந்தவழியே திரும்பினார்களாம்.

தமிழ்காத்த இந்த தமிழ் தாத்தா தஞ்சை மாவட்டம் - பாபநாசம் - அருகிலுள்ள உத்தமதானபுரத்தில் இன்றுதான் **(19-02-1885)** பிறந்தார்.

❑

## பிப்ரவரி-20 சிவகவிமணி

சிவகவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் சிறு வயதிலேயே தந்தையை இழந்த இவர் பள்ளி, கல்லூரி படிப்புகளை கோவையில் முடித்தார். பின்னர், சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து, பி.ஏ. முடித்து, அங்கே சென்னை மாகாணத்திலேயே தமிழில் முதல் மாணவராகத் தேறி பொற்பதக்கமும், கல்லூரியின் முதல் பரிசும் பெற்றார்.

இவர், பண்டித ச.சிற்றம்பலம் பிள்ளை என்னும் பேராசிரியரிடம் தமிழ் கற்றார். இத்தமிழறிவே இவரை பின்னாளில் உயர்த்தி வைத்தது. படித்து முடித்ததும் கோவையில் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்.

அப்போது விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற வ.உ.சி., சிறைக்குள் அவர் பட்ட வேதனைகளை வெளிப்படுத்தி, நீதிமன்றத்திக்குக் கொண்டு வந்தவர் சிவகவிமணியே. சிறந்த வக்கீல் என்று பெயர் பெற்ற இவர்,

சிவகவிமணி, கந்தபுராணம் போற்றிக் கலிவெண்பா, திருப்போரூர் இரட்டை மணிமாலை, அவிநாசிக் கருணாம் பிகை பிள்ளைத் தமிழ் போன்ற செய்யுள் நூல்களை எழுதிய தோடு, மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை, வாகீசர் அல்லது மெய்யுணர்தல், கருவூர்த் தேவர், சேக்கிழாரும் சேயிழையார்களும், சேக்கிழார் செம்மணித்திரன் இன்னும் பல உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்.

பெரியபுராணம் முழுவதற்கும் விரிவான விளக்கவுரை எழுதி, வெளியிட்டார். வேறு எந்த ஒரு இந்திய மொழியிலும் இவ்வளவு பெரிய விரிவுரை வந்தது இல்லை.

இதை ஏழு பகுதிகளாகப் பிரித்திருந்தார். 1954-இல் டில்லியில் மதுரை ஆதீன முதல்வரின் தலைமையில், சைவ மதத்தலைவர்கள் அறிஞர்கள் முன்னிலையில் இந்நூல் வெளி வந்தது.

சென்னை மாகாணத்தமிழ்ச் சங்கம் இவருக்கு சிவகவிமணி என்னும் பட்டத்தையும், மதுரை ஆதீனத்தால் திருமுறை ஞானபானு என்னும் பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தது.

இவ்வறிஞர் கோவையில் இன்றுதான் (20.02.1878) பிறந்தார். ❑

## பிப்ரவரி-21 கழிவில்...

இந்தியாவில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தோன்றக் காரணமாக இருந்தவர், எஸ்.எஸ்.பட்னாகர். இந்திய அறிவியல் தொழிற்நுட்ப வளர்ச்சியில் முக்கிய அங்கம் வகித்தவரும் இவரே.

இவர் பிறந்த எட்டு மாதக் குழந்தையாக இருந்தபோதே தந்தையை இழந்ததால் தாயுடன் தாத்தா வீட்டில் வளர்ந்தார். தொடக்கக்கல்வி கற்றார்.

பிரிக்க முடியாத திரவங்களைப் பற்றி ஆய்வு செய்து 1921-இல் இலண்டன் பல்கலைக் கழகத்தில் டி.எஸ்.ஸி. பட்டம் பெற்றார்.

மெழுகை சிக்கனமாக பயன்படுத்தும் முறைகள். ஜுவாலையின் உயரத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் மண்ணெண்ணெயை சுத்தப்படுத்துதல் பெட்ரோலிய தீ தயாரிப்பில் மீதமாகும் கசடு எண்ணையை பிற தொழில் களுக்கு பயன்படுத்துதல் போன்றவற்றை ஆய்வு செய்து வெளிப்படுத்தினார்.

இரண்டாம் உலகப்போர் நடந்த நேரத்தில் இந்திய அறிவியல் ஆராய்ச்சிக்குழுவின் இயக்குநராக ஆங்கில அரசு பட்நாகரைத் தேர்வு செய்தது.

அப்போது இவர், சாம்பல் நிற எரிவாயுவால் தீப்பிடிக்காத உடை, பெரிய பெரிய வெடிக்காத பெட்டிகள் போருக்காக தயார் செய்தார். கழிவுப் பொருட்களிலிருந்து பிளாஸ்டிக் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்கினார்.

இவர், அறிவியலோடு, இலக்கியம், நாடகம், சமூகவியல் போன்றவற்றிலும் ஈடுபாடு கொண்டவராக இருந்தார்.

இவர், பாகிஸ்தானிலுள்ள ஷாபூர் நகரில் இன்றுதான் (21-02-1894) பிறந்தார்.

❑

பிரிட்டனின் புகழ்பெற்ற மதத்தலைவரான ஜான்ஹென்றி கார்டினல் நியூமன் என்பவரும் இன்றுதான் (21-02-1801) பிறந்தார்.

❑

## பிப்ரவரி-22 இளமையிலேயே...

ஜார்ஜ் வாசிங்டன் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தார். இந்த உயர்வு இவருக்கு எப்படி வந்தது? உழைப்பால், எளிமையால்! இவரது தந்தை ஒரு விவசாயி. இவர் குறைந்த அளவே கல்வி கற்றார். பின் உழவுத் தொழிலில் ஈடுபட்டார். தந்தையின் இழப்பிற்குப்பின் ஒன்றுவிட்ட அண்ணனின் ஆதரவில் வளர்ந்தார்.

அமெரிக்காவின் விடுதலைக்காக விடுதலைப் படைக்கு தலைமையேற்று, அவரது தாய்நாட்டிற்கு வெற்றியையும் தேடித்தந்தார். விடுதலை பெற்ற நாட்டின் முதல் குடியரசுத் தலைவராக இருந்து அரும்பணிகளாற்றினார்.

சிறிய வயதிலேயே அவர் அந்நாட்டு ஜனாதிபதியாக வேண்டுமென எண்ணினார். அதற்காக ஆசைப்பட்டார். கடுமையாக உழைத்தார். நம்பிக்கை இழக்காமல் முயன்று வெற்றியும் பெற்றார். தாம் எண்ணியபடியே அவர் போட்டியின்றி இரண்டு முறை அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த மாபெரும் தலைவர் இன்றுதான் **(22.02.1732)** பிறந்தார்.

❒

வானொலி அலைகளைக் கண்டுபிடித்த ஹெயின்ரிச் ருடால்ஃப் ஹெர்ட்ஜ் என்ற விஞ்ஞானியும் இன்றுதான் **(22.02.1857)** பிறந்தார்.

❒

அமெரிக்காவின் புகழ்பெற்ற கவிஞர்களுள் ஒருவரான ஜேம்ஸ் ரஸ்ஸல் லோவெல் என்பவரும் இன்றுதான் **(22.02.1819)** பிறந்தார்.

❒

சாரணர் இயக்கத்தை உருவாக்கிய லார்டு பேடன் பவலின் என்பவரும் இந்நாளில்தான் **(22.02.1732)** பிறந்தார்.

❒

புகழ்பெற்ற உருது கவிஞரான முகமது இக்பாலும் இன்றுதான் **(22.02.1873)** பிறந்தார்.

❒

## பிப்ரவரி-23 'புரணமைப்பு'

டுபோயிஸ், இவர் கறுப்பர் இனத்தைச் சேர்ந்தவர். ஆல்பிரட் டுபோயிஸ் இவரது தந்தை. தாயின் பெயர் சில்வினா பர்ஹார்ட்.

1890-இல் ஹார்வேர்டு பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்றதோடு, பெர்லின் பல்கலைக் கழகத்திலும் படித்து பட்டம் பெற்றார்.

கறுப்பர் இனத்திலேயே முதன் முதலில் டாக்டர் பட்டம் பெற்றவர் இவரே.

ஒகியோவிலுள்ள வில்பர் போர்ட்ஸ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணி ஆற்றியதோடு, பெனின்சில்வேன்யா பல்கலைக் கழகத்திலும் பணியாற்றியுள்ளார்.

அக்கிலாண்டா பல்கலைக் கழகத்தில் முதன் முதலில் சமுகவியல் துறையை இவரே தொடங்கினார்.

பல நூல்களை எழுதிய இவர், மிகவும் விரும்பி எழுதுவது சுயசரிதை நூல்களே. இதில் புகழ்பெற்ற நூலகக் கருதப்படுவது 'பிடடல்பியா நீக்ரோ' (1896) 'கறுப்பர்களின் ஆன்மாக்கள்', (1903) ஜான்பிரெவுன் (1909) இந்த மூன்று நூல்களுமே.

இதைத் தொடர்ந்து 'உலகமும் ஆப்பிரிக்காவும்' என்ற நூலை 1946-இல் எழுதியதோடு 'உலக வரலாற்றில் ஆப்பிரிக்கா்வின்...' என்ற ஆய்வு நூலையும் எழுதினார்.

இங்கிலாந்தில் ஐந்தாவது வரலாற்று சிறப்புமிக்க மாநாடு ஒன்றினை நடத்தி உலகப் பார்வையில் நின்றார்.

அமெரிக்காவின் உள்நாட்டுப் போரில் கறுப்பர்களின் பங்கை முக்கியத்துவப்படுத்தி அவர் எழுதிய 'புணரமைப்பு' என்ற நூல். அந்நாட்டில் காவியமாகவே போற்றப்படுகிறது.

இந்த அறிஞர் ஆப்பிரிக்காவிலுள்ள பேரிங்டன் என்ற ஊரில் இன்றுதான் (23.02.1868) பிறந்தார்.

❑

இந்திய தேசியப் படையை (I.N.A) உருவாக்கிய சுபாஷ் சந்திரபோஸ் என்ற வங்கம் தந்த சுதந்திர சிற்பியும் இன்றுதான் (23.02.1897) பிறந்தார்.

❑

## பிப்ரவரி-24 கடல் வாழ்க்கை

செஸ்டர் நிமிட்ஸ், இவர் இராணுவக் கப்பல்படைத் தலைவர்.

இவர் இரண்டாவது உலகப்போரில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்காக பசிபிக் படைகளையும், துணைப் படைகளையும் நடத்திச் சென்றார்.

நீர்மூழ்கிக் கப்பலைக் கொண்டு எதிரிகளை தந்திரமாகத் தாக்குவதில் வல்லவர்.

இவரது பெருமையை நினைவு கூறும் வண்ணம், இவர் வாழ்ந்த வீடு அந்நாட்டில் இன்று அருங்காட்சியகமாக இருக்கிறது.

இவரது தாத்தாவே இவருக்கு கடல் வாழ்க்கை முறைகளைக் கற்றுத் கொடுத்தார்.

அமெரிக்க இராணுவக் கல்லூரியில் அதிகாரியாகவும் இருந்தார்.

அமெரிக்காவில் மட்டுமல்ல பல்வேறு நாடுகளும் இவரது ஆற்றலைக் கண்டு பல்வேறு விருதுகளை அளித்து சிறப்பித்திருக்கிறது.

இந்த தளபதி டெக்டாஸ் மாநிலத்தில் இன்று தான் (24.02.1885) பிறந்தார்.

❑

அமெரிக்காவின் புகழ்பெற்ற ஓவியர்களுள் ஒருவரான வின்ஸ்லோ ஹோமர் என்பவரும் இன்றுதான் (24.02.1836) பிறந்தார்.

❑



## பிப்ரவரி-25 ஓவியம்

பியரிகெஸ்டி ரினாயர், இவர் தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தார். பீங்கான் தொழிற்சாலையில் வேலை பார்த்தார். அப்போது பீங்கான் பாத்திரங்களில் அங்கு ஓவியம் தீட்டுவதே வேலை. காலப்போக்கில் ஓவியத்தின் மேல் அளவு கடந்த காதலே தோன்றியது.

இவரது ஓவியங்கள் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்றன. அங்கே பலரதுமனம் கவர்ந்தன.

இந்த நிலையில் முறையாக ஓவியக் கலையைக் கற்றுக் கொள்ள வேண்டி, ஓவியக் கல்லூரி ஒன்றில் சேர்ந்து படிக்கத் தொடங்குகிறார். பின்னர் -

பல்வேறு ஓவிய மேதைகளிடம் எல்லாம் பயிற்சியை மேற்கொள்கிறார். சிறந்த ஓவியராக தன்னை ஆக்கிக் கொண்டும், அவரால் போதிய பொருளாதாரத்தைப் பெருக்க முடியவில்லை.

அதனால், தன் பொருளாதாரத்தைப் பெருக்க 1864-இல் ஓவியக் கண்காட்சி ஒன்றினை ஆரம்பித்தும், அவர் எதிர் பார்த்ததுபோல், அங்கீகாரமோ, பொருளாதாரமோ கூட வில்லை. காரணம், பிரான்சிற்கும் டிருசியன் நாட்டிற்கும் இடையே நடந்த போர்தான்.

பத்தாண்டு வறுமைக்குப் பின்பே இவருக்கு பிரான்சு நாட்டில் சிறந்த ஓவியர் என்ற பெயரும், பொருளாதாரமும் உலகப் புகழும் கிடைத்தது.

இவரின் ஓவியத்திற்கு மாடலாக வந்த வாலடன் என்ற பெண்ணையே காதலித்து மணந்ததோடு மற்றொரு பெண்ணையும் மணந்தார்.

இதன் பிறகே, இயற்கைக் காட்சிகளை வரைந்த இவர், மனிதர்களை பல்வேறு கோணங்களில் ஓவியங்களாகத் தீட்ட ஆரம்பித்தார்.

இந்த ஓவிய மேதை பிரான்சு நாட்டில் இன்றுதான் (25.02.1876) பிறந்தார்.

❑

இத்தாலி நாட்டுப் பாடகரான என்ரிகோ கார்ஸோ என்பவரும் இன்றுதான் (25.02.1873) பிறந்தார்.

❑

## பிப்ரவரி-26 ‘குரோம்வெல்’

பிரெஞ்சு மொழிக் கவிஞரும், நாவலாசிரியருமான விக்டர் ஹியூகோவின் படைப்புலக சாதனை பெரிது.

காதல் ததும்பும் நாவல்களை எழுதுவதிலும் வல்லவர். இவரது நாவல்களில் உலகப் புகழ் பெற்றவை லெஸ் மிஸரபில்ஸ். ‘த ஹன்ச் பேக் ஆஃப் நாட்ரி டேம்’.

இவரது புகழ்மிக்க கவிதை நூல்களில் ஒன்றான ‘லெஸ் காண்டம் பிலேஷன்’ என்பது உலகோரால் திறனாய்வு செய்கின்ற அளவில் உயர்ந்து நின்றது.

இளமையில் பழமையை விரும்பக்கூடியவராக இருந்தாலும், காலப்போக்கில் இடதுசாரி கொள்கையில் ஈடுபாடு கொண்டவரானார்.

இவரது படைப்புகளில் மையக் கருத்தாக அரசியல் சமூகப் பிரச்சனைகள் பின்னிக்கிடக்கும். இவரது தொடக்க கால எழுத்துலகில் எழுதிய ‘குரோம் வெல்’ என்ற நாடகத்தை எவ்வளவோ முயன்றும் அவரால் மேடை ஏற்ற முடியாது போனது.

ஆனால், நூல் வடிவம் பெற்று அவருக்கு அந்நாடகம் புகழைச் சேர்த்தது.

இவரது நாடகம் ஒன்றில் ஜூலியட் என்ற நடிகை ஒருவர் நடித்தார். அவரே விக்டர் ஹீரோவை காதலித்து திருமணம் செய்து கொண்டு மனைவியாக இருந்ததோடு, சம்பளம் வாங்காத காரியதரிசியாக கடைசி வரை இருந்தார்.

சமூக அவலங்களையும், அநீதிகளையும் கருவாக வைத்து இவர் 1830-இல் எழுதிய நாவல் ஒன்று மிகுந்த வரவேற்பைப் பெற்று, அதிக விற்பனையானதோடு ஒரு காலகட்டத்தில் மிகுதியான மதிப்பில் ஏலமேபோயிற்றாம்.

இவரது எழுத்து பிரெஞ்சு நாட்டில் ஒரு தாக்கத்தையே ஏற்படுத்தியதோடு, ஒரு நாவல் வெளிவந்து ஒரே நேரத்தில் மூன்று நகரங்களில் விற்பனையானதோடு தீர்ந்து போய் தவணை முறையிலும் விற்றதாம்.

இந்தக் கவிஞனின் நாடகத்தில் மாவீரன் நெப்போலியனின் காதலியும் நடித்திருக்கிறாள் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

இக்கவிஞன் பிரெஞ்சு நாட்டில் இன்றுதான் (26.02.1802) பிறந்தார்.

❑

## பிப்ரவரி-27 மனிதரும்...

ஸ்டான்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் படித்து முடித்த ஜான் ஸ்டீன்பெக் தனது 27-வது வயதில் இலக்கியப் பணியில் இறங்கினார். முதல் படைப்பு அந்த ஆண்டில் 'தங்கக் கோப்பை' நாவல் வெளிவந்தது.

அது அவருக்கு பெயர் தரவில்லை. அதனால் அவர் தளர்ந்து போகவில்லை. அதே வேளையில் அடுத்த நாவல் எழுத நம்பிக்கையோடு பேனாவிற்கு மையூற்றத் தொடங்கினார். 1932-இல் 'சொர்க்கத்தில் ஆயர்கள்' இரண்டாவது நாவலாக வெளிவந்து, அவரது இலக்கிய உலகில் சிறிது வெளிச்சத்தை ஏற்படுத்தியது. 1933-இல் 'அறிமுகமற்ற கடவுள்' என்ற நாவலும் வெளிவந்த போது, ஸ்டீன்பெக்கின் புகழ் சிறிது கூடுதலாகவே உயர்ந்தது.

ஸ்டீன்பெக்கின் 'உச்சக்கட்ட காலம்' 1935-இல் தோன்றியது. அந்த நாவல் அவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு போனது. அடுத்து வந்த 'டார்ட்டில்லா பிளாட்' நாவல் இவரின் புகழை நாடுபோற்ற வைத்தது.

அவர் எழுதிய 'மனிதரும் சுண்டெலியும்' என்ற நாவல் பாமர மக்களிடை யேயும் அவர் பெயரை நிலை நாட்டியது. அதே நாவல் நாடகமாகவும் மேடை ஏறியது. பரிசையும் பெற்றுத் தந்தது.

1942-இல் படைத்திட்ட 'தரையில் இறங்கிய நிலா' என்ற நாவலும் நாடகமாக மாறியது. இந்தப் படைப்பு இவரின் ஆற்றலையும், புகழையும் உலகளாவியப் பெரும் பேரையும் தேடித் தந்தது.

இந்த எழுத்துச் செம்மல் அமெரிக்காவில் இன்றுதான் (27.02.1902) பிறந்தார்.

❑

லாங்பெல்லோ என்னும் புகழ்பெற்ற அமெரிக்கக் கவிஞரும் இன்றுதான் (27.02.1807) பிறந்தார்.

❑

புகழ்பெற்ற ரோமானியச் சக்கரவர்த்தியான கான்ஸ்டான்டைனும் இன்றுதான் (27.02.280 கி.பி.) பிறந்தார்.

❑

## பிப்ரவரி-28 தன் சுதந்திரம்...

மனிதன் 'தன் சுதந்திரத்தை' தன் மன அமைதியை, தன் ஓய்வை, தன்னுடையதாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான் மோந்தேய்ன் காட்டும் வாழ்க்கைத் தத்துவம்.

இவர் கட்டுரை வடிவத்தில் தன்னைப் பற்றியே முழுவதும் பேசியிருக்கிறார்.

மோந்தேய்ன் முனிசிபல் கவுன்சிலரானார். 1565-இல் திருமணம் செய்து கொண்டார். ஆறு பெண்களுக்கு தந்தையானார். 37-வது வயதில் கவுன்சிலர் பதவியிலிருந்து ஓய்வு கொண்டு, தன் வீட்டில் இருந்தபடியே கட்டுரைகளை எழுதத் தொடங்கினார்.

மோந்தேய்ன் வெளிநகரங்களில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு திரும்பி வந்தபின், தன்னுடைய நகரத்தின் மேயர் ஆனார்.

நான்கு ஆண்டுகள் மேயர் பதவியில் இருந்தபின், மீண்டும் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டு கட்டுரைகள் எழுதத் தொடங்கினார்.

மோந்தேய்ன், தான் எழுதிய 94 கட்டுரைகளில் வாழ்க்கையின் போக்குகளையும், நோக்குகளையும் நம் கவனத்திற்கு உள்ளாக்குகிறார். நட்பு, பெண்கள், தனிமை, ஓய்வு இப்படி பலவற்றையும் பேசுகிறார்.

இவ்வகை கட்டுரைகளை முதன் முதலில் எழுதியவர் இவரே. பின்னர்தான் பேகன், அடிசன் போன்றவர்கள் இத்தகைய கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள்.

இவ்வறிஞர் பிரான்ஸ் நாட்டில் இன்றுதான் (28-02-1533) பிறந்தார்.

❑

முதன் முதலாக அலிஸின் அற்புத உலகுக்கு படங்கள் வரைந்த ஸர்.ஜான்.டென்னியல் என்னும் புகழ்பெற்ற ஓவியரும் இன்றுதான் (28-02-1820) பிறந்தார்.

❑

## பிப்ரவரி-29 13 வயதில்...

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறையே பிப்ரவரிக்கு 29 நாட்கள் வரும். இதை லீப் வருடம் என்று கூறுவர். பிப்ரவரி 29-இல் பிறந்தவர்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பிறந்த நாள் வரும்.

மிக அதிக வயதில் இந்தியப் பிரதமராகப் பதவியேற்ற மொரார்ஜி தேசாய் இன்றுதான் (29.02.1896) பிறந்தார்.

❑

ஹெர்மன் ஹோலிரித். இவர் அமெரிக்க நாட்டின் புள்ளியல் துறை நிபுணர். கணக்கியலிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

கொலம்பிய பல்கலைக் கழகத்தில் பொறியியல் பட்டத்தை 1879-இல் பெற்றார். மேன்ஹாட்டினில் சுரங்கத்தில் பொறியாளராகப் பணியாற்றிக் கொண்டே அதே கொலம்பிய பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டமும் பெற்றார்.

மிக வேகமாக கணக்குகளைக் கண்டறியும் இயந்திரம் ஒன்றையும் இவரே வடிவமைத்துக் கண்டுபிடித்தார். அத்தோடு, இதையே தொழிலாகவும் செய்து வந்தார்.

இந்த அறிவு மேதை நியூயார்க்கில் இன்றுதான் (29.02.1860) பிறந்தார்.

❑

பதின்மூன்றாவது வயதிலேயே தனது இலக்கியப் பயணத்தைத் தொடங்கி, 1921-இல் வாமோஸ் என்ற வார இதழில் முதல் கவிதை அச்சேற, அதைத் தொடர்ந்து 1931-இல் 'ஸ்ட்ராஃபி' என்ற தலைப்பில் முதல் படைப்பையும், 1935-இல் மிதிஸ்டார்மா (புராணக் கதைகள்) எனும் தலைப்பில் கவிதை நூலும், 1944-இல் எழுதி வெளிவந்த 'லாக்புல் 2' எனும் பெயரில் வெளிவந்து நோபல் பரிசையும் பெற்ற கவிஞர், துருக்கியைச் சேர்ந்த ஸ்மைனா எனும் நகரில் ஜார்ஜ் செஃபேரிஸூம் இன்றுதான் (29.02.1900) பிறந்தார்.

❑

உலகப் புகழ்பெற்ற கார்ட்டூன் கதாபாத்திரமான 'சூப்பர்மேன்' பிறந்ததும் பிப்ரவரி 29-இல்தான்.

❑

# பாகவதர்




தமிழ்த்திரை வரலாற்றில் முதல் சூப்பர் ஸ்டார் எம்.கே.தியாகராஜ பாகவதர்தான். முன்பே நாடகத் துறையில் தனது வெண்கலக் குரலால் ரசிகர்களை வசப்படுத்தி இருந்த 'ஏழிசை ஏந்தல்', 'கந்தர்வ கானஜோதி' என புகழ் மகுடம் சுமந்திருந்த பாகவதர் திரையில் நுழைந்தபோது நல்ல வரவேற்பு ரசிகர்களிடம் கிடைத்தது.

1937-இல் 'சிந்தாமணி' வெளிவந்தது. இதே ஆண்டின் இறுதியில் 'அம்பிகாபதி' படம் வெளிவந்தது. இரண்டு படமும் சாதனைப் படங்கள். திரையிடப்பட்ட இடங்களில் எல்லாம் ஒரு வருடம் ஓடின. பாகவதரின் புகழ் திரும்பிய திசையெல்லாம் பேசப்பட்டது.

கலை மீது எவ்வளவு பற்று கொண்டு இவர் இருந்தாரோ, அதேபோல் நாட்டுப் பற்றும் கொண்டவர், பாகவதர்.

'நாம் சுதந்திரம் அடைவதற்கு முன் ஆங்கலேயர் ஆட்சி இருந்தபொழுது, இரண்டாவது உலகப்போர் ஆரம்பமானது. அப்போரில் ஆங்கில அரசுக்கு அதிக நிதி தேவைப்பட்டது. அவ்வேளையில் பாகவதர் ஏராளமான இசை நிகழ்ச்சிகளை நடத்தி பெரும் நிதி திரட்டி அரசிடம் அளித்தார். பாகவதரின் நாட்டுப்பற்றை அன்றைய கவர்னர் பெரிதும் பாராட்டினார்.

பின்னர் போர் ஒரு முடிவுக்கு வந்த நிலையில் ஆங்கிலேய அரசு தங்களுக்கு நெருக்கடி காலத்தில் உதவிய பாகவதருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற விருப்பத்தில் திருச்சியில் அரசுக்குச் சொந்தமான முன்னூறு ஏக்கர் நிலத்தை பாகவதருக்குக் கொடுக்க முன்வந்தது. ஆனால் பாகவதர் அதைப் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். தான் அரசுக்கு நிதி சேர்த்து கொடுத்ததற்கு பிரதியாக அவர் எதையும் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை.

பாகவதருக்கு அன்று அரசு கொடுக்க விரும்பிய நிலத்தில்தான் இன்று திருச்சி பாய்லர் தொழிற்சாலை இயங்கி வருகிறது என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

இந்த கலைவேந்தர் இன்றுதான் **(01.03.1910)** பிறந்தார்.

❑

## மார்ச்-2 'ஊரும் பேரும்'

திண்ணைப் பள்ளியில் படித்தபின் பாளையங்கோட்டை சேவியர் பள்ளியில் சேர்ந்து பயின்றார். எப்போதும் புத்தகமும் கையுமாக இருந்த சேது, நினைவாற்றலிலும், தமிழை உச்சரிப்பதிலும் சிறந்து விளங்கினார். அவரது தமிழ் அறிவும், ஆர்வமும் உயர்ந்து நின்றன. ஏழாம் வகுப்பில் நல்லொழுக்கப் பரிசாக அவருக்குக் கிடைத்த திருக்குறள் நூலே உலகில் உயர்ந்தது என்று அறிந்து, அதில் ஈடுபாடு உடையவராகவும், குறளில் எந்த ஒரு வார்த்தையைச் சொல்லி, அந்த வார்த்தை வரும் குறளைக் கேட்டாலும் தயக்கமின்றி கூறும் ஆற்றலும் பெற்றிருந்தார்.

நெல்லையிலுள்ள இந்து கல்லூரியில் சேர்ந்து அறிவாற்றலாலும், திறமையாலும் உபகாரச் சம்பளங்கள் பெற்றும், படித்து முன்னேறி அக்கல்லூரி தமிழ்ப் பேரவைத் தலைவராகவும் விளங்கினார். 1915-இல் சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை சேர்ந்தார்.

சேதுப்பிள்ளை பச்சையப்பர் கல்லூரியின் தமிழாசிரியராகப் பணிபுரிந்த அதே நேரத்தில், சட்டக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்து படித்தார். பின்பு சட்டக் கலைஞர் பட்டத்துடன் பயிற்சி பெற்று, 1923-இல் நெல்லையில் வழக்கறிஞராக பணிபுரிந்தார். இலக்கிய ஆர்வத்தையும் வளர்த்துக் கொண்டு சிறந்த சொற்பொழிவாளராகவும் ஆனார்.

மூன்று முறை நகர் மன்ற உறுப்பினராக்கவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஊர், தெருக்களின் தமிழ்ப் பெயர்கள் சிதைந்து பொருள் தெரியாத பெயர்களாக மாறிவிட்டதை எல்லாம் ஆராய்ந்து, தெருக்களுக்கு தமிழ்ப் பெயர்களைச் சூட்டினார்.

இந்தியா விடுதலை பெற்ற பிறகு 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்ற அமைப்பு அந்நாளைய கல்வி அமைச்சர் அவினாசி லிங்கம் என்பவரால் நிறுவப்பட்டது. இதன் முதல் பரிசை முதன்முதலாக 'ஊரும் பேரும்' என்ற ஆராய்ச்சி நூலுக்காக சேதுப்பிள்ளை பெற்றார். 'தமிழின்பம்' என்ற இவரது நூலே இந்தியா விடுதலை பெற்ற பிறகு வந்த தமிழ் நூல்களுள் சிறந்தது என்னும் சிறப்புடன் இந்திய அளவில் பரிசு பெற்றது.

பல்வேறு நூல்களை எழுதிய ரா.பி.சேதுப் பிள்ளை, நெல்லை - ராசவல்லிபுரம் எனும் ஊரில் இன்றுதான் (02.03.1896) பிறந்தார்.

❑

## மார்ச்-3 டாடா ஏர்லைன்ஸ்

இந்தியாவில் இரும்புத் தொழிற்சாலையை முதன் முதலில் தோற்றுவித்த தொழிலதிபர் கே.ஆர்.டி.டாடாதான். மேலும் இவருக்கு ஒரு சிறப்பு இருக்கிறது... இந்தியாவின் முதல் (லைசென்ஸ் பெற்ற) விமான ஓட்டி இவர்தான். 1929-ஆம் ஆண்டு பிப்ரவரி 10-ஆம் தேதிதான் இவருக்கு வானில் பறக்கும் நற்சான்றிதழ் கிடைத்தது. 'டாடா ஏர்லைன்ஸ்' என்ற பெயரில் விமான சர்வீசைத் துவக்கினார். பிறகு 'ஏர் இந்தியா' என்று பெயரை மாற்றினார். ஒரு இருக்கை விமானத்தில், கராச்சியிலிருந்து மும்பைக்குத் தானே ஓட்டிய பெருமையும் இவருக்கு உண்டு.

இந்தத் தொழில் மேதை இன்றுதான் (03-03-1839) பிறந்தார்.

❒

அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல், தொலைபேசியைக் கண்டுபிடித்த அறிவியல் மேதை. தொலைத்தொடர்பு தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்று விளங்கினார். இத்துறையில் இவர் கண்டுபிடித்த கண்டுபிடிப்பு விமானத்துறைக்கு மிகவும் உதவியாக இருந்தது.

இவர், எடின்பரோ பள்ளியிலும், இலண்டன் பல்கலைக் கழகத்திலும், எடின்பரோ பல்கலைக்கழகத்திலும் படித்துப் பட்டம் பெற்றார். இசையில் நாட்டம் கொண்ட இவர், இசைக் கருவிகளில் எப்படி ஒலி ஏற்படுகிறது என்ற ஆய்வில் ஈடுபட்டு தேர்ந்தார். இவர் இத்துறையில் இறங்குவதற்குக் காரணமாக இருந்தவர் இவர் தாயே. தாய்க்கு காது கேட்காமல் இருந்தது.

16 வயதிலேயே இசையாசிரியராக ஆகி, மாணவர்களுக்கு இசையைப் பயிற்றுவித்து இருந்ததோடு, கல்லூரியிலும் ஆசிரியராக இருந்திருக்கிறார். மின்சாரம், தொலைத் தொடர்புகளில் ஆய்வு செய்தும் இருக்கிறார். சிறந்தப் பேச்சாளராகவும் இருந்திருக்கிறார். மருத்துவத் துறையிலும் ஆய்வு செய்து காது கேளாதவர்களுக்கு வேண்டிய கருவிகளையும் கண்டறிந்தார். பாஸ்டன் பல்கலைக் கழகத்தில் இவர் பணி செய்தபோது, தன்னிடம் படித்த மாணவியையே இவர் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார்.

இவருக்கு காது கேட்காது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இந்த அறிவியல் மேதை, ஸ்காட்லாந்தில் இன்றுதான் (03.03.1847) பிறந்தார்.

❒

## மார்ச்-4 நானா

தாத்யா தோபியின் இயற்பெயர், ரகுநாத். அப்போது மகாராஷ்டிரத்தை ஆண்ட பேஷ்வா பாஜிராவுக்கு சிறுவன் ரகுநாத்தை மிகவும் பிடித்துவிட்டது. அதனால் அவனுக்கு விலைமதிப்பற்ற கற்கள் பதித்த தொப்பியை பாஜிராவ் பரிசாகக் கொடுத்தார். அதிலிருந்து ரகுநாத்தின் பெயர் தாத்யா தோபி என்று மாறிற்று.

பாஜிராவ் திறமையான அரசன் இல்லை. அத்துடன் அவனைத் தோற்கடிப்பதில் ஆங்கிலேயருக்குச் சில மகாராஷ்டிரர்களே உதவினார்கள். தனது ராஜ்யத்தை விட்டுக் கொடுக்கவும், பதிலுக்கு ஆண்டுக்கு 8 லட்சம் ரூபாயைப் பெற்றுக் கொள்ளவும் பாஜிராவ் ஒப்புக் கொண்டார். அவரது சுவீகாரப் புத்திரன் நானாசாகிப். தாத்யா தோபியும் நானா சாகிப்பும் நெருங்கிய நண்பர்கள்.

பாஜிராவுக்குப்பின், தமது நாட்டை மீட்க சாகிப் விரும்பினான். அப்போது டல்ஹவுசி என்பவன் இந்தியாவின் கவர்னராக இருந்தான். இந்திய மன்னர்களின் கீழிருந்த அரசுகளை அபகரிக்க அவன் விரும்பினான். அதனால் உயிர் நண்பனான தாத்யா தோபியின் தலைமையில் இந்திய வீரர்கள், அந்நியரின் கருவூலத்திலிருந்து 12 இலட்சம் ரூபாயை எடுத்துக் கொண்டனர்.

எனினும் நானா பின்னர் தோற்கடிக்கப்பட்டார். அவரும் தோபியும் தப்பிச் செல்ல வேண்டியதாயிற்று. இந்தியப் படைவீரர்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்குத் தலைமை தாங்கிப் போர் நடத்த தோபியினாலேயே முடியுமென சாகிப் கருதினார். ஆகவே தோபியைப் படைத்தளபதியாக நியமித்தார்.

சிவராஜபுரத்தில் ஹவ்லாக்கைத் தோற்கடித்து, ஜால்வி கோட்டையை தோபி கைப்பற்றினார். கான்பூரைத் தாக்கி நூற்றுக்கணக்கான ஆங்கிலேயரைக் கொன்றார். காலின் கான்டெல் என்ற பிரிட்டிஷ் அதிகாரி, பெரும்படையுடன் கான்பூரைத் தாக்கி, தோபியை தோல்விப் பள்ளத்தில் தள்ளினான். இருந்தாலும் தப்பிவிட்டார். பின்னாளில் ஆங்கிலேய அரசால் பிடிக்கப்பட்டு சிறைப்பட்டார். பின் தூக்கிலிடவும் பட்டார். அப்போது அவருக்கு வயது 44.

இந்த விடுதலை வீரர் மகாராஷ்டிரத்தில் இன்றுதான் (04.03.1814) பிறந்தார்.

## மார்ச்-5 ஈ.வெ.கி.

சொல்லின் செல்வர் ஈ.வெ.கி.சம்பத், தந்தை பெரியார் நடத்திய திராவிடர் கழகத்தில் சேர்ந்து பணியாற்றியவர். அவர் நடத்திய 'விடுதலை' இதழில் சம்பத் மேலாளராகவும், துணையாசிரியராகவும் பொறுப்பு வகித்தார். 1946-இல் திராவிட மாணவர் கழகம் அமைக்கப்பட்டபோது அதன் முதல் அமைப்பாளராக தந்தை பெரியாரால் நியமிக்கப்பட்டு செயல்பட்டார். 1949-இல் தி.மு.க.துவக்கப்பட்டபோது சம்பத் தி.க.விலிருந்து விலகி தி.மு.க.வில் சேர்ந்தார். அண்ணாவும், சம்பத்தும் நெருங்கிய நண்பர்கள்.

1953-இல் இராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து போராடி சிறை சென்றார். 1957-இல் தி.மு.க. முதன் முதலில் தேர்தலில் போட்டியிட்டபோது தி.மு.க.சார்பில் போட்டியிட்டு தி.மு.க.வின் முதல் பாராளுமன்ற உறுப்பினர் எனும் பெருமை பெற்றார். 1958-இல் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடி சிறை சென்றார். 1958-இல் ரஷ்யா சென்று வந்தார். பிரதமர் நேரு இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே இந்தியாவின் ஆட்சி மொழியாக நீடிக்கும். அவர்கள் மீது இந்தி திணிக்கப் படாது என்று வரலாற்றுச் சிறப்பு மிகு உறுதிமொழியைத் தந்தார். தமிழக மக்களுக்கு மத்திய அரசின் உறுதிமொழியை வாங்கிக் கொடுத்த பெருமையில் ஈ.வெ.கி.சம்பத்திற்கு பெரும்பங்கு உண்டு. தி.மு.க.வின் அவைத் தலைவராகவும் இருந்த இவர் கருத்துவேறுபாடு காரணமாக அக்கட்சியில் இருந்து விலகி, காங்கிரசில் சேர்ந்தார்.

'புதுவாழ்வு, தமிழ்ச்செய்தி' நாளிதழ்களை நடத்தினார். சுயமரியாதைத் திருமணங்கள் சட்டமாக்கப்பட, பாரதியின் பாடல்கள் பாடப்புத்தகத்தில் இடம்பெற, வானொலியில் நல்ல தமிழ் இடம் பெற, சேலம் இரும்பாலை தோன்ற இவர் பெரிதும் காரணமானவர்.

23.02.77 அன்று காங்கிரஸ் கூட்டத்தில் பேசிக் கொண்டு இருந்தபோது நெஞ்சுவலி ஏற்பட்டு இயற்கை எய்தினார்.

இந்த மொழிப் போராட்ட வீரர் ஈரோடு நகரில் இன்றுதான் (05-03-1926) பிறந்தார்.

❑

பிரேசில் நாட்டு இசையமைப்பாளரான ஹெய்ட்டர் வில்லா - லோபஸூம் இன்றுதான் (05-03-1887) பிறந்தார்.

❑

## மார்ச்-6 மார்க்கெஸ்

பத்திரிகையாளராகவும், சட்டத்துறையாளராகவும், சிறுகதை எழுத்தாளராகவும், நாவலாசிரியராகவும் இருந்து, சிறந்து, உயர்ந்தவர், கார்சியா மார்க்கெஸ்.

மிகமிக ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் இவர். தன் முயற்சியின் காரணமாக கொலம்பியா பல்கலைக் கழகத்திலும், கார்த்தஜீனா பல்கலைக் கழகத்திலும் சேர்ந்து சட்டத்துறையிலும், பத்திரிகை துறையிலும் பட்டம் பெற்றார்.

இருந்தாலும் பத்திரிகைத் துறையில்தான் மனம் இவருக்கு ஒன்றிப்போனது. அதன்படியே பத்திரிகை நிருபராகவும், பத்திரிகையாளராகவும் தன் வாழ்க்கையைத் தொடங்கினார்.

காலப்போக்கில் சிறுகதை எழுதவும் தொடங்கினார். 1955-இல் 'இலைப்புயல் மற்றும் இதர கதைகள்' என்ற தலைப்பில் நூலை வெளியிட்டார்.

கதைகள் முழுதும் கிராமிய மணத்தோடு, இயல்பாக இருந்ததால் பலரால் பேசப்பட்டது. 'தனிமையில் நூறு ஆண்டுகள்' என்ற நாவலே இலக்கிய உலகில் போற்றப்பட்டு உலகம் முழுதும் இவர் புகழ் பரவியது. 1982-இல் நோபல் பரிசையும் பெற்றார்.

இந்த எழுத்தாளர் அமெரிக்காவின் கொலம்பியாவிலுள்ள ஒரு கிராமத்தில் இன்றுதான் (06-03-1928) பிறந்தார்.

❑

விண்வெளிக்குச் சென்ற முதல் வீராங்கனையான வாலண்டினாவும் இன்றுதான் (06-03-1937) ரஷ்யாவில் பிறந்தார்.

❑

புகழ்பெற்ற பெண் கவிஞரான எலிசபெத் பாரட் பிரவுனிங், புகழ்பெற்ற கவிஞரான ராபர்ட் பிரவுனிங்கைக் காதலித்தார்.

தந்தை எதிர்த்த போதிலும் அந்தக் கவிஞரையே இந்தப் பெண் கவிஞர் மணந்து கொண்டார். இந்தக் கவிதாயினியும் இன்றுதான் (06-03-1806) பிறந்தார்.

❑

## மார்ச்-7 கதிர்வீச்சு

வில்ஹெல்ம் கான்ராட்டு ரெண்ட்டுகென், இவர் ஹாலந்து நாட்டில் தொடக்கக் கல்வியைப் பெற்றார். பின்னர், அவர் ஸ்விட்சர்லாந்து நாட்டில் உள்ள ஸூரிக்குப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்து வந்தார்.

அப்போது, ரெண்ட் கெனுக்கு மின்சாரம், ஒளி, வெப்பம், மின்திறன் என்னும் பௌதிகத் துறைகளில் அதிகக் கருத்து செலுத்தி வந்தார்.

அவர் பௌதிக இயலிலே டாக்டர் பட்டம் பெற்றதும், வுட்ஸ் பொர்க்கில் கல்லூரித்துணை ஆசிரியர் பணியில் சேர்ந்தார். கதிர் இயக்க ஆய்வில் முழு மூச்சாக ஈடுபட்டார்.

எக்ஸ் கதிர்கள் உடலின் தசையை ஊடுருவிச் செல்ல வல்லவை என்று ரெண்ட்டுகென் கண்டபோது, அவரைப் போன்ற விஞ்ஞானிகள் வியப்புக்குரியாக நின்றார்கள்; வியந்து அவரைப் பாராட்டியதோடு அக்கதிர்களுக்கு 'ரெண்ட்டுகென் கதிர்கள்' என்ற பெயரிட்டு மகிழ்ந்தனர்.

'கதிர்வீச்சு' என்று பெயர் வழங்கும் பெருந்துறையிலே, புதிது புதிதாக எத்தனையோ நிகழ்வுகளையும், செயல் களையும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

அவற்றையெல்லாம் ரெண்டுகென் கண்டுபிடித்த இந்தக் கண்டுபிடிப்பே முதலாவதாகும். 1901-இல் பௌதிகத் துறைக்கான நோபல் பரிசும் அவருக்கு அளிக்கப்பட்டது.

இந்தக் கதிர்வீச்சு மேதை பிரஷ்யாவிலுள்ள லென்னெப்பு என்னும் சிற்றூரில் இன்றுதான் (07-03-1845) பிறந்தார்.

❒

செக்கோஸ்லோவேகியா நாட்டு ராஜதந்திரியான தாமஸ் மஸாரைக் என்பவரும் இன்றுதான் (07-03-1850) பிறந்தார்.

❒

வான் இயல் ஆராய்ச்சியாளரான ஸர்.ஜான்.ஹெர்செல் என்பவரும் இன்றுதான் (07-03-1792) பிறந்தார்.

❒

## மார்ச்-8 கனவுக்கன்னி

இவர் ஒரு நடிகை. பெயர் கிளாயர் டிரிவர். முதலில் சிறுசிறு மேடை நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார்.

பின்னர், படிப்படியாக டி.வி, திரைப்படம் என்று முன்னேறினார். இவர் திரைப்படத்துறையில் 1933-இல் கால் பதித்தார். பெரிய அளவில் முதலில் வாய்ப்பு இல்லை.

இவர் விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் கடின உழைப்பும் பின்னாளில் இவரை வெண்திரையில் வெற்றி பெறச் செய்தது.

'ஸ்டேஜ் கோச்' (1939) என்ற படத்தை ஜான்போர்டு இயக்கினார். இந்தப் படத்தில் நடித்தது முதலே இவரின் புகழ் உலகெங்கும் பரவியது. கனவுக் கன்னியானார்.

1940 முதல் 1950 வரை பத்தாண்டு காலம் திரை உலகே இவர் பின்னே அலைந்தது. இந்தக்கால கட்டத்தில் இவர் பெயரை உச்சரிக்காத உதடுகளே இல்லை என்ற அளவில் பேசப்பட்டார்.

'கி.லார்க்கா', 'தி ஹை அண்ட் த மைட்டி', 'டாட்ஸ் ஒர்த்' என்ற மூன்று படங்களும் உலகளவில் மக்களால் பேசப் பட்டது.

'டாட்ஸ் ஒர்த்' என்ற படத்தை இயக்கிய மேதை பெடரிக் மார்ச் என்பவர்தான். இவர் இயக்கத்தில் இந்நடிகையின் திறமை மிகுதியாக வெளிப்பட்டு பலரால் புகழப்பட்டது.

இப்படி சின்னத் திரையிலும் பெரிய திரையிலும் புகழ் பெற்றார்.

இந்த மாபெரும் நடிகை இன்றுதான் நியூயார்க்கில் (08.03.1910) பிறந்தார்.

❑

அமெரிக்காவின் புகழ்பெற்ற டைப் டிசைனரான ஃபிரடரிக் கௌடி என்பவரும் இன்றுதான் (08.03.1865) பிறந்தார்.

❑

'வின்ட் இன் தி வில்லோஸ்' என்னும் புகழ்பெற்ற நாவலை எழுதிய கிரஹாம் என்ற எழுத்தாளரும் இன்றுதான் (08.03.1859) பிறந்தார்.

❑

## மார்ச்-9 தனித்தே...

இசை மேதையான சாமுவேல் பார்பர் இளமையில் இருந்தே இசையில் இதயத்தை இணைத்துக் கொண்டவர். தனது ஏழு வயதிலேயே இசையமைக்கக்கூடிய ஆற்றலைப் பெற்று பலரை அசர வைத்திருக்கிறார்.

தக்கப் பருவத்தில் பிலடல்பியா என்ற ஊரிலுள்ள இசைக்கல்லூரியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார்.

பின்னர், இசையில் மேலும் அறிந்து கொள்ள அமெரிக்கன் அகடமியில் **1935**-இல் சேர்ந்து படித்தார். இதே ஆண்டில் இசையைப் பற்றிய குறிப்பு நூல் ஒன்றினை எழுதி வெளி யிட்டார்.

இசைக் கருவிகளை இயக்குவதிலும் அது குறித்த ஆய்வில் ஈடுபடுவதையும் மிகுதியாக விரும்பிய இவர், இசை வடிவங்கள் குறித்து பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ளார்.

தனி ஒரு இசைக் கருவியைக் கொண்டு - தனித்து இசையமைத்துப் பாடிடும் பாடலால் இவர், அமெரிக்காவில் புகழ் பெற்றார். தனித்திருந்து பாடுவதில் ஒரு சகாப்தத்தையே இவர் சிம்பொனி இசையையும் அமைத்திருக்கிறார்.

மேலும், இசை நாடகங்கள் பலவற்றை அரங்கேற்றி, அமெரிக்காவில் இக்கலையில் இவரே உயர்ந்தவர் என்ற நிலையை உருவாக்கினார்.

இசைப்பள்ளி ஒன்றை நிறுவி நடத்தி, பலரை இத்துறையில் மேம்படுத்தினார்.

ஜூலி ஆர்ட்ஸ் பள்ளியில் இசை நாடகம் ஒன்றை இவர் நடத்தியபோது, அப்பள்ளி நிர்வாகம் அந்த அற்புத நிகழ்ச்சியை பதிவு செய்து கொண்டதாம்.

புலிச்சர் விருது பெற்ற இவ்விசை மேதை அமெரிக்காவில் இன்றுதான் **(09.03.1910)** பிறந்தார்.

❐

அமெரிக்காவிற்குத் தமது பெயரை வழங்கிய இத்தாலிய நாட்டு ஆய்வுப் பயண வீரரான அமெரிகோ வெஸ்புக்கி தான் புது உலகைக் கண்டறிந்த வீரர். இவரும் இன்றுதான் **(09.03.1454)** பிறந்தார்.

❐

## மார்ச்-10 ஆனந்தவிகடன்

ஜெமினி எஸ்.எஸ்.வாசன், திரைப்படத்துறையிலும் பத்திரிகைத் துறையிலும் பல்வேறு சாதனைகளை சாதித்தவர். இவரது முழு பெயர் டி.எஸ்.சீனிவாசன். பச்சையப்பன் கல்லூரியில் இன்டர்மீடியட் படித்தார். வறுமையின் பிடியில் சிக்குண்டதால் படிப்பை பாதியிலேயே நிறுத்த வேண்டியதாகி விட்டது.

பூதூர் வைத்தியநாத ஐயரால் ஆரம்பிக்கப்பட்டு நடத்த முடியாதுபோன 'ஆனந்த விகடன்' பத்திரிகையை 200 ரூபாய்க்கு விலை கொடுத்து வாங்கி சொந்தமாக 'ஆனந்த விகடன்' அச்சகத்தையும் துவங்கி தமிழகத்தின் புகழ்மிக்க எழுத்தாளர் களான கல்கி, துமிலன், ஓவியர் மாலி ஆகியோரைக் கொண்டு 1929 முதல் ஆனந்தவிகடன் இதழை நன்கு நடத்தினார். ஆனந்த விகடனுக்காகத் தமிழகத்திலேயே முதன் முதலாக சிறுகதை போட்டி நடத்தியவர் வாசன் அவர்கள்தான்.

1941-இல் ஜெமினி ஸ்டுடியோவையும் ஜெமினி திரைப் படத் தயாரிப்பு நிறுவனத்தையும் துவக்கி 'சந்திரலேகா', 'அபூர்வ சகோதரர்கள்', 'ஔவையார்' போன்ற பல வெற்றிப்படங்களை தயாரித்து திரைப்படத் துறையில் பெரிய மாறுதல்களை உருவாக்கினார். தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவராகவும், மத்திய அரசின் திரைப்படத் தணிக்கைக்குழு உறுப்பினராகவும், இந்தியத் திரைப்பட ஏற்றுமதி அமைப்பின் இயக்குநராகவும் செயல் பட்டார். நாட்டுப்பற்றுமிக்க காங்கிரஸ்காரரான வாசன் அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். 1964 முதல் 1970 வரை பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்தார். இவர் தோற்றுவித்த ஆனந்த விகடன் நிறுவனம் இன்று பல வார, மாத இதழ்களையும் நடத்தி தமிழ்ச் சமுதாயத்தற்குத் தொண்டாற்றி வருகின்றது.

இந்த பத்திரிகை மேதை தஞ்சை - திருத்துறைப்பூண்டி எனும் ஊரில் இன்றுதான் (10-03-1903) பிறந்தார்.

❒

புகழ்பெற்ற பாரிஃபிட்ஸ் ஜெரால்டு என்ற ஐரிஷ் நடிகரும் இன்றுதான் (10-03-1888) பிறந்தார்.

❒

## மார்ச்-11 தபோவனம்...

திருச்சிக்கு அருகிலுள்ள திருப்பராய்த்துறையை நினைப்பவர் இதயங்களில் எல்லாம், சுவாமி சித்பவானந்தர் நினைவும், அவர் அமைத்துள்ள தபோவனமும் நிறைந்து நிற்கும். அவரின் ஆன்மிகத் தொண்டும், கல்வித் தொண்டும் போற்றி வணங்கத்தக்கதாகும்.

இவரது தொடக்கக் கல்வி ஸ்டேன்ஸ் ஆங்கிலப் பள்ளியிலும், உயர்நிலைக் கல்வி சீனியர் கேம்பிரிட்ஜில் தொடங்கி, மிகுந்த மதிப்பெண்களோடு தேர்வு பெற்றார். 1920 முதல் 1923 வரை சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்றார். இவ்விடைவேளையில் மயிலை இராமகிருஷ்ண மடத்திற்கு அடிக்கடி சென்றுவரும் காலை, அப்போது அங்கே மடத்தின் தலைவராக இருந்த சுவாமி பிரம்மானந்தரின் தொடர்பு ஏற்பட்டது. அதன் வழியே பேலூர் ஆசிரமம் சென்றார். அங்கே சிவானந்தரின் அன்பும், ஆதரவும் கிடைத்தது. துறவை மேற்கொண்டார். 1926-இல் ஊட்டியில் இவர் சிவானந்தர் மூலம் முழுத்துறவு பெற்றார்.

இராமகிருஷ்ணர், விவேகானந்தரின் ஆன்மிக நெறியைக் கைக்கொண்டு தனது ஞான மார்க்கத்தை அமைத்துக் கொண்ட மாமுனி இவர்.

இந்த நிலையில்தான், திருப்பராய்த்துறையில் தபோவனத்தையும், கல்விச் சாலையையும் நிறுவினார். சித்பவானந்தர் அவர்கள் படிப்பது, மனனம் செய்வது, மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுவது கல்வியல்ல. முழுமையான மன வளர்ச்சியைக் கொடுப்பது மட்டுமே கல்வியின் நோக்கம் என்பதை உலகோர்க்கு உணர்த்திக் காட்டினார். பள்ளிப் பாட நிலையில், கற்பிக்கும் முறையில் மாற்றம் செய்தார். உடல் வலிமையும் ஒரு கல்விதான் என்று கருதி, உடலைக் காக்கவும் கல்விப் புகட்டப்பட்டது.

'இராமகிருஷ்ண விஜயம் என்கிற இதழின் ஆசிரியராக இருந்ததோடு ஐம்பதுக்கும் மேல் நூல்களும் எழுதியுள்ளார். இவரது உரையோடு வெளிவந்துள்ள கீதையும், திருவாசகமும் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய அறிவுக் களஞ்சியம்.

இந்த ஆன்மிக பெருமகனார், பொள்ளாச்சி - செங்குட்டைப்பாளையம் என்னும் ஊரில் இன்றுதான் (11-03-1898) பிறந்தார். ❑

## மார்ச்-12 ஊதா நிறம்...

வண்ணங்கள் உள்ளத்தை வசப்படுத்தும். வில்லாய் வளைந்து நிற்கும் வானவில்லும், வண்ண வண்ணப் பூக்களும் எடுத்துக்காட்டுகள். இன்று மக்கள் வண்ண வண்ண நிறங்களில் ஆடை அணிந்து அகம் மகிழ்கிறார்களே, அந்த மகிழ்விற்குக் காரணமானவர், பர்க்கின் சர் வில்லியம் ஹென்றிதான்.

இரசாயன அறிஞரான ஹப்மன் என்றவரிடம் முதலில் பயிற்சி பெற்றார். படிப்படியாக வளர்ந்த இவர், தன் இல்லத்திலேயே ஆய்வுக்கூடத்தை அமைத்துக் கொண்டு, பயிற்சி நேரம் தவிர, மற்ற நேரங்களில் தன் ஆய்வினை மேற்கொண்டார்.

கொயினாவை செயற்கை முறையில் கண்டுபிடிப்பதற் கான ஆய்வில் ஈடுபட்டிருந்தபோது, கொய்னா கிடைக்க வில்லை. அதே நேரம் ஊதா நிறப் பொருள் ஒன்று தோன்றவே, அதையே மேலும் மேலும் ஆய்வு செய்தார். ஆய்வின் முடிவில் நல்லதொரு சாயமாகப் பயன்படும் என்பதை உணர்ந்தார்.

செயற்கை முறையில் அன்றுவரை சாயங்கள் செய்யப் பட்டதில்லை. ஹென்றி கண்டறிந்த 'மேர்வ' எனும் ஊதா நிறச் சாயம் மற்றச் செயற்கைச் சாயங்களுக்கு அடிப்படையாக அமைந்தது. தன் கண்டுபிடிப்பை பெரிய அளவில் பெருக்க தொழிற்சாலை ஒன்றினை அமைத்தார். வருவாயைப் பெருக்கினார். எதிர்காலத்தில் இவரது ஆய்வும், கண்டு பிடிப்புகளும் உலகோரால் போற்றப்பட்டன. பல பட்டங்களை வழங்கி சிறப்பித்தன.

இந்த அறிவியல் அறிஞர் இலண்டனில் இன்றுதான் **(12.3.1838)** பிறந்தார்.

❑

புகழ்பெற்ற கனடா நாட்டு அரசியல் தலைவர், வில்லியம் மெக்கென்ஸியும் இன்றுதான் **(12.03.1791)** பிறந்தார்.

❑

புகழ்பெற்ற பத்திரிகை அதிபரான அடல்ப் எஸ்.எச். என்பவரும் அமெரிக்காவில் இன்றுதான் **(12.03.1858)** பிறந்தார்.

❑

## மார்ச்-13 பேஸ்வர்

அசாமின் திவானாக இருந்தவர் மணிராம் தத்தா. அந்நாட்டின் அரசராக இருந்த புரந்தர் சிங் மன்னரை விரட்டிவிட்டு, பிரிட்டீஷார் அவர் ஆட்சியைக் கைப்பற்றினர்.

இந்தப் போக்கு திவானாக இருந்த மணிராம் தத்தாவிற்குப் பிடிக்கவில்லை. அதனால் 'பறித்துக்கொண்ட ஆட்சியை மீண்டும் மன்னரிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று பிரிட்டிஷ் அரசுக்கு கடிதம் எழுதினார்.

ஆங்கிலேய அரசு அக்கடித்தை அலட்சியம் செய்து விட்டது. இருந்தும் மீண்டும் மீண்டும் கடிதம் எழுதினார். அவர்கள் எந்தப் பதிலும் தரவில்லை.

தனது கோரிக்கையை ஏற்காத பிரிட்டீஷ் அரசு மீது கடுங்கோபம் கொண்ட தத்தா, புரட்சியின் மூலம் அசாம் ஆட்சியைக் கைப்பற்றி, மன்னரின் பேரன் சுந்தர் பேஸ்வர் சிங்கை அரியணையில் அமர்த்துவது என்று அவர் முடிவு செய்தார்.

அதற்கான திட்டம் தீட்டினார். போர் தொடுக்கவும் தயாரானார்.

மணிராமின் திட்டத்தை அவரது உதவியாளராக இருந்த கயவன் ஒருவன், பிரிட்டீஷ் அரசுக்கு உளவு சொல்லி விட்டான்.

எதிரிகள் விழித்துக் கொண்டு மன்னரின் பேரனான சுந்தர் பேஸ்வர் சிங்கை அவரது மாளிகையிலேயே கொல்கத்தாவில் வைத்து மணிராமை கைது செய்தனர்.

பிரிட்டீஷ் அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக குற்றம் சாட்டி, இருவரையும் தூக்கிலிட்டனர், எதிரிகள்.

அந்நியரை எதிர்த்த மாவீரன் மணிராம் தத்தா அசாமில் இன்றுதான் **(13.03.1812)** பிறந்தார்.

□

## மார்ச்-14 ஒளி என்பது...

ஜெர்மனியில் பிறந்த இவர், 1940-இல் அமெரிக்க குடியுரிமை பெற்றார். இவர் வியத்தகு விஞ்ஞானி ஆவார். 1905-இல் அவர் வெளியிட்ட சார்புக் கொள்கை உலகம் முழுவதும் அவரின் புகழ் பரவச் செய்தது.

அணுகுண்டு தயாரிப்பதற்கு உதவியது அவர் வெளியிட்ட விஞ்ஞான உண்மைதான். அதனால் ஏற்பட்ட அழிவைக் கண்டு அவர் பெரிதும் வருந்தினார். போரை எதிர்த்து இறுதிவரை பேசி வந்தார்.

கணக்குகளைப் போட்டே பல புதிய உண்மைகளைக் கண்டபிடித்துக் கூறினார். நட்சத்திரங்களிலிருந்து வரும் ஒளிக் கதிர்கள் சூரியனுக்கு அருகில் வரும்போது வளைகின்றன என்று அவர் கூறியது பின்னர் உறுதியாயிற்று.

உலகத்தில் என்றும் மாறாமல் ஒன்றாகவே இருப்பது ஒளியின் வேகம் ஒன்றுதான். மற்ற எல்லாமே மாறக் கூடியவை என்பது அவரது மற்றொரு கொள்கையாகும்.

சார்புக் கொள்கை தவிர வேறு மூன்று உண்மைகளையும் அவர் கண்டறிந்து கூறினார். இவை எல்லாமே புதிய விஞ்ஞானத்துறைக்கு வழி வகுத்தவை.

ஒளி என்பது ஃபோட்டான் எனப்படும் ஆற்றல் துகள்களால் ஆனது. பொருளையும் ஆற்றலையும் ஒன்றை மற்றொன்றாக மாற்ற முடியும். திரவத்தில் மிதக்கும் துகள்களின் வேகமான இயக்கம் பற்றிய விளக்கம் ஆகியவை மற்ற மூன்றுமாகும்.

E=Mc2 - என்பது இவரது புகழ்பெற்ற சூத்திரம். இதில் 2 என்பது எனர்ஜி (சக்தி)யையும், M என்பது மாஸ் (பொருளின் அளவு)வையும், C என்பது ஸ்பீட் ஆஃப் லைட்(ஒளியின் வேகம்)டையும் குறிக்கும். அணுசக்தியின் அடிப்படையே இதுதான்.

விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டினுக்கு 1921-இல் நோபல் பரிசும் கிடைத்தது. ஐன்ஸ்டின் மாபெரும் விஞ்ஞான மேதை மட்டுமல்ல மனித நேயம் கொண்ட மாமனிதரும் கூட.

இந்த மேதை ஜெர்மனியில் இன்றுதான் (14-03-1879) பிறந்தார்.

❑

## மார்ச்-15 பெருமகன்

பால்ஹைஸி, பள்ளிப் படிப்பை முடித்ததும் பெர்லின் பல்கலைக் கழகத்தில் இலக்கியத்தை விருப்பப்பாடமாக எடுத்துப் படித்தார். 1852-இல் டாக்டர் பட்டம் பெற்ற பின்பு இத்தாலிக்குப் பயணமானார். மேல்மட்ட இலக்கியவாதிகளின் தொடர்பு கிட்டியது.

பால்ஹைஸியின் முயற்சிக்கும், வளர்ச்சிக்கும் துணை நின்றவர் இரண்டாம் மாக்ஸிமிலியன் என்ற அரசரைக் குறிப்பிடுகிறார்கள்.

மூனிச்சுக்கு இவரை வரவழைத்து, அங்கு தங்கி யிருக்குமாறு கேட்டுக் கொண்டதோடு பெரும் நிதி உதவியும் புரிந்திருக்கிறார்.

மூனிச் நகரின் வளமையும், இயற்கை எழிலும், அரசரின் பொருள் உதவியும் பாலுக்கு கவலை இல்லாத வாழ்க்கையைத் தந்தது. அதனால் இடைவிடாது எழுத்துத்துறையில் ஈடுபட்டு வந்தார்.

அந்த காலத்தில்தான் கற்றவர் எல்லாம் போற்றக்கூடிய 'லாராபியாட்டா' என்ற நாவலை எழுதினார். இந்தப் புகழோடு, 1858-இல் 'ட்ரெப்பிமங்கை'யும் 1859-இல் 'ஆண்ட்ரீ டெல்பின்'னும், அதே ஆண்டில் டால்ட்தர் மதர்' ஆகிய மூன்று நாவல்களும் இலக்கிய உலகில் முத்துக்களாக வெளிவந்தன.

பால் தனது வாழ்நாளில் 21 - பகுதிகள் நாவல் தொகுப்புகளும், 6 - முழு நாவல்களும், 60 - நாடகங்களும் படைத்திருக்கிறார் - என்பதோடு 9 - தொகுதிகள் கொண்ட கவிதைத் தொகுப்பு நூல்களும் ஹைஸியின் எழுத்தாற்றலுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன. நோபல்பரிசையும் பெற்றார்.

மூனிச்சின் 'பெருமகன்' என்று சிறப்பித்துப் போற்றப் பட்ட இவர், பெர்லினில் இன்றுதான் (15-03-1830) பிறந்தார்.

❒

அமெரிக்காவின் ஏழாவது ஜனாதிபதியான ஆண்ட்ரு ஜாக்ஸனும் இன்றுதான் (15-03-1767) பிறந்தார்.

❒

## மார்ச்-16 சுகம்!

அவர் இரண்டு வயதுக் குழந்தையாயிருந்த போதே தந்தையை இழந்தவரானார். ஆகவே அவரது சிற்றப்பா வீட்டில் அடைக்கலம் புகுந்தார். தனது எட்டாவது வயதில் தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். நன்கு படித்தார். கணிதத்தில் அபாரமான அறிவு இருந்தது. அதைக்கண்டு ஆசிரியர்களே வியந்து போனார்கள். அவருக்கு உடல்நலக் கோளாறு ஏற்படவே படிப்புக்கு முற்றுப்புள்ளியானது.

அதே நேரம், குடும்பநிலை காரணமாக அவர் வேலைக்குப் போக வேண்டிய சூழ்நிலைக்கு ஆட்பட்டார். 21-ஆவது வயதில் சூலி-புரூதாம் என்ற பெயர் கொண்ட அவர், ஒரு சிறிய அலுவலகத்தில் சேர்ந்து பணியாற்றினார்.

இருந்தாலும் மாலை நேரத்தில் தத்துவம் படித்தார். அப்போதுதான் அவர் உள்ளத்தில் கவிதை ஊற்றுப் பிறந்தது.

முதல் தொகுதி 1865இல் ஒரு பதிப்பகத்தில் புத்தகமாக வெளிவந்தது. இலக்கிய உலகில் அவர் பெயர் விடிவெள்ளி யாயிற்று. நான்கே ஆண்டில் பிரெஞ்சு நாட்டில் முன்னணிக் கவிஞரானார்.

அவர் உயிருக்கு மேலாக நேசித்த ஒரு முறைப்பெண் அவரை மணந்து கொள்ள மறுத்துவிட்டதால் அவர் கலங்கிப் போனார். அதனால், அவர் வாழ்நாள் முழுவதும் திருமணமே செய்து கொள்ளாமல் வாழ்ந்தார்.

1888-இல் அவர் இயற்றிய 'லெ போனெய்ர்' என்ற கவிதை நூல் அதே ஆண்டில், 'சுகம்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்றது. அது மகத்தான காவியப்படைப்பாயிற்று. 4,000 வரிகள் கொண்ட அந்த நூல் பிரெஞ்சு இலக்கியத்தின் ஒப்பற்ற படைப்பாக மதிக்கப் பெற்றது.

இவரது அறிவுத்திறனைப் பாராட்டி 1901-இல் நோபல் பரிசு வழங்கப்பெற்றது. முதன் முதலில் நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர், இவரே.

இந்த மாபெரும் எழுத்தாளர் பிரெஞ்சு நாட்டில் இன்றுதான் (16.03.1839) பிறந்தார்.

❑

ஜெர்மன் நாட்டுப் பௌதிக விஞ்ஞானியான ஜார்ஜ் எஸ்.ஓமும் இன்றுதான் (16.03.1787) பிறந்தார்.

❑

## மார்ச்-17 கோல்பு

பாபிஜோன் என்பவர், கோல்பு விளையாட்டில் மிகச் சிறந்தவர். குழந்தைப் பருவத்திலேயே - அதாவது ஆறு வயதிலேயே இவ்விளையாட்டில் சாதனை புரிந்தவர்.

அமெரிக்காவில் நடந்த கோல்பு விளையாட்டில் கலந்து கொண்டு 16 வயதிலேயே சாம்பியன்சிப் பட்டம் பெற்றார்.

1930-இல் அமெரிக்காவில் கோல்பு விளையாட்டுப் போட்டி நடந்தது. அதில் வெற்றி பெற்றதோடு அந்த ஆண்டு முதல் தொடர்ந்து 13 முறை சாம்பியன் சிப் பட்டத்தைப் பெற்று, பெரும்புகழ் அடைந்தார்.

இவர்தான் 'கோல்பு இரட்டையர் ஆட்டத்தில்' முதல் வெற்றி பெற்றார்.

அமெரிக்காவின் சார்பில் இவ்விளையாட்டில் கலந்து கொண்டு ஐந்துமுறை 'வாக்கர் கப்' என்ற பரிசினைப் பெற்றார்.

சார்ஜியா தொழில் உயர் நுட்பக் கழகத்தில் இயந்திரவியல் துறையில் பட்டம் பெற்றிருக்கிறார்.

ஆங்கில இலக்கியத்தில் ஹார்வேடு பல்கலைக் கழகத்தில் படித்து பட்டமும் பெற்றிருக்கிறார். சட்டப்படிப்பும் இவர் படித்திருக்கிறார்.

அமெரிக்காவில் சிறந்த அமைச்சூர் விளையாட்டு வீரர் என்ற பட்டமும் பெற்றிருக்கிறார். கோல்பு விளையாட்டில் தான் தனித்திறமைப் பெற்றிருந்ததோடு, மற்றவர்களையும் ஒழுங்குபடுத்தி நடத்திச் செல்கின்ற பாங்கும் இருந்தது இவரிடம்.

அமெரிக்காவில் உள்ள கோல்பு விளையாட்டு அமைப்பு - இவரின் பெயரிலே விருதுகளை வழங்கி சிறப்பித்தது என்றால் இவரின் ஆற்றலை அறிந்து கொள்ளலாம்.

இந்த விளையாட்டு வீரர், ஜார்ஜியாவில் இன்றுதான் **(17.03.1902)** பிறந்தார்.

❑

ஸ்காட்லாந்து அரசரான நான்காம் ஜேம்ஸ் மன்னரும் இன்றுதான் **(17.03.1473)** பிறந்தார்.

❑

## மார்ச்-18 ‘டூ மச்’

வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி மற்றும் கார்டூன் படங்களுக்கு பின் குரல் கொடுத்தல் இப்படி பல்வேறு ஆற்றல்களைப் பெற்றவர், எட்வர்டு.

இவர் புருக்கிலினில் தொழில் கல்வி படித்துவிட்டு, அதைத் தொடர்ந்து கொலம்பிய பல்கலைக் கழகத்திலும் படித்தார்.

*1906*-முதல் மேடைகளில் நடித்தல், பாடுதல், ஆடுதல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தினார்.

*1919*-இல் லாஸ் ஏஞ்சல் கலிபோர்னியா சென்று ஹாலிவுட் படங்களில் நடித்தார். அங்கே இவர் ஐந்து படங்களில் நடித்தார்.

அத்தனையும் நகைச்சுவைப் பாத்திரங்கள். இந்த நடிப்பு மக்களிடயே பெரும் மதிப்பை ஏற்படுத்தியது. ‘டு மச்’ என்ற நகைச்சுவைத் திரைப்படம் இவரின் திறமையை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

சில வருடங்கள் கழிந்து குணச்சித்திரப் பாத்திரங்களில் நடிக்கத் தொடங்கினார்.

‘முதல் பக்கம்’, ‘சொர்க்கத்தின் இடையூறு’ என்ற இரண்டு படங்களும் இவருக்கு சிறந்த குணச்சித்திர நடிகர் என்ற உயர்வைப் பெற்றுத் தந்தது. *1950*-இல் தொலைக்காட்சிப் பணியில் ஈடுபட்டு பெயர் பெற்றதோடு, கார்டூன் படங்களிலும் ஈடுபட்டார்.

இவர் நியூயார்க் - புருக்களினில் இன்றுதான் *(18.03.1886)* பிறந்தார்.

❐

பிரிட்டன் இராஜதந்திரியான நெவிலி சாம்பர்லன் என்பவரும் இன்றுதான் *(18.03.1869)* பிறந்தார்.

❐

டீசல் இஞ்சினைக் கண்டு பிடித்த ஜெர்மானியக் கண்டுபிடிப்பாளரான ருடால்ப் டீசல் என்பவரும் இன்றுதான் *(18.03.1858)* பிறந்தார்.

❐

## *மார்ச்-19* போலீஸ் நீதிபதி

நீதிபதி வி.வி.சீனிவாச ஐய்யங்கார், இந்தியாவின் முதல் போலீஸ் நீதிபதி மற்றும் ஆணையாளராகப் பணிபுரிந்த போலீஸ் ராகவாச்சாரியாரின் பேரன்.

பச்சையப்பன் கல்லூரியில் படித்த இவர் அதே கல்லூரியில் சிறிது காலம் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

சட்டம் படித்து வழக்கறிஞரானார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் மாணவர் பேரவை எனும் அமைப்பு முறையைத் தோற்றுவித்தவர்களில் இவரும் ஒருவர்.

இளைஞர் அமைப்புகளில் உறுப்பினராக இருந்தும் இளைஞர் இதழ்களை நடத்தியும் நற்பணிகள் செய்துள்ளார்.

*1923*-ஆம் ஆண்டு தேர்தல் ஆணையராகப் பணியாற்றிய இவர் நான்கு ஆண்டுகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகப் பணிபுரிந்தார்.

இவர் 'ஒவ்வொருவரின் கருத்து' எனும் இதழுக்கும், 'சென்னை சட்ட வார இதழுக்கும், வேதாந்த தீபக்' எனும் இதழுக்கும் ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார்.

விற்பனை வரியைப் பற்றி இவர்தான் முதன் முதலில் புத்தகம் எழுதியவர்.

இந்த நீதிபதி வெம்பாக்கம் எனும் ஊரில் இன்றுதான் *(19-03-1871)* பிறந்தார்.

❑

இங்கிலாந்தைச் சார்ந்த பிரபல அரசியல் தலைவர் வில்லியம் ஜென்னிங்ஸ் பிரைன் என்பவரும் இன்றுதான் *(19-03-1860)* பிறந்தார்.

❑

அமெரிக்காவின் புகழ்பெற்ற தளபதியான ஜோசப் ஸ்டில்வெல் என்பவரும் இன்றுதான் *(19-03-1883)* பிறந்தார்.

❑

## மார்ச்-20 குகா

சுதந்திரத்தின் மூலமே சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் வெற்றி பெற முடியும் என்று உறுதியாக நம்பியவர் ராம்சிங் குகா. வெறும் வாய்ப் பேச்சால் சுதந்திரம் கிடைக்காது என்று நாளும் முழங்கிய அவர் தலைமையில் மக்கள் திரண்டனர்.

அவரைப் பின்பற்றியவர்கள் நாமதாரிகள் என்றும், 'குகா' என்றும் அழைக்கப்பட்டனர்.

மதுவிலக்கு, மாமிச விலக்கு என்னும் இரு கொள்கைகளை முக்கியமாகக் கொண்டு தொடங்கப்பட்ட இயக்கம் நாமதாரிகள் இயக்கம். இந்த இயக்கத்தைத் தோற்றுவித்தவர் பகவத் ஜவகர்மால் என்பவர். அந்த இயக்கத்தின் தலைவரானார், ராம்சிங் குகா. இயக்கம் பெரிய அளவில் வளர்ந்தது.

பஞ்சாபில் ரஞ்சித்சிங் மன்னரின் படையில் பணிபுரிந்தார், ராம்சிங் குகா. அந்த மன்னரின் ஆட்சி பிரிட்டீஷாரின் கைக்கு மாறியது. அதே வேளையில் ராம்சிங் படையிலிருந்து விலகினார்.

தாய்நாட்டு மண்ணில் கால்பதித்த அன்னியரை விரட்டி யடிக்க வேண்டும் என்னும் கொள்கையை நிறைவேற்ற 'குகா' என்னும் இயக்கத்தின் தலைமையை ஏற்றுக் கொண்டார். அன்றுமுதல் இவர் ராம்சிங் குகா என்று அழைக்கப் பட்டார்.

குகா இயக்கத்தினர் அன்னியரை எதிர்த்துப் போரிட்டனர். அன்னியரின் பெரும்படையின் முன், குகா இயக்கத்தினர் சிதறுண்டனர். பலர் பிடிபட்டனர். பிடிபட்ட அனைவரையும் கோட்லாவில் பொதுச் சதுக்கத்தில் மக்கள் முன்னிலையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. பத்து பத்து பேராக பீரங்கி வாயில் கட்டப்பட்டனர். பீரங்கியிலிருந்து வெடித்த குண்டுகள் அவர்களது உடல்களைச் சின்னாபின்னப் படுத்திவிட்டன.

குகா இயக்கத் தலைவரான ராம்சிங் குகாவைப் பிரிட்டீஷ் அரசு நாடு கடத்தியது.

இந்த விடுதலை வீரர் லூதியானா மாவட்டத்திலுள்ள பெயினி என்னும் ஊரில் இன்றுதான் **(20.03.1827)** பிறந்தார். ❑

## மார்ச்-21 ஆரியபட்டா

அறிவியல் மேதை ஆரியபட்டா, புகழ்பெற்ற நாளந்தா பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றார். மன்னர் சந்திரகுப்தரால் நாளந்தா பல்கலைக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

வானவியல் குறித்த கோட்பாடுகளைக் கொண்ட 'ஆரிய பட்டியம்' என்னும் நூலை தமது 23-வது வயதில் இவர் எழுதினார்.

இன்று, வான்வெளிக் கிரகங்களைப் பற்றி ஆராய இவரது நூலே அடிப்படையாக அமைந்துள்ளது.

இவரது ஆற்றலை நினைவு கூறும் வகையில் இந்தியாவின் முதல் செயற்கைக் கோளிற்கு 'ஆரியபட்டா' என பெயர் சூட்டப்பட்டது.

பூமி உருண்டை வடிவமானது. அது தன்னுடைய அச்சில் சுழல்வதால் இரவும் பகலும் ஏற்படுகிறது.

கிரகங்களின் சுழற்சி, உறுதி செய்ய முடியாத சமன்பாடு களுக்கு தீர்வுகாணும் முறை...

இப்படி பல ஆய்வுகளை செய்து உண்மை நிலையை உலகிற்குச் சொன்ன வானவியல் உலக மேதை, ஆரியபட்டா.

இந்த அறிஞர் பாட்னாவில் இன்றுதான் **(21-03-கி.பி.476)** பிறந்தார்.

❑

அமெரிக்காவின் புகழ்பெற்ற கண்டுபிடிப்பாளரும், தொழில் மேதையுமான ஜார்ஜ் புல்மேன் என்பவரும் இன்றுதான் **(21-03-1831)** பிறந்தார்.

❑

தொலைபேசிக் கருவியைக் கண்டுபிடித்த ஸ்காட் லாந்து நாட்டுக் கண்டுபிடிப்பாளரும் விஞ்ஞானியுமான அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல்லும் இன்றுதான் **(21-03-1847)** பிறந்தார்.

❑

## மார்ச்-22 பியானோ...

நடிகர் சிக்கோ மார்க்ஸ், மிகச் சிறந்த பியானா இசைக் கலைஞர். இவரது குடும்பமே இசையிலும், கலைத்துறையிலும் ஈடுபட்டிருந்தது.

இவர், நாடகத்திலும், திரைத்துறையிலும் நடிக்கும்போது, இவர் வீதிகளிலும், பழகிய நண்பர்களிடமும் கண்டவைகளையே முன்வைத்து நடித்து புகழ் பெற்றிருக்கிறார். சிறு வயதிலேயே பியானா வாசித்தே தன் குடும்பத்தை நடத்தி இருக்கிறார்.

இவர், இசை நிகழ்ச்சி நடத்துவதற்கு முன் எந்தவித முன் பயிற்சியும் செய்வது இல்லை. விழா மேடைக்கு அப்படியே கருவிகளோடு வந்து இயல்பாக நடத்தி பெயர் பெற்றுவிடும் ஆற்றல் கொண்டவர்.

இவர், பியானா வாசிப்பதற்கு முன் மிதமான சுடுநீரில் சிறிது நேரம் தன் விரல்களை நனைத்துக் கொண்டு இருப்பாராம்.

இவர் ஹாலிவுட் திரைப்படத்தில் தொடர்பு கொண்டு இருந்ததால் எம்.ஜி.எம்.கம்பெனியில் வாய்ப்பு அதிகமாக வந்தது.

1930-40-களில் இசைத்துறையிலும், திரைத்துறையிலும் உலகப்புகழ் பெற்றார். இந்த நல்லக் கலைஞரிடம் பெண் மோகமும், சூதாட்ட மோகமும் இருந்ததால் சம்பாதித்த பெரும் செல்வத்தை செலவழிக்கும் நிலையிலேயே இருந்தார்.

அதனால், ஓய்வே இன்றி இறுதிவரை உழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்.

இந்தக் கலைஞர் இன்றுதான் **(22.03.1887)** பிறந்தார்.

❐

ஃபிலிமிஷ் நாட்டு ஓவியரான ஆன்ட்டன் வான் டைக் என்பவரும் இன்றுதான் **(22.03.1599)** பிறந்தார்.

❐

அமெரிக்காவின் புகழ்பெற்ற மருத்துவரான ராபர்ட் மில்லிக்கான் என்பவரும் இன்றுதான் **(22.03.1868)** பிறந்தார்.

❐

## மார்ச்-23 அஞ்சல்காரன்

செல்வச் செழிப்பான குடும்பத்தில் தோன்றியவர் ரோஜர் மார்ட்டின் டூகார். இவர் தந்தை வழக்கறிஞர். அதனால் மகனும் வழக்கறிஞனாக வருவான் என்றுதான் எண்ணி யிருந்தார். ஆனால் டூகாரின் மனமோ இலக்கியத் துறையில் வீழ்ந்து விட்டதே!

டூகார், பதினேழு வயதிற்குள் பிரெஞ்சு எழுத்தாளர்களின் எழுத்தோவியங்களை அறிவால் தொட்டு முடித்துவிட்டார். ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாயின் 'போரும் அமைதியும்' நாவலைப் படித்துவிட்டு, தனக்குள்ளேயே ஒரு டால்ஸ்டாயாக கற்பனையில் மிதந்துவந்த காலமும் அவருக்குள் உண்டு.

1908-இல் ஒரு நெடுங்கதையை எழுதி தானே வெளி யிட்டு தன்னை இந்த உலகிற்கு அறிமுகம் செய்து கொண்டார். இவரின் முயற்சி வெற்றி பெறவில்லை. அதனால் சோர்ந்து போகவுமில்லை, டூகார்.

முழு மூச்சோடு மீண்டும் எழுதினார். 'ழீன் பாராய்' என்ற நாவலோடு அவர் முயற்சி வெளிப்பட்டது. வரலாற்றுப் பின்னணியோடு எழுதப்பட்ட நாவல் இது.

இந்நாவலின் கையெழுத்துப் பிரதியை, பிரபல நாவலாசிரியர் ஆண்ட் ரூகைட் படித்துப் பார்த்து பரவசப்பட்டு, டூகாரைப் பாராட்டியதோடு, ஒரு வெளியீட்டாளருக்கு பரிந்துரையும் செய்தார். அந்த நாவலும் வெளிவந்தது. டூகாரின் புகழ் பிரெஞ்சு நாடெங்கும் பரவியது. பத்திரிகைகள் பாராட்டின.

1919-இல் நாடகத்துறையில் ஈடுபட்டார். 'தைபால்ட்' என்ற பெயரில் எட்டு தொகுதிகள் கொண்ட படைப்பினை (1922-1940) கொண்டு வந்தார்.

இதற்கு இடையே 'ஆப்பிரிக்க இரகசியம்', 'ஓர் அமைதி மனிதன்', 'அஞ்சல்காரன்' போன்ற நாவல்களையும் எழுதினார். உலகப் புகழ்பெற்ற டூகாருக்கு நோபல் பரிசும் கிடைத்தது, 1937-இல்.

ரோஜர் மார்ட்டின் டூகார், பாரிஸ் நகரில் இன்றுதான் (23.03.1881) பிறந்தார்.

❑

முதல் உலகப்போரில் நேசநாடுகள் வெற்றிபெற காரணமாக இருந்த பிரிட்டிஷ் அரசியல்வாதியான ஆல்பிரட் லார்டு மில்லரும் இன்றுதான் (23.03.1854) பிறந்தார்.

## மார்ச்-24 மணிக்கொடி

எழுத்துலகில் புரட்சியையும், புதுமையையும் செய்த பத்திரிகை மணிக்கொடி. இதை ஆரம்பித்தவர், கே.சீனிவாசன். இவர் விடுதலைப் போராட்ட வீரர். இவர் தொடங்கிய இப்பத்திரிகையில் தமிழ்நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்கள் எல்லாம் பணியாற்றினார்கள். டி.எஸ்.சொக்கலிங்கம், வ.ரா... இப்பட்டியல் நீளும். அப்பட்டியலில் மூத்த எழுத்தாளர் பி.எஸ்.ராமையாவையும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இப்பத்திரிகையின் தொடக்கக் கால ஆசிரியராக இருந்த வ.ரா.இலங்கை 'வீரகேசரி' பத்திரிகைப் பணிக்குச் சென்றதும், ராமையா மணிக்கொடியின் ஆசிரியரானார். புதுமை நோக்கோடும், புரட்சிக் கருத்தோடும், புது எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கோடும் நடத்தினார். அந்தக் காலத்தில் தரமான சிறுகதைகளை - இலக்கிய நயத்தோடு வெளிவந்த பத்திரிகை எது என்று இன்று கேட்டாலும், 'மணிக்கொடி' என்று சொல்வர்.

ஐந்தாவது வரையே படித்த இவர், சென்னை வந்து, கூலிவேலை செய்யும் தொழிலாளியாக பணி தொடர்ந்தார். தினக்கூலி பத்தணா மட்டுமே. இந்த வேளையில்தான் இந்திய விடுதலைப்போர் சூடுபிடித்துக் கொண்டிருந்தது. அதில் பங்கு கொண்டார்; சிறை சென்றார்.

இவர் சிறுகதைகளில் முத்திரை பதித்தவர். இவரின் முதல் சிறுகதை, 1933-இல் ஆனந்த விகடன் நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றது. 'மலரும் மணமும்' என்பது அக்கதையின் பெயர். சிறப்பான நாடகங்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய படைப்புகள் திரைப்படமாகவும் வந்துள்ளன. 'போலீஸ்காரன் மகள்' இவர் எழுதிய நாடகம் தான்.

இவர் 300-க்கு மேற்பட்ட சிறுகதைகளையும், 6 நாடகங்களையும், மூன்று நாவல்களையும் எழுதி உள்ளார். இவர் பல எழுத்தாளர்களை உருவாக்கினார் என்பதோடு, இவர் படைப்புகளைப் படித்தவர்கள் எழுத்தாளர்களாகவும் ஆனார்கள் என்றும் சொல்லலாம்.

'மணிக்கொடி காலம்' என்ற நூலுக்கு சாகித்ய அகாடெமி விருது பெற்ற இந்த எழுத்தாளர் வத்தலக்குண்டு எனும் ஊரில் இன்றுதான் (24-03-1905) பிறந்தார்.

## மார்ச்-25 நாட்டுப்புற...

பியானா மேதையான பிலா பார்டோக், மிக இளம் வயதிலேயே பியானோவை இசைக்கத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது நான்கே என்பதை அறியும்போது வியப்பாக இருக்கிறது.

இவரது ஆற்றலை அறிந்த தாயே பின்னர் அவருக்கு ஆசிரியராக இருந்து இசைப் பயிற்சியை அளித்திருக்கிறார்.

இவரே இசை கோர்த்து நாற்பது பாடல்களுக்கு வடிவம் கொடுத்திருக்கிறார். 20-ஆம் நூற்றாண்டில் இவரே சிறந்த இசை மேதை என்று பலரால் பேசப்பட்டார்.

இசையுலகில் இவர் பல்வேறு புதிய முயற்சிகளில் ஈடுபட்டு அதன் பயனாக மனித பழக்க வழக்கங்களை ஆய்வு செய்வதற்கான ஒரு அமைப்பினை ஏற்படுத்தி, அதில் முக்கிய பங்கையும் ஏற்றார்.

கிழக்கு ஐரோப்பா, கிழக்கு மத்திய நாடுகளின் நாட்டுப்புற பாடல்களை எல்லாம் பல ஆண்டுகள் தொகுத்து, அவற்றை எல்லாம் இசை வடிவம் ஆக்கிய பெருமை இவரையே சேர்ந்தது.

இவர், பூடாபெஸ்ட் என்ற நகரிலுள்ள ராயல் அகாடமி ஆப் மியூசிக் கல்லூரியில் படித்தார்.

நாட்டுப்புற பாடல்களிலேயே நாட்டம் கொண்ட இவர், ஹங்கேரி நாட்டில் உள்ள நாட்டுப்புற பாடல்களை தொகுத்து இசை வடிவம் கொடுத்தபோதுதான் இவரின் புகழ் உலகம் முழுதும் வெளிச்சப்பட்டது.

1911-இல் இசை நாடகம் ஒன்றினை அரங்கேற்றி தன் மனைவிக்கு காணிக்கையாக்கினார். அந்நாடகமே ஹங்கேரி நுண்கலை கழகத்தாரிடமிருந்து விருதைப் பெற்றுத் தந்தது.

இந்த இசை மேதை ஹங்கேரியில் இன்றுதான் (25.03.1881) பிறந்தார்.

❑

இத்தாலி நாட்டு இசை மேதையான ஆர்ட்டுரோ டாஸ்காளினி என்பவரும் இன்றுதான் (25.03.1867) பிறந்தார்.

❑

## மார்ச்-26 சாஸ்திரிகள்

திவாகர்ல திருப்பதி சாஸ்திரியும், செள்ளபிள்ளை வெங்கட சாஸ்திரியும் வெவ்வேறு மாவட்டங்களில் பிறந்து ஒன்றிணைந்து, 'திருப்பதி வேங்கட கவிகள்' என்று இரட்டைப் புலவர்களாக இருந்து புகழ்பெற்றார்கள்.

இவர்களில், திவாகர்ல திருப்பதி சாஸ்திரி, ஆந்திரம், என்டகண்டியைச் சேர்ந்தவர். அப்போது நடைமுறையிலிருந்த தெருமுனைப் பள்ளி ஒன்றை நடத்திக் கொண்டிருந்த பூருல சுப்பராயுடு அவரது தொடக்கக் கல்வி ஆசிரியர். சமஸ் கிருதத்தில் தேர்ந்த அறிவார்ந்தவரான இவர், திருப்பதி சாஸ்திரியரான வேங்கட அவதானிக்கும் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருப்பதி, தன் தந்தையிடமே காளிதாசனின் ரகு வம்சத்தையும், குமாரசம்பவத்தையும் கற்றுக் கொண்டார். நல்லொழுக்கம் வளர வேண்டி இவரை வளர்த்த அத்தை உஞ்சவிருத்திப் பழக்கத்தையே தொடரச் செய்தார். கரிமெள்ள லிங்கய்யா என்பவரிடம் திருப்பதி மாணவரானார். அங்கே மூன்றாண்டு படிப்பில், சமஸ்கிருதத்தில் பாரவியின் கிரதார் ஜுனீயத்தையும் பாண எனப்படும் வேறுசில நாடகங் களையும் கற்றுக் கொண்டார். அடுத்து புகழ்பெற்ற வேதாந்தத்தில் வித்தகரான மாடபூஷி வேங்கடாச்சார்யாவிடம் பாடம் கற்றார். இங்கேதான் செள்ளபிள்ளை வெங்கட சாஸ்திரியும் மாணவராகச் சேர்ந்தார். இந்த வேளையில்தான் இருவரும் இணைந்து கவிதை பாடத் தொடங்கினார்கள்.

இவர்களது ஆற்றலைக் கேள்விப்பட்ட போலவரம் ஜமீன்தார் அவர்களை அழைத்து, தன்னுடைய ராஜசபையில் ஆஸ்தான கவிஞர்களாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். அப்போது வேங்கட சாஸ்திரி, திருப்பதி சாஸ்திரியை அப்பதவியை ஏற்றுக் கொள்ளச் செய்தார். 1889-இல் ஜமீன்தார், 'சரஸ்வதி' என்ற பெயரில் இலக்கியப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கினார். அப்போது அவர் நிறைய எழுத வேண்டியிருந்தது.

சமஸ்கிருதத்திலிருந்து பால இராமாயணம், முத்ரா ராக்ஷசம், மிருச்ச கடிகம் ஆகியவற்றைத் தெலுங்குக்கு மொழி பெயர்த்தார். இப்படி தெலுங்கிலும் பல நூல்களை எழுதினார்.

இக்கவிஞர் ஆந்திராவில், என்டகண்டியில் இன்றுதான் **(26.03.1872)** பிறந்தார்.

□

## மார்ச்-27 6 வயதில்...

நம் நாட்டை கடைசியாக ஆங்கிலேயர் ஆண்டனர். அவரை எதிர்த்துக் காந்தியடிகள் அறப்போர் பல புரிந்தார். அப்போரில் இந்தியப் பெண்களும் ஆண்களும் பெரும்பங்கு கொண்டனர். அவருள் ஒருவரே புஷ்பலதாதாஸ். இவர் இளம் வயதிலேயே விடுதலை இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டார். இவர் 'மிருச்சுயூ பாகினி', 'சாந்தி பாகினி' என்னும் அமைப்பை ஏற்படுத்தி, அறப்போரில் முன் நின்றார்.

புஷ்பலதாதாஸ், அகில இந்திய காங்கிரஸ் குழுவில் உறுப்பினராக இருந்தார்; குறிப்பாக மகளிர் பிரிவில் முதன்மையானவராயிருந்தார். பத்தாண்டுகள் (1951-1961) மேலவை உறுப்பினராக இருந்து மக்களுக்கு தொண்டு செய்தார். நாடாளுமன்றக்குழு உறுப்பினர் என்கிற முறையில் பல நாடுகளுக்கு சென்று வந்தார்.

பகவத்சிங் தூக்கிலிட்டதையும், மோதிலால் நேருவைக் கைது செய்ததையும் கண்டித்துக் கிளர்ச்சி செய்தார்; ஒரு பள்ளியில் தேசிய உணர்வு கொண்ட மாணவி ஒருத்தியை வெளியில் தூக்கி எறிந்தமையை எதிர்த்து குரல் கொடுத்தார். அதனால், பள்ளி நிர்வாகம் இவரை வெளியேற்றியது. பள்ளிப் படிப்பு நின்றது. பின்னர் தனியே படிப்படியாய் படித்து, ஆந்திரா பல்கலைக் கழகத்தில் அரசியல் பாடத்தில், முதுநிலைப் பட்டம் பெற்றார்.

இவர், ஆறாம் வயதிலேயே கதிரியக்கத்தில் ஈடுபட்டார்; சர்க்கா சங்கத்தைப் பிற்காலத்தில் அமைத்துத் தொண்டாற்றி னார்; கதராடையையே அணிந்தார். காந்தியடிகள் நடத்திய தனிநபர் அறப்போராட்டத்தில் கலந்து கொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனால் இரண்டரை மாதம் சிறைப் பட்டார். சிறந்த எழுத்தாளராகவும், நடிகராகவும், இசை மீதும், நடனத்தின் மீதும் ஆர்வம் கொண்டவராகவும் இருந்தார்.

பல்வேறு அமைப்புகளில் பங்கு கொண்டு விடுதலைப் போரில் தொண்டாற்றிய இப்பெண்மணி - அசாம் மாநிலத்தில் இன்றுதான் (27-03-1915) பிறந்தார்.

❑

பிரெஞ்சு அரசரான பதினேழாம் லூயி மன்னனும் இன்றுதான் (27-03-1785) பிறந்தார்.

❑

## மார்ச்-28 ஆத்மாவின் பாடல்

புலோரியா சுவான்ஷன். இவர் ஒரு அமெரிக்க நடிகை.

இவருக்கு திரை உலகில் நடிக்க வாய்ப்பு கிடைத்ததே ஒரு கதையாகும்.

ஒருநாள் இவர் சிகாகோவிலுள்ள படப்பிடிப்பு நிலையத்தை பார்வையாளராகச் சென்று பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில், ''ஆத்மாவின் பாடல்'' என்ற படத்தை இயக்கிக் கொண்டிருந்த இயக்குநரின் பார்வையில் பட்டார்.

ஏதோ ஒரு திறமை இவரிடம் ஒளிந்திருக்கிறது என்பதை உணர்ந்த இயக்குநர், தான் அப்போது எடுத்துக் கொண்டிருந்த 'ஆத்மாவின் பாடல்' என்ற படத்தில் நடிக்க அழைத்தார். அவரும் நடித்தார். முதல் படத்திலேயே இவரது திறமை பளிச்சிடவே, தொடர்ந்து இவருக்கு வாய்ப்புகள் வந்து குவிந்தன. சார்லி சாப்ளின் கூடவும் நடித்தார்.

முதலில் நகைச்சுவைப் பாத்திரங்களில் நடித்துவந்த புலோரியா, படிப்படியாக தன் திறமையால் குணச்சித்திர வேடங்களிலும் நடிக்கத் தொடங்கினார். இவரின் நடிப் பாற்றலை உணர்ந்து காதல் காட்சிகளில் முதன்முதலில் நடிக்க வைத்த பெருமை இயக்குநர் டேமில் என்பவரையே சாரும்.

இந்த நடிகையின் அழகையும், திறமையையும் பாராட்டக் குவியும் ரசிகர்கள், பெரும்பாலும் அவர் வித்தியாசமாக அணிந்திருக்கும் நகைகளையும், தலையிலும் உடலிலும் மயில் இறகுகளையும், வான்கோழியின் இறகுகளையும், விலையுயர்ந்த ஆடைகளில் பதித்துள்ள முத்துக்களையும் பார்ப்பதற்காகவே அவர்கள் கூடுவார்களாம்.

இந்த வித்தியாசமான நடிகை சிகாகோவில் இன்றுதான் **(28.03.1897)** பிறந்தார்.

❑

பிரெஞ்சு இராஜதந்திரி அரிஸ்ட்டைட் பிரியாண்ட் என்பவரும் இன்றுதான் **(28.03.1862)** பிறந்தார்.

❑

டேன்ஃபிளோரா ராய்சன் என்னும் புகழ்பெற்ற நடிகையும் இன்றுதான் **(28.03.1903)** பிறந்தார்.

❑

## மார்ச்-29 கின்னஸ்...

ஜான் டைலர். இவர் அமெரிக்காவின் 10-வது ஜனாதிபதி.

சட்டத்துறைப் பாடத்தை ஜான், 'வில்லியம் அண்டு மேரி' என்ற கல்லூரியில் படித்தார்.

1840-இல் இவர் உதவி ஜனாதிபதியாக இருந்தார். ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர். அரசியலில் ஈடுபாடு அதிகம் கொண்டவர்.

வில்லியம் ஹென்றி ஹரிஷாம் என்பவர் ஜனாதிபதியாக இருந்து இறந்தார். அதன்பிறகு இவர் ஜனாதிபதியாக ஆனார்.

இவரது முதல் மனைவிக்கு எட்டுக் குழந்தைகள் இருந்தனர். முதல் மனைவி இறந்து போனதும், இவர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது மனைவியைத் தேடி மணக்க இருந்தபோது, முதல் மனைவியின் குழந்தைகள் சம்மதிக்கவில்லையாம்.

காரணம், இவர் முதல் பெண் குழந்தையின் வயதைவிட, இவர் கட்டிக் கொள்ள விரும்பிய இரண்டாவது மனைவியின் வயது, ஐந்து குறைவு என்பதுதான். அதாவது, 54-24.

பிறகு எப்படியோ பிள்ளைகளைச் சமாதானப்படுத்தி இரண்டாவது மனைவியைக் கைப்பிடித்தார். இவருக்கு இல்லற வாழ்க்கையில் பிறந்த குழந்தைகளோ ஏழு... ஆக மொத்தம் 15.

உலகிலேயே ஜனாதிபதியாக இருந்த எவருக்குமே இத்தனைக் குழந்தைகள் இருந்ததாக வரலாறு இல்லை. அந்தப் பெருமை ஜான் டைலருக்கே உண்டு.

இவர் வெர்ஜினிய நாட்டில் இன்றுதான் (29.03.1790) பிறந்தார்.

❑

சர் எட்வின் லுட்யன்ஸ் என்னும் கட்டடக் கலைஞரும் இன்றுதான் (29.03.1869) பிறந்தார்.

❑

அமெரிக்காவின் புகழ்பெற்ற பேஸ் பால் விளையாட்டு வீரரான கேரி எங் என்பவரும் இன்றுதான் (29.03.1867) பிறந்தார்.

❑

## மார்ச்-30 சாது

பழனி சாது சுவாமிகளுக்கு பெற்றோர் இட்ட பெயர், சபாபதி. பன்னிரண்டு வயது வரை பள்ளிப் படிப்பு. பின்னர், தில்லை சென்று தேவாரப் பாடசாலை நடத்தி வந்ததோடு, தமிழும், வடமொழியும் கற்பித்து வந்த தாய்மாமன் பழனியப்பர் இல்லத்திற்குச் சென்று அவரிடம் அடைக்கலம் ஆனார். அங்கிருந்து தமிழும், சமஸ்கிருதமும், தேவாரமும் கற்றார்.

பின்னர் அங்கிருந்து சொந்த ஊர் திரும்பிய அவர், சொக்கலிங்க ஐயர் என்பவரிடம் சிவஞான போதம், சிவஞான சித்தியார் முதலிய நூல்களைக் கற்றதோடு, கைவல்யமும் கற்றார்.

பெற்றோர் இவருக்கு திருமணம் செய்து வைக்க எண்ணினர். ஆனால், அவர் மனமோ, துறவை நாடியதால், இடையில் ஓர்ஆடையோடு 1914-இல் முற்றும் துறந்த முனிவர் ஆனார். அதே நிலையில் பழனித் திருத்தலம் சென்றார். இருந்தும் சுற்றத்தார் தொல்லை கொடுத்தனர். எனவே அங்கிருந்து தென்னாடு, வடநாடு என்று யாத்திரை புறப்பட்டார். கங்கையில் குளித்து கடுந்தவம் செய்தார். அன்னபூரணி உபாசகரானார்.

மாதவ மவுன சுவாமிகள் இவரை சாது முனிவராக ஆக்கினார். பின்னர், சாது சுவாமிகள் பாம்பன் சுவாமிகள், நந்தியடிகளின் அன்பு கிட்டியது. செம்பைப் பொன்னாக்கும் ‘சித்தும்’ கற்றார். இப்படி முழு இறையருள் பெற்றவராக மீண்டும் பழனியில் வந்து தங்கினார்.

சுவாமிகள் தவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்த காலத்தில் வந்த அடியார்கள் அனைவரின் துன்பங்களையும், பசிப்பிணி நீக்கும் கருணை வள்ளலாகவும் வாழ்ந்தார். ‘சண்முக விலாச அன்னதான நிலையம்’ ஏற்படுத்தினார். தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கத் தலைவராகவும் இருந்தார்.

படுக்கையிலிருந்து வடக்குமுகமாக பழனி மலையை நோக்கி இரு கைகளையும் கூப்பி, முருகனை வணங்கியபடியே சாதுமுனி முக்தி பெற்றார்.

அம்மாமணி ஆச்சாள்புரம் எனும் சிற்றூரில் இன்றுதான் (30.03.1890) பிறந்தார்.

## மார்ச்-31 ஜெருசலேம் பரிசு

கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த ஆக்டேவியோ பாஸ் பட்டம் ஏதும் பெறவில்லை. இருந்தாலும், படிக்காத மேதைகளின் பட்டியலில் இடம் பிடித்திருந்தார்.

இவரின் இலக்கியத்திறன் வானைப்போல விரிந்தது; கடலைப்போல ஆழமானது. அதனால் ஏகப்பட்ட விருது களைப் பெற்றார்.

*1977*-இல் ஜெருசலேம் பரிசு; *1981*-இல் செர்வந்தே பரிசு; *1982*-இல் நியூஸ்டடி பரிசு; *1987*-இல் டி.எஸ்.எலியட் பரிசு என்பதோடு *1990*-ஆம் ஆண்டில் நோபல் பரிசும் கிடைத்தது.

இவர் தமது இளம் வயதிலேயே கவிதை எழுதப் புகுந்தார். பாஸ் ஒரு சிறந்த கவிஞர் மட்டுமல்ல, சீரிய எழுத்தாளர்; நேரிய கட்டுரையாளர்.

இவர் இலக்கிய மேதையாக விளங்கியதோடு, அரசியல் ஈடுபாடும் கொண்டு சிறந்தார். *1968* வரையிலும் இவர் மெக்சிகோவின் தூதராக பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் பணியாற்றி உயர்ந்தார்.

இவர், மெக்சிகோ நகரில் இன்றுதான் **(31-03-1914)** பிறந்தார்.

❐

உலகப் புகழ்பெற்ற அமெரிக்கக் குத்துச்சண்டை வீரரான ஜாக்ஜான்சன் என்பவரும் இன்றுதான் **(31-03-1878)** பிறந்தார்.

❐

ரெனி டெஸ்கார்ட்டஸ் என்னும் பிரான்ஸ் நாட்டுத் தத்துவ ஞானியும், விஞ்ஞானியுமான அறிஞரும் இன்றுதான் **(31-03-1596)** பிறந்தார்.

❐

ஆஸ்திரிய நாட்டு இசையமைப்பாளரான ஜோசப் ஹேடனும் இன்றுதான் **(31-03-1732)** பிறந்தார்.

❐

# இதயத்துடிப்பு




ஒரு மனிதனின் வாழ்க்கை சிறப்போடு அமைய வேண்டு மானால் நல்ல உடல் நிலை முதலில் அமைய வேண்டும். நல்ல உடல் நிலைக்கு ஆதார சுருதியாக இருப்பது இதயத்தின் துடிப்பும், இரத்தக் குழாய்களின் இயக்கமும் மிகமிக இன்றியமையாத ஒன்றாகும்.

மனிதரின் உடலில் இரத்தம் வட்டப்பாதையில் சுற்றுகிறது என்றும், மனித இதயம் நிமிடத்திற்கு சுமார் 72-தடவைகள் துடிக்கிறது என்பதையும் முதன்முதலாகக் கண்டுபிடித்தவர், வில்லியம் ஹார்வி என்ற ஆங்கிலேய மருத்துவ மேதைதான்.

அவர் ஆய்வு மேலும் தொடர்ந்தது. மனிதனின் இதயத் துடிப்பையும் கண்டறிய வேண்டும் என்று அவர் இதயம் துடித்தது. அதனால், மேலும் அறிவுத் தேடலில் இறங்க, பாடுவா நகரிலுள்ள கேய்சு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து, டாக்டராகப் பட்டம் பெற்றதோடு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் உள்ள மருத்துவ இயல் ஆய்வுச் சங்கத்தில் உறுப்பினராகவும் ஆனார். அங்கு இரத்தக் குழாய்களின் தன்மைகளையும் அறிந்து கொண்டார்.

பல்வேறு ஆய்வின் மூலம் இதயத்தைப் பற்றி எடுத்துரைத்த அவர், 'செயிண்ட் பார்த்தலோமியா' மருத்துவ நிலையத்தில் டாக்டராகப் பதவி ஏற்றார். அங்கே... 'விலங்குகளின் இதயமும் இரத்தமும் இயங்குவது பற்றிய உடற்கூறு அமைப்பியல் ஆராய்ச்சி விளக்கம்...' என்ற ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டு புகழ் பெற்றார்.

எந்த நாட்டில் உண்மைகள் உடனே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது? எந்த நாடு சிந்தனைவாதிகளை வாழும்போதே வாழ்த்தி இருக்கிறது...? ஹார்வியின் வாழ்விலும் அதுதான் நடந்தது. ஹார்வியை ஆதரித்த மன்னனின் மேல் கொண்ட கோபத்தால், மன்னனை கோடாரியால் அடித்துக் கொன்றதோடு, இவர் வீட்டையும் எரித்து சாம்பலாக்கினர். அதனால், மேலும் ஆய்வைத் தொடராமல் மனம் நொந்து தனது 72-வது வயதில் இயற்கை எய்தினார்.

இதயத்துடிப்பான இந்த மேதை இங்கிலாந்திலுள்ள போக்ஸ்ட்டன் நகரில் இன்றுதான் (01-04-1578) பிறந்தார். ☐

## ஏப்ரல்-2 மனை(வி) விளக்கு

மேலை நாட்டில் எமிலி ஜோலா என்றொரு புகழ்பெற்ற எழுத்தாளர் வாழ்ந்தார். அவர் ஆரம்பக் காலங்களில் மிகவும் ஏழ்மையுடன் போராடினார். அவருக்கு தான் ஒரு எழுத்தாளராக புகழ்பெற வேண்டும் என்று எண்ணி, எந்த வேலைக்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்தார்.

கணவர் எங்காவது போய் உழைத்து சம்பாதிக்காமல் இப்படி எதையோ எழுதிக் கொண்டு காலத்தைப் போக்குகிறாரே என்று எமிலிஜோலாவின் மனைவி வருத்தப்படவில்லை. மாறாக அந்த வறுமையிலும் கணவனை உற்சாகப்படுத்தினார். நீங்கள் நன்றாக எழுதுகிறீர்கள். நீங்கள் பெரிய புகழை அடைய முடியும் என்றே ஊக்கப்படுத்தினார்.

தன் கணவர் இரவில் மிக கவனத்தோடு எழுத்திலே மூழ்கிக் கொண்டிருக்கும்பொழுது, மெழுகுவர்த்தி கரைந்து கை விரல்கள் சுட ஆரம்பித்தாலும்கூட, மெழுகுவர்த்தியை கீழே போட்டு கணவர் எழுத்துக்கு தடை செய்துவிடக் கூடாது என்ற அக்கறையோடு கை விரல்களை நெருப்பு பொசுக்கும்போதும் அவர் மனைவி அசையாமல் நிற்பார் என்று கூறுவார்கள்.

எமிலிஜோலா ஒரு பெரிய நாவலை எழுதி முடித்தபோது அவர் மனைவிதான் கணவரை உற்சாகப்படுத்தி ஒரு பதிப்பகத்திலே கொடுத்துவரச் செய்தார். சில மாதங்கள் ஓடிவிட்டன. பிரசுரத்திற்கு தகுதியானதுதானா என்று அறிவதற்காக பதிப்பகத்திலே கொடுக்கப்பட்ட அந்த நாவல் என்ன கதியாயிற்று என்பதை ஒரு நாள் கணவரை போய் பார்த்து வருமாறு மனைவி சொன்னார்.

அதன்படியே சென்றார். அங்கே அவருக்கு ஏகப்பட்ட வரவேற்பு. இன்ப அதிர்ச்சி. அவரது நூலை வாங்க அங்கே போட்டி போட்டுக் கொண்டு இருந்தார்கள். மெல்ல பதிப்பகத்தாரை அணுகினார்.

மதிப்போடு வரவேற்ற பதிப்பக உரிமையாளர் பெரும் தொகை ஒன்றை கொடுக்க, எமிலி அசந்தே போய்விட்டார். எமிலிக்கு தாயைப்போல மனைவி கிடைக்காவிட்டால் எழுத்தாளனாக வேண்டும் என்ற கனவிலேயே மட்டும் செயல்படாமல் காலத்தைப் போக்கி வாழ்க்கையை முடித்துக் கொண்டிருப்பார்.

பிரஞ்சு நாட்டு எழுத்தாளரான எமிலிஜோலா இன்றுதான் (02.04.1840) பிறந்தார். ☐

## ஏப்ரல்-3 முதல் தலைவர்

ஜார்ஜ் வாசிங்டனின் தந்தை ஒரு விவசாயி. தந்தையின் இரண்டாவது மனைவிக்குப் பிறந்த முதல் பிள்ளை இவர். குறைந்த அளவே கல்வி கற்று பின் உழவுத் தொழிலை செய்து வந்தார்.

பதினொரு வயதில் தந்தையை இழந்த இவர், தன் ஒன்றுவிட்ட அண்ணனிடம் வளர்ந்தார்.

அமெரிக்கா ஒரு காலத்தில் இங்கிலாந்து நாட்டின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. அமெரிக்காவின் விடுதலைக்காக விடுதலைப் படைக்குத் தலைமை தாங்கிப் போரிட்டு, அவர் தனது தாய் நாட்டிற்கு வெற்றியும் தேடித் தந்தார்.

விடுதலை பெற்ற நாட்டிற்கு முதல் குடியரசுத் தலைவராக இருந்து அரும்பெரும் தொண்டு செய்தார். அவர் போர்க் களத்தில் தலைவனாக நின்றார். அமைதியிலும் முதல்வராக இருந்தார்.

சிறிய வயதிலே, அவர் அந்நாட்டு ஜனாதிபதியாக வேண்டுமென எண்ணினார். அவ்வாறாக ஆசைப்பட்டார். சோர்வின்றி முயற்சி செய்தார்.

தாம் எண்ணியபடியே அவர், போட்டியின்றி இரண்டு முறை அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த மாபெரும் தலைவர் இன்றுதான், அமெரிக்காவில் 'வர்ஜினியா என்ற பகுதியில் **(03-04-1783)** பிறந்தார்.

❑

இந்திய இராணுவத் தளபதி மானெக்ஷாவும் இன்றுதான் **(03-04-1914)** பிறந்தார்.

❑

ஜெர்மானிய இசையமைப்பாளர் ஜாகன்னஸ் பிரம்ஸ் என்ற மேதையும் இன்றுதான் **(03-04-1897)** பிறந்தார்.

❑

## ஏப்ரல்-4 'ரேடியோ டான்ஸ்'

நியூயார்க்கில் பிறந்தவர், ஆர்தர்முரே. இவர் சிறந்த நடன கலைஞராக இருந்ததோடு, தொழிலதிபராகவும் இருந்தார்.

இவரது 17 வயதிலேயே நடனப்பள்ளி ஒன்றைத் தொடங்கி, இரவில் பயிற்சியை அளித்து வந்தார். பகலில், தொழிலை கவனித்துக் கொண்டார்.

1919-இல் தொழில் சம்பந்தமான நிர்வாகப் படிப்பினை ஜார்ஜாவில் உள்ள உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் படித்தார். படிக்கும் காலத்திலும் நடனத்தை விட்டு விடாமல் இருந்தார்.

இவரே 'ரேடியோ டான்ஸ்' என்ற ஒரு நடனத்தை முதன்முதலில் நடத்தினார். அது, மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

நடனக்கலையில் இவரே பல பாடங்களை தயாரித்து அஞ்சல் வழியே அனுப்பி இருக்கிறார்.

இதில், இவர் எதிர்பார்த்த வரவேற்பும், வருவாயும் கிட்டாததால், அந்த எண்ணத்தை விட்டுவிட்டார்.

சில காலத்திற்குப் பின் மீண்டும் நடனக் கலை குறித்து புதிய முறையில் பல பாடத்திட்டங்களை வெளியிட்டார். இதில் ஓரளவு வருவாயும், புகழும் சேர்ந்தது.

நியூயார்க்கில் இவரது பாதங்கள் படாத அரங்குகளே இல்லை என்று சொல்லும் அளவில் இவர் புகழ் பெற்றிருந்தார்.

மனைவியுடன் சேர்ந்து பல தொலைக்காட்சி நடன நிகழ்ச்சிகளை நடத்தி புகழ் பெற்றதோடு, நடனக் கலையைப் பரப்புவதற்கென்றே படபிடிப்பு நிலையம் ஒன்றைத் தோற்றுவித்தார்.

அதன் வழியே பல நடனக் கலைஞர்களை உருவாக்கினார். அவர்கள் எல்லாம் உலகப் புகழோடு இன்றும் திகழ்கிறார்கள்.

இந்த உலகப்புகழ் பெற்ற நடனக் கலைஞர் இன்றுதான் (04.04.1895) பிறந்தார்.

□

## ஏப்ரல்-5 ஆன்டிசெப்டிக்

ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்பு விபத்து ஏற்பட்டாலே நோய் வந்துற்றாலோ பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்து முடித்த பிறகு நோய் தொற்று ஏற்பட்டு பலர் மரணம் அடைய வேண்டிய நிலையிருந்தது. இந்தக் கொடுமைக்கு முடிவுரையை எழுதியவர் டாக்டர் ஜோசப் லிஸ்டர் பிரபுதான்.

இவர்தான் அறுவை சிகிச்சையின்போதும், அதன் பின்னரும் நோய் தடுப்புக்காக ரசாயன முறையில் முதன் முறையாக 'ஆன்டி செப்டிக்கை' பயன்படுத்தினார்.

இந்த முறையை இவர் எந்த வகையில் கண்டறிந்தார்? ஒரு நாள், 'திராட்சை சாறு புளிப்பான மதுவாக மாறுவதற்கு காரணம், காற்றிலே கலந்துவரும் கிருமிகள்தான்' என்று லூயிபாஸ்டர் என்ற விஞ்ஞானி எழுதியதை கண்டார். இதன் அடிப்படையில்தான் அறுவை சிகிச்சையின்போது திறந்த புண்வழியாகக் கிருமிகள் உள்ளே சென்று வீக்கத்தை உருவாக்கி, நோயாளிகள் மரணத்தை தழுவ காரணமாகி விடுகின்றன என்பதை கண்டறிந்தார்.

இந்த 'ஆண்டிசெப்டிக்' சர்ஜரி என்ற புதிய முறையை முதன்முதலாக 1867-இல் அறுவை சிகிச்சையின் போது அறிமுகப்படுத்தினார், ஜோசப் லிஸ்டர் பிரபு.

கார்போலிக் அமில கரைசலை அறுவை சிகிச்சை செய்யும் போது இவர் பயன்படுத்தினார். இந்த கரைசல், நோய் தொற்று கிருமிகளை மட்டும் அழித்து, உடல் உறுப்புகளை பாதிக்காமல் காத்தது. அதன்பின் அறுவை சிகிச்சை அறைகளை பினாயில் மூலம் ஸ்பிரே செய்யும் முறையையும், இவர் கையாண்டார்.

இந்த உயிர்காக்கும் உன்னத மருத்துவத்தைக் கண்டறிந்த இம்மேதை இலண்டனிலுள்ள எஸ்ஸாக்ஸ் நகரில் இன்றுதான் (05-04-1872) பிறந்தார்.

❑

நீண்ட காலம் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்று இருந்த ஜெகஜீவன்ராமும் இன்று தான் (05-04-1908) பிறந்தார்.

❑

இந்தியாவின் முதல் பெண் நீதிபதியான அன்னை சாண்டியும் கேரளாவில் இன்றுதான் (05-04-1908) பிறந்தார்.

❑

## ஏப்ரல்-6 மாவீரன்

போர்க்களத்தில் இருந்து தப்பித்த ஒரு வீரன், தள்ளாடியபடியே ஒரு வீட்டு வாசலின் முன் மயங்கி வீழ்ந்தான். வீட்டில் இருந்த ஒரு வயதான பாட்டி அதைப் பார்த்து பதறியபடியே ஓடி வந்து அவன் முகத்தில் தண்ணீர் தெளித்து, எழுப்பி, அவன் கை பிடித்து வீட்டினுள் அழைத்துப் போனாள்.

பாட்டி, வீரனுடைய பசி மயக்கத்தைப் புரிந்து கொண்டு, அவனுக்குச் சுடச்சுட சோறு சமைத்து, இலையில் பரிமாறி, சோற்றின் மீது குழம்பையும் விட்டார். மிகுந்த பசியில் இருந்த அவ்வீரன், அவசர அவசரமாக சோற்றை அள்ள, பதறிப் போய், ஆ...ஊ...என்று கையை உதறினான். அதைக்கண்டு சிரித்துக் கொண்டே பாட்டி...

''என்னப்பா, எங்கள் மன்னர் சிவாஜி மாதிரியே நீயும் முட்டாள்தனமாக நடந்து கொள்கிறாயே...'' என்று பாட்டி சொன்னதும், வீரன் குழப்பத்தோடு, ''அப்படி அவர் என்ன முட்டாள்தனமாக நடந்து கொண்டார்?'' என்று கேட்டான், வீரன்.

அதற்கு பாட்டி, ''ஒரு பெரிய நாட்டைப் பிடிக்க வேண்டுமென்றால், முதலில் அந்நாட்டை சுற்றிலுமுள்ள எல்லா சிறிய நாடுகளையும் பிடித்துத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, அதன்பின் பெரிய நாட்டுடன் போர் தொடங்க வேண்டும். ஆனால், எங்கள் மன்னர், நேராக பெரிய நாட்டுடன் போரைத் தொடங்கி வெற்றியடைகின்ற திறமை இருந்தும், சுற்றியுள்ள மற்ற நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து பின்னாலிருந்து தாக்க, தடுமாறி தவித்துக் கொண்டு இருப்பதாக கேள்விப்பட்டேன். அதே மாதிரி நீயும் ஓரமாக இருக்கின்ற சோற்றில் கையை வைக்காமல், நடு சோற்றில் கையை வைத்து, சூட்டினால் தவிக்கிறாயே'' என்றார், பாட்டி.

உடனே, அவ்வீரன் பாட்டியின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினான்...

தீரமும், வீரமும் கொண்டு மராட்டியத்தை ஆண்டு வந்த மாவீரன் சிவாஜிதான், அந்த வீரன்.

இன்றுதான் அவன் (06-04-1627) பிறந்தான்.

❑

## ஏப்ரல்-7 மரணகீதம்

கப்ரியல் மிஸ்ட்ரால், அவரது பெற்றோருக்கு ஒரே மகளாகப் பிறந்தார். வளர்ந்து மூன்று வயது ஆகும் நிலையில் அவரது தந்தை மனைவியையும், மகளையும் ஆதரவற்ற நிலையில் தன்னந்தனியே தவிக்க விட்டு எங்கோ போய்விட்டார். தாயும், மகளும் சோதனைக் குளத்தில் வீழ்ந்தார்கள். அந்த நிலையில் சின்னஞ்சிறு குழந்தையான மிஸ்ட்ராலை அழைத்துக் கொண்டு மாண்டி கிராண்டி என்னும் நகரம் சென்று, குடியேறினார்.

இளமையில், மிஸ்ட்ராலின் கனவு... பள்ளி ஆசிரியராக வேண்டும் என்பதே - அதேபோல் பள்ளி ஆசிரியராகவும் ஆனார். அந்த வேளையில்தான் ரொமேலியோ புரேத்தா என்பவரை காதலித்தார். அவரும் காதலித்தார். காதல் திருமணம் வரை வந்தது. ஏனோ... திருமணம் திசைமாறிப் போனது. காதலனின் சோக முடிவால் மிஸ்ட்ரால் பைத்தியக்கார நிலைக்கு ஆளானார். கை கூடாத அந்தக் காதல் தோல்வியை அப்படியே கவிதையாக்கினார். அத்தொகுப்பிற்கு 'மரண கீதம்' என்றும் தலைப்பிட்டு வெளியிட்டார். அந்த நூல் இலக்கிய வட்டத்தால் வரவேற்கப்பட்டு புகழ் பெற்றது.

காதல் தோல்வியில் இருந்த இவருக்கு ஓர் உயர்நிலைப் பள்ளியில் பணி கிடைத்தது.... இந்த நிலையில் மீண்டும் ஒரு கவிஞருடன் காதல்...! அந்தக் காதலும் முறிந்து போனது. அதனால்... மனம் நொந்துபோனவர் இடம் மாறி பணி புரிந்தார்... பதவி உயர்வு கிடைத்ததால் சிறிது மனக் கவலையை மறந்தார்... இந்த நிலையில் மீண்டும் ஒரு பேராசிரியருடன் காதல் மலர்ந்தது. இக்காதலோடு, 'வெறுமை' என்னும் கவிதைத் தொகுப்பும் மலர்ந்தது. இக்கவிதைத் தொகுப்பில், தான் காதல் தோல்வியால் வடித்த கண்ணீரையும், இதயத்தில் விழுந்த கீறல்களையும், உணர்ச்சிகள் பட்ட உளைச்சல்களையும் கவிதைகளின் கருப்பொருளாக்கி விளைச்சல் செய்திருந்தார். இப்படி ஒரு சோகச் சித்திரத்தை இதுவரை எந்த ஒரு பெண் கவிஞரும் படைத்தது இல்லை என்ற முடிவிற்கு இலக்கிய மேதைகளும், புகழ்பெற்ற கவிஞர்களும் வந்தார்கள், வியந்து நின்றார்கள். இந்த நிலையில் உலகக் கவிஞர்கள் வரிசையில் வந்து நின்ற மிஸ்ட்ராலுக்கு 1945-இல் நோபல் பரிசும் கிடைத்தது.

இந்தப் பாட்டுப் பறவை தென் அமெரிக்கா - சிலி நாட்டில் ஒரு சிறிய கிராமத்தில் இன்றுதான் (07-04-1889) பிறந்தார்.

## ஏப்ரல்-8 சின்னமேரியே

திரைப்பட நடிகை மேரிபிக் போர்டு, கனடா நாட்டைச் சேர்ந்தவர். இவர், நடிகை, நடிகர்களுக்காக ஒரு அமைப்பைத் தோற்றுவித்து, அதற்கு இவரே தலைவராகவும் இருந்தார்.

இந்த நடிகையின் ரசிகர்கள், 'தங்க நிற குழல் உள்ளவளே', அமெரிக்காவின் இனிய இதயமே', 'சின்ன மேரியே' என்று செல்லமாக அழைப்பார்களாம்.

ஹாலிவுட்டில், இந்த கனடா நாட்டு நடிகையே முன்னோடியாகத் திரை உலகில் திகழ்ந்தார். திரைப்பட வரலாற்றில் இவரின் புகழ் போகாத நாடுகளே இல்லை என்ற நிலையில் உச்சத்தில் இருந்தார். மவுனத் திரைப்பட காலத்திலேயே இவரது பெயரை மக்கள் உச்சரித்தனர்.

ஹாலிவுட் பட உலகம் வளர்ச்சி பெறும் எண்ணத்தில் இவரே தயாரிப்பாளராகவும் இருந்து செம்மையாக திரை உலகம் முன்னேற பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

இவரது பெற்றோர் ஐரிஷ் நாட்டையும், பிரிட்டன் நாட்டையும் சேர்ந்த கலப்பு மணத் தம்பதிகள். தந்தை பல்வேறு தொழில்களை செய்து வந்தவர். சிறந்த குடிகாரர். தாய், தையல் வேலை செய்து வந்தார். கணவர் 'குடி' மகனாக இருந்ததால் அவரைப் பிரிந்து தனித்து வாழ வேண்டிய சூழ்நிலைக்கு ஆட்பட்டார்.

உலகப் புகழ்பெற்ற மேரியின் இளமைக் காலம் மிகவும் வறுமைப்பட்ட ஒன்றாகும். பெற்றோர் சரி இல்லாததால், இவர் வீட்டை விட்டு வெளியே ஊர் ஊராக வேலை தேடி அலைந்தார்.

அந்த வேளையில்தான் இவரது அழகும், இளமையும் இவருக்கு திரைப்பட உலகில் கதவைத் திறந்து வைத்தது. இவரது சிரிப்பும், நளினமான நடிப்பும், துடிப்பான போக்கும் இவரை திரை உலகில் புகழ் பெற செய்தது. இவரது முதல் படம் 'டெஸ் ஆஃப்த ஸ்ட்ராம் கன்றி - (1914)

இந்த நடிகை கனடாவில் இன்றுதான் (08.04.1892) பிறந்தார்.

❐

நார்வே நாட்டுப் பனிச்சறுக்கு வீராங்கனையும், அமெரிக்காவின் புகழ்பெற்ற நடிகையுமான ஸோன்ஜா ஹென்னி என்பவரும் இன்றுதான் (08.04.1912) பிறந்தார்.

❐

## ஏப்ரல்-9 அரிராம்சேட்

இருபத்தொன்பது ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து, பல உலக நாடுகள் வரை புகழ் பரப்பி, 'கொடை வள்ளல்' என்ற புகழ்ப்பெற்ற ஒரு தமிழர், நெல்லை மாவட்டம் முக்கூடல் என்ற ஊரில் வாழ்ந்திருக்கிறார். அவர்தான் அரிராம்சேட். அரிராம் சேட் தமிழர்தானா? ஆம். அவர் ஒரு தமிழர். 'சேட்' என்று மார்வாடி பெயர் அவர் பெயரோடு எப்படி வந்து ஒட்டிக் கொண்டது தெரியுமா?

முக்கூடலைச் சேர்ந்த சொக்கலிங்கம் என்பவர் தன் சிறுவயதிலேயே மும்பை சென்று, அங்கு பீடி சுற்றும் தொழிலில் சிறந்து விளங்கினார். பிறகு தனது சொந்த ஊரான முக்கூடலுக்கு திரும்பியபோது தன்னை ஆளாக்கிய 'ராம்சேட்' என்பவருக்கு மரியாதை செய்யும் பொருட்டு தன் பெயருடன் 'ராம்சேட்' என்பதை இணைத்துக் கொண்டார்.

'அரிராம்சேட்' அவர்கள் முக்கூடல் மக்களின் நலனில் அதிக அக்கறை கொண்டவர். கணக்கே இல்லாமல் அள்ளித் தருவார். ஊர்ப்பிள்ளைகள் படித்து முன்னேற வேண்டும் என்பதற்காக ஆரம்பப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கி, பதினோராம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவர் களின் கல்விச் செலவையும் தானே ஏற்றுக் கொண்டார். சொக்கலால் ஞாபகார்த்த வாசக சாலை, சொக்கலால் சங்கீத சபா ஆகியவற்றை ஆரம்பித்து மக்களின் பொது அறிவையும், இசையறிவையும் வளர்த்து வந்தார்.

மேலும், எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பெரிய இலவச மருத்துவமனையையும், சொக்கலால் மருத்துவமனை யையும் நிறுவினார். இரண்டு மூட்டை நெல் முப்பது ரூபாயாக இருந்த காலத்திலேயே பாளையங்கோட்டை ஜான்ஸ் கல்லூரிக்கு 25 ஆயிரம் ரூபாய், பாவூர் சத்திரம் உயர்நிலைப் பள்ளிக்கு முப்பதாயிரம் ரூபாய், மாநில போலீஸ்காரர்களின் குழந்தைகள் கல்விநிதிக்காக பதினைந்தாயிரம் ரூபாய் என்று அந்தக் காலத்திலேயே அள்ளிக் கொடுத்து கல்விப் பணி செய்தார்.

இந்த கொடை வள்ளல் முக்கூடலில் இன்றுதான் **(09-04-1934)** பிறந்தார்.

## ஏப்ரல்-10 நீராவிக் கப்பலின் தந்தை

மெத்திவ் பெரி. இவர் கடற்படை அதிகாரி.

மேற்கிந்திய நாடுகள் ஜப்பானோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள காரணமாக இருந்தவர் மெத்திவ் பெரியே.

மத்திய தரைக்கடல் நாடுகளிலுள்ள பல கப்பல் படைகளில் பணியாற்றியுள்ளார்.

அமெரிக்கக் கப்பல்துறை பயிற்சிப் பள்ளியில் ஆசிரியராக இருந்து பலரை உருவாக்கினார்.

நீராவிக் கப்பலின் தந்தை என்று இவரைப் போற்று கிறார்கள்.

அமெரிக்காவில் முதன்முதலில் கப்பல் படையில் பணியாற்றுகின்ற பொறியாளர்களுக்கெல்லாம், இவரே ஒரு பயிற்சிப் பள்ளியைத் தோற்றுவித்து பாடம் நடத்தியிருக்கிறார்.

ஒருமுறை ஜப்பானில் இருந்து இவர் திரும்பி வந்தபோது, தைவான் நாட்டில் தங்கினார்.

அப்போது அந்த நாட்டில் நிலக்கரி இருப்பதைக் கண்டறிந்து முதலில் சொன்னவர் இவரே.

கப்பல் படையில் இவர் தந்தையும் கேப்டனாக இருந்தார்.

அக்காலத்தில் மேற்கு இந்தியத் தீவுகளில் கடற்கொள்ளை, வியாபாரம் போன்றவைகள் நடந்து வந்தன.

இவற்றைத் தடுப்பதற்கு, இவரையே அனுப்பி வைத்தனர். இவரும் சென்று தடுத்து நிறுத்தினார்.

ப்ளோரிட கெஸ் என்ற ஒரு பகுதி, கியூபா நாட்டைச் சேர்ந்தது.

இது அமெரிக்காவைச் சேர்ந்தது என்று அங்கு சென்று கொடியை நாட்டி, தன் நாட்டோடு இணைய பாடுபட்டவர் இவரே.

இந்த அதிகாரி ராக்கிபுருக் என்ற நாட்டில் இன்றுதான் (10.04.1794) பிறந்தார்.

❐

## ஏப்ரல்-11 பயம்...

அவன், அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றாலும், எப்போதும் ஏற்றத்தாழ்வு இன்றி எல்லோரிடமும் பழகும் இயல்பு கொண்டிருந்தான். அன்றும் வழக்கம்போல் ஊர் பிள்ளைகளோடு தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது அங்கிருந்த மரம் ஒன்றில் ஒரு பாம்பு கிளையில் இருந்தது. அதைக்கண்ட அவன், 'இதன் இருப்பிடம் இதுவல்லவே, எதற்கோ பயந்து இங்கே ஒளிந்திருக்கிறது. இதை நாம் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பரபரவென்று விளையாடுவதை விட்டு' மரத்தில் ஏறினான்.

அதைக்கண்ட அவன் நண்பர்கள், "டே அங்கே பாம்பு இருக்குப் போகாதே" என்று கூக்குரலிட்டனர். அவன் காதில் ஏதும் விழவில்லை. எதைப் பற்றியும் கவலையும் படவில்லை. அவன் மரத்தில் ஏறிக் கொண்டிருந்தான். அங்கே கிளையில் இருந்த பாம்பின் வாளைப் பிடித்தான். அப்படியே அதை எடுத்து கீழே இறங்கினான். அதைக்கண்ட நண்பர்கள் பயத்தோடு தூர ஓடிப் போனார்கள். பாம்போடு கீழே இறங்கிய அவன், அருகில் இருந்த அடர்ந்த புதரை நோக்கிச் சென்றான். அங்கே அந்தப் பாம்பை விட்டான். அது புதருக்குள் ஓடி மறைந்தது. அதைக் கண்டு அவன் மகிழ்ச்சி யடைந்தான்.

அந்த நிலையில் அவனது நண்பர்கள் அங்கே வந்தார்கள். "ஏய், உனக்கு பயமே இல்லையா...?" ஒருவன் கேட்டான்.

"பயம் என்றால் என்ன..? நான் அறிந்த வரை பிறருக்கு தீமை செய்யும் போதுதான் பயப்பட வேண்டும். நன்மை செய்யும்போது பயப்பட வேண்டியது இல்லை. நான் அந்தப் பாம்பிற்கு நன்மை செய்தேன். அது நிலத்திலே வாழ வேண்டியது. ஏனோ, அது மரத்திலே ஏறிவிட்டது. அதை அதற்குரிய இடத்திலே சேர்த்துள்ளேன். அவ்வளவுதான்..." என்றான்.

அவனது அறிவு வளத்தைக் கண்டு நண்பர்கள் வியப்போடு நின்று இருந்தார்கள். அவர்களின் வியப்புக்குரிய நண்பனாக இருந்த அந்தச் சிறுவன் யார் தெரியுமா...? '2600 ஆண்டுகளுக்கு முன்பே உயிரினம் எதையும் கொல்லாதே. எவ்வுயிருக்கும் துன்பம் செய்யாதே' என்று சொன்ன வர்த்தமானவர், என்ற மகாவீரர்தான் அந்தச் சிறுவன்.

இவர் இன்றுதான் க்ஷத்திரிய குண்ட கிராமத்தில் **(11-04-599 கி.மு)** பிறந்தார். ❐

## ஏப்ரல்-12 கரந்தைத் தமிழ்ச்சங்கம்

நாவலர் நாட்டார் அவர்கள் தமிழ்ப் பெரும் புலமையிலே, தாய்மொழிப் பற்றிலே தலைசிறந்து விளங்கியவர். தமது பேச்சாலும், எழுத்தாலும், பணியாலும், தமிழில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியவர். இளமை முதல் தம் வாழ்நாள் இறுதிவரையில் தமிழ் வளர்ச்சியில் தளராது உழைத்தவர்.

ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தமது ஆறாவது வயதில் திண்ணைப் பள்ளியில் கல்வி பயின்றார்; அதன் பின்னர் அவர் ஊரில் இருந்த தொடக்கப் பள்ளியில் சேர்ந்து பயின்றார்.

பதினாறு வயதிற்குள் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்த நாட்டார் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து படிக்கையிலேயே தனியாகப் படித்துத் தேர்வு எழுதி தமிழ்ப் பண்டிதராக முதல் நிலையில் தேர்வு பெற்றார்; விருதும் பெற்றார்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள பிஷப் கல்லூரியிலும் - கோயம்புத்தூரிலுள்ள தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளியிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பணி புரிந்தார்.

தஞ்சாவூர் நகரில் ஒரு பகுதி கருந்திட்டக்குடி. இன்று 'கரந்தை' என்று வழங்கப் பெறுகின்றது. அங்குத் தமிழ்ப் பற்றுடைய அறிஞர்களால் 'தமிழ்ச்சங்கம்' ஒன்று நிறுவப் பெற்றது. அதற்குக் 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' என்பது பெயர். அச்சங்கக் கல்லூரியில் புலவர் தேர்வுக்கு மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர். பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும், தமிழ்த் தொண்டு ஆற்றும் நோக்குடன் அச்சங்கத்தின் வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டார்; அக்கல்லூரித் தலைவராக இருந்து பணிபுரிந்தார்.

பிறமொழிக் கலப்பின்றித் தூய தமிழில் எழுத வேண்டும், பேச வேண்டும் என்பதில் அக்கறை காட்டினார். அதனால், 'வழக்கறிஞர்', 'நிலக்கிழார்', 'கண்காணிப்பாளர்', 'பொறியாளர்', 'கல்லூரி', 'திருமண அழைப்பு' போன்ற வடமொழிச் சொற்களுக்கு நாட்டாரே முதன் முதலில் தமிழ்ப்படுத்தி, ஆட்சிக்கும் கொண்டு வந்தார்.

அகநானூறு, மணிமேகலை போன்ற பல நூல்களுக்கு உரை எழுதினார்; பதிப்பும் செய்தார். அவரது நாவன்மையைப் பாராட்டி, சென்னை மாநிலத்தமிழர் மாநாட்டில், 1940-இல் அவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கப்பட்டது.

நாளும் தமிழுக்குழைத்த இத்தலை மகன் தஞ்சை - நடுக்காவிரி என்னும் சிற்றூரில் இன்றுதான் (12-04-1884) பிறந்தார். ❑

## ஏப்ரல்-13 'திரைலாஜி'

ஐரிஷ் மொழியிலும், பிரெஞ்சு, ஆங்கில மொழியிலும் தேர்ச்சிப் பெற்றவராக இருந்தார், சாமுவெல் பெக்கட். டப்ளின் டிரினிட்டி கல்லூரியில் பி.ஏ.பட்டம் பெற்றார். 1928-இல் தனது இருபத்திரண்டாவது வயதில் பாரிசுக்குச் சென்று கல்லூரியொன்றில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். அந்தவேளையில்தான் புகழ்பெற்ற ஐரிஷ் நாவலாசிரியர் களான ஜேம்ஸ் ஜாய்ஸைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பே எழுத்து ஆர்வம் அவருள் தோன்ற காரணமாயிற்று.

1933-இல் பெக்கட் இலண்டனில் குடியேறினார். அங்கு தான் அவரது முதல் சிறுகதைத் தொகுப்பு, 'மோர்கிக்ஸ் தேன் பிரிக்ஸ்' என்ற தலைப்பில் வெளிவந்தது. 1930-இல் 'ஓரோஸ்கோப்' என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பு வெளிவந்தது. இருந்தும் சிறுகதைத் தொகுப்பே பெக்கட்டின் பெயரை இலண்டன் வாசகர்களுக்கு கொண்டு சென்றது. 1937-இல் பெக்கட் பாரிசுக்குச் சென்றார். அப்போது இரண்டாவது உலகப் போர் தொடங்கிய காலம். அவருக்கு தலைமறைவு வாழ்வே. அந்தவேளையில் 'மர்ஃபி' என்ற நாவல் வெளிவந்தது. விற்பனையில் வெற்றிபெறவில்லை என்றாலும், ஜேம்ஸ் ஜாய்ஸ் போன்ற புகழ்பெற்ற நாவலாசிரியர்களின் பாராட்டுதலைப் பெற்றுத் தந்தது. அதனால் பெக்கட் ஒரு சிறந்த நாவலாசிரியர் என்ற அங்கீகாரம் பெற்றார். 1951-இல் 'மொல்லாய்' அதே ஆண்டில் வெளிவந்த 'மலோன் மியர்ட்', 'லா இன்னாமபிலா' ஆகிய மூன்று படைப்புகளும் பிரெஞ்சில் இயற்றப்பட்டது. இந்த மூன்று தொகுப்புகளும் இணைந்து 'திரைலாஜி' என்ற பெயரில் 1955-இல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு, அவருக்குப் புகழைச் சேர்த்தது.

நாடகத்துறையிலும் பெக்கட் கால்பதித்து, 'அடெண் டெண்ட் காடாட்','இறுதிப்போட்டி' என்பதோடு பல வானொலி நாடகங்களையும் எழுதினார். 1969-ல் நோபல் பரிசையும் பெற்றார்.

கவிஞராக, எழுத்தாளராக, நாடக ஆசிரியராக புகழ்பெற்ற இவர், அயர்லாந்தின் தலைநகரான டப்ளினுக்கு அருகில் இன்றுதான் (13-04-1906) பிறந்தார்.

## ஏப்ரல்-14 பிச்சை

ஆங்கிலேயர் ஆட்சியின்போது மும்பையின் கவர்னராக இருந்தவர் வில்சன் என்பவர். தான் சந்தித்த ஒரு மேதையின் உழைப்பிலும், அறிவிலும் நம்பிக்கை கொண்டு மும்பை சட்டமேலவை உறுப்பினராக நியமித்தார். ஒடுக்கப்பட்ட மக்கள் அடைந்து வரும் இன்னல்களை அடக்கிக் கொண்டே போனார், அந்த மேதை. கடமையைச் செய்யத் தவறிய அரசரையும் கவர்னர் வில்சனையும் தாக்கிப் பேசினார்.

அம்மேதையை கவர்னர் அழைத்து, ‘‘உறுப்பினர் பதவி உங்களுக்கு நான் போட்ட பிச்சை. நீங்கள் இப்படி தாக்கிப் பேசுகிறிர்களே...?’’ என்று கேட்டார். ‘‘இந்த நல்ல பழக்கம் கூட நீங்கள் எங்களிடம் கற்றுக் கொண்டதுதான். உங்களுக்குப் பிச்சை எடுத்துத்தான் பழக்கம், கொடுத்துப் பழக்கம் இல்லை’’ என்றார் அம்மேதை சூடாக.

‘‘பதவி என்னால் வழங்கப்பட்டது என்பதை மறந்து நீங்கள் என்னையே தாக்கிப் பேசுவதா? என்னால் பொறுத்துக் கொள்ள இயலவில்லையே...’’ என்றார், கவர்னர்.

‘‘உண்மையைத் தாங்கிக் கொள்ள உங்கள் உடலில் வலிமை இல்லை என்றே எண்ணுகிறேன். வேண்டுமெனின் நீங்கள் கொடுத்த பதவியை எடுத்துக் கொள்ளுங்கள். பதவியில் அமர்ந்து கடமையைச் செய்யாதவனை நான் மனிதன் என்று மதிப்பதே இல்லை’’ என்றார், அம்மேதை.

‘‘இந்திய மண்ணில் பிறந்த பலருக்கு பதவி அளித்து உள்ளேன். அவர்கள் அடக்கத்துடன் இருந்தனர். ஆனால் நீங்கள் மட்டும்...’’ என்றார் கவர்னர். அதற்கு அம்மேதையோ, ‘‘அவர்கள் பதவியின் மீது பற்றுடையவர்கள். நான் இந்தியாவின் மீது பற்றுடையவன். அதனால்தான் நீங்கள் செய்ய மறந்ததை என்னால் தட்டிக் கேட்காமல் இருக்க முடியவில்லை. உங்களுக்கு ஜால்ரா போடுவதற்குத்தான் இந்தப் பதவியை நீங்கள் கொடுத்தீர்கள் என்றால், இப்பொழுதே இந்தப் பதவியை விட்டு விலகுகிறேன்...’’ என்று காகிதத்தை எடுத்து விலகல் கடிதத்தை எழுத முனைந்தபோது, கவர்னர் வில்சன் அம்மேதையைத் தடுத்துவிட்டார். அந்த மேதைதான் ஒடுக்கப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவரும், இந்திய அரசியல் சட்டத்தின் சிற்பியுமான மாமேதை பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கார்.

இந்த மேதை இன்றுதான் **(14-04-1890)** பிறந்தார்.

❑

## ஏப்ரல்-15 மோனாலிசா

லியானார்டோ டாவின்சி, உலகப்புகழ்பெற்ற ஓவியர் என்பதோடு கூட, நல்ல கவிஞர், சிறந்த கதையாசிரியர், நகைச்சுவையாகவும், சிலேடையாகவும் பேசத் தெரிந்தவர்.

நல்ல அழகோடும் மிடுக்கோடும் எப்போதும் இருப்பவர். டாவின்சி முப்பது வயதில் மிலான் நகர மன்னரின் அரச சபையில், நகர வடிவமைப்புக் கலைஞராகச் சேர்ந்தார். அங்கே பிறர் போற்ற பணியாற்றினார்.

இவருக்கு ஓவியம் தீட்டுவதில் அதிக ஈடுபாடு இருந்தது. அவர் கையில் எப்போதும் ஒரு நோட்டுப் புத்தகம் இடம் பிடித்திருக்கும். அதில் தான் அவ்வப்போது காண நேரும் மனிதர்களின் வித்தியாசமான முகங்களை அவசர அவசரமாக ஒரு சில கோடுகள் மூலம் குறித்து வைத்துக் கொள்வார்.

அவர் ஒரு நல்ல ஓவியர் என்பதோடு, சிறந்த விஞ்ஞானி, இயந்திர இயல் பற்றி அறிந்தவர், சிறந்த கட்டட வடிவமைப் பாளரும்கூட. அதனால், கட்டடங்கள், பொறியியல் கருவிகள், அணைக்கட்டுகள், பறவைகள், தாவரங்கள், மனிதர்களின் உடல் உறுப்புகள் - இப்படி பல்வேறுபட்டவைகளை தான் வாழ்ந்த மிலான், ரோம், பாரிஸ் நகரங்களில் வரைந்தார்.

இன்றைக்கு நான்கு நூற்றாண்டுளுக்கு முன்னால் பிறந்த இவர், வானில் பறப்பதைப்பற்றி முதன் முதலில் விஞ்ஞான முறையில் அணுகியவர்.

அதை நினைவு கூறும் வண்ணம் ரோம் சர்வதேச விமான நிலையம் அவர் பெயரைப் பெற்றுள்ளது.

உலகிலேயே மிக விலையுயர்ந்த ஓவியம், டாவின்ஸி வரைந்த மோனாலிசா ஓவியம் என்பதை அனைவரும் அறிவர். இதன் இன்றைய மதிப்பு பத்து கோடி டாலர்கள். எந்த ஓவியமும் இந்த விலையில் இல்லை.

திருமணமே செய்து கொள்ளாது வாழ்ந்த இவர் இத்தாலியிலுள்ள வின்சி என்ற கிராமத்தில் இன்றுதான் **(15-04-1452)** பிறந்தார்.

❒

## ஏப்ரல்-16 பிச்சையெடுத்து

உலகம் போற்றும் சார்லி சாப்ளின் இளமையில் கண்ட கனவு என்ன தெரியுமா? உலகம் போற்றும் நடிகனாக வேண்டும் என்பதுதான். சார்லி சாப்ளின் என்றால் நமக்கு நினைவுக்கு வருவது அவரது தொப்பியும், ஹிட்லரின் மீசையும், ஸ்டிக்குமான அடையாளத்தை தவிர, இறந்து போனாலும் நம்மை இன்னும் சிரிக்க வைக்கும் அந்த நடிகமேதையின் சிரிப்பே ஓர் அடையாளம். அந்த அடையாளங்களைப் பெற அவர் பெற்ற துன்பங்கள், போராட்டங்கள் கொஞ்சமா, நஞ்சமா...?

இளம் வயதில் சார்லி சாப்ளின் இலண்டன் மாநகரில் வீதிக்கு வீதி கூத்தாடி, பிச்சை எடுத்து வாழ்வை நடத்திடியதுதான் அவரது இளமை வரலாறு. எட்டு வயதில் நாடகத்தில் அரிதார பூச்சு, போராட்டம். **1913**-இல் ஊமைப்படமான முதல் படம் 'மேக்கிங் எ லிவிங்'ல் வில்லன் வேடம். ஆனால் படம் தோல்வி. சார்லி சரிந்து போகவில்லை. கலங்கி நிற்கவில்லை. கனவுகள் கால் முளைத்து ஓடின. கனவுகளுக்கான சிந்தனைகள் பூத்தன. உழைப்பு, உழைப்பு; கடுமையான உழைப்பு. அதே ஆண்டில் அவரின் உழைப்புக்கு வெளிச்சமும் கிடைத்தது.

கதை, இயக்கம், நடிப்பு என ஒரே ஆண்டில் 35 படங்கள். மூன்று ஆண்டு இடைவெளியில் உலகம் முழுதும் இவரின் ஆற்றலின் பேச்சு; புகழ்; பரிசுகள்; பாராட்டுகள்.

ஒரு பிச்சைக்கார கூத்தாடி தன் கனவை கலைத்து இருந்தால், சிதைத்திருந்தால் ஏராளமான செல்வத்தோடும், புகழோடும் தனியே விமானம் வாங்கி இந்த உலகிலே உலா வந்திருக்க முடியுமா?

தன்னம்பிக்கையாளனுக்கு வறுமை கூட கனவுகளை உருக்குலைக்காது; உடைக்காது. தன்னம்பிக்கையாளன் பிரச்சனைகளை பிய்த்தெறிந்து போட்டுவிடுவான்; கனவு எனும் ஏணியில் கால் பதித்து ஏறிவிடுவான். இதுவே உண்மை.

இந்த மாபெரும் நகைச்சுவை நடிகரான சார்லி சாப்ளின் இலண்டனிலுள்ள கம்பர்வெல் எனுமிடத்தில் இன்றுதான் **(16-04-1889)** பிறந்தார்.

❐

## ஏப்ரல்-17 மாணிக்கனார்

தமிழில் பிற மொழிக்கலப்போ, எழுத்துச் சீர்திருத்தமோ கூடாது என்று, தம் வாழ்நாள் முழுதும் விடாப்பிடியாக எதிர்த்து நின்றவர், மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார். தனித் தமிழியக்கத்திற்கு வித்திட்டவர் மறைமலையடிகள்; அதை செழுமையாய் வளர்த்தவர் தேவநேய பாவாணர். அதைத் தழைக்கச் செய்தவர் மூதறிஞர் மாணிக்கனார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும் பணியாற்றியதோடு, மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியையும் பெற்றார். பல்வேறு தமிழ் இயக்கங்களில் பங்கு வகித்தார்.

இளமையிலேயே பெற்றோரை இழந்த இவர், பாட்டனாரால் வளர்க்கப்பட்டார். திண்ணைப் பள்ளியில் படிக்க வைக்கப்பட்டார். பின்னர் பர்மா சென்று வட்டிக் கடையில் பணிபுரிந்தார். பின்னர், நாடு திரும்பி, தமது முயற்சியினாலேயே தமிழ் மீது கொண்டிருந்த பற்றால் தமிழறிவைப் பெருக்கிக் கொண்டார்.

புலவர் வகுப்பில் சேர்ந்து முதன்மையாகத் தேர்ச்சிப் பெற்றார். பின்னர் பணிபுரிந்து கொண்டே பி.ஓ.எல்; எம்.ஏ. பட்டங்கள் பெற்றார். தமிழில் வினைச் சொற்கள் பற்றி ஆய்வு செய்து எம்.ஓ.எல். பட்டமும், 'தமிழில் அகத்திணைக் கொள்கைகள்' என்ற தலைப்பில் ஆய்வும் செய்து பி.எச்.டி. பட்டமும் பெற்றார்.

'ஒவ்வொருவரும், தத்தம் தாய்மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் பள்ளிகளில் கற்றல் வேண்டும்' என்னும் கொள்கையின் அடிப்படையில் 'தமிழ் வழிக் கல்வி இயக்கம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். உறங்கும் நேரம் தவிர ஏனைய நேரங்களில் எல்லாம், தமிழ் பற்றியும், தமிழ் நூல்கள் பற்றியுமே சிந்தித்த சிந்தனையாளர் மாணிக்கனார்.

தமிழில் 18-நூல்களும், ஆங்கிலத்தில் நான்கு நூல்களும், நான்கு நாடக நூல்களும் எழுதினார்.

இம் மூதறிஞர் புதுக்கோட்டை - மேலைச்சிவபுரியில் இன்றுதான் **(17-04-1917)** பிறந்தார்.

## ஏப்ரல்-18 கொலை வழக்கு

கிளாரன்ஸ் டெரோ, இவர் சிறந்த வழக்கறிஞர். இவர், அமெரிக்க சிவில் உரிமைச் சங்கத்தில் முக்கிய பங்கு வகித்து வந்தார்.

பாவிபிராங்ஸ் என்ற 14-வதுச் சிறுவனை அதே வயது கொண்ட இரண்டு சிறுவர்கள் கொலை செய்துவிடுகிறார்கள்.

இந்த வழக்கில் திறமையாக வாதாடி இரண்டு சிறுவர் களையும் காப்பாற்றிவிடுகிறார்.

இவருக்கு இந்த வழக்கில் எதிராக வாதிட்டவர் அரசு தரப்பு வக்கில். அமெரிக்காவில் பெரும் புகழ் பெற்றவர்.

மனிதநேயம் மிக்கவராக இருந்த டெரோ, இரண்டு சிறுவர்களும் மரண தண்டனையில் மரித்துப்போய் விடக் கூடாது என்ற எண்ணத்திலேயே, புகழ்பெற்ற அரசு வக்கிலையே எதிர்த்து - பல துன்பங்களுக்கு இடையே வெற்றி பெற்று அச்சிறுவர்களைக் காப்பாற்றுகிறார்.

இவர் தன் வழக்கறிஞர் தொழிலை முதன் முதலில் எங்ஸ்டவுன் ஒகியோ என்ற இடத்திலிருந்து தொடங்கினார்.

சிகாகோ நகரிலுள்ள ரயில்வே கம்பெனியின் வழக்குகளை நடத்தக்கூடிய வழக்கறிஞராக பின் இருந்தார்.

இந்தக் காலகட்டத்தில்தான் பில் ஹெவுட் என்ற தொழிலாளர் தலைவர், கவர்னர் ஒருவர் கொலை வழக்கில் சிக்க, அந்த வழக்கை ஏற்று நடத்தி, அவரை விடுவிக்கிறார். இந்த செயலால், தொழிலாளர்கள் மத்தியில் இவருக்கு பெரும்புகழ் ஏற்பட்டது.

இந்த வழக்கறிஞர் அமெரிக்காவில் இன்றுதான் (18.04.1857) பிறந்தார்.

❒

போப் இரண்டாம் ஜான்பால் என்பவரும் இன்றுதான் (18.04.1920) பிறந்தார்.

❒

## ஏப்ரல்-19 செக் புத்தகம்

ஜோஸ் எச்சகாரி, மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபோது இவரது மாட்ரிக் நகரை விட்டு - மூர்ஸியாவுக்குக் குடிபெயர்ந்தார். இவர் தந்தை அங்கே பேராசிரியராகப் பணியாற்றினார். இவ்வூரில்தான் இவர் கல்வி கற்றார். இளம் வயதிலேயே கிரேக்கம், லத்தின் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். அவர் தமது பதினைந்தாவது வயதில் விஞ்ஞானத் துறையில் பட்டம் பெற்றார். பின் கணிதத்திலும் பட்டம் பெற்றார்.

பின் அதே கல்லூரியில் கணிதப் பேராசிரியராகவும் பணியாற்றினார். அத்துறையில் ஆய்வுகளில் ஈடுபட்டு ஸ்பெயின் நாட்டிலேயே சிறந்த கணிதமேதையாகப் பெயர் பெற்றார். கணிதம், அறிவியல் ஆகிய துறைகளில் அவர் சிறந்த விளங்கிய போதிலும், நாடகத் துறையில் அவரது நாட்டம் சென்றது. ஐரோப்பிய இலக்கியங்களை கற்றுத் தேர்ந்தார்.

இவரது தம்பி நாடகம் எழுதி நடிப்பதைக் கண்ட எச்சகாரி, தானும் நாடகம் எழுத விரும்பினார். இருந்தாலும் அன்றையச் சூழலில் அது முடியாது போயிற்று. அரசியலில் ஈடுபட்ட அவருக்கு, ஸ்பெயின் நாட்டின் நிதியமைச்சர் பதவி கிடைத்தது. அப்பதவியில் இருந்தபோது 'ஸ்பானிஷ் வங்கியை' நிறுவி வரலாற்றில் நிலைத்தார். ஸ்பெயினில் புரட்சி வரவே, தலைமறைவாக பாரிஸுக்குச் சென்றார்.

இந்த தலைமறைவு வாழ்க்கையின் போதுதான் அவர் நாடகத் துறையில் சிந்தையைப் பதித்தார். மீண்டும் தாய்நாடு திரும்பியதும் 42-வது வயதில் முதல் நாடகமாக 'எல்லிப்ரோ டாலொனேரிய' (செக் புத்தகம்) என்ற நாடகத்தை அரங் கேற்றினார். அதுமுதல் நாடகங்களை எழுதத் தொடங்கினார்.

எழுபது நாடகங்களை எழுதி ஸ்பானிஷ் நாடக ரசிகர்களுக்கு கண்ணிற்கும், கருத்திற்கும் விருந்து படைத்தார். அவரை உலகப் புகழுக்கு உயர்த்திய நாடகம் 'தி கிரேட் கலியாட்டோ'வாகும். இந்நாடகம் 1881-இல் வெளிவந்து அதே ஆண்டில் அரங் கேறவும் செய்தது.

தலைசிறந்த இந்த நாடக ஆசிரியர் ஸ்பெயின் தலைநகரான மாட்ரிட்டில் இன்றுதான் (19.04.1832) பிறந்தார்.

## ஏப்ரல்-20 ஒரே மதிப்புதான்.

இஸ்லாமிய மதத்தைத் தோற்றுவித்தவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். இவரது வாழ்வில்...

நாயகம் அவர்கள் தம் தோழர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த நேரம்...

தெருவழியாகச் சிலர் ஒரு சவத்தை எடுத்துச் சென்று கொண்டிருந்தார்கள். அதைக் கண்டதுமே மரியாதை செய்யும் முறையில் எழுந்து நிற்கலானார்.

உடனிருந்த தோழர்களுக்கு இது வியப்பை அளித்தது. அவர்கள் நபி பெருமானாரிடம், ''பெருந்தகையே! இது ஒரு யூதன் பிரேதம் அல்லவா? இதற்கா தாங்கள் மரியாதை செய்கிறீர்கள்?'' என வினவினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) தம் தோழர்களிடம், ''அதனால் என்ன? அவருக்கும் ஆத்மா இருக்கிறது'' என்றார்.

''எந்த உயிரையும் இழிவாக எண்ணக்கூடாது. உலகில் தோன்றியுள்ள உயிர்கள் அனைத்தும் ஒரே மதிப்பு கொண்டவைதாம்'' என்றார், பெருமானார்.

இந்த நல்லுள்ளம் கொண்ட நாயகன் இன்றுதான் **(20.04.570)** பிறந்தார்.

❐

உலக மக்களால் அதிகம் வெறுக்கப்பட்டவரும், நாசிசத்தைத் தோற்றுவித்து யூதர்களை வெறுத்ததுடன் அவர்களைக் கொன்று குவித்தவருமான ஜெர்மானிய சர்வாதிகாரி அடால்ஃப் ஹிட்லரும் இன்றுதான் **(20.04.1889)** பிறந்தார்.

❐

அமெரிக்காவின் புகழ்பெற்ற சிற்பக்கலைஞர் பனியல் சி.பிரெஞ்ச் என்பவரும் இன்றுதான் **(20.04.1850)** பிறந்தார்.

❐

## ஏப்ரல்-21 15-வயதிலேயே

கேத்தரின் என்பவள், ஜெர்மன் நாட்டின் இளவரசியாக இருந்தாள். இளவரசியாக இருக்கும் பெண்களுக்கு உயர் கல்வி கொடுப்பது என்பது அங்கே மரபாக இருந்தது.

அவ்வகையில் இவளுக்கும் பிரஞ்சு நாட்டு ஆசிரியரைக் கொண்டு கல்விக் கற்பிக்கப்பட்டது.

இவளுக்கும் புருசியா நாட்டு மன்னனுக்கும் திருமணம் ஆனது. அந்த வகையில் புருசியாவிற்கும், இரஷியாவிற்கும் நல்லுறவு ஏற்பட வாய்ப்பானது.

இந்தத் திருமண உறவே இரண்டு நாடுகளின் வலிமையைக் கொண்டு, ஆஸ்திரியாவை அடக்க வேண்டும் என்ற நோக்கில் நடந்தவைதான்.

கேத்தரின், மிகவும் விருப்பமுடன் இரஷிய மொழியைக் கற்கத் தொடங்கினாள்.

இம்மொழியை இவள் கற்றுக் கொண்ட காரணமே, அந்நாட்டு மக்களோடு நல்லிணக்கம் ஏற்படுத்திக் கொள்ளவே. அந்த வகையில் இரஷிய நாட்டு கலாச்சாரத்தை - மக்களின் மனநிலையை அப்படியே ஒரு நூலாக எழுதினாள். அந்த நூல், இரஷிய மக்களிடையே நல் மதிப்பையும், வரவேற்பையும் பெற்றது.

இவள் பதினைந்து வயதிலேயே நல்லறிவு முதிர்ச்சி பெற்றிருந்ததாலேயே, மனித மனங்களை ஆய்வு செய்து அவளால் இப்படி ஒரு நூலை எழுத முடிந்தது என்பதை இவளது வரலாறு நமக்குப் பேசிக் காட்டுகிறது.

இரஷிய மக்களிடம் இவள் கொண்டிருந்த ஆழ்ந்த நட்பையும், அன்பையும் புரிந்து கொள்ள முடியாத முட்டாளாக கணவன் இருந்ததால், இவளது மணவாழ்க்கை 13 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்காமல் மணமுறிவு ஏற்பட்டு விடுகிறது.

இந்த நிலையில், அவள் கலங்காமல் நாட்டு நடப்பு களையும், பிற நாட்டு நல்லறிஞர்களின் தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டு மக்கள் நேசராகவே வாழ்ந்து வந்தாள்.

இவள் ஜெர்மன் நாட்டில் இன்றுதான் **(21.04.1796)** பிறந்தாள்.

❒

## ஏப்ரல்-22 புத்துலக சிற்பி...

இரஷ்ய நாட்டின் ஜார் மன்னரின் கொடுங்கோன்மை ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்து, பின் இரஷ்யாவைப் பொதுவுடைமைப் பூங்காவாக மாற்றினார், லெனின்.

ஒருமுறை போர் முனையில் குண்டடிபட்டுக் கிடந்தார் லெனின். அவரது உயிரைக் காப்பாற்ற அரிய விலையுயர்ந்த மருந்து ஒன்றை அவருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டது. ஆனால், லெனின் அதை ஏற்க மறுத்துவிட்டார். ஓர் எளிய குடிமகனுக்கு இவ்வளவு உயர்ந்த மருந்து கிடைப்பது அரிது என்பதைத் தெரிந்துகொண்டு, அந்த மருந்தை உட்கொள்ள மறுத்துவிட்டார்.

அவரைப் புரிந்துகொண்ட அவரது துணைவியார், அந்த மருந்தை உணவில் கலந்து அவருக்குத் தெரியாமல் உண்ணக் கொடுத்துவிட்டார். உடல்நலம் பெற்றது... பின்னொரு நாள் அந்த உண்மை லெனினுக்குத் தெரிந்துவிட்டது.

ஒரு நாட்டின் தலைவரான தன் கட்டளையை மீறியதற்காக தம் மனைவிக்கு அவர் தண்டனை கிடைக்கச் செய்தார். தண்டனை வழங்கிய நீதிபதி நாட்டின் தலைவருடைய உயிரைக் காப்பாற்றியதற்குப் பரிசாக அந்த அம்மையாரை விடுதலை செய்தார்.

இந்த மாபெரும் புரட்சியாளர் புத்துலக சிற்பி, மனித நேயமாமணி இரஷ்யாவில் உலியனோவ்ஸ்க் என்ற நகரில் இன்றுதான் (22.04.1870) பிறந்தார்.

❑

நீராவி இயந்திரத்தின் தந்தை என்று போற்றப்படும் ரிச்சர்டு டிரிவெதிக் என்பவரும் இன்றுதான் (22.04.1707) பிறந்தார்.

❑

ஆங்கில நாவலாசிரியரான ஹென்றி பில்டிங் என்ற புகழ்பெற்ற எழுத்தாளரும் இன்றுதான் (22.04.1707) பிறந்தார்.

❑

## ஏப்ரல்-23 கலப்புத் திருமணம்!

பெரியார் சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்து, சமுதாயத்தில் இருந்த மூடப் பழக்கவழக்கங்களையும், சாதிக் கொடுமைகளையும் அழித்து ஒழிக்க முற்பட்டபோது, அவருடன் லட்சக்கணக்கானவர்கள் தங்களை இணைத்துக் கொண்டார்கள். தங்கள் வாழ்க்கையை சமுதாய விழிப் புணர்ச்சிக்காக தியாகம் செய்தனர். அத்தகைய சிறந்த மனிதர்களுள் முதன்மையானவர், குத்தூசி குருசாமி அவர்கள்.

அறிவுக் கூர்மை மிக்கவராகவும், செயல்திறன் மிக்க வராகவும் விளங்கிய குருசாமி, பெரியார் இயக்கத்தில் தன் மனதைப் பறிகொடுத்து, அவருடைய தீவிர தொண்டரானார். 1927-இல் ஈரோட்டில் பெரியாரைச் சந்தித்தார். 'குடியரசு' பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்தார். சிறந்த தலையங்கங் களும், கட்டுரைகளும் எழுதியதோடு, சிரிக்கும் வகையிலும், சிந்திக்கும் வகையிலும் பேசினார்.

'சகம் எதிர்த்த போதும் தனித்தெதிர்க்கும் சுயமரியாதைச் சுடர்' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் பாராட்டப் பெற்றவர், குத்தூசி குருசாமி. சாதி வெறி தலைவிரித்தாடிய அந்தக் காலத்திலேயே துணிந்து 'கலப்புத் திருமணம்' செய்து கொண்டவர்.

குருசாமி அவர்கள் 'ரிவோல்ட் குடியரசு', 'புதுவை முரசு', 'விடுதலை' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றி னார். பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோரின் வாழ்க்கைத் தரமும், சமுதாய நிலையும் உயர வேண்டும் என்பதற்காக குரல் கொடுத்ததோடு, அரசியல்வாதிகளை கடுமையாக விமர்சித்தும் 'குத்தூசி' பாணியில் கட்டுரைகளை எழுதினார்.

1962-இல் 'குத்தூசி' என்ற இலக்கிய மாத இதழைத் தொடங்கி நடத்தி வந்த குருசாமி அவர்கள், சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை விளக்க 'அறிவுப் பாதை' என்ற வார இதழையும் தொடங்கி நடத்தினார்.

குத்தூசியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை எம்.ஜி.ஆர். நடைமுறைப்படுத்தினார். இந்த அறிவுச் செம்மல் இன்றுதான் **(23.04.1907)** குருவிக்கரம்பை என்ற சிற்றூரில் பிறந்தார்.

## ஏப்ரல்-24 ‘எக்ஸ்ட்ரா முந்தானா?’

பள்ளியில் பயிலும் காலத்திலேயே எழுத்துத் துறையிலும், இலக்கியங்கள் மீதும் விருப்பம் கொண்டார், காரல் ஸ்பிட்டலர்.

இதற்கு இடையே அவர் தந்தைக்கு மகனைப் பட்டதாரியாக்க வேண்டும் என்ற விருப்பத்தால், ஸ்பிட்டலரை ஜூரிச் பல்கலைக் கழகத்தில் சேர்த்துவிட்டார். அங்கே அவர், ஆன்மிகத்தில் பட்டம் பெற்று வெளியே வந்தார்.

இந்த நிலையில் ஒரு தேவாலயத்தில் பாதிரியாக வாய்ப்பு அவரைத் தேடி வந்தது. தனது இலக்கிய ஆர்வத்தால், அப்பணியை ஒதுக்கிவிட்டார் ஸ்பிட்டலர். இதையடுத்து ஒரு ரஷ்ய இராணுவ உயர் அதிகாரியின் வீட்டுப் பிள்ளைகளுக்கு கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர் பணி வந்தது. அதை ஏற்று 1871-இல் ரஷ்யாவுக்குச் சென்று, அங்கு எட்டு ஆண்டுகள் அதே மாளிகையில் தங்கியிருந்தார். அந்த வேளையில் எழுத்துத்துறையில் மிகுதியாக ஈடுபட்டார்.

அவரது முதல் படைப்பு ‘புரோமித்யூஸ் அண்ட் எபிமெத்யூஸ்’ என்ற தலைப்பில் மலர்ந்தது. அவர் ரஷ்யாவில் இருந்து 1879-இல் சுவிட்சர்லாந்துக்கு திரும்பியதும் அந்த நாவலை வெளியிட முயற்சி செய்தார். அந்த முயற்சி வெற்றி பெற இரண்டாண்டுகள் ஆகிவிட்டன.

வாசகர் வட்டத்தில் சிறப்பு பெற்றதே தவிர, விமர்சகர் வட்டாரத்தில் போதிய அளவில் ஆதரவு கிடைக்கவில்லை. அதற்காக அவர் சோர்ந்து போய்விடவில்லை. முழுவீச்சில் எழுத்துத் துறையில் இறங்கினார். படைப்புகள் அடுத்தடுத்து பூத்துக் கொண்டே இருந்தன.

‘எக்ஸ்ட்ரா முந்தானா’ என்ற கவித்துவ நாவலும், ‘பட்டாம்பூச்சிகள்’ என்ற பாடல் தொகுப்பும், ‘கால்டெரி மரபின் சின்ன பிரட்’ என்ற நாவலும் அடுத்தடுத்து வெளியாகிக் கொண்டே இருந்தன.

கவிதை, நாவலோடு தன்னால் கட்டுரைகளையும் தீட்ட முடியும் என்று நிரூபித்தார். வெற்றி மேல் வெற்றி பெற்றுக் கொண்டிருந்தார். பத்திரிகைகளும், விமர்சகர்களும், இலக்கிய மேதைகளும் காரலின் புகழ் பாடத் தொடங்கினார்கள்.

இந்த பல்துறை வித்தகர் சுவிஸ் நாட்டின் லைஸ்டால் நகரில் இன்றுதான் (24.04.1845) பிறந்தார்.

❑

## ஏப்ரல்-25 மணி ஒலித்தது!

ஒரு நாள் இரவு தூங்கிக் கொண்டு இருந்த தன் தாயை எழுப்பிக் கொண்டு சென்ற மகன், தன் தாயை ஒரு மூலையில் ஒரு நாற்காலியில் அமரச் செய்தான். அருகில் ஒரு மேசையை வைத்து அதில் சில மின் எந்திரப் பொறிகளை மூடி வைத்தான். பின் ஓரிடத்தில் இருந்த மோர்ஸ் பித்தானைத் தன் கையில் வைத்துக் கொண்டு 'அம்மா; இப்போது கவனமாகக் கேளுங்கள்...' என்று சொல்லியபடியே, குளிரிலும் பதற்றத்திலும் கைகள் நடுங்கப் பித்தானை அழுத்தினான். என்ன விந்தை? இன்னொரு மூலையில் மின் மணி ஒலித்தது. இடையில் எந்தக் கம்பியும் இல்லை.

''அம்மா இது வியப்பாக இல்லை?'' என்று கேட்டான்.

''ஆம் மகனே. நான் வருகிறேன்...''

உடனே அவன் சிரித்துக் கொண்டே; ''மன்னிக்க வேண்டும். இந்த இரவில்தான் முதன் முதலில் எனது முயற்சியில் வெற்றி கண்டேன். அதனால்தான் அந்த மணி எந்தக் கம்பியின் தொடர்புமின்றி ஒலி எழுப்புவதை உங்களை அழைத்து வந்து காட்ட விரும்பினேன்'' என்றான், மகன்.

மேற்கண்ட உரையாடலை நடத்திய இளைஞன் யார் தெரியுமா...? இன்று வளர்ந்திருக்கும் எலெக்ட்ரானிக் துறைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவரும், அதற்காகவே நோபல் பரிசு பெற்றவரும், வானொலியைக் கண்டுபிடித்தவருமான குல்யெல்மோ மார்க்கோனி.

இந்த அறிவியல் ஆசான், இத்தாலி நாட்டில் பொலோனா என்னும் இடத்தில் உள்ள அவரது குடும்பச் சொத்தான அரண்மனை ஒன்றில் இன்றுதான் (25.04.1874) பிறந்தார்.

❑

சிறந்த இலக்கிய சிந்தனையாளரான டாக்டர் மு.வரத ராசன் அவர்கள் பிறந்ததும் (25.04.1912) இன்றுதான்.

❑

இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற படைத்தளபதியான ஆலிவர் கிராம்வெல் பிறந்ததும் (25.04.1599) இன்றுதான்.

❑

## ஏப்ரல்-26 உலகம் மட்டும்

வைசெண்டி அலெக்சாண்டரா, ஸ்பானிஷ் கவிஞர். இவரது தந்தை பொறியியல் துறையில் பணியாற்றி வந்தார். வைசெண்டி பதினொரு வயதுச் சிறுவனாக இருந்தபோது மாட்ரிட்டுக்கு மாற்றலானார் அவரது தந்தை. அங்கு பள்ளி இறுதியாண்டுக் கல்வியை முடித்தார்.

ஓய்வு நேரத்தில் தன் பாட்டனாரோடு நூலகத்திற்குச் சென்று வந்தார். அங்கே கானன்டாயல், பெடர் டாவ்ஸ்கி போன்றவர்களின் படைப்புகளை ஆர்வமுடன் படித்து வந்தார் வைசெண்டி. 1914-இல் மாட்ரிட் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சட்டம் மற்றும் வர்த்தகத்துறையில் பட்டம் பெற்றபின், இலக்கியப் பணியினை யாருக்கும் தெரியாமல்தான் செய்து வந்தார்.

1925-இல் காச நோய் அவரைப் பற்றிக் கொண்டதால் பணியிலிருந்து விலகிக் கொண்டார். அந்நிலையிலும் அவர் கவிதை எழுதுவதை நிறுத்திக் கொள்ளவில்லை. தனது மரண பயத்தை கவிதையில் கண்ணாடி போல் எழுதினார்.

எழுதிய கவிதைகள் 1928-இல் 'ஆம்பிட்டோ' என்ற தலைப்பில் வெளிவந்தது. வெளிவந்த கவிதைகள் பழைய நண்பர்களோடு புதிய நண்பர்களையும் பாராட்டும்படி வைத்தது. இலக்கிய அந்தஸ்தைத் தந்தது.

அதைத் தொடர்ந்து 1928-க்கும் 1929-க்குமிடையே எழுதிய கவிதைகள் 'பிரபஞ்சத்தின் பாடு' என்னும் தலைப்பில் வெளிவந்தது. இதற்குமுன் அவரது கவிதைத் தொகுப்பொன்று 'வாள்கள் உதடுகளை விரும்புகின்றன' வெளிவந்து, அவருக்கு நாடு தழுவிய புகழைத் தந்தது. இதைத் தொடர்ந்து வெளிவந்த 'அழிவு அல்லது அன்பு' எனும் கவிதைப் படைப்பு ஓர் அரிய படைப்பாக உலகப்புகழ் பெற்றுத் தந்தது. இதைத் தொடர்ந்து, வெளிவந்த 'உலகம் மட்டும்', 'இதயத்தின் கதை'யும் அவருக்கு அழியாப் புகழைத் தந்தது. 1977-இல் நோபல் பரிசும் கிடைத்தது.

ஸ்பானிஷ் கவிஞரான வைசெண்டி, இன்றுதான் (26.04.1898) பிறந்தார்.

❑

## ஏப்ரல்-27 தந்தி

தந்தியின் மகத்துவத்தை மக்களறியச் செய்தவர் அறிவியல் மேதை சாமுவேல் பின்லி பரீஸ் என்பவர்தான். இவர் ஒரு புகழ்பெற்ற ஓவியரும்கூட. முறைப்படி இலண்டன் சென்று ஓவியம் கற்றவர்.

இவர் யேல் பல்கலைக் கழகத்தில் படித்து **1810**-இல் பட்டம் பெற்றார். நியூயார்க் நகரக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியேற்றபோது, மற்ற பேராசிரியர்களிடம் மின்னியலைக் கற்றார். தந்தியைப் பற்றிய சிந்தனை அவருக்கு **1832**-இல் வந்துவிட்டது.

தனது அறைக்குள்ளேயே தந்தி அடிக்கும் - அனுப்பும் முறையைக் கண்டறிந்து வெற்றி பெற்றார். மேலும் மேலும் ஆய்வு செய்து நீண்ட தூரம் தந்தியை அமைத்து அதன் வழியே செய்திகளை அனுப்ப முடியும் என்ற முடிவுக்கு வந்தார்.

மேலும் ஆய்வுக்கு வேண்டிய பொருளாதாரத்திற்காக பலரிடம் கேட்டுப் பார்த்தார். பயன் இல்லை. தளராது முயன்றார். **1843**-இல் மக்கள் முன்னிலையில் தந்தியை அனுப்பி சாதனை சரித்திரம் படைத்தார். அன்றே அவர் புகழ் உலகெங்கும் தந்தியைப் போல் பரவியது.

முன்பு தந்தி ஆய்வுக்கு ஆதரவு கொடுக்காத நாடுகள், எல்லாம் பட்டங்களையும் விருதுகளையும் வழங்கின. பணம் குவிந்தது.

இவரின் குறியீட்டின் விரிவே டெலிபிரிண்டர் ஆகும். 'டகரொ டைப்' எனப்படும் போட்டோ முறையைப் பற்றியும் இவர் ஆய்வு செய்தார்.

இவ்வறிவியல் அறிஞர் அமெரிக்காவில் இன்றுதான் **(27.04.1791)** பிறந்தார்.

❒

**வ**ரலாற்று ஆசிரியரான எட்வர்ட் கிப்பன் என்பவரும் இன்றுதான் **(27.04.1737)** பிறந்தார்.

❒

## ஏப்ரல்-28 ரவிவர்மா

பரமசிவன், பார்வதி, இலக்குமி, ருக்மணி, சீதை இக்கடவுளர்களின் ஓவியங்களைத் தீட்டியவர் யார் என்று பெட்டிக்கடை பெருமாள் முதல் படித்தவர் வரை யாரைக் கேட்டாலும், ஓவியர் ரவிவர்மா என்று கூறுவார்கள்.

எவ்வாறு ரோம் நாட்டுக் கிறித்துவ ஆலயங்களிலே மைக்கேல் ஆஞ்சிலோவின் மத ஓவியங்கள் புகழ்பெற்று திகழ்கின்றனவோ, அதைப்போல ரவிவர்மாவின் வண்ண ஓவியங்கள் இந்தியத் திருநாட்டில் மட்டுமல்ல மேலை நாடும் நன்கு அறிந்த ஒன்றாகும்.

ரவிவர்மா வடமொழியில் நல்ல புலமை பெற்றிருந்ததால், அவர் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களையும், புராணங்கள் பலவற்றையும், காவியங்களையும் நன்கு பயின்று இருந்தார். அதனால் அப்படைப்புகளிலுள்ள பாத்திரங்களை நாடறிய ஓவியமாகத் தீட்டி எல்லோர் மனதிலும் அவர் அழியாத ஓவியமாக நின்றுவிட்டார்.

'ஹம்ச - சமயந்தி'யில் ராஜகுமாரியான தமயந்தி நிற்கும் அழகையும், 'அசோக வனத்துச் சீதை' நிலையையும், சகுந்தலை துஷ்யந்தனுக்குத் தாமரை இலையில் காதற்கடிதம் எழுதும் அழகையும் அவர் கை வண்ணத்தில் கண்டவர்கள் மறக்க முடியுமா...?

கடவுளர் - தம் உருவங்களையே தன் கைவண்ணத்தால் கோடான கோடி மக்களின் முன் நிஜ உருவாக்கிக்காட்டி வர்ண ஜாலக்காரராயிற்றே! மேலை நாட்டாரும், அக்கால மன்னர் களும், மைசூர், பரோடா போன்ற பல சமஸ்தானிகளும் வியந்து போற்றுகின்ற அளவுக்கு, அன்றைய சென்னை கவர்னர் அவரின் கலைச் சேவையை - ஓவியத் திறமையைப் பாராட்டிப் 'பதக்கம்' அளிக்கின்ற அளவுக்கு அவர்தம் ஓவியக் கலையில் உயர்ந்திருந்தார்.

இவரது ஓவியத்திறமையை வளர்த்தவர், இவரின் தாய்மாமனாக இருந்த ராஜராஜ வர்மாதான். ராஜ வம்சத்தைச் சேர்ந்த உலகப்புகழ் பெற்ற ரவிவர்மா திருவாங்கூரில் - கிளிமானூர் என்னும் சிற்றூரில் இன்றுதான் **(28-04-1848)** பிறந்தார்.

## ஏப்ரல்-29 தன்மானக் கவிஞர்

பிரெஞ்சுப் புரட்சி வெற்றி பெற்று அந்நாட்டின் ஜனாதிபதியான பெர்ரிலூயி என்பவரின் பிறந்தநாள் விழா நமது நாட்டில் - பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த பாண்டிச் சேரியிலும் அந்த அரசால் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. பெர்ரிலூயி கல்விக் கொள்கையில் பிரெஞ்சு நாட்டில் ஒரு பெரிய புரட்சி செய்திருந்தார். லத்தீன் மொழியை மதக்குருவானவர்கள் மட்டுமே படிக்கலாம் என்றிருந்த நிலையை மாற்றி, யார் விரும்பினாலும் படிக்கலாம் என்ற புரட்சியை செய்திருந்ததுதான் அது.

எனவே அவர் பிறந்த நாளை அச்சமயம் பாண்டிச் சேரியின் ஆளுநராக இருந்த கோஃம்வே மிக சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தார். பாரதிதாசன் அந்த விழாவில் கலந்துகொண்டு பாட வேண்டுமென ஆளுநர் மிகவும் விரும்பியிருந்தார். ஆனால், மதவாதிகள் அவ்விழா விற்கு பாவேந்தர் வருவதை விரும்பவில்லை.

ஆனாலும் ஆளுநருடைய விருப்பத்தால் பாரதிதாசன் அந்த விழாவிற்கு வந்திருந்தார். பாரதிதாசன் இப்போது பாடுவார் என அழைத்ததும் கம்பீரமாக எழுந்து கவிதை பாட ஆரம்பித்தார்...

‘வறியோர்க்கெல்லாம் கல்வியின் வாடை
வரவிடவில்லை மதகுருக்கள் மேடை
நறுக்கத் தெறித்தது அந்தப் பீடை
நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை.’’

இந்தப் பாடலை ஒவ்வொரு வரியாகப் படித்து சற்று நிறுத்தி பாவேந்தர் கூட்டத்தினரை நோக்கும் போதெல்லாம் பலத்த கரவொலி எழுந்தது. அதற்குமுன் பாடிய எந்த கவிஞருக்கும் மக்களிடையே இவ்வளவு வரவேற்பு இல்லாததால் ஆளுநருக்கே புதிய உற்சாகம் பிறந்து தங்கள் மொழியில் பாவேந்தரை உற்சாகப்படுத்தும் வகையில் ‘கோந்தினி, கோந்தினி’ என்று உரக்கச் சொல்லிக் கொண்டிருந்தார். பாவேந்தருக்கு மக்கள் மத்தியில் உள்ள வரவேற்பைக் கண்டு அவரை பாடவிடாமல் தடுக்க நினைத்தவர்கள் தலைகவிழ்ந்தனர்.

இந்தத் தன்மானக் கவிஞர் பாரதிதாசனார் இன்றுதான் (29.04.1891) பிறந்தார்.

## ஏப்ரல்-30 மகளைவிட...

ஈவ் ஆர்தன், அமெரிக்காவின் குணச்சித்திர நடிகை. இவர் முதலில், நாடகங்களிலும், தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்து, பின்தான் திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பு இவருக்குக் கிடைத்திருக்கிறது.

இவரது முதல் மேடை நாடகம் 'பிராடுவே' என்பதுதான். இது அரங்கேறிய ஆண்டு 1934.

இவரது தந்தையின் பெயர் பீட்டர். தாயின் பெயர் லூசில். இவர் கலிபோர்னியாவில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார்.

நடிகை ஆர்தனைவிட, அவரது தாய் பேரழகியாக இருந்திருக்கிறார்.

அதனால், தாயைப்போல தானும் அழகு பெற வேண்டும் என்பதால், பல அழகுக்கலை குறித்து தெரிந்து கொண்டு அதன்படியே தன்னை அழகு பதுமையாக மாற்றிக் கொண்டார்.

'அவர் மிஸ் புருக்ஸ்' என்ற நாடகம் முதலில் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் வெளிவந்தது. இதுவே பின் திரைப்படமாக எடுக்கப்பட்டது.

இந்த மூன்றிலேயும் ஆர்தனே பள்ளி ஆசிரியையாக நடித்தார். இப்படத்தில் இவரது நடிப்பைக் கண்டு உலகே வியந்தது.

இந்தப் படமே இன்றும் இவர் புகழைப் பாடிக் கொண்டிக்கிறது.

அந்நாட்டில் உள்ள தேசிய கல்விக் கழகமே இவரது ஆசிரியை நடிப்பைப் பாராட்டி விருதுகளை வழங்கி சிறப்பித்த தோடு, அக்கல்விக் கழகத்தில் சிறப்பு உறுப்பினராகவும் இணைத்துக் கொண்டது.

இன்றும் அவர் நடித்த பல படங்கள் அரங்கு நிறைந்த காட்சியாக இருந்து கொண்டிருக்கிறது என்பது உண்மை.

இந்த நடிகை கலிபோர்னியாவில் இன்றுதான் (30.04.1908) பிறந்தார்.

❏

## ஹனிமூன் லேன்




கேட்ஸ்மித் - இவர் சகலகலா வள்ளி. இவருக்குப் பாடத் தெரியும். ஆடத் தெரியும். நடிக்கத் தெரியும்.

நியூயார்க்கில் இவர் ஒரு இரவு விடுதி ஒன்றில் நடனமாடிக் கொண்டிருந்தபோது, அதைக்கண்ட ஒரு திரைப்பட இயக்குநர் மெய் மறந்து - இவரை திரைப்படத்துறைக்கு 1926 இல் அழைத்து வந்தார். இவரது முதல் படம் நகைச்சுவையும் - இசையும் கலந்த படமாகும். ‘ஹனிமூன் லேன்’ என்பதுதான் அப்படத்தின் பெயர்.

இவரது இசையாற்றலையும், நடிப்பாற்றலையும் கண்டு, கொலம்பியா நிறுவனத்தில் துணைத் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருந்த ‘டெடம் கோலிங்ஸ்’ என்பவர், இந்த நடிகையை மணந்து கொண்டு, அவருக்கு கணவராக இருந்ததோடு மட்டுமல்லாது தொழில்ரீதியாக அவரது மேலாளராகவும் இருந்தார். கணவரான கோலிங்ஸ், தன் மனைவியை வானொலியில் பாட ஏற்பாடு செய்கிறார். அப்படி பாடியதில் இருவருக்குமே புகழ் கிட்டுகிறது. பேலஸ் என்ற தியேட்டரில் மற்ற பாடகர்களை விட, அதிக நாள் பாடி, முன் பாடிய கலைஞர்களை முறியடித்த பெருமை இவருக்குண்டு.

பின்னர் ‘ஹலோ எவரிபடி’ என்ற படத்தை கேட்ஸ்மித் எடுத்ததோடு அதில் நடிக்கவும் செய்தார். 1943-இல் காம்பிளஸ் அமெரிக்கா’ என்ற ஒரு பாடலை இவர் பாட, அப்பாடல் உலகெங்கும் இவர் புகழைக் கொண்டு சென்றது. அத்தோடு ‘ரிவர்’ என்ற படத்தில் இவர் பாடிய எல்லாப் பாடல்களுமே இவரின் புகழை உயர்த்தியது.

1950-இல் இசை ஆல்பம் தயாரிக்கத் தொடங்கினார். இது இவரது பொருளாதாரத்தை மிகவும் உயர்த்தியது. இதே ஆண்டில் தொலைக்காட்சியிலும் தோன்றி பல்வேறு நிகழ்ச்சிகளையும் நடத்தி புகழ் பெற்றார்.

இவர் நியூயார்க்கில் இன்றுதான் **(01.05.1907)** பிறந்தார். □

ஆங்கிலேய எழுத்தாளரும் கட்டுரையாளருமான ஜோசப் அடிசனும் இன்றுதான் **(01.05.1672)** பிறந்தார். □

## மே-2 பதேர் பாஞ்சாலி

வங்கமொழி சினிமாவை வளப்படுத்தியவர்; செழுமைப் படுத்தியவர். இந்திய சினிமாவுக்குப் பெருமை சேர்த்தவர்; உலக சினிமா வரலாற்றில் முக்கிய இடம் பெற்றவர், சத்யிஜித்ரே! அவரது முத்தொகுதி படங்களான 'பதேர் பாஞ்சாலி (1995) அபராஜிதோ (1956) அபுசன் சார் (1959) ஆகிய தொடக்க காலத் திரைப்பட முயற்சிகள் சத்யஜித்ரேயின் திரைப்பட ஆற்றலை உலகறியச் செய்தன.

பதேர் பாஞ்சாலி என்ற அவரது முதலாவது படத்தின் பெயர் சத்யஜித்ரேயின் பெயரோடு ஒட்டிக் கொண்டது. அதுபோலவே அவர் தமது இறுதிக்காலத்தில் உருவாக்கிய முத்தொகுதிப் படங்களும் சிறப்பாகப் பேசப்படும் படங்களாக அமைந்தன.

அவரது கடைசித் தொகுதிப் படங்களில் ஒன்றான 'கண சத்ரு' 1989 இல் வெளிவந்தது. கடைசிப் படமான 'அகன்தக்' 1991-இல் வெளிவந்தது.

முதல் படம் தொடங்கி அவரது இறுதி நாட்கள் வரை எண்ணற்ற பரிசுகளும் பாராட்டுக்களும் அவரது படங் களுக்குக் கிடைத்து வந்தன...

சத்யஜித்ரே...! மெட்ரிக்குலேஷன் தேர்வில் வெற்றி பெற்ற ரே கொல்கத்தா பிரிசிடென்சி கல்லூரியில் சேர்ந்து பொருளாதாரப் பாடம் பயின்றார். 1940-இல் சாந்தி நிகேதனில் சேர்ந்தார். 1941-இல் 'அப்ஸ்ட்ராக்ஷன்' எனும் அவரது சிறுகதை ஆங்கிலத்தில் வெளியானது.

1943-இல் அவர் ஒரு விளம்பர நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். 1944-ஆம் ஆண்டு முதல் கதை வசனம் எழுதும் முயற்சியில் ஈடுபட்டார். 1947-இல் கொல்கத்தா திரைப்படக் கழகத்தை ஏற்படுத்தினார். 1948-இல் ஸ்டேட்ஸ்மேன் இதழில் அவரது முதல் கட்டுரை வெளிவந்தது. 'இந்தியத் திரைப் படங்களுக்கு என்ன ஆனது?' இதுதான் ரேயின் முதலாவது சினிமா கட்டுரை.

இந்த திரைப்பட மேதை இன்றுதான் கொல்கத்தாவில் (02-05-1921) பிறந்தார்.

❒

## மே-3 படிப்பு முடியட்டும்

இஸ்ரேல் என்ற ஒரு நாடு உருவாக காரணமாக இருந்தவர் கோல்டா மேயர். இவர் அந்நாட்டின் நான்காவது பிரதமராக இருந்தவர்.

இதற்கு முன்பாக வெளிவிவகார அமைச்சராகவும், தொழிலாளர் நல அமைச்சராகவும் பணி செய்துள்ளார்.

கோல்டா மேயரை இஸ்ரேலின் இரும்பு பெண்மணி என்றே அந்நாட்டில் அழைத்தனர். இவர்தான் இஸ்ரேல் நாட்டின் முதல் பெண் பிரதமர்; உலக அளவில் மூன்றாவது பெண் பிரதமர்.

இவர் ரஷ்யாவில் உக்ரேனில் பிறந்தவர். இளமை காலத்தில் பொருளாதார கஷ்டத்தில் இருந்து வளர்ந்தவர்.

இவரின் தந்தை தச்சு வேலையும், தாய் மளிகைக் கடையும் வைத்திருந்தார். தாய், வெளியில் செல்லும்போது கோல்டாவே பொறுப்போடு கடை வியாபாரத்தை நடத்தி வருவாராம்.

இவர்களது கடையருகே இருந்த பள்ளியிலேயே இவர் படித்திருக்கிறார். அப்பள்ளி நாளில் தன்னோடு படிக்கும் பிள்ளைகளுக்கு பேப்பர், பேனா, புத்தகம் வாங்க வசதி யில்லை என்றால், இவேர பணம் படைத்தவர்களிடம் சென்று பணம் வசூல் செய்து அவர்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுப்பாராம்.

இன்று அந்நாட்டில் கோல்டா மேயர் என்ற இவரது பெயரில் பள்ளி ஒன்றே நடந்து வருகிறது. இவரது 14 வயதில் தாய் கோல்டாவுக்கு திருமணம் ஏற்பாடு செய்கிறார். எனக்கு இப்போது திருமணம் தேவையில்லை என்று சொல்லி வீட்டை விட்டே ஓடி, சகோதரி வீட்டில் தங்கி படிக்கிறார்.

அப்போது, அங்கே ஒரு இளைஞனோடு, நட்பு ஏற்படுகிறது. அது காதலாகவும் மாறுகிறது.

'படிப்பு முடியும் வரை நான் உன்னை மணக்க முடியாது' என்று காதலனிடம் கூறுகிறார். அதுபோலவே படிப்பு முடிந்ததும் காத்திருந்து அவரையே திருமணம் செய்து கொள்கிறார். சிறந்த பேச்சாளராகவும் இருந்த கோல்டா அரசியலில் ஈடுபடுகிறார்.

இவர் உக்ரேனில் இன்றுதான் (03.05.1898) பிறந்தார்.

## மே-4 ரெட்டி

முதலமைச்சர் செங்கல்வராய ரெட்டி, பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ.படித்தார். கர்நாடகம் கோலார் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராக 1933-முதல் 1938-வரை இருந்தார்.

சாரண அமைப்பிற்கும், ஹரிசன சேவாச் சங்கத்திற்கும் தலைவராக விளங்கிய இவர் மைசூர் பல்கலைக் கழகத்தில் செனட் உறுப்பினராகவும் இருந்தார்.

தேசிய வாதியான இவர் பத்திரிகைத் துறையிலும் ஈடுபாடு மிக்கவர். ஆசிரியராக இருந்து செனவாணி எனும் முன்னணி கன்னடப் பத்திரிகையை நடத்தினார்.

சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்த இவர், ஆங்கில அரசின் சர்வாதிகாரப் போக்கினைக் கண்டித்து தனது சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததோடு, தான் வகுத்துவந்த அரசு சம்பந்தப்பட்ட அனைத்துப் பதவிகளையும் ராஜினாமா செய்தார்.

காங்கிரஸ் கட்சியின் சத்தியாகிரகப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு சிறை சென்றார்.

நாடு விடுதலை பெற்ற பிறகு இவர் மைசூர் மாநிலத்தின் முதலமைச்சராக பதவி வகித்தார்.

இவர், கோலார் மாவட்டம் சிம்பள்ளியில் இன்றுதான் (04-05-1902) பிறந்தார்.

❑

தாமஸ் ஹக்ஸ்லே எனும் ஆங்கில நாட்டு உயிரியல் விஞ்ஞானியும் இன்றுதான் (04-05-1825) பிறந்தார்.

❑

அமெரிக்க நாட்டுக் கல்வியாளரான ஹோரஸ்மான் என்பவரும் இன்றுதான் (04-05-1796) பிறந்தார்.

❑

## மே-5 மூலதனம்

பணத்தின் ஆதிக்கம் சமுதாயத்தை எப்படி பாதிக்கிறது என்பதை தீவிரமாக ஆராய்ந்து கூறிய மார்க்ஸ், அன்றாடச் செலவுக்கே பணம் இல்லாமல் அல்லாடியவர். இலண்டனில் தங்கியிருந்த அறைக்கு வாடகை கொடுக்க முடியாததால் வெளியேற்றப்பட்டார். சொந்தமான இரண்டொரு பொருள் களையும் இழந்தார்.

பட்டினியால் அவரது இரு குழந்தைகள் இறந்தன. இலண்டனில் இருக்கும்போதுதான் தீவிரமாக சிந்தித்து தமது சோஷலிசக் கொள்கையை வகுத்து தீர்மான மாற்றம் ஏற்பட வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தித் தமது நூல்களை எழுதினார்.

அவருடைய 'மூலதனம்' எனும் நூலும், ஏங்கல்சுடன் சேர்ந்து வகுத்த கம்யூனிஸ்ட் அறிக்கையும் பலரையும் தீவிரமாகச் சிந்திக்கத் தூண்டின. வரலாறு என்பது பொருளாதார, உலகாயத அம்சங்களால் தீர்மானிக்கப்படும் ஒரு நடைமுறை என்ற கண்ணோட்டத்துடன் முதன் முதலில் அணுகியவர் மார்க்ஸ் தான்...

இந்த சிந்தனையின் சொந்தக்காரரான அறிவுலக மேதை கார்ல் மார்க்ஸ் இன்றுதான் **(05-05-1818)** பிறந்தார்.

❑

இந்தியக் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேனும் இன்றுதான் **(05-05-1916)** பிறந்தார்.

❑

முன்னாள் இந்திய ஜனாதிபதி ஜெயில்சிங்கும் இன்று தான் **(05-05-1916)** பிறந்தார்.

❑

மனிதனின் தன்னம்பிக்கைக்கு உதாரணமாக வாழ்ந்து காட்டிய 'கல்கண்டு' ஆசிரியர் தமிழ்வாணனும் இன்று தான் **(05-05-1926)** பிறந்தார். 'துணிவே துணை' இவரது தாரக மந்திரமாகும்.

❑

## மே-6 விவசாயிகள்

மிகமிக ஏழைக் குடும்பத்தில், லெடிஸ்லா ஸ்தனிஸ்லா ரேமாண்ட்டில் தோன்றினார். அதிகம் படிக்க வசதியில்லாத காரணத்தால், மூன்றாவது வகுப்பிலேயே படிப்பை நிறுத்திக் கொண்டு, அவருடைய மாமா வார்சாவில் வைத்திருந்த தையற்கடையில் எடுபிடிப் பையனாகச் சேர்ந்தார்.

தந்தை ரயில்வேயில் ஒரு வேலை வாங்கிக் கொடுத்தார். அந்த வேலையில் மகிழ்ச்சியோடு இருந்த நிலையில், தன் இலக்கிய பணியில் ஈடுபடத் தொடங்கினார்.

இந்த காலகட்டத்தில் ரேமாண்ட் தனது சொந்த முயற்சியினால் தாய்மொழியோடு ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளையும் கற்று தேர்ந்து, இலக்கியங்களைப் படித்து ரசிக்கும் அளவுக்கு அனுபவமும் பெற்றார். அரிய முயற்சியின் பயனாய் சில நாடகங்களை எழுதினார்.

நாவல்களோடு, கவிதையும் எழுதினார்... இருந்தும் அவருடைய படைப்புகளில் அவருக்கு நம்பிக்கை இல்லாததால் அத்தனையையும் தீயிட்டு கொளுத்தினார், ரேமாண்ட். அந்த நெருப்பிலிருந்து ஆறு சிறுகதைகள் மட்டுமே தப்பிப் பிழைத்தன. அவைகளை வார்சாவில் உள்ள ஒரு விமர்சகருக்கு அனுப்பி வைத்தார். அவைகளைப் படித்துப் பார்த்த அந்த விமர்சகர், வார்சாவின் முக்கிய இதழ்களில் வெளியிட ஏற்பாடு செய்தார்.

அதன் பயனாய், ரேமாண்டின் பெயர் நாடெங்கும் பரவலாயிற்று. அந்தப் புகழை, ஊட்டமிக்க உரமாகக் கொண்டு, நாவலொன்றை எழுதினார். 'காமெடியன்ட்கா' என்ற தலைப்பில் அது வெளிவந்தது. அதைத் தொடர்ந்து, வெளிவந்த 'விவசாயிகள்' என்ற தலைப்பில் வெளிவந்த நெடுங்கதை அவரின் எல்லாப் படைப்புகளையும் பின்னுக்குத் தள்ளி முன் நின்றது. அந்த அரிய பெரிய படைப்பு ரேமாண்டை உலகப்புகழ் வாய்ந்த ஒருவராக ஆக்கியது. இலக்கிய மேதைகள் எல்லாம் இதயம் திறந்து பாராட்டினார்கள். **1924**-இல் நோபல்பரிசும் கிடைத்தது.

தென்போலந்திலுள்ள சிறுநகரில் இந்த எழுத்து மேதை இன்று தான் **(06-05-1868)** பிறந்தார்.

❑

## மே-7 கீதாஞ்சலி

இலக்கியத்திற்கான நோபல் பரிசு இதுவரை இந்தியாவிற்கு ஒரே ஒரு முறைதான் கிடைத்திருக்கிறது. அந்தப் பரிசைத் தம் 'கீதாஞ்சாலி' கவிதைத் தொகுதியின் மூலம் வாங்கிய கவியரசர் இரவிந்தரநாத் தாகூர்....

மனித நேயமிக்க மாபெரும் கவிஞர்... 1912-ஆம் ஆண்டின் வங்காளத்தில் உள்ள டாக்காவில் இலக்கிய மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அம்மாநாட்டிற்கு தலைவராக இவரையே தேர்ந்து எடுத்திருந்தார்கள்.

தாகூர் தம் சொந்த கிராமத்தில் ஒரு வேலைக்காரருடன் தங்கி இருந்தார். மாநாடு தொடங்குவதற்கு முன் நாள் தாம் மாநாட்டிற்கு வரமுடியாது என ஏற்பாடு செய்தவர்களுக்குத் தகவல் கொடுத்துவிட்டார். கவிஞர் வராத காரணத்தை அறிய டாக்காவில் இருந்து ஒரு அன்பர் தாகூர் இல்லம் வந்தார்.

அச்சமயம் ஊரிலே வாந்திபேதி இருந்ததால் நண்பரை தாகூர் மாடியில் தங்க வைத்தார். பின்னர் அவரிடம் ''என்னுடைய வேலைக்காரருக்கு வாந்திபேதி கண்டிருக்கிறது. கீழே இருக்கிறார். ஆகையால்தான் மாநாட்டுக்கு வரமுடிய வில்லை'' என்று கூறிவிட்டு மீண்டும் வேலைக்காரருக்கு தொண்டு செய்ய கீழே இறங்கிச் சென்றார். பாவம். நண்பர் வாந்திபேதி பயத்தினால் கீழே இறங்கவில்லை.

பொழுது புலர்ந்ததும் தாகூர் மேல் மாடி வந்தார். ''என் வேலைக்கார் பிழைத்துக் கொண்டார். ஆனாலும் பலவீனமாக இருக்கிறார். என்னுடைய உதவி அவருக்குத் தேவை. ஆகவே என்னால் மாநாட்டுக்கு வர முடியாது'' என்றார்.

நோயுற்ற ஒரு வேலைக்காரருக்கு பணி செய்வதற்காக மாநாட்டுத் தலைமையைத் துறந்த கவிஞரின் உள்ளமும், சாவுக்குப் பயப்படாத அவரின் மன உறுதியும் பற்றி எண்ணிப் பார்த்த நண்பர் வியந்து நின்றார்.

இந்தக் கவிஞர் கொல்கொத்தாவில் இன்றுதான் (07-05-1861) பிறந்தார்.

❐

ஜெர்மானியப் பாடலாசிரியர் ஜோஹன்னஸ் பிராம்ஸ் என்பவரும் இன்றுதான் (07-05-1833) பிறந்தார்.

❐

ஆங்கிலக் கவிஞரான ராபர்ட் பிரௌனிங்கும் இன்றுதான் (07-05-1812) பிறந்தார்.

❐

## மே-8 ஜனாதிபதி

ஹாரி எஸ்ட்டுமேன். இவர், அமெரிக்காவின் 33-வது ஜனாதிபதியாக 1945 முதல் 1953 வரை இருந்தவர். இவர் ஜனாதிபதியாக இருந்த போதுதான் ஜப்பானில் குண்டுவீசி, அந்நாடு பணிந்தது. கம்யூனிசத்தை ஒடுக்குவதற்கு இவர் அரும்பாடுபட்டார். ஜான் ஆண்டரசன் என்பவர் இவரது தந்தை விவசாயி. அத்தோடு ஆடு, மாடு வாங்கி விற்பனை செய்யும் வியாபாரியாகவும் இருந்தார், தாய் மார்த்தா.

இந்த ஜனாதிபதி மிசேரியில் இன்றுதான் (08.05.1884) பிறந்தார்.

❐

'குவா வாடிஸ்' என்ற நூலைப் பற்றிக் கேள்விப்படாத, படித்தவர்கள் அறியாது இருக்க முடியாது. 1896-இல் இந்தப் புத்தகம் வெளிவந்தபோது 15 இலட்சம் பிரதிகள் விற்பனையாயிற்று. அக்காலத்தில் இப்புத்தக விற்பனை சாதனை என்றே கூறுகிறார்கள்.

இவர் செல்வக் குடும்பத்தில் பிறந்த போதிலும், சந்தர்ப்பச் சூழ்நிலையால் குடும்பம் வறுமைக்கு ஆட்பட, கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஹென்றி, படிப்பைத் தொடர முடியாத நிலையில் அங்கிருந்து வெளியேற்றப்படுகிறார். அதே சூழ்நிலையைப் பின்னணியாக வைத்து 'விரயம்' என்ற முதல் நாவலை எழுதுகிறார். இவர் எழுத்துத் துறைக்கு வந்தது இப்படித்தான். பல படைப்புகளை எழுதிக் குவித்த இவர், நோபல் பரிசையும் பெற்றார். இவரது இயற்பெயர் 'ஹென்றி ஆதாம் அலெக்சாண்டர் பையஸ் ஷெண்கியவிச்'.

இவர் இன்றுதான் (08.05.1846) பிறந்தார்.

❐

செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவியவர் ஹென்றி டுனாந்த். இவர் பிறந்த நாளில் உலகம் முழுதும் செஞ்சிலுவைச் சங்கத்தினமாகக் கொண்டாடுவதன் மூலம் கருணையும், அன்பும், மனிதாபிமானமும் நிறைந்த ஜுன் ஹென்றி டுனாந்த்தைக் கௌரவித்துப் போற்றுகிறார்கள். இந்த மனித நேயர் இன்றுதான் (08-05-1828) பிறந்தார்.

❐

## மே-9 பொதுநலத் தொண்டர்

ஜான் பௌரவுன், அடிமை இயக்கத் தலைவராக இருந்தவர். கறுப்பின மக்களின் அடிமைத் தலையை அறுக்க, முதன்முதலில் கொரில்லா போர் முறையைக் கொண்டு எதிரிகளைத் தாக்கி ஒழித்தார்.

தேசிய அளவில் தன் இயக்கத்தைப் பரப்புவதற்குப் பாடுபட்டார். இவர், அரசியலமைப்பை நம்பாமல்தான் இவ்வியக்கத்தைத் தோற்றுவித்தார்.

அதன் வழியே 1856-இல் மிசேரியில் அடிமைகளான 11 பேர்களை தனது ஆற்றலால் போராடி மீட்டு வந்தார்.

இவரது தந்தை ஓவின் பௌவுன், தாய் டூத்மில். இவர் தன் இயக்கத்தைத் தோற்றுவிக்கும் முன் இராணுவத்தில் பணிபுரிந்தார்.

தான் பெற்ற அனுபவங்களையும், செய்த போர் முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு, வாழ்க்கை வரலாறு ஒன்றினை எழுதினார்.

அவருக்குப்பின், அந்நூல் மக்களின் சிந்தனையில் பல மாற்றங்களையும் அவர் விட்டுச் சென்ற பொதுநலப் பணியையும் தொடர வழிகாட்டியாக அமைந்தது.

இந்த பொதுநலத் தொண்டர் இன்றுதான் (09.05.1800) பிறந்தார்.

❒

காந்திஜி, தன் குருவாக ஏற்றுக் கொண்ட சுதந்திரப் போராட்டத் தலைவரான கோபால கிருஷ்ண கோகலே இன்றுதான் (09-05-1866) பிறந்தார்.

❒

'பீட்டர் பேன்' என்னும் புகழ்பெற்ற இலக்கியத்தை உருவாக்கிய ஜேம்ஸ்பாரி என்ற எழுத்தாளரும் இன்றுதான் (09.05.1860) பிறந்தார்.

❒

மொகலாய அரசரான அக்பரைக் கதிகலங்கச் செய்த சுதந்திரப் போராட்ட வீரரும், இந்து சாம்ராஜ்யக் கனவுகளோடு வீரத்துடன் வாழ்ந்த மாவீரருமான ராணா பிரதாப்பும் இன்றுதான் (09.05.1540) பிறந்தார்.

❒

## மே-10 நீதி அரசர்

சட்டம் படித்து வழக்கறிஞரான பி.வி.ராஜமன்னார், நாடகங்கள் பல எழுதி, நடித்தும் உள்ளார். இவரது நாடகங்கள் பல மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 1944-இல் அட்வகேட் ஜெனரலானார்.

1945-இல் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாகவும் 1948-61 வரை தலைமை நீதிபதியாகப் பணிபுரிந்தார். விடுதலையடைந்த தமிழகத்தின் முதல் தலைமை நீதிபதியான இவர் தமிழக நீதித்துறை முறைகளை ஏற்படுத்தி நிலைப் படுத்துவதில் பெரும் பங்காற்றினார்.

இவரது கலை இலக்கியத் திறமையைப் பாராட்டி அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் ஆந்திரா பல்கலைக் கழகமும் கௌரவ டாக்டர் பட்டங்கள் வழங்கின.

அதேபோல இவரது சட்ட ஆற்றலைப் பாராட்டி சென்னை பல்கலைக் கழகம் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்தது. இவர் சென்னை பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் படித்தார்.

இந்த நாடக மேதை இன்றுதான் **(10-05-1901)** பிறந்தார்.

❑

கந்தகச் சுரங்கத்தின் அதிபருக்கு மகனாகப் பிறந்தவர்தான் லூகி பிராண்டல்லோ. இவர் ஒரு தலைசிறந்த நாடகப் புல்வராகப் போற்றப்பட்ட போதிலும், தொடக்கக் காலத்தில் இவரது இலக்கியப்பணி கவிதையிலிருந்தே தொடங்கிற்றாம்.

தனது 16 வயதிலேயே கவிதை இயற்றத் தொடங்கி விட்டார். இவர், கவிதை, சிறுகதை, நாடகம் என்று எழுதி வந்தார்.

இவருக்குப் புகழ் சேர்த்தது நாடகங்களே. 47 நாடகங் களை எழுதி, எழுத்துலகில் ஏற்றம் பெற்று நோபல் பரிசையும் பெற்றிருக்கிறார்.

இந்த இத்தாலி நாட்டு எழுத்தாளர் இன்றுதான் **(10.05.1867)** பிறந்தார்.

❑

## மே-11 — 10 நாவலே

கமீலோ ஜோஸிசீலா என்பவர், ஸ்பெயினைச் சேர்ந்த கத்தோலிக்க மதம் சார்ந்தவர்.

பள்ளிக் கல்வியை மட்டுமே பெற்றவர். சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்த இவர், *1942*-இல் 'பாஸ்கல் துவாரத்தின் குடும்பம்' எனும் நாவலை எழுதினார்.

இதைப் படிக்காத ஸ்பானிஷ் மக்களே இல்லை என்று சொல்லலாம். இவர் தம் வாழ்நாளில் பத்தே நாவல்களை மட்டுமே படைத்து உள்ளார்.

அத்தனையும் உலகோரால் போற்றப்பட்டது. இவரது படைப்பாற்றலை உணர்ந்து நோபல் பரிசும் *1989*-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

இந்த எழுத்தாளர் இன்றுதான் ***(11.05.1916)*** பிறந்தார்.

❒

யோகி சுத்தானந்த பாரதியாரும் இன்றுதான் ***(11.05.1897)*** பிறந்தார்.

❒

தத்துவ சிந்தனையாளர் ஜே.கிருஷ்ணமூர்த்தியும் இன்றுதான் ***(11.05.1895)*** பிறந்தார்.

❒

அச்சடிக்கும் முறைகளுள் ஒன்றான 'லைனோடைப்' என்ற முறையைக் கண்டுபிடித்த ஒட்மார் மெர்ஜென்தாலர் என்பவரும் இன்றுதான் ***(11.05.1854)*** பிறந்தார்.

❒

அமெரிக்காவின் புகழ்பெற்ற பாடலாசிரியரான இர்விங் பெர்லினும் இன்றுதான் ***(11.05.1888)*** பிறந்தார்.

❒

சுதந்திரப் போராட்ட வீராங்கனையான அருணா ஆஸாப் அலியும் இன்றுதான் ***(11.05.1888)*** பிறந்தார்.

❒

## மே-12 கவி மேதை

சுல்தான் சஞ்சருடைய அவையில் ஆதரவு பெற்ற புலவர்களில் அலீ அவ்ஹாதுத்தீன் அன்வரியும், அமீர் முயிசியும் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்தார்கள்.

அமீர் முயிசியிடம் சஞ்சர் பெரும் பற்று கொண்டு இருந்தார். ஒரு தடவை சஞ்சர் எய்த அம்பு ஒன்று தற்செயலாக திசைமாறி முயிசியின் மீது பாய்ந்துவிட்டது. அதனால் அவர் இறந்தார்.

இவருடைய திவானில் 16,000 பாட்டுக்கள் உள்ளன. சஞ்சருடைய காலத்தில் மிஹஸ்தி என்றொரு பெண் கவியும் இருந்தாள். இவள் அக்காலத்தில் மிகவும் புகழ்பெற்றவளாக இருந்தாள்.

மகிழ்ச்சி துள்ளும் உள்ளமும், ஒழுக்கம் கெட்ட நடத்தையும் உடைய இப்பெண் துடுக்கான நாவும், கூர்ந்த அறிவும் கொண்டவளாம்.

இவள், சுல்தான் சஞ்சரின் ஆசை நாயகியாகியும்கூட என்கிறார், கௌலத்ஷா. இவளுடைய வெற்றிமிகு ரூபாயாத் எல்லோராலும் போற்றப்பட்டதாம்.

இந்த கவிமேதை இன்றுதான் (12.05.1101) பிறந்தான்.

❑

ஆங்கிலத்தில் 'நான்சென்ஸ்' என்னும் முட்டாள் தனமான வேடிக்கை விநோதக் கதைகளை எழுதியுள்ள எட்வர்ட் லீர் என்னும் புகழ்பெற்ற எழுத்தாளர் இன்றுதான் (12.05.1812) பிறந்தார்.

❑

ஸ்வீடன் நாட்டு அரசரான முதலாம் கஸ்டவ்ஸீ என்பவரும் இன்றுதான் (12.05.1496) பிறந்தார்.

❑

முதன் முதலில் மருத்துவமனைகளில் நர்ஸ் முறையை உருவாக்கிய உலகப்புகழ் பெற்ற நர்ஸான ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்னும் ஆங்கிலேயப் பெண்மணியும் இன்றுதான் (12.05.1820) பிறந்தார்.

## மே-13 இசைக் கலைஞர்

ஆர்தர் சுலிவன், இலண்டனைச் சேர்ந்த இசை மேதை.

இவர், மேடைகளில் பாடுவதோடு, பாடல்களை எழுதி இசை அமைக்கும் வல்லமையும் பெற்றிருந்தார்.

இவர் தந்தையும் இசைக் கலைஞரே. இலண்டன் இராணுவத்தில் பேண்டு மாஸ்டராக இருந்தவர்.

சுலிவன், பெய்ஸ் வாட்டர் என்ற ஊரில் இருந்த இசைப் பயிற்சிப் பள்ளியில் *1858*-இல் படிக்கும்போதே, இசைப் பயிற்சிக் கழகத்தின் சார்பில் பரிசுகளைப் பெற்றிருக்கிறார்.

இப்படி இளமையிலேயே இசை மேதமை இவரிடம் இருந்ததால்தான் சிம்பொனி இசை குறித்து ஆய்வு செய்யவும், பல இசை நூல்களையும் இவரால் எழுத முடிந்திருக்கிறது.

இசை நாடகம் ஒன்றை எழுதி இசையமைத்து, *1883*-இல் அரங்கேற்றமும் செய்ததோடு, சேக்ஸ்பியரின் பல நாடகங் களுக்கு இசையமைத்தும் இவரால் புகழ் சேர்க்க முடிந்தது.

இந்த இசை மேதை இலண்டனில் இன்றுதான் *(13.05.1842)* பிறந்தார்.

□

மலேரியா நோய்க்கு மருந்து கண்டுபிடித்த ரொனால்ட் ராஸ் என்னும் ஆங்கிலோ இந்தியக் குடும்பத்தைச் சேர்ந்த மருத்துவக் கண்டுபிடிப்பாளர் இந்தியாவில் இன்றுதான் **(13.05.1857)** பிறந்தார்.

□

ஓவிய முறைகளுள் ஒன்றான 'கியூபிஸம்' என்ற ஓவிய முறையை பிக்காஸோவுடன் சேர்ந்து கண்டுபிடித்த ஜியார்ஜ் பிராக் என்ற பிரான்ஸ் நாட்டு ஓவியரும் இன்றுதான் **(13.05.1882)** பிறந்தார்.

□

மரியா தெரஸா என்பவர் ஆஸ்திரிய நாட்டு மகாராணி ஆவார். இவரும் இன்றுதான் **(13.05.1771)** பிறந்தார்.

□

## மே-14 மகாராணி

விக்டோரியாவின் தந்தை, ட்யூக் ஆஃப் கென்ட் பிரபுதான். இவர் ஒழுக்கமற்ற சகோதரனோடு சேர்ந்து வாழ்ந்ததால் கடன் சுமை பிரபுவின் தலையில் பாரமாய் ஏறியது. இவர் காலமானதும் விக்டோரியாவின் தாயான இளவரசி லெப்னின் ஜென் மகளை வளர்க்கும் பொறுப்பில் இருந்தார்.

ஆரம்பத்தில் மிகவும் கஷ்ட நிலைதான் இருந்தது. இதற்கு ட்யூக் பிரபு தம் மனைவிக்கு விட்டுச் சென்ற ஏராளமான கடன் சுமைதான்.

விக்டோரியாவுக்கு ஐந்து வயது ஆனதும் பாராளுமன்றம், அவர்களது குடும்பச் சுமையை குறைக்க ஆண்டுதோறும் உதவித் தொகையை வழங்கியது.

இளமையில் இரக்க குணமும், ஈகை உணர்வும், கூர்த்தமதியும், குறும்புத்தனமும் கொண்டவராக இருந்தார். இசையிலும், கலையிலும், படிப்பதிலும் விருப்பம் உள்ளவ ராகவும் இருந்தார்.

விக்டோரியா தக்க வயதில் மகாராணியானதும் சீக்கிரமே வெற்றிச் சிகரத்தைத் தொட்டார். தமது அரசியல் ஆலோசகர் களின் இதயங்களில் இடம் பிடித்தார். தன்னைச் சுற்றியும், நடப்பதையும், நாட்டில் நடப்பதையும் கூர்ந்து கவனித்து வந்தார்.

பாராளுமன்றமே விக்டோரியாவின் அழகில் அடிபட்டது. அவருக்கு 3 இலட்சத்து 85 ஆயிரம் பவுண்ட் ஆண்டுதோறும் வழங்க தீர்மானித்தது. வந்தப் பணத்தைக் கொண்டு தந்தையால் ஏற்பட்ட கடன்களை அடைத்தார்.

இளவரசன் ஆல்பர்ட், தன்னைப்போலவே எண்ணங் களும், செயல்பாடுகளையும் கொண்டிருந்ததால், அவனையே 20 வயதில் மணந்தார். குடும்பத்தை மகிழ்ச்சியோடு நடத்தியது போல் நாட்டு மக்களின் நலனிலும் அக்கறை காட்டினார். அவரது ஆட்சியின் பொன் விழாவில் நாட்டு மக்கள் அவருக்கு மாபெரும் வரவேற்புக் கொடுத்து மகிழ்ந்தனர்.

எண்பத்தியோராண்டுகள் வாழ்ந்த இந்த மகாராணி இலண்டனில் கென்ஸ்ங்டன் நகரில் இன்றுதான் (14-05-1819) பிறந்தார்.

❑

## மே-15 பிராட்வே

ஜோசப் காட்டன், இவர் ஒரு திரைப்பட நடிகர். நடிகர் மட்டுமல்ல, நல்ல திரைக்கதை வசனமும் எழுதக் கூடியவர்.

'ஆர்ஷன் வெல்ஸ்' என்ற நிறுவனத்தோடு இணைந்து 'சிட்டிசன் கேன்' என்ற திரைப்படத்தை எடுத்தார். கதை வசனம் எழுதியதோடு, நடிக்கவும் செய்தார்.

இவரது கதை, வசனத்தோடு வெளிவந்த முதல் படம் 'பிராட்வே' என்பதாகும். இதில் இவர் நடிக்கவில்லை.

'ஃபிளடெல்பியா கதை' என்ற திரைப்படத்தில் நடித்த போது வெளிவந்த படத்தின் வழியேதான் இவரது புகழ் ஹாலிவுட் பட உலகில் பேசப்பட்டது.

இவர், 'வாசிங்டனில் உள்ள பள்ளியில் படித்து, பட்டம் பெற்று விளம்பர பிரதிநிதியாக பணியாற்றினார். இதே பள்ளியில்தான் நடிப்புக் கலையையும் கற்றுத் தேர்ந்தார்.

ஜோசப், நாடகக் கலை திறனாய்வாளராகவும் இருந்தார். இந்த நாடகக் கலைத் திறனாய்வே இவருக்கு நாடகங்கள், எழுதவும் நடிக்கவும் உந்துதலாக இருந்தது.

வர்ஜினியாவிலும், நியூயார்க்கிலும் தனது ஆரம்ப நாடகமான 'பிராட்வே' நாடகத்தை 1930-இல் அரங்கேற்றம் செய்தார்.

நடிகரும், இயக்குநரும், தயாரிப்பாளருமான ஆர்ஷன் வெல்ஸுடன் நட்பு கொண்டார். இவருடைய தொடர்பால் அவரோடு இணைந்து ஒரு நாடகக் கம்பெனியை உருவாக்கினார்.

அதன் வழியே பல நாடகங்களை அரங்கேற்றினார். அப்படி உருவாக்கிய நாடகங்களில் ஒன்று சேக்ஸ்பியர் எழுதிய 'ஜூலியஸ் சீசர்', 'ஷூ மேக்கர்ஸ் ஹாலிடே' என்ற இரு நாடகத் தயாரிப்பால் பெரும் பொருளையும், புகழையும் பெற்றார்.

இவர் முதன் முதலாக தயாரித்த 'டுமச் ஜான்சன்' என்ற நகைச்சுவை திரைப்படம் சிறந்த ஒன்றாகப் போற்றப்படுகிறது.

இந்த நடிகரும், எழுத்தாளரும், தயாரிப்பாளருமான ஜோசப் பீட்டர்ஸ் பெக் என்ற ஊரில் இன்றுதான் (15.05.1905) பிறந்தார். ❑

## மே-16 பாம்பன் பாலம்

சென்னைப் பொறியியற் கல்லூரியின் முதல்வராக பொறுப்பேற்ற முதல் இந்தியர். முதல் தமிழர் என்று நாம் எல்லாம் பெருமைப்படத்தக்கவர்.

ஜி.நாகரத்தினம் ஐயர். இவர் சென்னையில் மட்டும் அல்லாது, அகில இந்தியாவிலுள்ள அனைத்துப் பொறியியற் கல்லூரியிலுமே முதல்வர் பதவியை அலங்கரித்த முதல் இந்தியர் என்ற பெருமைக்கு உரியவர். அதற்கு முன்பெல்லாம் பொறியியற் கல்லூரிகளின் தலைமைப் பதவிக்கு பொறுப் பேற்றிருந்தவர்கள் ஆங்கிலேயர்களே.

இவர் கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் படித்து, 1896-இல் மெட்ரிகுலேஷன் முதல் வகுப்பில் தேர்ந்தார். பின்னர், திருச்சி எஸ்.பி.ஜி.கல்லூரியில் இன்டர்மீடியட்டில் தேர்வு பெற்றவுடன், சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ. சேர்ந்து, 1900-இல் பட்டம் பெற்று இருக்கிறார்.

பின்னர் சென்னையில் பொறியியற் பட்டப் படிப்பை 1903-இல் முடித்து பெரம்பூர் ரயில்வே ஓர்க்சாப்பில் ஓராண்டு காலம் செயல்முறைக் கல்வியை முடித்திருக்கிறார். அப்போது அக்கல்லூரியின் முதல்வராக இருந்தவர் ஆங்கிலேயரான புரோபசர் ஜேம்ஸ்.

முதல் உலகப்போர் மூண்டது. பாம்பன் பாலம் அப்போது இல்லை. பாம்பன் பாலம் கட்டவேண்டியது அரசுக்கு இன்றியமையாததாகிவிட்டது.

பல கம்பெனிகள் அதைக் கட்ட ஒப்புக்கொள்ளாத நிலையில், பாலம் அமைக்கும் பணி ஓஷாஹ்னஸியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இராணுவ முக்கியத்துவம் கொண்ட பணி அது. அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் முன் அவர், நாகரத்தினம் ஐயர் அவர்களிடம் ஆலோசனை நடத்திய பின்னேதான். அந்தப் பாலம் கட்டும் பணியையே ஏற்று இருக்கிறார். பாம்பன் பாலத்தில் இவரது உதவியும் ஆலோசனையும் மிகுதி என்பதை அறிய முடிகிறது.

பின்னர் சில ஊர்களில் பணியாற்றி விட்டு, தான் படித்த - பொறியியற் கல்லூரிக்கே முதல்வராக ஆகியிருக்கிறார்.

இந்த பொறியியற் கலைஞர் குளித்தலையில் இன்றுதான் (16-05-1881) பிறந்தார்.

❐

## மே-17 அம்மை

டாக்டர் எட்வர்ட் ஜென்னர் 1798-ஆம் ஆண்டு பெரியம்மை நோய்க்குத் தடுப்பூசி போடுவதற்குப் 'பசு அம்மை வைரசையே' நோய் எதிர்ப்புச் சக்தியாகப் பயன்படுத்தினார். தடுப்பூசி முறையை உலகில் முதன்முதலில் கண்டறிந்தவர் இவரே.

டாக்டர் ஜென்னர், அம்மை நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் வேளையில், ஒரு இளம் பெண் அவர் வீட்டிற்கு பசும்பால் ஊற்ற வந்தாள். அந்தப் பெண்ணிடம் ஜென்னர், ''பால்காரப் பெண்ணே! ஊரில் அம்மை நோய் பரவியிருக்கு. நீ கவனமாய் இருக்கணும். இல்லாவிட்டால் உன்னையும் அம்மை நோய்த் தொற்றி, உன் அழகிய முகம் கெட்டு, உன் வியாபாரமும் கெட்டப்போய்விடும்'' என்றார்.

அதுகேட்ட அவள், ''கவலைப்படாதீங்க டாக்டர், எனக்கு அம்மை நோய் வரவே வராது'' என்றாள் அலட்சியமாக.

''எப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டார் ஜென்னர்.

''மாட்டுக்கு வருகின்ற அம்மை நோய் எனக்கும் ஒரு தடவை வந்து குணமாகிவிட்டது. அதனால் இனி மனிதர் களுக்கு வருகின்ற அந்நோய் எனக்கு வரவே வராது'' என்றாள்.

''அது எப்படி இவ்வளவு உறுதியா சொல்றே?'' என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண் கூறினாள்: ''இதை எங்க பாட்டி சொன்னாங்க. அவுங்க அனுபவத்தில் இப்படித்தான் நடந்ததாம்'' என்றாள்.

இதைக்கேட்ட ஜென்னருக்கு வியப்பு. அந்தப் பால்காரப் பெண் சொன்னதை ஏற்றுக்கொண்டு, மேலும் தன் ஆய்வைத் தொடர்ந்து செய்து, பசுவின் அம்மை நோய்க் கிருமிகள் மூலம் மனிதர்களுக்கு வரும் அம்மை நோய்த் தடுக்கும் மருந்தைக் கண்டுபிடித்து உலகப்புகழ் பெற்றார், டாக்டர் ஜென்னர்.

இந்த அறிவியல் மேதை இன்றுதான் **(17.05.1749)** பிறந்தார்.

❑

ஸ்பெயின் நாட்டு அரசரான பதின்மூன்றாம் அல்ஃபோன்ஸாவும் இன்றுதான் **(17.05.1886)** பிறந்தார்.

❑

## மே-18 கல்வியும் நல்வாழ்வும்

பெர்ட்ரண்டு ரஸல் அரசக் குடும்பத்தில் தோன்றியவர். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்ததால், தன் சகோதரனுடன் பாட்டியிடம் வளர்ந்தார்கள். அங்கு செவிலித்தாய்கள் மூலம் ஜெர்மனியும், ஆங்கிலமும் கற்றார்கள். ரஸல் இளமையில் படுசுட்டி. அந்த வயதிலேயே யூக்லிட்டின் க்ஷேத்திரக் கணிதத்தின் மீது ஆவல் கொண்டு, அதுமுதல் கணிதத்தில் ஆர்வம் காட்டினார். கணிதத்தோடு தத்துவத் துறையிலும் ஈடுபட்டு அது தொடர்பான நூல்களை ஆழ்ந்து கற்கலானார்.

ரஸல் தனது 18-ஆவது வயதில் கேம்பிரிட்ஜின் டிரினிடிக் கல்லூரியில் சேர்ந்து பட்டப்படிப்பு படித்து, 1894-இல் பி.ஏ. பட்டம் பெற்றார்.

ரஸல், தன் காதல் மனைவியுடன் 1895-இல் பெர்லினுக்குச் சென்று பொருளாதாரத் துறையை ஆழமாக ஆய்வு செய்து, 1896-ஆம் ஆண்டு அவர் எழுதப்போகும் 'ஜெர்மானிய சமதர்ம ஜனநாயகம்' எனும் நூலுக்கான ஆதாரச் செய்திகளை சேகரித்தார். அதே ஆண்டு அந்நூல் வெளி வந்தது. அவரது இரண்டாவது நூலாக இருபதாம் நூற்றாண்டின் முதல் ஆண்டில் வெளி வந்தது. அது அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய விரிவுரைகளின் தொகுப்பாகும். அது ரஸலுக்கு திருப்புமுனையாக அமைந்தது. பல்வேறு நூல்களை எழுதிய ரஸல், அரசியலைத் தவிர்த்து, மக்களின் கல்வியறிவுப் பெருக்கத்தக்க விதத்தில் அவர் எழுதிய நூல்கள் உலகப்புகழ் பெற்றவையாகும். 'கல்வியைப் பற்றி (1926); கல்வியும் நல்வாழ்வும் (1926); திருமணமும் ஒழுக்கங்களும் (1929), கல்வியும் சமுதாய விதிகளும் (1932) ஆகிய நூல்கள் ரஸலின் சிறந்த படைப்புகளாகும். ரஸலின் சுயசரிதை அவரது எழுத்து வன்மைக்கும், இலக்கியத் திறனுக்கும் சான்றாகும். 1950-இல் நோபல் பரிசையும் பெற்றார்.

இவர், இங்கிலாந்தில் இன்றுதான் (18.05.1872) பிறந்தார்.

❒

ரஷ்ய மன்னர் இரண்டாம் ஜார் நிக்கோலஸூம் இன்றுதான் (18.05.1868) பிறந்தார்.

❒

மிகவும் புகழ்பெற்ற கட்டக் கலைஞரான வால்டர் குரோம்பியஸூம் ஜெர்மனியில் இன்றுதான் (18.05.1883) பிறந்தார்.

❒

## மே-19 தங்கமணி

தமிழுணர்வுக்கும், பொது வாழ்வுக்கும் இலக்கணமாக திகழ்ந்தவர் கே.டி.கே.தங்கமணி. 'அப்பழுக்கற்ற ஒரு அரசியல் இயக்கத்தைச் சார்ந்து தன்னை தூய்மையும் மனநிறைவும் உடையவராக வளர்த்துக் கொண்டு இந்த நாட்டின் சமூக மாற்றங்களுக்குரிய வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்டவர் நண்பர் தங்கமணி' என்று மறைந்த குன்றக்குடி அடிகளார், கே.டி.கே.தங்கமணியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

சிறு வயது முதலே இயல், இசை, நாடகத்திலும் ஆர்வம் கொண்ட இவர், பள்ளி இறுதித் தேர்வை முடித்தபின் திருச்சிக் கல்லூரியில் பி.ஏ. ஆனர்ஸ் கோர்ஸில் சேர்ந்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

*1935*-ஆம் ஆண்டு லண்டன் சென்று *1940* வரை உயர்கல்வி பெற்றார்.

இந்நிலையில் அவரின் பற்று தொழிலாளர்களின் நலனுக்காகவும், ஏழை எளியவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவும் இருந்தது.

*1942*-இல் இருந்து *1946* வரை நான்காண்டுகள் தோழர் தங்கமணி மதுரையில் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

தன்னை முழுமையாக கம்யூனிஸ்ட் கட்சியில் இணைத்துக்கொண்ட இவர், அடுத்து வந்த நாட்களில் தொழிலாளர் சம்பந்தப்பட்ட எண்ணற்ற வழக்குகளில் ஆஜரானார்.

அதற்காகப் பலமுறை தொழிலாளர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்று பல துன்பங்களை அனுபவித்தார். இவரது உழைப்பை யாரும் மறக்க முடியாது.

இந்த தொழிலாளர்களின் தோழர் மதுரைக்கு அருகிலுள்ள திருமங்கலத்தில் இன்றுதான் **(19.05.1914)** பிறந்தார்.

❑

வியட்நாம் தலைவரான ஹோசி-மின்னும் இன்றுதான் **(19.05.1890)** பிறந்தார்.

❑

## மே-20 ஜென்னி-ரோமன்

புதைபொருள் ஆய்வாளரின் மகளானவர் சிக்ரிட் ஊன்செட். இவரின் குடும்பம் கிறிஸ்டியானியாவுக்குக் குடி பெயர்ந்தது. இவரது தந்தை அங்கேயுள்ள அருங்காட்சி யகத்தின் இயக்குநராய்ப் பொறுப்பேற்றார்.

இங்குதான் ஊன்செட் தன் இளம் வயதை இன்பமாகச் செலவிட்டிருக்கிறார். அந்த வேளையில் தன் தந்தைக்கு உதவியாகவும் இருந்திருக்கிறார். அப்போது அருங்காட்சி யகத்தில் இருந்த அபூர்வமான பொருட்களை எல்லாம் ஆய்வு நோக்கோடும், கலை நோக்கோடும் கண்டிருக்கிறார்.

அதன் பயனாக அவரது உள்ளத்தில் பழங்கால ஓவியங் களும், கலை நயமிக்க சிற்ப நுணுக்கங்களும், அவைகளைப் பற்றிய வரலாறுகளும், கதைகளும் ஆழமாக வேரூன்றி விட்டன. இந்த அனுபவ நிகழ்வுகளும், தன் வாழ்வில் ஏற்பட்ட அனுபவ சம்பவங்களும்தான் பிற்காலத்தில் ஊன் செட்டிற்கு பெரிதும் துணையாக இருந்திருக்கிறது. அதன் வழியே, பல நாவல்களாய் பிறந்திருக்கிறது.

ஊன்செட்டின் தந்தையின் இறப்பிற்குப்பின் பொருளாதார சிக்கல் குடும்பத்திற்கு வரவே, படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, ஒரு வேலையில் சேர்ந்தார். அங்கு வேலை நேரம் போக, மற்ற நேரங்களில் இலக்கியத் தேடலை வைத்துக் கொண்டார். இந்த இலக்கியத் தேடலால் அவரது இலக்கு புதிய பரிணாமம் பெற்றது எனலாம். அவரது பரிணாம வளர்ச்சி, முயற்சி. வரலாற்றை மையமாகக் கொண்ட ஒரு நாவலாக மலர்ந்தது.

திருமதி 'மார்த்தா அவ்லி' என்ற நாவல் ஊன்செட்டை புகழ் உச்சிக்குக் கொண்டு போனது. மணவாழ்வில் முறிவு ஏற்பட்டபின், அவர் எழுதிய 'ஜென்னி-ரோமன்' என்ற ஓர் அற்புதமான நாவலையும் எழுதினார்.

இவரது படைப்புகள் யாவும் பெண்மையை மையப் படுத்தி அவர்களின் ஆற்றலையும், அறிவின் நுட்பத்தையும் மேன்மைப்படுத்திப் பேசுவதாகவே இருந்தன.

இந்த நார்வீஜிய நாவலாசிரியர் இன்றுதான் **(20-05-1882)** பிறந்தார்.

❐

## மே-21 'நெவர் லவ் ஸ்ட்ரே ஜீசர்'

ஹெரால்டு ராபின்ஸ், புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர். குடும்பம் ஏழ்மையில் இருந்த காரணத்தால் சிறுவயதில் அனாதை விடுதியில் வளர்ந்தார். இவர், ஜார்க் வாசிங்டன் உயர்நிலைப் பள்ளியில் படித்தார். பல்வேறு தொழில்களை செய்து வந்த இவர், சர்க்கரைத் தொழிலையும் பின்னாளில் பெருமளவில் செய்து பெரும் பணம் சம்பாதித்தார்.

ஹாலிவுட் ஸ்டூடியோவில் மேலாளராக பணியாற்றிய அனுபவமும் இவருக்கு உண்டு. ஐந்து பெண்களை மணந்து கொண்டார்.

இவர் எழுத்துலகில் கால் பதித்தபோது, அனாதை விடுதியில் பட்ட துன்பங்களையும், தொழிலில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட துயரங்களையும் தன் படைப்புகளில் மிகுதியாகப் பதிவு செய்திருந்தார். இவர் படைத்த, 'நெவர் லவ் ஸ்ட்ரே ஜீசர்' நூல் உலக அளவில் இன்றும் பேசப்பட்டு வருகிறது.

இந்த எழுத்தாளர் நியூயார்க்கில் இன்றுதான் (21.05.1916) பிறந்தார்.

❑

எலிசபெத்ஃபிரை என்னும் இங்கிலாந்துப் பெண்மணி தான் முதன் முதலில் சிறைச்சாலைகளில் சீர்திருத்தங்களை கொண்டு வந்தவர். இவர் இன்றுதான் (21-05-1780) பிறந்தார்.

❑

தாவர இயல் விஞ்ஞானி கலோலஸ்லின்னாஸ், ஸ்விட்சர்லாந்து நாட்டில் இன்று தான் (21-05-1707) பிறந்தார்.

❑

ஜெர்மனி நாட்டில் புகழ்பெற்ற செதுக்குருவச் சிற்பி, ஆல்பிரீச் டியூரர் என்பவரும் இன்றுதான் (21-05-1471) பிறந்தார்.

❑

ஆங்கிலக் கவிஞரான அலெக்ஸாண்டர் போப் என்பவரும் இன்றுதான் (21-05-1688) பிறந்தார்.

❑

## மே-22 உடன்கட்டை...

இந்திய மறுமலர்ச்சியின் தந்தை. தெய்வ பக்தி மிகுந்த ஆன்மிக நெறியாளர். மனித நேயப் பண்பாளர்.

இந்துமதச் சீர்திருத்தவாதிகளின் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர்.

உடன்கட்டை ஏறுதலை முன்நின்று எதிர்த்தவர். பார்லி, ஹீப்ரு, இலத்தின், கிரீக், பிரெஞ்சு, அரபி ஆகிய மொழிகளில் ஆழ்ந்த பயிற்சியும், தேர்ச்சியும் பெற்றவர் என்றாலும் வங்க மொழி உரைநடையின் தந்தை என்று போற்றப்படும் அளவிற்கு தாய்மொழிப் பற்றுள்ளவர்.

இப்படிப்பட்ட சிறப்புகள் கொண்ட இராஜாராம் மோகன்ராய் மேற்கு வங்கத்தில் இன்றுதான் (22-05-1772) பிறந்தார்.

❑

பிரிட்டிஷ் எழுத்தாளரும் புகழ்பெற்ற 'ஷெர்லாக் ஹோம்ஸ்'யைப் படைத்தவருமான ஸர்.ஆர்தர் கானன்டயல் என்பவரும் இன்றுதான் (22-05-1859) பிறந்தார்.

❑

ஜெர்மனியின் புகழ்பெற்ற இசையமைப்பாளரான ரிச்சர்ட் வாக்னரும் இன்றுதான் (22-05-1813) பிறந்தார்.

❑

பிரிட்டிஷின் புகழ்பெற்ற நடிகரான லாரன்ஸ் ஆலிவரும் இன்றுதான் (22-05-1907) பிறந்தார்.

❑



## மே-23 சீசர்

அலெக்சாந்திரியாப் போருக்குப்பின் ஜூலியஸ் சீசர் எகிப்தின் அரசுரிமையைக் கிளியோபாத்திராவிற்கும், அவளது தம்பிக்கும் வழங்க விரும்பி, அவ்விருவரையும் தன்னிடம் வரவழைத்து "என்னுடைய ஆட்சிக்குட்பட்ட நாடாக நான் எகிப்தைக் கருதியபோதிலும், இந்நாட்டின் குடியரசின் உரிமையை உங்களிருவருக்கும் அளித்து, உங்களைக் கூட்டாட்சி செய்யுமாறு ஆணையிடுகிறேன்!" என்று கூறி, சீசர் அவ்விருவருக்கும் அரசுரிமையை வழங்கினான்.

ஜூலியஸ் சீசர் எகிப்தில் தங்கியிருந்தபோது, அந்நாட்டு அரசியான கிளியோபாத்திராவுடன் இருந்து இன்பமாகவும், வேடிக்கையாகவும் காலங்கழித்தான் என்று வரலாறு சொல்கிறது.

இந்த மன்னன் இன்றுதான் (**23.05.கி.மு.102**) பிறந்தான்.

❐

தாவர இயல் விஞ்ஞானியான கரோலஸ்லின்னாயஸ் என்பவர், சுவிடிஷ் நாட்டில் இன்றுதான் (**23-05-1707**) பிறந்தார்.

❐

அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது துணிச்சலுடன் செயல்பட்ட தளபதி 'ஆம்புரோஸ் ஈ பர்ன்சைட்' என்பவரும் இன்றுதான் (**23-05-1824**) பிறந்தார்.

❐

பிரடெரிக் ஆன்டன் மெஸ்மர் என்பவர்தான் ஹிப்னாடிச முறையைக் கண்டபிடித்தவர். ஜெர்மானிய டாக்டரான இவரும் இன்றுதான் (**23-05-1733**) பிறந்தார்.

❐

## மே-24 பிராவ்தாவில்

மிக்கேல் ஷாலுகாவ், விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். ரஷ்யாவில் தோன்றிய புரட்சியாலும், உள்நாட்டுக் கலவரத்தாலும் பள்ளிப் படிப்பை நிறுத்த வேண்டிய சூழ்நிலை யானது.

அவரது பதினைந்தாவது வயதில் பீரங்கிப் படையில் முக்கியப் பொறுப்பில் பணியாற்றினார்.

சிறு வயதில் அவ்வப்போது சிறுசிறு கவிதைகளை எழுதுவார். எழுதியதை தானே படித்து மகிழ்வார். இந்த பயிற்சியும் முயற்சியும் காலப்போக்கில் வளர்ந்தது.

செஞ்சேனையில் பணியாற்றிய ஷாலுகாவ் 1924-இல் கோடையிலே வெஷன்ஸ்கயாவுக்குத் திரும்பினார்.

அங்கு சிறிது காலம் ஓய்வு பெற்றார். அப்படியே இலக்கியப் பணியிலும் ஈடுபடத் தொடங்கினார்.

அப்போது எழுதப்பட்ட கவிதைகளும், சிறுகதைகளும் 1925-ஆம் ஆண்டிலேயே புத்தகங்களாக வெளிவந்தன.

முதல் படைப்பாக ‘டானின் கதைகள்’ என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது.

அந்தப் புகழ் மிதப்பில் அமிழ்ந்து போகாமல் மேலும் உற்சாகமாக எழுதத் தொடங்கினார். 14 ஆண்டுகளின் முயற்சியால் - உழைப்பால் ‘டிக்னிடான்’ எனும் பெயரில் நாவல் வெளிவந்தது.

இவரது அடுத்தப் படைப்பும் ரஷ்ய இலக்கிய படைப்பாளர்களால் பெரிதும் மதிக்கப்பட்டது. அந்த நாவல், ரஷ்ய தேசிய இதழ் ‘பிராவ்தாவில்’ தொடர் கதையாக வெளிவந்து, ஷாலுகாவை இலக்கிய சிகரமாக உயர்த்தி நின்றது.

இந்த மாபெரும் இலக்கிய கர்த்தா தென் ரஷ்யாவிலுள்ள் டான் மண்டலத்தைச் சேர்ந்த வெஷன்ஸ்கயா என்ற இடத்திலுள்ள காஸக் என்ற கிராமத்தில் இன்றுதான் **(24-05-1905)** பிறந்தார்.

❑

## மே-25 டிட்டோ

வரலாற்றில் இடம் பெறாமல், வரலாற்றையே உருவாக்குவதில் முன் நின்றவர், மார்ஷல் டிட்டோ. உலகப் போரின் போது ஹிட்லரின் படைகள் தலைநகர் பெல்கிரேடைத் தரைமட்டமாக்கியபோது மக்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பி வீரப்போர் புரிய ஊக்கமளித்தவர். யூகோஸ்லாவிய நாட்டின் வரலாறு டிட்டோவின் தியாக வரலாறே யாகும்.

மக்களைச் சந்தித்து அவர்களோடு ஒன்றிப் பழகுவார். நாட்டின் ஒவ்வொரு சிறு பகுதிக்கும் சென்று வருவதிலும் மகிழ்வு கொண்டவராக இருந்தார். அணிசேரா நாடுகளின் இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களில் இவரும் ஒருவர். வல்லரசுகள் பக்கம் வளைந்து கொடுக்காமல் தமது நாட்டு மக்களின் நலன் கருதி பாடுபட்ட பண்பானத் தலைவராக இருந்தார்.

உறவினர் வீட்டுக்கு வருவதுபோல் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானோர் அவரிடம் வந்து பேசிவிட்டுப் போவார்கள். மக்களை ஆள்பவராகத் தம்மைக் கருதாமல் அவர்களில் ஒருவராக நடந்து கொண்டது அவருடைய சிறப்பாகும்.

இந்தச் சீரியத் தலைவர் இன்றுதான் (25-05-1892) பிறந்தார்.

❐

அமெரிக்கச் சிந்தனையாளரும், கவிஞருமான ரால்ப் வால்டோ எமர்சனும் இன்றுதான் (25-05-1803) பிறந்தார்.

❐

வீரர், ரன்பீர்குமார்வாசன் 1990 ஆம் ஆண்டு வரை, ஒரு இலட்சம் முறை, கிளைடிங் விமானத்தில் பறந்தார். 1954-இல் டெல்லி கிளைடிங் கிளப்பில் இருந்து பறக்கத் தொடங்கிய வாசன், 104,790 முறை பறந்திருக்கிறார். விண்ணில் பறந்த மொத்த நேரம், 6,900 மணி. இப்படி புகழ்பெற்ற இந்த இந்திய கிளைடிங் வீரரும் இன்றுதான் (25-05-1930) பிறந்தார்.

❐

## மே-26 கான்வித் த விண்டு

ஜோல்சன் - இவர் அமெரிக்க இசைக் கலைஞர். 20-ஆம் நூற்றாண்டில் புகழ்மிக்க இசை மேதை இவரே என்று போற்றப்பட்டவர். மேடையில் இசையோடு நடிக்கவும் செய்து பார்க்கும் ரசிகர்களை தன்வசப்படுத்தக்கூடிய ஆற்றல் பெற்றவர். 'ஜாஸ் சிங்கர்' என்ற திரைப்படத்தில் இவர் நடித்தார். அது இவருக்குப் பெரும் புகழை 1927-இல் ஏற்படுத்தித் தந்தது.

இந்தத் திரைப்படத்தில் இவர் தோன்றும்போது முகம் முழுதும் கறுப்புக் முகமுடியும் வெள்ளை கையுறையும் அணிந்து கொண்டு வந்து ஒரு பாடலைப் பாடுவாராம். இந்தக் காட்சி பலரைக் கவர்ந்தது. இவர் இசை மேடையில் தோன்றும்போது, தான் எங்கே எங்கே பாடினார். யார் யார் பாராட்டினார்கள், எந்தெந்த படங்களில் நடித்தார் என்பதை எல்லாம் வரிசையாக சொல்கின்ற பழக்கத்தைக் கொண்டிருந்தார்.

அவர் காலத்தில் வாழ்ந்த சிறந்த பத்து இசை மேதைகளில் இவர் நான்காவது இடத்தில் இருந்திருக்கிறார். இவர் கன்சர்வேட்டி காட்சியைச் சேர்ந்தவர். அக்கட்சியின் தலைவர் ஹெல்வின் கூலிஜ். இவர் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர். இவர் கலைத் தொண்டிற்கு ஆதரவு அளித்து வந்தார்.

நடிகையும், நடன மங்கையுமான ரூபிக்கீரரை இவர் திருமணம் செய்து கொண்டார். 12 ஆண்டுகள் அவளோடு வாழ்ந்து, பின் அவளை விட்டுப் பிரிந்தார். வானொலியிலும், மேடைகளிலும் பல நூறு நிகழ்ச்சிகளை நடத்தி மக்கள் மனதில் இடம் பிடித்தார்.

இந்த இசை மேதையின் வாழ்க்கை வரலாற்றை கொலம்பியா பிக்சர்ஸ் திரைப்படமாக எடுத்தபோது, அப்படத்தில் சிறப்பு விருந்தினராக ஒரு காட்சியில் நடிக்கவும் செய்தார். 'கான்வித் த விண்டு' என்ற படம்தான் அந்நாட்டில் வசுலைக் குவித்த படம். அதே அளவில் இந்தப் படமும் வசூலைத் தொட்டது.

இந்த இசை மேதை அமெரிக்காவில் இன்றுதான் (26.05.1885) பிறந்தார்.

❒

## மே-27 தணிகையை மீட்டவர்

தணிகை மீட்ட தளபதி கே.விநாயகம், இவர் பலமுறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967-இல் சட்டமன்றத்தில் கொறடாவாகவும் இருந்தார். தமிழ் வளர்ச்சி கழகம் அமைத்து தெலுங்கு மொழி ஆதிக்கத்திலிருந்த சித்தூர், புத்தூர், திருத்தணி நகர் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் மத்தியில் தமிழ்மொழியையும் பற்றையும் வளர்த்தார்.

பதினோரு மாவட்டங்களுடன் அமைக்கப்பட்ட ஆந்திர மாநிலத்துடன் தமிழர்கள் இணைக்கப்பட்டனர். தமிழர்கள் அதிகம் வாழும் இந்தப் பகுதிகள் ஆந்திராவுடன் இணைக்கப் பட்டதை எதிர்த்தும், அப்பகுதிகள் தமிழ்நாட்டோடு இணைக்கப்பட வேண்டும் என்றும் ம.பொ.சி.யுடன் போராடினார்.

1952-இல் சட்டமன்ற உறுப்பினராக இருந்து மிகப்பெரிய அளவில் மக்களைத் திரட்டி இவர் திருத்தணி மீட்டுப் போராட்டத்தை நடத்தினார். போராட்டம் வலுவடைவதைப் பார்த்த பாரதப் பிரதமர் தனி எல்லைக் கமிஷன் ஒன்றை நியமித்தார். தூதுக்குழுவிற்கு விநாயகம் தலைமை ஏற்று டில்லி சென்று பிரதமர் நேருவை நேரில் பார்த்து திருத்தணி மக்களின் கோரிக்கையை வலியுறுத்தினார்.

இவர் தலைமையேற்று பலருடன் இணைந்து - தொடர்ந்து நடத்திய பேச்சு வார்த்தை மற்றும் போராட்டங்களின் விளைவால் 01-04-1960-இல் திருத்தணி வட்டாரம் முழுவதும் தமிழ்நாட்டோடு இணைக்கப் பட்டது.

பின்னர் திருத்தணி வட்டார வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகளையும் - சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் தமிழர் தலைவர் என்ற முறையிலும் முன்னின்று செய்து கொடுத்தார்.

திருத்தணியை மீட்டுத் தமிழகத்தோடு சேர்த்த இவருக்குத் திருத்தணியில் முழு உருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது. இவர், வழக்கறிஞராகவும் இருந்தார்.

இந்த எல்லைப் போர் வீரர் திருத்தணியில் இன்றுதான் (27-05-1914) பிறந்தார்.

❑

## மே-28 மனித மரம்

பாட்ரிக் ஒயிட், உயர்கல்விப் படிப்பை முடித்ததும் இங்கிலாந்து சென்று 1932-இல் கேம்பிரிட்ஜிலுள்ள அரசர் கல்லூரியில் சேர்ந்து ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு இலக்கியங்கள் படித்தார். விடுமுறை நாட்களில் ஜெர்மனுக்கும் பிரான்சுக்கும் சென்று, அந்நாட்டு மொழிகளை நன்கு கற்றார்.

இந்தக் காலகட்டத்தில் இலக்கியவாதியாக உலாவரத் தொடங்கி கவிதைகள் எழுதினார். 1930-இல் முதல் கவிதை தொகுப்பைக் கொண்டு வந்தார். ஒயிட் 1935-இல் பி.ஏ.பட்டமும் பெற்றார். இங்கிலாந்திலேயே தங்கினார். கவிதை, சிறுகதை, நாடகம் என்று முழுவீச்சில் எழுதத் தொடங்கினார். 1939-இல் முதன்முதலாக 'பரவசமிக்கப் பள்ளதாக்கு' எனும் நாவலை வெளியிட்டார்... பொருளும் சிறிது புகழும் சேர்ந்தது. அதே நிலையில் அமெரிக்காச் சென்றார். 'மடிந்தவனும் உயிர்வாழ்பவனும்' என்ற நாவலை 1941-இல் எழுதி முடித்தார். இரண்டாவது உலகப் போர் தொடங்கவும் ஒயிட் ராயல் விமானப்படையில் சேர்ந்தார். 1945-இல் போர் முடிந்ததும் நாடகம் எழுதத் தொடங்கினார். 'அபிசீனியா வுக்குத் திரும்பியது' எனும் நாடகமும், 'பிரேத ஊர்வலம்' எனும் நாடகமும் ஒரே காலகட்டத்தில் எழுதினார்.

1948-இல் ஒயிட் எழுதிய 'அத்தையின் கதை' - இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் மிகுத்துப் பாராட்டப் பட்டு, உயர்ந்த படைப்பாளி என்ற அளவில் புகழ்ந்து பேசப்பட்டு, உலகப்புகழ்பெற துணை நின்றது. 1957-இல் வெளி வந்த 'மனிதமரம்' எனும் நாவல் ஒரே நேரத்தில் பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் வெளிவந்து, உலக நாவலாசிரியர்களின் பட்டியலில், ஒய்ட்டை இணைத்தது.

இந்த பல்துறை எழுத்தாளர் இங்கிலாந்தில் இன்றுதான் (28-05-1912) பிறந்தார்.

❑

அயர்லாந்து நாட்டுக் கவிஞரும் இசையமைப் பாளருமான தாமஸ்மூர் என்பவரும் இன்றுதான் (28-05-1779) பிறந்தார்.

❑

அமெரிக்க நாட்டு இயற்கை ஆய்வாளர்களுள் ஒருவரான ஜீன் லூயிஸ் அகாஸிஸ் என்னும் விஞ்ஞானியும் இன்றுதான் (28-05-1807) பிறந்தார்.

❑

## மே-29 இளையவர்...

கென்னடியின் பெற்றோர் அயர்லாந்திலிருந்து வந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள். கோடீஸ்வரர்கள். கென்னடி உலக வரலாற்றை நன்கு அறிந்தார்.

அதற்காக பல்வேறு நூல்களைத் தேடித்தேடிப் படித்தார். பல நாடுகளுக்கு பயணப்பட்டும் உண்மை நிலையை அறிந்து கொண்டார். அதனால், மக்களுடைய பிரச்சனைக்ளை எளிதாகப் புரிந்து கொண்டார்.

உலக அமைதிக்கு, நாடுகளிடையே நட்புறவு இருந்தால் தான் உலகம் மேம்படும் என்று முடிவு செய்தார். அதற்காக பாடுபடவே முனைந்தார்.

இரண்டாவது உலகப்போர் முடிந்ததும் ஜனநாயகக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

1960-இல் அக்கட்சியில் வளர்ந்த பலரது ஆதரவையும் பெற்றார். அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றார்.

இளைஞர்களும், கறுப்பின மக்களும் தங்களுடைய எதிர்கால வழிகாட்டி என்று எண்ணினார்கள்.

புதியதோர் உலகை அவர் கொண்டு வருவார் என்று நம்பினார்கள். அயல்நாட்டுக் கொள்கையை மிக்க சாமர்த்தியமாகவும் உறுதியுடனும் கையாண்டார்.

கியூபாவிலிருந்து இரஷ்யா தனது ஏவுகணைகளை விலக்கிக் கொள்ளுமாறு 1962-இல் மேற்கொண்ட நடவடிக்கையை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இளையவர் ஜான் ஃபிட்ஜெரால்ட் கென்னடிதான்.

இப்பதவியை ஏற்ற முதல் கத்தோலிக்கர் என்பது கூடுதலான செய்தியாகும்.

உலக அமைதியை விரும்பி வாழ்ந்து வந்த இவர், அயர்லாந்தில் பிறந்து அமெரிக்காவில் குடியேறியவர். இவர் இன்றுதான் (29.05.1917) பிறந்தார்.

## மே-30 4000 பேர்

பென்னிகுட்மேன் - கிளார்நெட் இசைக் கருவியில் புகழ்பெற்ற கலைஞர். இவர் சிகாகோவில் பிறந்தவர்.

இளம் வயதிலேயே கிளார்நெட் கருவியை இசைக்கக் கற்றுக் கொண்டார். இவரது 16 வயதில் சிகாகோவில் இருந்த இசைக்குழு ஒன்றில் சேர்ந்து நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று வந்தார்.

இவரது தந்தை கூலி வேலை செய்து வந்தார். அவர் உழைத்து களைத்து வருகின்றபோது அவரைப் பார்த்து பல நேரம் மனம் கலங்கிப் போய்விடுவாராம். 'இந்த வேலைகளை நீங்கள் செய்ய வேண்டாம். நான் சம்பாதித்து தங்களைக் காப்பாற்றுகிறேன்' என்று சொல்வாராம்.

உழைக்க இவர் முனைந்து 'போலக்' என்ற கலைக் குழுவினுள் சேர்ந்து பணம் சம்பாதித்துக் கொண்டு இருக்கும் நிலையில், ஒருநாள் இவரது தந்தை விபத்து ஒன்றில் இறந்துவிடுகிறார்.

இதன் பின்னர் தன் சகோதரருடன் சேர்ந்து பல இசை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். இந்த நிலையில் இருவருக் குள்ளும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு சகோதரர் பிரிந்து போய் தனியே நிகழ்ச்சி நடத்துகிறார். இவரும் தனியே நடத்துகிறார். இந்த நிலையில் இவருக்கு புகழும், பொருளும் வந்து குவிகிறது. அதே வேளையில், சகோதரர் காரில் அடிப்பட்டு இறந்து போகிறார்.

அந்த நிலையில், 'இப்போது புகழோடும், பொருளோடும் நாம் இருக்கும்போது தந்தையும், தனையனும் நம்மோடு இல்லையே' என்று ஏங்கித் தவிக்கிறார். அதுவே இவர் மனநிலையை மாற்றிப்போடுகிறது.

இடம் விட்டு இடம் மாறுகிறார். நியூயார்க்கிற்குச் செல்கிறார். அங்கே வானொலியிலும் இசைக்குழுவிலும் இணைந்து செயல்படுகிறார். பின்னர், தானே ஒரு இசைக்குழுவினை அமைத்து நடத்தி வருகிறார்.

பாலோமார் என்ற 4000 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய பெரிய அரங்கில் இவரது இசை நிகழ்ச்சி நடக்கிறது. அப்போதே இவர் புகழ் உலக அரங்கில் அரங்கேறுகிறது.

இவர் சிகாகோவில் இன்றுதான் (30.05.1909) பிறந்தார். ❐

## மே-31 காலத்தின் கோலம்!

ஒருவன் வாழும்போது மதித்துப் போற்றாததும், அவர் இல்லாதபோது போற்றிப் புகழ்வதும் மக்களின் இயல்பாகப் போய்விட்டது. இப்படித்தான் அமெரிக்க நாட்டுக் கவிஞர்களில் முதன்மையானவர் என்று இன்று இவரைப் போற்று கிறார்கள். ஆனால் அவர் வாழும்போது யாருமே மதித்தது இல்லை. அந்தக் கவிஞர் வால்ட் விட்மன்தான்.

இவர் சிறுவனாக இருந்தபோது டாக்டரிடம், வக்கீலிடம் சென்று வேலை பார்த்தார். கொஞ்ச காலம் ஆசிரியர் பணியிலும், அச்சுக் கூடத்திலும் வேலை பார்த்திருக்கிறார். எந்த வேலையிலும் இதயம் படியவில்லை. இறுதியாக பத்திரிகைத் துறையைத் தெரிவு செய்தார். இத்துறையில்கூட ஒரே இடத்தில் இன்றி, மாறிக்கொண்டே இருந்தார்.

*1855*-இல் 'புல் இதழ்கள்' என்ற முதல் கவிதைத் தொகுப்பு வெளிவந்தது. அடுத்து கட்டுரைத் தொகுப்பு. அவருடைய எழுத்துக்கள் உயிர்த் துடிப்போடு இருந்ததோடு, மற்ற எழுத்தாளர்களின் போக்கில் இருந்து புது பாணியில் வலிமையோடு இருந்தது.

மனவலிமை மிக்கவராகவும், தற்பெருமையற்றவராகவும், அடக்கம் நிறைந்தவராகவும் இருந்தார். மனிதன் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர், இக்கவிஞர்.

காலத்தின் கோலத்தால் வாதநோய் வந்து பாயோடும் நோயோடும் ஒட்டிப் போனார். நண்பர்கள் உதவியினால் வறுமையைத் தொடாது தப்பித்துக் கொண்டார்.

அக்காலக் கவிஞர்களின் பாராட்டுக்கள் விட்மனுக்குக் கிடைத்த போதிலும், மக்களிடையே பரவலாகப் பேசப்பட வில்லை. தன் வாழ்க்கை வரலாற்றையும் நூலாக எழுதினார். அவரின் சிறந்த கவிதைகளின் தொகுப்பு 'மனிதனைப் பாடுவேன்' என்கிற தலைப்பில் தமிழில் வெளி வந்திருக்கிறது. இவர் திருமணமே செய்து கொள்ளாதிருந்தார்.

அமெரிக்கக் கவிஞரான இவர், இன்றுதான் **(31.05.1819)** பிறந்தார்.

# பெண்தானே...




அவள் அமெரிக்காவில் புகழ்பெற்ற கவர்ச்சி நடிகை. தன் அழகால் பல செல்வந்தர்களையும், அறிவாளிகளையும் தன் காலடியில் காத்திருக்கச் செய்தவள்.

அவள் முக தரிசனத்திற்காக தவம் கிடந்த இளைஞர் கள் பல இலட்சம். உலகம் முழுதும் கனவு கன்னியாகத் திகழ்ந்தவள்.

அவள் மறைந்தாள். ஆண்வர்க்கமே கண்ணீர்ச்சரம் தொடுத்தது; சிலர் தங்கள் சிந்தனையைத் தொலைத்து வீதியிலே அலைந்தனர்.

அதைக்கண்டு அமெரிக்கப் பெண் ஒருத்தி தன் கணவரிடம் ''ஏன்தான் இப்படி ஒரு நடிகைக்காக கவலைப்படுகிறார்களோ...! அவளும் ஒரு பெண்தானே.... அதுவும் எங்களைப் போல்...'' என்றாள்.

''அது தவறு, டார்லிங், அவள் சாதாரண பெண் அல்ல. பெண்ணினத்தின் பிரிஸிடெண்டாக அல்லவா இருந்தாள்'' என்றார், அவள் கணவர்.

இப்படி அழகால் உலகாண்ட மர்லின் மன்றோ அமெரிக்காவில் இன்றுதான் **(01-06-1926)** பிறந்தாள்.

❑

பிரெஞ்சு நாட்டு ஆய்வுப் பயண வீரரான ஜாக்குஸ் மார்க்குயிட் என்பவரும் இன்றுதான் **(01-06-1637)** பிறந்தார்.

❑

ஜான் டிரிங்க்வாட்டர் என்பவர் புகழ்பெற்ற ஆங்கில நாடகாசிரியர். இவரும் இன்றுதான் **(01-06-1882)** பிறந்தார்.

❑

## ஜூன்-2 டைனமோ

இன்று மனிதர்களால் ஒரு மணி நேரம் மின்சாரம் இல்லாமல் இயங்க முடியுமா என்றால்... சிறிது கடினம்தான் என்று சொல்ல வேண்டியிருக்கும்... மின்சாரத்தின் பயன்பாடு அப்படிப்பட்டதாகிவிட்டது. இந்த அறிவியல் அற்புதத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர், மைக்கேல் பாரடே.

மைக்கேல் பாரடே, ஒரு கொல்லரின் மகனாகப் பிறந்தார். இளமையிலேயே தந்தையை இழந்தார். தாயாரால் வளர்ந்தார். பொருளாதார சிக்கலால், அதிகம் படிக்க இயலவில்லை. அதனால் பத்திரிகை விற்பனை செய்யும் கடை ஒன்றில் எடுபிடிப் பையனாக வேலையில் சேர்ந்தார். அங்கே அவருக்கு கடையைப் பெருக்குவதும், துடைப்பதும், வீடு வீடா கொண்டு சென்று பத்திரிகைகளைக் கொண்டுபோய் போடுவதும், இதற்கிடையே பழைய புத்தகங்களை பைண்டிங் செய்யும் வேலையையும் செய்து வந்தார். அந்த வேளையில், அங்கே வரும் புத்தங்களில் அறிவியல் நூல்களைத் தேடிப்பிடித்துப் படித்தார். அதனால், அறிவியல் கண்டுபிடிப்புகளில் அவர் சிந்தனை வளரத் தொடங்கியது.

இந்த வேளையில் விஞ்ஞானி ஹம்பரிடேவியின் சொற்பொழிவைக் கேட்ட பாரடே, அறிவியல் துறையில் அவரிடம் வேலை செய்ய விரும்பினார். பத்திரிகைப் பணியை விட்டார். அவரிடம் போய் சேர்ந்தார். பாரடேயின் முயற்சியும், உழைப்பும் ஹம்பரிடேவிக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அதனால், தமது சோதனைச் சாலையில் உதவியாளராகப் பணி உயர்வு அளித்தார். பாரடே உற்சாகமானார். இந்த வேளையில் 1813-இல் ஹம்பரிடேவி ஐரோப்பியாவிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது அவருக்கு உதவியாளராக பாரடேயையும் அழைத்துச் சென்றார். அப்போது இளம் விஞ்ஞானியான பாரடேயின் வயது இருபத்திரண்டே.

இப்பயணத்தால் தன் ஆய்வு அறிவைப் பெருக்கிக் கொண்டார். இன்று நமக்கெல்லாம் தெரிந்துள்ள 'டைனமோ' என்னும் மின்விசைத் தயாரிப்பு சாதனத்தை, பல்வேறு சோதனைகளுக்கிடையே கண்டுபிடித்து வழங்கினார்.

இந்த அறிவியல் மேதை இலண்டன் - நியூயிங்டன் என்னும் இடத்தில் இன்றுதான் (02-06-1791) பிறந்தார். ❐

## ஜுன்-3 இராணுவத்தலைவர்

ஜெபர்சன்டேவிஸ், அமெரிக்காவின் போர்ப்படை வீரர். அதே நேரம் அரசியல் ஈடுபாடும் கொண்டிருந்தார்.

அமெரிக்க உள்நாட்டுப் போரில் அரசியல் கூட்டாட்சி அமைப்புகளுக்கு தலைமை ஏற்று நடத்தியபோது இவரது புகழ் கூடுகிறது.

இந்தப்போருக்கு முன், யு.எஸ்.மன்றத்திலும், செனட்டிலும், முசிசிபி அரசமைப்பிலும் பணி செய்து வந்தார்.

மெக்சிகன், அமெரிக்கன் போரில் தளபதியாக பொறுப்பேற்றிருந்தார். யு.எஸ்.கேபனட்டில் பாதுகாப்புத்துறை செயலராக இருந்தார்.

இவரோடு பிறந்தவர்கள் ஒன்பதுபேர். இவர் பத்தாவதாகப் பிறந்தவர்.

அமெரிக்க வரலாற்றில் இவரது குடும்பத்திற்கு நீண்ட பாரம்பரியம் இருந்திருக்கிறது. இவரது தாத்தா அரசியல் துறையில் பணியாற்றியவர்.

இவரது தந்தையும், தாய் மாமனும் இராணுவத்தில் பணிபுரிந்திருக்கிறார்கள்.

*1818*-இல் வாசிங்டனிலுள்ள மிசிசிபி கல்லூரியிலும் டிரான்சில்வேனியா பல்கலைக் கழகத்திலும் பட்டம் பெற்றார்.

படித்து முடித்ததும் இராணுவக் கல்விக் கழகத்தில் சேர்ந்து பயிற்சியை நான்கு ஆண்டில் முடித்து, இரண்டாவது லெட்டினண்டு பதவி வகித்தார்.

இப்படி, படிப்படியாக இராணுவத்தில் உயர்ந்து இராணுவத் தலைவராக பொறுப்பேற்றார்.

இந்த இராணுவத் தலைவர் அமெரிக்காவில் இன்றுதான் ***(03.06.1808)*** பிறந்தார்.

❐

**கி**ரேட் பிரிட்டனின் ஐந்தாம் ஜார்ஜ் மன்னனும் இன்றுதான் ***(03.06.1865)*** பிறந்தார்.

❐

## ஜுன்-4 டாக்டர் நாயுடு

சேலத்தில் பிறந்து, மதுரையில் இறுதிக் காலத்தைக் கழித்தவர், டாக்டர் வரதராஜுலு நாயுடு. இவர் தொழிலாளர் இயக்கத்தைச் சார்ந்தவர் மட்டுமல்ல, விடுதலைப்போர் வீரரும் கூட. கோவையில் படிக்கும் போதே - மாணவராக இருக்கும்போதே வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் நடத்தியவர்.

*1917*-இல் தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் யூனியனை நாகையில் துவக்கியவர்களில் டாக்டர் நாயுடுவும் ஒருவர். இவர் 'பிரபஞ்சமித்திரன்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தபோது அதன் வழியே அந்நியரை எதிர்த்து காரசாரமாக எழுதியதோடு அரசின் தொழிலாளர் விரோதப் போக்கையும் கடுமையாகக் கண்டித்து எழுதினார்.

அதைக்கண்ட அன்றைய ஆட்சியாளர், பத்திரிகைக்கு ரூபாய் *1000* அபராதமாகப் போட்டது. போராட்டக் கூட்டம் முடிந்து அவர் வரும் வேளையில் கைது செய்து சிறையிலும் போட்டது. பத்திரிகை வழக்கில் ராஜாஜி வழக்காடி வென்றார். அவருக்கு விடுதலையும் பெற்றுத் தந்தார்.

வழக்குப் போட்டு சிறையிலடைத்ததைக் கேள்விப் பட்டதும் மதுரை பொது மக்களும், தொழிலாளர் தோழர்களும் கொதித்தெழுந்தனர். அதைக்கண்டு ரிசர்வ் போலீஸ் வந்து தடியடியும் துப்பாக்கிச் சூடும் நடத்தினர்.

அப்போது நீலமேக சுப்பையா என்ற இளைஞர் குண்டுக்கு இரையானார்; வீரமரணம் அடைந்தான்; அந்த வேளையில் ராஜாஜியும், ஜார்ஜ்ஜோசப்பும் நாயுடுவோடு இருந்தனர். அப்போது அந்த இளைஞன் மரணத்தின்போது - 'டாக்டர் நாயுடு அடிபட்டுச் சாகாமல் தப்பியதற்காக நான் சந்தோசப்படுகிறேன்' என்றான்.

நாயுடு கைது செய்யப்பட்டார்; மதுரை சிறையில் கொடுமைப்படுத்தப்பட்டார். தான் பட்ட கொடுமைகளை எல்லாம் ரகசியமாக பத்திரிகைக்கு எழுதினார்.

*1926*-இல் அகில இந்திய 'ட்ரேட் யூனியன் காங்கிரஸ் துவக்கப்பட்டது. அதைத் துவக்கியவர்களில் நாயுடுவும் ஒருவர்.

இந்தப் போராட்ட வீரர், சேலம் - ராசிபுரத்தில் இன்றுதான் **(04-06-1887)** பிறந்தார்.

## ஜுன்-5 காயிதே மில்லத்

1947-இல் நம் நாடு அந்நியர்களிடமிருந்து விடுதலை அடைவதற்கு முன்னே, அரசியலில் ஈடுபட்டு நாட்டுக்காகவும், மொழிக்காகவும், போராடிய போர் மறவர், காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாகிப் அவர்கள். அவர் ஒரு மாமனிதர்; அரசியல் ஞானி; தேசிய ஒருமைப் பாட்டின் தந்தை.

நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே சட்டமன்றத்தில் இடம் பெற்று, அதற்குப் பிறகு அரசியல் நிர்ணய சபையில் அவர் முன்னணி வகித்தது காலத்தால் அழியாத கல்வெட்டு - வரலாறு.

டில்லி நகரில், அரசியல் நிர்ணய சபையில் எல்லாரும் வியந்து போற்றும் வகையில் அரும்பணியாற்றிய செயல் மறவர் அவர். 1947-ஆம் ஆண்டிலேயே புகழ் மிக்க அரசியல் தலைவராக விளங்கினார்.

அப்போது சென்னை மாகாணம் பிரிக்கப்படாத பெரும் மாநிலமாக சென்னை ராஜதானி என அழைக்கப்பட்டது. அந்த மாநிலத்தின் எதிர்க் கட்சித் தலைவராகச் சட்டமன்றத்தில் தனிச் சிறப்புடன் விளங்கினார், அவர்.

1952-வரை, சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் காயிதே மில்லத்தே எதிர்க்கட்சித் தலைவர். அவருடைய நாட்டுப் பற்றையும், அரசியல் அறிவையும் அறநெறிக் கோட்பாடு களையும் பாராட்டாத முதல்வர்களே இல்லை.

தென்னகத்தில் மட்டுமல்ல, மத்திய அரசிலும் அதே பாராட்டு. பிரதமர்களான நேரு, சாஸ்திரி, இந்திராகாந்தி அம்மையார் ஆகிய அனைவரும் காயிதே மில்லத்தை மதித்துப் போற்றினர். 1954-ஆம் ஆண்டில், இந்திய நாடாளுமன்ற மேலவைக்கு இவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். அந்த நாளிலிருந்து இறுதிவரை, செல்வாக்கு மிக்க நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கி வரலாறு படைத்த தலைவர், காயிதே மில்லத் அவர்கள்.

இந்த கண்ணியமிகு காயிதே மில்லத் திருநெல்வேலி பேட்டையில் இன்றுதான் (05-06-1896) பிறந்தார். ❐

## ஜுன்-6 சின்ன பீரிடு மண்

தாமஸ்மாண், ஒரு பெரும் வியாபாரியாக புகழோடு வாழ்ந்தவருக்குப் பிறந்தார். காலப்போக்கில் திடீர் என்று வியாபாரத்தில் பெருமளவில் சறுக்கல் ஏற்பட்டு தந்தையின் வியாபாரம் நஷ்டம் வர, குடும்பம் கஷ்டத்தில் மாட்டிக் கொள்ள, பள்ளிப் படிப்பை முடித்த அதேவேளை, குடும்பம் மூனிச்சுக்குக் குடிபெயர வேண்டிய நிலை ஏற்பட்டது.

அந்த நிலையில் தாமஸ் மாண், பதினாறு வயதில் காப்பீடு நிறுவனம் ஒன்றில் பணியில் சேர்ந்தார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் பத்திரிகையைப் பயிலவும் முனைந்தார்.

காரணம், அவர் சகோதரர் ஹென்றிமாண் அத்துறையில் பேரும் புகழுடன் விளங்கி வந்ததைப் பார்த்தே, அவரைப் போல் புகழ்பெற வேண்டும் என்பதால்தான். அவர் எண்ணமும் ஈடேறியது.

கால ஓட்டத்தில், சிம்ப்ளிசிஸிம என்ற நகைச்சுவை பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்கும் அளவிற்கு தாமஸ் தன்னை உயர்த்திக் கொண்டார். அந்த இதழில் சிறுகதைகளை எழுதி தன் பெயரை பிரபலப்படுத்திக் கொண்டார்.

அக்கதைகள் ஒவ்வொன்றும் அற்புதப் படைப்பாக இருந்ததால், அதைத் தொகுத்து வெளியிடவும் செய்தார். இலக்கிய விமர்சகர்கள் மிகுந்து பாராட்டினார்கள். அந்த நூலின் பெயர் 'சின்ன பீரிடுமாண்' என்பது.

சிறுகதைகளும், கட்டுரைகளும் எழுதிக் குவித்த தாமஸ் முதன் முறையாக நாவல் ஒன்றையும் எழுதலானார். 1901-இல் அந்த நாவல் 'பட்டன் புரூக்ஸ்' என்ற பெயரில் வெளிப்பட்டது. விமர்சகர்களின் பார்வையில் அந்நாவல் பெரிதும் போற்றப்பட்டது. அது ஜெர்மானிய இலக்கியத்தின் விடிவெள்ளி என்று விமர்சகர்கள் வியந்தார்கள். இந்த நாவலே தாமஸிற்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது.

இந்த எழுத்தாளர் ஜெர்மனியைச் சார்ந்த பால்டிக் கடல் பகுதியிலுள்ள லூபெக் என்ற நகரில் இன்றுதான் (06.06.1875) பிறந்தார்.

❐

## ஜூன்-7 வண்ணக்கலப்பு

பால்ஹூகிங், இவர் ஓர் ஓவியக் கலைஞர்.

இவரது ஓவியங்கள் ஒவ்வொன்றும் பார்ப்பவரோடு பேசுவதுபோல், உயிரோட்டத்தோடு இருக்குமாம்.

மரசிற்பங்களும், கற்சிற்பங்களும் இவரது கை வண்ணத்தில் பிறக்குமாம்.

பாரீஸில் பிறந்த இவர் தென் அமெரிக்காவில் குடியேறி யுள்ளார்.

ஓர்லியன்ஸியில் கல்வி கற்று முடிந்ததும், ஆறு ஆண்டுகள் உலகைச் சுற்றி வந்திருக்கிறார்.

பிரான்சு நாட்டுக் கப்பல் படையிலும் சில காலம் இவர் பணியாற்றியுள்ளார்.

பொருள் விற்பனைச் சந்தையில் தரகராகவும் இருந் திருக்கிறார்.

இவரது ஓவியத்தில் ஆப்பிரிக்க ஓவியக்கலையும், ஆசிய ஓவியக்கலையும் இணைந்து பார்க்க முடியும்.

இவரின் பெரும்பாலான ஓவியங்கள் புஷ்கின் அருங்காட்சியகத்தில் இன்றும் மக்கள் கண்டு ரசித்து வருகிறார்கள்.

இவரது ஓவியங்களை கேட்டால் பல கோடியைத் தாண்டி நிற்கும்.

ஓவியங்களில் இவர் வண்ணம் சேர்ப்பதில் மிகவும் கைதேர்ந்தவராம். அதனாலேயே இவர் ஓவியங்கள் புகழ் பெற்றனவாம்.

மத அடையாளங்களை வெளிப்படுத்தும் ஓவியங் களையும் இவர் தீட்டியிருக்கிறார்.

அந்நாட்டில் ஓவியக் கலையைக் கற்கத் தொடங்கும் மாணவர்களுக்கு இவரது ஓவியமே ஊற்றுக் கண்ணாக இருந்திருக்கிறது.

நுண்கலையில் இவர் முதுகலைப் பட்டமும் பெற்றிருந்தார். இந்த ஓவிய மேதை, பாரீஸில் இன்றுதான் (07.06.1848) பிறந்தார்.

❐

## ஜூன்-8 திவான்

இந்தியாவின் மிகச் சிறந்த ஆட்சித் தலைவர்களில் ஒருவரான நியாயப்பத்து மாதவராவ், மைசூர் சமஸ்தானத்தின் வரைவுக்குழு உறுப்பினர்கள் ஆறு பேரில் ஒருவராகவும் விளங்கினார்.

பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ.வரலாறு பட்டம் பெற்றார். இந்திய ஆட்சிப் பணிக்கு 1907-இல் நடந்த தேர்வில் இந்தியாவிலேயே முதலாவது இடத்தைப் பெற்று ஐ.சி.எஸ். அதிகாரியானார். 1909-இல் தனது சட்டப்படிப்பை முடித்தார்.

மாவட்ட அளவில் பல உயர் பதவிகளில் நியமிக்கப்பட்ட இவர், மாவட்ட நீதிபதியாகவும் இருந்தார். இவரது ஆற்றலை அறிந்த விஸ்வேஸ்வரய்யா இவரை மைசூர் மாநில சிறப்புக் கணக்கு அலுவலராக நியமித்தார்.

பத்ராவதியில் மைசூர் இரும்புத் தொழிற்சாலையைத் துவக்கி அதன் முதல் இயக்குநராக இருந்து சிறப்பான நிர்வாக அடித்தளம் அமைத்துக் கொடுத்தார்.

1929-ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்காவிற்கும் சென்று மைசூர் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனைக் களம் அமைத்து வந்தார்.

1931-1932ஆம் ஆண்டுகளில் மாதவராவ் இங்கிலாந்தில் நடந்த வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொண்டார். புகழ்மிக்க மகாராஜர் ஜெயசாம்ராஜ உடையார் காலத்தில் மாதவராவ் மைசூர் திவானாகப் பதவி வகித்தார்.

இவர், மசூலிப்பட்டிணத்தில் இன்றுதான் (08-06-1887) பிறந்தார்.

❑

ஜெர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, ஸ்காண்டிநேவியா போன்ற நாடுகளில் எல்லாம் புகழ்பெற்ற கட்டடங்களை உருவாக்கிய அமெரிக்கக் கட்டடக் கலைஞர் பிராங்க் லாய்ட்ரை என்பவரும் இன்றுதான் (08-06-1867) பிறந்தார்.

❑

## ஜூன்-9 இரயில்...

இரயில் வண்டியைக் கண்டுபிடித்து உலகிற்கு வழங்கியவர், சார்ஜ் ஸ்டீவென்சன். இன்று 500 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும் இரயிலைக்கூட மேல் நாட்டினர் கண்டு பிடித்துள்ளனர். 1824-இல் மணிக்கு 24 கிலோ மீட்டர் வேகத்தில்தான் இயங்கியது.

பிறகு 1829-இல் சில ஆய்வுகளைச் செய்து இரயிலின் ஓட்டத்தை வேகப்படுத்தினார். உலகப் புகழையும் பெற்றார்.

இந்த மேதையின் வாழ்க்கை வறுமைப்பட்டது. அதனால் முறையான கல்வியும் இவருக்கு இல்லை. ஆடிப் பாடி விளையாடுகின்ற வயதில், குழந்தைத் தொழிலாளரானார். புல் வளர்ப்புப் பண்ணையிலும், தந்தைக்கு உதவியாகவும் இருந்ததோடு, வாட்டர்ரோவில் ஓர் அரங்கில் எல்லாப் பணிகளைய்யும் செய்தார்.

கூலிவேலை செய்த போதிலும், அவரது குறிக்கோள் கல்வியிலும், ஆய்விலேயும் நாட்டம் கொண்டது.

அதனால் இரவுப் பள்ளியில் படிக்கத் தொடங்கினார்; தன்னறிவை வளர்த்துக் கொண்டார்.

பணியில் இருக்கும்போதே, நீராவியால் இயந்திரத்தை இயக்க முடியுமா என்று சிந்தித்தார். அந்தத் தேடலிலே கண்டுபிடிக்கப்பட்டதுதான் நீராவி இயந்திரம்.

இந்த நிலையில் 1821-இல் டார்லிங்டன் இரயில்வேயின் தலைமைப் பொறியாளராகப் பணியில் சேர்ந்தார். முதல் வண்டிக்கு அவர் பெயரே இடப்பட்டது.

சார்ஜைத் தொடர்ந்து அவரது மகள் ராபர்ட் ஸ்டீவென் சனும் இங்கிலாந்தில் பல இரயில்வே பாலங்களின் அமைப்பாளராகப் பணிசெய்தார். இவர்கள் இருவரும் இல்லை என்றால் இன்றையப் போக்குவரத்து சிரமத்தில் சிக்கியிருக்கும் என்று சொல்வதே உண்மையாகும்.

உலக இரயில்வேக்களின் தந்தையான இந்த மேதை இன்றுதான் (09-06-1781) பிறந்தார்.

❒

## ஜுன்-10 'பலி'

பிறந்தது லாச்சைனில் என்றாலும், சவுல்பெல்லோ குடும்பத்தோடு வாழ்ந்தது எல்லாம் சிகாகோவில்தான். வெளியே பட்டப்படிப்பு முடிந்ததும், பல பணிகளுக்கு முயற்சி செய்தும் பயனில்லாததால்தான் தன்னை எழுத்துத் துறைக்கு அர்ப்பணித்துக் கொண்டார், சவுல்பெல்லோ. இரண்டாவது உலகப் போரின்போது வர்த்தகக் கப்பல் நிறுவனத்தில் பணிபுரிந்தார். இந்த வேளையில்தான் இவரின் முதல் படைப்பான 'டாங்லிங் மேன்' என்ற நாவலை எழுதினார். இந்த நாவல் ஓரளவு விமர்சிக்கவும்பட்டது. வாசகர்களால் பேசவும் பட்டது.

*1946* முதல் *1948* வரை மின்னி சோட்டா பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் இரண்டாவது நாவல் 'பலி' என்ற பெயரில் வெளிவந்தது. நாவலோடு சிறுகதை, கட்டுரை என்று ஏராளமாக எழுதிக் குவித்தார். இருந்தும் புகழ் கிட்டவில்லை. *1953*-இல் வெளிவந்த அவரின் 'ஆகி மார்ச்சின் சாகசங்கள்' நாவல்தான் ஒட்டுமொத்தமாக உலகப் புகழைத் தந்தது. அந்த நாவல் *1954*-இல் தேசிய புத்தக விருது ஒன்றையும் வாங்கித் தந்தது.

அந்த வெற்றிக் கொடியை இதயத்தில் ஏந்தியபடியே பெல்லோ உத்வேகத்தோடு பல படைப்புகளை எழுதினார். அவற்றுள் சிறுகதைகளும் அடங்கும். *1956*-இல் 'நாளைக் கைப்பற்று', அதை அடுத்து 'மழை மன்னன் ஹெண்டர்ஸன்', 'ஜெருசலேமுக்குச் சென்று திரும்பு', 'திருவாளர் சாம்ளரின் கோஷம்' ஆகிய நாவல்களும் தேசிய விருது பெற்றது. 'ஹம்போல்டின் வெகுமதி' *1975*-இல் வெளிவந்து, *1976*-இல் புலிட்ஸர் பரிசும் கிடைத்தது. இவர் நாடகங்களையும் எழுதியிருக்கிறார்.

இவர், மாண்ட்ரீயலைச் சேர்ந்த கியூபெக்கிலுள்ள லாச்சைனில் இன்றுதான் **(10.06.1913)** பிறந்தார்.

❑

எடின்பரோ பிரபுவான இளவரசர் பிலிப் என்பவரும் இன்றுதான் **(10.06.1920)** பிறந்தார்.

❑

## ஜூன்-11 11 வயதிலேயே

ஜாக்குவிஸ்கொஸ்டாவ் - இவர் கப்பல்படையில் அதிகாரியாக பணியாற்றினார்.

இவருக்கு இளமையிலே தண்ணீரில் விளையாடுவதிலும், இயந்திரங்களை இயக்குவதிலும் அதிக ஈடுபாடு கொண்டவராக இருந்தார். 11 வய்தில் இவர், மாதிரி பளுதூக்கும் இயந்திரத்தை வடிவமைத்தார். 13 வயதில் பாட்டரியினால் இயங்கக்கூடிய காரை வடிவமைத்தார்.

திரைப்படத்திலும் ஆர்வம் இவர் கொண்டிருந்ததால், பணத்தைச் சேர்த்து வீட்டிலேயே இருந்து இயக்கக் கூடிய சிறிய புகைப்படக் கருவியை வாங்கினார். பள்ளியில் இவர் படிக்கும் மாணவராக இல்லாமல் பிறரை அடிக்கும் மாணவராக இருந்ததால் மாணவர் விடுதியில் இவரை சேர்த்து விட்டார்கள்.

அந்த புதிய இடமும் சூழ்நிலையும் இவரை சிந்திக்க வைத்தது. அதனால் நன்றாகப் படிக்கத் தொடங்கினார். பட்டம் பெற்ற பிறகு நேவல் அகாடமியில் சேர்ந்தார்.

கடல் ஆய்வில் ஈடுபட்ட இவர், நீண்ட நேரம் நீரில் மூழ்கியிருக்கும் கருவி ஒன்றை கண்டுபிடித்தார்.

1937-ல் இவர் திருமணம் புரிந்து கொள்கிறார். இரண்டு குழந்தைகளுக்கு தந்தையாகவும் ஆகுகிறார். இரண்டாவது உலகப்போரில் உளவுத்துறையில் ஈடு பட்டுப் பணி யாற்றினார். பணியில் இவர் பல சாதனைகளை செய்ததால், பல பதக்கங்களைப் பெற்றார்.

இந்த நிலையிலும் இவர் கடலாய்வை தொடர்ந்து செய்து வருகிறார். இதைத் தொடர்ந்து இவர் பிரான்சின் கடலாய்வுத் துறையின் தலைவராக நியமிக்கப்படுகிறார். தனது கடலாய்வுக்காக ஒரு கப்பலையே விலைக்கு வாங்கி, தன்னாய்வை மேலும் தொடர்கிறார்.

இவரது ஆய்வை தொலைக்காட்சியும் வெளிக்கொண்டு வருகிறது. கடலில் வாழ்கின்ற உயிரினங்களைக் காப்பாற்ற வேண்டி, அதற்கென்று ஓர் அமைப்பினை இவரே தொடங்கினார். இதில் மூன்று இலட்சம் மக்கள் உறுப்பினர் ஆனார்கள்.

இவர் பிரான்சில் இன்று தான் (11.06.1910) பிறந்தார்.

## ஜுன்-12 இசை மேதைகள்

அலெக்சாண்டர் டான்ஸ்மேன் சிறந்த இசைமேதை. பியோனா இசைக் கருவியை இயக்குவதில் வல்லமை பெற்றவராக இருந்தார்.

வார்சா பல்கலைக் கழகத்தில் சட்டமும், தத்துவமும் படித்து பட்டம் பெற்றார்.

1919ஆம் வருடம் பாரீஸில் நிரந்தரமாக வந்து குடியேறினார். அந்த நேரத்தில் பாரீஸில் இருந்த இசை மேதைகளான மௌரீஸ் ராவல் ஸடட்ராவின்விஸ்கி போன்றவர்களைச் சந்தித்தார்.

இசை நிகழ்ச்சிக்காக கனடா, மத்திய கிழக்குப் பகுதி போன்ற நாடுகளுக்குச் சென்று வந்தார்.

இவரது மனைவியும் ஒரு இசை மேதையாக இருந்தார். அதனால், இருவரும் இசை குறித்து அடிக்கடி கலந்து ஆலோசிப்பார்கள்.

இந்த இசையறிஞர் இன்றுதான் (12.06.1850) பிறந்தார்.

❒

புகழ்பெற்ற ஆங்கில நாவலாசிரியரான சார்லஸ் கிங்ஸ்வே என்பவரும் இன்றுதான் (12.06.1819) பிறந்தார்.

❒

இங்கிலாந்து நாட்டு பௌதிக விஞ்ஞானியான சர்.ஆலிவர் லாட்ஜ் என்பவரும் இன்றுதான் (12.06.1851) பிறந்தார்.

❒

அன்னிஃபிராங்க் என்ற யூதப் பெண் நாஜிகளிடமிருந்து தப்பி மூன்று ஆண்டுகள் (1942-44) ஒரு வீட்டின் இரகசிய அறையில் ஒளிந்து வாழ்ந்தார்.

தான் பெற்ற அனுபவங்களை நாட்குறிப்பாக எழுதிப் பின்னாளில் புகழ்பெற்ற இந்தப் பெண்மணியும் இன்றுதான் (12.06.1929) பிறந்தார்.

❒

## ஜூன்-13 மணிக்கருவி

வில்லியம் பட்லர் ஈட்ஸ், ஒரு ஓவியரின் மகனாகப் பிறந்தார். அவர் அயர்லாந்தில் பிறந்தாரெனினும், இங்கிலாந்தில்தான் தனதுபள்ளிப் படிப்பை முடித்தார். சிறு வயதிலேயே கவிதை எழுத விரும்பியதால், அவ்வாற்றலை மேலும் வளர்த்துக் கொண்டார், பட்லர். அத்துடன் நாடகம் எழுதவும் விரும்பி, அதையும் தொட்டார்.

அதற்கேற்றாற் போல் 1880-களில் அவர் பெர்னார்ட்ஷா வையும், ஆஸ்கர் ஒயில்டையும் இங்கிலாந்தில் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றதால் அவர்களைப் போல் தானும் ஒரு சிறந்த நாடகாசிரியராகப் புகழ்பெற வேண்டுமென எண்ணினார். ஆகவே அவரது மனம் கவிதையிலிருந்து நாடகத்தின்பால் திரும்பியது.

பட்லர், தனது முதல் நாடகத்தை 1885-இல் எழுதினார். 'சிலைகள் தீவு' என்ற அந்த நாடகம் கவிதை நாடகமாக இருந்தது. இதற்கு அடுத்த ஆண்டு வெளிவந்தது 'மொஸாடா'. இதுவும் கவிதை நாடகமாகவே இருந்தது.

இரண்டும் படிப்பதற்கு மட்டுமே ஏற்றதாக இருந்தது. நடிப்பதற்கு ஏற்றார்போல் அமையவில்லை. முழு வடிவத்தில் நாடகம் எழுதியது 1892-ஆம் ஆண்டில்தான். 'கோமகன் காத்தலீன்' என்ற அவரது முதல் நாடகம் வந்தது. அது 1892-இல் புத்தகமாக வெளிவந்து, 1899-இல்தான் மேடையில் நடிக்கப் பெற்றது.

இவர் எழுதிய நாடகங்களில் குறிப்பிடத்தக்கவை, 'மணிக்கருவி', 'பச்சைத் தலைக்கவசம்', 'மணிக்கூண்டு மன்னன்' போன்றவைகளைச் சொல்லலாம். ஈட்ஸ் பெரும்பாலும் ஓரங்க நாடகங்களாகவே எழுதியிருக்கிறார். பெரும்பாலும் கவிதை வரிகளாகத்தான் வடித்திருக்கிறார். 1922-இல் ஐரிஷ் செனட் சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு அடுத்த ஆண்டு 1923-இல் நோபல் பரிசும் பெற்றார்.

இவர், அயர்லாந்திலுள்ள டப்ளினுக்குப் பக்கத்தில் சாண்டிமலை எனும் ஊரில் இன்றுதான் (13.06.1865) பிறந்தார்.

❒

## ஜுன்-14 ஆவி இயந்திரம்

நிக்கோலஸ் ஆகஸ்ட் ஆட்டோ, சாதாரண உணவுவிடுதி உரிமையாளரின் மகனாகப் பிறந்தார். இவருடைய பத்து வயதிலேயே பெற்றோர் இறந்துவிட இவரது சகோதரியும், சகோதரியின் கணவரும் கவனித்து வந்தார்கள். நிக்கோலஸ், பள்ளி இறுதி வகுப்புவரை முதல் வகுப்பிலேயே தேறி வந்தார். பிறகு ஒரு தொழிற்சாலையில் உதவியாளராகச் சேர்ந்து இயந்திர வேலைகளைக் கற்றுக் கொண்டார். பின் அங்கிருந்து, *1861*-இல் கொலோன் நகரிலுள்ள கடை ஒன்றில் விற்பனை யாளராகச் சேர்ந்தார். அங்கு ஊர் ஊராகச் சென்று தங்கள் கடையின் இயந்திரப் பொருள்களை விற்பனை செய்ய வேண்டியிருந்தது. அப்போது பலர் ஒலி குறைவாகவும், எரி பொருள் குறைவாகச் செலவாகக் கூடியதுமான ஆவி இயந்திரம் ஒன்று தேவை யெனப் பலமுறை சொல்லக் கேட்டார்.

அவ்வாறு பலரும் பலமுறை கேட்டுக் கொண்டதால் வேலைக்குச் சேர்ந்த முதலாண்டே லீனியரின் ஆவி இயந்திரத்தைத் திருத்தி அமைத்தால் மக்களுக்கு மிகுதியாகப் பயன்படும் என்று எண்ணினார். அதற்கான முயற்சியில் இறங்கினார். வெற்றி பெற்றார். பாரிஸில் நடந்த பொருட் காட்சியில் இவரது கண்டுபிடிப்பு இயந்திரம் முதல் பரிசைப் பெற்றது. அந்த உற்சாகத்தில் இயந்திரத்தைத் தயாரித்து நிக்கோலஸ் தன் நிறுவனத்தின் மூலம் ஆவி இயந்திரம் என்னும் பெயரில் விற்பனை செய்ய ஆரம்பித்தார். எரிபொருள் சிக்கனம், ஒலி இல்லாதது என்ற இருபெரும் காரணங்களால் விற்பனை ‘விர்’ என்று ஏறிற்று. இன்று கார், கப்பல், விமானம், மின்சக்தி - சூரியசக்தி தொழிற்சாலைகள், வீட்டு வசதிகள், விவசாயம் முதலிய வற்றுக்கு உள் எரியும் இயந்திரம் மிகவும் உதவியாக இருக்கிறது என்பதை இன்று உலகே அறியும்.

நீராவி இயந்திரத்திற்குப் பதிலாகக் காற்று இயந்திரத்தைக் கண்டுபிடித்த நிக்கோலஸ் ஜெர்மனியைச் சேர்ந்த ஹால்ஹாசன் என்னும் ஊரில் இன்றுதான் **(14-06-1832)** பிறந்தார்.

❒

இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மந்திரியான ஈ.எம்.எஸ். நம்புதிரி பாட்டும் கேரளாவில் உள்ள பாலக்காட்டில் இன்றுதான் **(14-06-1909)** பிறந்தார்.

❒

## ஜுன்-15 நம்பிக்கை

ஏரோல்கார்னர் - இவர் பியோனா கலைஞர். இவரது இசைக்கு மயங்காதவர்களே இல்லை என்று சொல்லலாம்.

இவரது பியோனா இசையைக் கேட்ட, மற்ற இசை மேதைகள் எல்லாம் வியந்து பாராட்டி இருக்கிறார்கள்.

இவர் ஒரு பிறவி இசை மேதை என்றே சொல்லலாம்.

ஏனென்றால், இவர் மூன்று வயதாக இருக்கும்போதே பியோனோ இசைக்கருவியை இயக்குவதில் சிறந்த ஆற்றலைப் பெற்று இருந்திருக்கிறார்.

இவரது சகோதரரும் ஒரு இசைக்கலைஞராக இருந்ததால், அவருடைய மேற்பார்வையில் இவர் பல அரங்குகளை ஏறி இருக்கிறார்.

1944-இல் நியூயார்க்கிற்கு தனியே சென்று அங்கே தங்கி பல இசை நிகழ்ச்சிகளை நடத்தி பேரும் புகழும் பெற்றார்.

அந்நாட்டிலுள்ள பல இசை மேதைகளோடு இணைந்து நிகழ்ச்சிகளை நடத்தினார்.


'அதிர்ஷ்டத்தை நான் நம்பவில்லை. என் உழைப்பையே நான் நம்புகிறேன்' என்று அடிக்கடி சொல்லுவாராம்.

இவர் பீட்டர்ஸ் பார்க்கில் இன்றுதான் (15.06.1921) பிறந்தார்.

❒

எட்வர்ட் கிரெய்க் நார்வே நாட்டு இசையமைப்பாளரும் இன்றுதான் (15.06.1843) பிறந்தார்.

❒



## ஜூன்-16 ஜோஷ்வா

ஓவியர் ஜோஷ்வா ரெய்னால்ட்ஸ். இளமையிலேயே கலையார்வம் கொண்டவராக இருந்தார். அவரது ஓவியக் கலையின் உயர்விற்கு உந்து சக்தியாய் இருந்தவர் அவர் தந்தையே.

ஆமாம். ஜோஷ்வாவின் ஓவிய எண்ணங்களுக்கு ஏற்ப ஓவியம் வரைய நோட்டுப் புத்தகங்களும், பென்சில், பேனா, வண்ணங்களும் வாங்கிக் கொடுக்க முடியாத நிலையில் இருந்த அவரின் தந்தை, தன் வீட்டுச்சுவரையே ஒழுங்காக தூய்மை செய்து தந்து, அதிலேயே தன் மகனை ஓவியங்கள் வரையுமாறு செய்தார்.

இப்படி தந்தையின் ஏற்பாட்டாலும், தாயாரின் கண் முன்னேயும் தீட்டிதான் தன் ஓவியத்திறமையை இளமையில் ஜோஷ்வா வளர்த்துக் கொண்டார். இவரது 'சுவரின் ஓவியங்கள்' அடுத்தவீடு, பக்கத்துவீடு என்று எல்லோர் மனதையும் கொள்ளையடித்தது; பாராட்ட வைத்தது.

ஜோஷ்வா உயர்ந்த ஓவியர் மட்டுமல்ல, சிறந்த இலக்கியவாதி. இன்றளவும் இங்கிலாந்து நாட்டின் சிறந்த கலைப்புதையல்களில் ஒன்று என்று போற்றப்படும் அரசினர் கலைக்கழகத்தை அன்று முதன் முதலாகத் தோற்றுவித்த பெருமையும், அதற்கு முதன் முதலாகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பெருமையும் அவரையே சேரும். இவரது ஓவிய ஆற்றலைக் கண்டு, அன்றைய ஆங்கில மன்னர் மூன்றாம் ஜார்ஜினால் வீரவிருதும் அளிக்கப்பட்டது.

ஜோஷ்வாவின் இளமைக்காலம் வறுமையிலேயேதான் தொடங்கியது. தனது 17-வது வயதிலேதான் தான் பிறந்த பிளிமவுத் நகரிலே இருந்து இலண்டன் சேர்ந்து அட்சன் என்ற ஓவியரிடம் ஓவியம் பயின்றார்.... பின், ரெம்ப்ரெண்ட், டிடியன் போன்ற ஓவியர்களின் அரவணைப்பில் தன் திறமையை வளர்த்துக் கொண்டார். அத்தோடு, பிற நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, இங்கிலாந்து வந்து தனது சொந்தக் கலைக் கூடத்தைத் துவக்கினார்.

இது முதல்தான் இவரது புகழ் நாடெங்கும், உலகெங்கும் பரவியது. இவ்ஓவியக் கலைஞர் இங்கிலாந்தில் இன்றுதான் **(16-06-1723)** பிறந்தார்.

❒

## ஜுன்-17 ஸ்டாவன்ஸ்கி

செயிண்ட் பீட்டர்ஸ் பர்க் என்ற இடத்தில் ஸ்டாவன்ஸ்கி பிறந்தார். இவர், ஒரு பாடகர்.

சிறுவயதிலேயே எல்லாவித எல்லா நாட்டு இசையையும் பாடுகின்ற ஆற்றலைப் பெற்றிருந்தார்.

தந்தையும், சகோதரரும் இவருக்கு வழிகாட்டுதலாக இருந்திருக்கிறார்கள். இருவருமே பாடகர்களே.

இவர் படித்தது வழக்கறிஞர் தொழிலுக்கே. ஆனால், எதிர்காலத்தில் ஆனது பாடகராக.

*1902*-இல் தனது *20* வயதில் இவர் சிறந்த இசை யமைப்பாளரான நிக்கோலாயிடம் இசை நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டார்.

*1910*-இல் ரஷ்யாவை விட்டு பாரீஸ் சென்று தன் இசைப்பயணத்தை அங்கேயும் தொடர்கிறார்.

அங்கேதான் இவர் நிறைய பாடல்களை எழுதி, அவைகளுக்கு இசை வடிவமும் கொடுத்தார்.

அவையாவும் புதிய கோணத்தில் இருந்ததால் எளிதாக மக்கள் - ரசிகர்களின் இதயத்தில் இடம்பிடிக்க அவரால் முடிந்தது.

இசையோடு இவருக்கு இலக்கியம், கலை போன்ற வற்றிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார்.

தான் கற்றவற்றை எல்லாம் மக்கள் ஏற்றுக் கொள்ளும் அளவிலே - அவர்களுக்கு பயன்படும் வகையிலே - இசை நிகழ்ச்சியின்போது வெளிப்படுத்துவாராம்.

இவர் பீட்டர்ஸ் பர்க்கில் இன்றுதான் ***(17.06.1882)*** பிறந்தார்.

❐

இங்கிலாந்து முதலாம் எட்வர்ட் அரசர் இன்றுதான் ***(17.06.1236)*** பிறந்தார்.

❐

## ஜுன்-18 சேலம் வீரர்

விடுதலைப் போராட்ட வீரர் சேலம் சி.விஜயராகவாச் சாரியார் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் படித்து, சென்னை மாநிலக் கல்லூரி, மங்களூர் அரசுக் கல்லூரி மற்றும் சேலம் முனிசிபல் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றினார். தனியாகச் சட்டம் படித்து சேலத்தில் வழக்கறிஞரானார்.

*1822*-ஆம் ஆண்டு சேலத்தில் நடந்த வகுப்புக் கலவரத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடியதற் காகக் குற்றம் சுமத்தப்பட்டு இவருக்கு அன்றைய ஆட்சி யாளர்கள் பத்து ஆண்டு சிறை தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் குற்றமற்றவர் என்று விடுதலையானார்.

இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டு குழுவினருடன் இணைந்து சட்டதிட்டங்களை வகுத்துக் கொடுத்தார். *1895-1901*-இல் சென்னை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தும் பணியாற்றினார். கோகலே, மாளவியா, தாதாபாய் நௌரோஜி, மோதிலால் நேரு, காந்தி போன்ற அரசியல் தலைவர்களோடு நெருங்கிய நண்பராக இருந்தார்.

*1907*-ஆம் ஆண்டு சூரத்தில் நடந்த காங்கிரஸ் கூட்டத் திற்குப் பிறகு திலகருடன் சேர்ந்து தீவிரவாதியானார். பிர்கென்ஹட் எனும் ஆங்கிலேயர் இந்தியர்களால் ஒரு அரசியல் சாசனம் தயாரிக்க முடியுமா என்று விடுத்த சவாலை ஏற்று *1927*-இல் இவர் இந்தியாவிற்கு முதன் முதலில் அரசியல் சட்டம் தயாரித்துக் கொடுத்தார். இது விடுதலையடைந்த பிறகு அமைக்கப்பட்ட அரசியல் சாதனத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

குழந்தைத் திருமண எதிர்ப்பு, பெண்களுக்குச் சொத் துரிமை, தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களை நடத்தினார். சென்னையில் காந்தியடிகள் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினார்.

அறிவும், ஆற்றலும் கொண்ட இம்மேதை செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டத்திலுள்ள பொன் விளைந்த களத்தூரில் இன்றுதான் **(*18-06-1852*)** பிறந்தார்.

❒

## ஜுன்-19 எளியோரின் நண்பன்

தொழிலாளர் நலனுக்காக ஏற்பட்டது ஈ.எஸ்.ஐ. திட்டம். இத்திட்டக் குழுவின் முதல் மருத்துவராகப் பொறுப் பேற்றவர், 'எளியோரின் நண்பன்' என்று கோவை மாவட்டத்தில் அன்போடு அழைக்கப்பட்டவர் டாக்டர் டி.வி.சிவானந்தம் அவர்கள்.

பள்ளிப் படிப்பைத் திருப்பூரில் முடித்த பின்னர், கல்லூரிப் படிப்பைக் கோவையில் தொடர்ந்த இவர், மருத்துவக் கல்வியைச் சென்னை கல்லூரியில் கற்று, 1937-இல் தேர்ந்தார்.

மருத்துவப் படிப்பை முடித்ததும், அனுபவப் பயிற்சி யினை மருத்துவத்தில் சிறந்து விளங்கிய பெருமக்களிடம் பெற்றார். பிறகு கோவையிலேயே தன் மருத்துவத் தொழிலைத் தொடர்ந்தார்.

நோயாளிகளிடம் மனித நேயத்தோடு நடந்து கொண் டதும், ஏழை எளியோருக்கு தன் சொந்த செலவிலேயே மருந்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கியதோடு, அவர்களது வாழ்விற்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். அதனால் மக்களின் மனங்களில் பதிந்தார்.

'அசோசியேஷன் ஆப் சர்ஜன்ஸ்' என்ற சங்கம் தலை சிறந்த அறுவைத்துறை மருத்துவ வல்லுநர்களை உறுப்பினர் களாகக் கொண்ட அமைப்பாகும். கோவை நகரின் முதல் சர்ஜனாக அந்த அமைப்பில் இடம் பெற்றவர் டாக்டர் சிவானந்தம் அவர்களே! பல அமைப்புகளின் தலைவராகவும், செயலாளராகவும், பொறுப்பாளராகவும் இவர் ஆற்றிய பணிகள் ஏராளம்.

மருத்துவப் பணியோடு, மக்களின் நலனுக்காகவும் தம் வாழ்நாளெல்லாம் பாடுபட்ட டாக்டர் டி.வி.சிவானந்தம், கோவை - திருப்பூரில் இன்றுதான் **(19.06.1911)** பிறந்தார். ❐

பிரெஞ்சு தத்துவஞானியும், கணித மேதையுமான விஞ்ஞானி பிளெய்ஸிபாஸ்கல் என்பவரும் இன்றுதான் **(19.06.1623)** பிறந்தார். ❐

இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸ் அரசரும் இன்றுதான் **(19.06.1566)** பிறந்தார். ❐

## ஜுன்-20 7 கம்பிகள்

"மாலுமிகளாகிய நாங்கள் கெல்லின் பிரபுவின் திருப்பெயரை எந்த நாளும் மறக்க மாட்டோம். அவரை எப்போதும் வாயார வாழ்த்திக் கொண்டு இருப்போம்" என்று கப்பற்படைத் தளபதி ஒருவர் கெல்லின் பிரபுவைப் பாராட்டியிருக்கிறார். இப்படி அவர் பாராட்டக் காரணம்... கப்பலில் செல்லும்போது கடலின் ஆழத்தை சிரமமின்றி கண்டறிந்து விபத்துக்களில் இருந்து தப்புவதற்கான கருவியைக் கண்டு பிடித்ததற்குத்தான்.

கெல்லின் பிரபுவின் தந்தை கணிதப் பேராசிரியராக இருந்தார். மிகுந்த கண்டிப்பானவர். கெல்லின் பிரபுவின் சகோதரர்களும் வகுப்பில் முதல் நிலையில் படித்து வந்தார்கள். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் 17-ஆம் வயதில் செயிண்ட் பீட்டர் கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரியில் முதல்நிலை அடையும் மாணவர் 'மூத்த போட்டியாளன்' என்று பாராட்டப்பெற்றார்.

பின், கிளாஸ்கோ பல்கலைக் கழக ஆளுநர்களும் கெல்லின் அறிவைப் போற்றினார்கள். அவரின் 22-ஆம் வயதில் பல்கலைக் கழகப் பணியை தந்தார்கள்.

மின்சார உதவியால் தந்தியனுப்பும் முறை அப்போது ஆய்வில் இருந்தது. இதில் பல இடர்பாடுகள் இருந்தன. இந்நிலையில் கெல்லின் 7 கம்பிகள் கொண்ட தொகுதியாகப் போட்டால் குறை நீங்கும் என்று கண்டுபிடித்தார்.

இப்படி மாலுமிகளுக்கு உதவும் திசை காட்டும் கருவியைக் கண்டுபிடித்து, கப்பல்கள் மணல் மேடுகளிலும், கடலடி மலைகளிலும் மோதாமலிருக்க ஆழங்காணும் எளிய கருவிகளைக் கண்டுபிடித்து உலகப்புகழ் பெற்றார்.

இப்படி உழைப்பின் திருவுருவமாக, மனித மேம்பாட்டுத் தொண்டராக வாழ்நாள் முழுவதும் உழைத்த மேதை இங்கிலாந்து நாட்டில், பெல்ஃபாஸ்ட் எனும் ஊரில் இன்றுதான் **(20.06.1824)** பிறந்தார்.

❑

அமெரிக்க நாட்டு இசையமைப்பாளர் ஜாக்குவாஸ் ஆஃப்பன்பாச் என்பவரும் இன்றுதான் **(20.06.1819)** பிறந்தார்.

❑

## ஜுன்-21 சிவப்புக் கையுறை

ழீன் பால் சார்த்ரே, தனது இரண்டாவது வயதிலேயே தந்தையை இழந்துவிட்டார். பாட்டனாரின் கண்காணிப்பில் வளர்ந்தார். ஆயினும் 1929-இல் தத்துவத்தில் பட்டம் பெற்றார். சார்த்ரேயின் முதல் படைப்பான 'நாஸியா' 1938-இல் வெளிவந்தது. அதே நாவல் 'ஆண்டனி ராக் குவண்டின் நாட்குறிப்பு' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியாயிற்று. அந்த முதல் படைப்பே அவரின் புகழை உயர்த்தி நின்றது.

நாடகத்துறையில் அவர் முதல் படைப்பு 'விஷப்பூச்சிகள்' வெளிவந்தது. அந்த முதல் நாடகப் படைப்பே உலகப்புகழ் பெற்றுவிட்டது. இரண்டாவது நாடகம் 'வழி இல்லை' என்பதாகும். 'கறை படிந்த கரங்கள்' என்ற மூன்றாவது நாடகம் 1948-இல் மேடையேறிய அதே வேளையில், புத்தகமாகவும் வெளியானது.

இதே நாடகம் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தபோது, 'சிவப்புக் கையுறை' என்று தலைப் பிட்டிருந்தது. அடுத்து ஒரு நாடகம் 'இறைவனும் சாத்தானும்' வெளியானது. இதுவும் புத்தகமாக வெளிவந்து அவருக்கு சிறப்பைச் சேர்த்தது.

'அல்டோனா கைதி' என்ற நாடகம் சார்த்ரேயின் படைப்பாற்றலுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

காலத்தால் அழியா இத்தகைய படைப்புகளை படைத்த சார்த்ரேயின் படைப்புகள் அனைத்திலும் தத்துவார்த்த உண்மைகளே ஊடுருவி இருப்பதாக அறிவுலகம் பேசிக் கொண்டது. அதனால் அவரை தத்துவ நூலாசிரியர் என்றே அழைப்பர்.

இந்த மாபெரும் எழுத்தாளர் பாரிஸில் இன்றுதான் **(21.06.1905)** பிறந்தார்.

❐

அமெரிக்காவின் பாய் ஸ்கௌட்ஸை உருவாக்கிய டேனியல் கார்ட்டர் பியர்ட் என்பவரும் இன்றுதான் **(21.06.1850)** பிறந்தார்.

❐

## ஜூன்-22 இளம் இத்தாலி

'கீழான ஆசைகளில் வெற்றியடைவதைவிட மேலான நினைவுகளில் தோல்வி காண்பது உயர்வாகவே மதிக்கப்படும்.' இந்த உயரிய சிந்தனைக்கு சொந்தக்காரராக விளங்கியவர் மாஜினி எனும் இத்தாலிய விடுதலை வீரராவார். ஆம், தமது நாடான இத்தாலியில் ஆஸ்திரியர்கள் ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்தார். பல சிறு பகுதிகளாகச் சிதறிக்கிடந்த இத்தாலியை ஒன்றுபடுத்தத் திட்டமிட்டார். அன்னியர் ஆதிக்கம் மறைந்து, குடியாட்சி மலர வேண்டுமென்ற இலட்சியத்திற்காகப் பாடுபட்டார்.

ஆனால் அவரது முயற்சிகள் யாவும் தோல்விப் பள்ளத் தாக்கில் வீழ்ந்து போயின. வாழ்க்கை முழுவதும் தோல்வி களையும், துன்பங்களையுமே சந்தித்தார் என்றாலும் மாஜினியின் வீர வரலாறு ஈரமாய் வரலாற்று ஏடுகளில் இருக்கிறது. உலகில் உயர்ந்த இலட்சியங்களுக்காகப் பாடுபட்டவர்களில் ஒருவராக அவர் இன்றைக்கும் போற்றப் படுகிறார். தோல்வி எனும் மேகங்கள் அவருடைய வானமென்னும் உயர்ந்த நோக்கங்களை மறைக்க முடிய வில்லை. அவர் பட்ட துன்பங்கள் அவரது புகழை அழித்து விட முடியவில்லை.

மாஜினியின் தந்தை மருத்துவராக இருந்தார். சிறுவயதில் மாஜினி நோஞ்சானாக இருப்பார். அடிக்கடி அவரை நோய்கள் பற்றிக் கொள்ளும். அதனால், தக்க ஆசிரியரைக் கொண்டு அவரது படிப்பு வீட்டிலேயே தொடங்க தந்தை ஏற்பாடு செய்தார். இளமையிலேயே துணிவு மிக்கவராக, அநீதிகளை அதட்டிக் கேட்கும் ஆற்றல் பெற்றவராக இருந்தார். பத்து வயதில் பள்ளிப் படிப்பைத் தொடங்கி, சட்டம் பயின்று பட்டம் பெற்றார். இருந்தும் அத்தொழிலில் ஈடுபட மனமில்லை. இலக்கியத்திலும், அரசியலிலேயுமே அவர் மனம் ஈடுபட்டது.

நண்பர்களுடன் சேர்ந்து, 'இளம் இத்தாலி' என்ற அமைப்பைத் தோற்றுவித்து, நாட்டு விடுதலைக்காகப் போர்க்கொடி ஏந்தினார். பின் என்ன... சிறைச்சாலை அவரை வரவேற்றது...பல்வேறு போராட்டங்கள், சிறையடைப்பு, மாறுவேடப் பிழைப்பு என்று பாடுபட்டும் தமது குடியாட்சிக் கொள்கை வெற்றி பெறாத நிலையிலேயே நோயோடும், பாயோடும் அவர் இலட்சியமும் இறந்துபோனது.

இம்மாவீரன் ஜினோவாவில் இன்றுதான் **(22-06-1805)** பிறந்தார்.

## ஜுன்-23 நட்சத்திர விஞ்ஞானி

ஆல்பிரட் கின்ஸே - இவர் ஓர் உயிரியல் அறிஞர். பௌடோயின் கல்லூரியில் உயிரியலிலும், உளவியலிலும் பட்டம் பெற்றார்.

1919-இல் இவரது ஆய்வினைக் கண்டு SC.D.என்ற பட்டத்தை ஹார்வேடு பல்கலைக் கழகம் வழங்கிச் சிறப்பித்தது.

பின்னர், இண்டியானா பல்கலைக் கழகத்திற்கு வந்து விலங்கியல் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணி யாற்றினார்.

இங்கு பணிபுரிந்தபடியே உயிரியல் துறையில் ஆய்வை மேற்கொண்டு, ஒவ்வொரு உயிரினத்தின் தன்மைப்படியும், இனப்படியும் தொகுத்ததோடு, அவற்றின் பரிணாம வளர்ச்சி குறித்தும் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்.

இந்த ஆய்வின் பயனாக இவரது புகழ் அப்பல்கலைக் கழகத்தைத் தாண்டியும் பரவ காரணமாக அமைந்தது. உயர் பதவியும் கிடைத்தது.

அமெரிக்க விஞ்ஞானிகளின் இடையே இவர் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றார்.

இந்த அறிவியல் மேதை நியூஜெர்சி என்ற இடத்தில் இன்றுதான் **(23.06.1894)** பிறந்தார்.

❐

இங்கிலாந்தின் எட்டாம் எட்வர்ட் அரசர் வின்ட்ஸர் கோமகனும் இன்றுதான் **(23.06.1894)** பிறந்தார்.

❐

சுவிட்டிஸ் நாட்டு ஓவியரான கார்ல்மில்லெஸ் என்பவரும் இன்றுதான் **(23.06.1875)** பிறந்தார்.

❐

கிரேட் பிரிட்டனின் மூன்றாம் எட்வர்ட் அரசரும் இன்றுதான் **(23.06.1894)** பிறந்தார்.

❐

## ஜூன்-24 கவியரசர்

கவியரசு கண்ணதாசன், சுமார் 5000-க்கும் அதிகமான திரைப்படப் பாடல்களையும், 4000 தனிக் கவிதைகளையும், 21 நாவல்களையும் எழுதியதுடன், தனது படைப்பினை 100-க்கும் அதிகமான பத்திரிகைகளிலும் மலரச் செய்தவர் இவர். இந்த வெற்றி எப்படி? சகிப்புத் தன்மையும் தன்னம்பிக்கையும் கொண்டிருந்ததால்தான்.

ஒரு சாதாரண இளைஞனாக முத்தையா என்ற பெயரில் கையில் காசு இல்லாமல் சென்னைக்கு வந்து படுக்க இடமில்லாமல் கடற்கரை மணலிலே படுத்து காவலர்களால் அங்கிருந்து துரத்தப்பட்ட நாட்களை எண்ணிப் பார்த்தால் புரியும். எந்த வேலை என்றாலும் செய்யத் துணிந்தார். சிகை அலங்காரம் செய்கிற கடையில் எனக்கு முடிவெட்டுவதில் பழக்கம் உண்டு என்று வேலையில் சேர்ந்தார். இந்தத் துணிவு எத்தனை பேருக்கு வரும்?

முதலில் ஒரு பத்திரிகையில் சாதாரண வேலையில் சேர்ந்தார். ஒருநாள் 'உங்களுக்கு பிழைதிருத்தம் செய்யத் தெரியுமா?' எனக் கேட்டார்கள். புரூப் ரீடர் என்று சொல்லப்படும் பிழைதிருத்தும் பணியை அதுவரை அவர் செய்தது இல்லை. ஆனாலும் துணிச்சலோடு 'பிழை திருத்துவேன்' என்றார். அப்படியே அந்தப் பணியைத் தொடர்ந்தார். பாராட்டும் பெற்றார்.

இன்னொரு நாள் பத்திரிகை ஆசிரியர் வராததால், அவர் எழுதவேண்டிய தலையங்கத்தை நீங்கள் எழுத முடியுமா? எனக் கேட்டார்கள். 'முடியுமே' என்று அதற்கும் சம்மதித்து விட்டார். அன்று அவர் எழுதிய தலையங்கம் அவர் தலைவிதியையே மாற்றியது. அந்த அலுவலகத்தில் சாதாரண பணியில் சேர்ந்த அவர், அந்தப் பத்திரிகையில் ஆசிரியராக உயர்த்தப்பட்டார்.

ஆகவே சகிப்புத் தன்மை, விடா முயற்சி, உழைப்பும் இருந்தால் யாருமே எந்த நிலையிலும் உயரலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்த கவியரசர் கண்ணதாசன் பசும் பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுகூடல் பட்டியில் இன்றுதான் (24.06.1927) பிறந்தார்.

## ஜூன்-25 தமிழுக்குழைத்த...

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், வடமொழி ஆங்கிலம் இப்படி பல மொழிகளறிந்த புலமை மேதை வெங்கடராசுலு செட்டியார்.

பலரிடம், பல இடங்களில் இவரின் கல்வித் தொடர்ந்தது. தாமே தனித்துப் படித்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தேர்வெழுதி வித்வான் பட்டத்தைப் பெற்றார்.

நெல்லை, சிவகாசி போன்ற கல்வி நிலையங்களில் பயிற்சி பெற்றதோடு, சிதம்பரம் பண்டிதர் போதனா முறைக் கல்லூரியில் பயிற்சி பெற்றார்.

இவரின் தமிழறிவைக் கண்ட உ.வே.சா.அவர்கள் ஆசிரியராக நியமித்தார். பின்னர் கா.நமச்சிவாய முதலியார் உதவியுடன் 1927-இல் சென்னைப் பல்கலைக் கழக 'லெக்சிகன்' குழுவில் இணைந்து - கீழ்நாட்டு கலையாராய்ச்சிக் கழகத்தில் விரிவுரையாளராக ஆனார். இப்பணியில் இவர் இருபது ஆண்டுகள் இருந்தார்.

இவர் மொழியாராய்ச்சிகள் செய்ததோடு, தொல்காப்பியம் - எழுத்ததிகார ஆய்வும் செய்தார்.

பல இலக்கண கட்டுரைகள் எழுதியதோடு, நாங்குநேரி தல வரலாற்றை ஆயிரம் செய்யுட்களில் வடித்து வைத்தார்.

இவரது மொழியாற்றலும், பேச்சாற்றலும், செயல் திறனையும் அறிந்த புலவர் பெருமக்களான, தெ.பொ.மீ., உ.வே.சா. நமச்சிவாயர், திரு.வி.க. போன்றோர்கள் பாராட்டிச் சிறப்பித்தனர்.

வாழ்நாளெல்லாம் தமிழ் வாழ்வே என்று எண்ணிய இந்த இலக்கணப் பெருங்கடல், திருமணமே செய்து கொள்ளாது, தெள்ளுதமிழுக்காக தொண்டாற்றி வாழ்ந்தவர்.

இந்த திராவிட மொழியறிஞர் நெல்லை - சமுகரங்கபுரம் எனும் சிற்றூரில் இன்றுதான் (25-06-1893) பிறந்தார்.

❑

## ஜூன்-26 சிலம்புச்செல்வர்

என் மகன் இளம் வயதிலேயே இறந்துவிட்டான். துக்கம் தாளாது மூன்று நாட்கள் படுத்த படுக்கையாகக் கிடந்தேன். எனது துயரை வெளிப்படுத்த என்ன செய்யலாம் என்று ஆராய்ந்தேன்.

நான் கற்றுணர்ந்த இலக்கியங்களில் எந்தெந்த நாயகர்கள் புத்திர சோகத்தால் பரிதவித்திருக்கிறார்கள் என யோசித்த போது, இராமாயணத்தில் தசரதனின் புத்திர சோகமும், மகாபாரதத்தில் அர்ச்சுனனின் புத்திர சோகமும் என் கண்முன் தோன்றின. இவர்களது சோகத்தோடு, என் சோகத்தையும் கலந்து 'இலக்கியத்தில் புத்திர சோகம்' என்ற நூல் எழுதத் தொடங்கினேன்.

இந்தப் புத்தகத்தை எழுதும்போது கண்ணீர் வடிந்து கொண்டேயிருந்தது. ஒருநாள் இதைக் கண்ட என் மனைவி அப்புத்தகம் எழுதுவதை நிறுத்தச் சொன்னாள். என் மீதுள்ள பாசத்தால்.... இப்படிச் சொன்னவர்...

இரண்டாம் வகுப்பு மட்டுமே படித்து இளம் வயதிலேயே குழந்தைத் தொழிலாளியாக அச்சுக் கூடத்தில் வாழ்க்கையைத் தொடங்கி அருந்தமிழில் பற்றுக் கொண்டு 39-வயதில் தமிழைக் கற்கத் தொடங்கி, பின்னர் 'டாக்டர்' பட்டம் பெறுகின்ற அளவில் தமிழில், தமிழ் இலக்கியங்களில் சிறப்பிடத்தைப் பெற்றவரும்... தமிழக எல்லைப் போரில் முன்நின்றவரும்...

விடுதலைப் போரில் ஈடுபட்டு, ஆறுமுறை சிறை சென்ற அனுபவமும் அவருக்குண்டு; தமிழையும் - தேசியத்தையும் இருவிழிகளாகக் கொண்டவர்; 'வள்ளலார் கண்ட ஒருமைப் பாட்டை எழுதியளித்தவர். 'தமிழ்முரசு', 'தமிழன் குரல்' - 'பாரதி', 'செங்கோல்' போன்ற ஏடுகளுக்கு ஆசிரியராக இருந்து இலக்கியத் தொண்டு செய்தவர், பல்வேறு அமைப்புகளில் பதவி வகித்தவர்; பலநாடுகளுக்கு பயணம் செய்து பைந்தமிழை வளர்த்தவர்... சிலம்புச் செல்வர் என்று தமிழ் நெஞ்சங்களால் அன்போடு அழைக்கப்பட்ட ம.பொ. சிவஞானம் அவர்கள்தான்.

இந்த செந்தமிழ் வேந்தர், சிலம்புச் செல்வர்; சென்னையில் இன்றுதான் (26-06-1906) பிறந்தார்.

## ஜுன்-27 அதிசயப்பெண்

ஒருவருக்கு உடலில் ஒரு உறுப்பில் குறை என்றாலே அவர்களால் எதையும் செய்ய முடியாது தவிப்பார்கள். தத்தளிப்பார்கள். வாழ்க்கை மூலியாகிவிட்டது என்று மூலையில் போய் உட்கார்ந்துவிடுவார்கள். ஆனால், ஒருவருக்கு வாய்பேச முடியாமலும், காது கேட்க முடியாமலும், பார்வை இல்லாமலும் இருந்தால் அவரால் இந்த உலகில் எப்படி வாழ முடியும்? ஆனால், அந்தப் பெண் வாழ்ந்திருக்கிறார். படித்திருக்கிறார். பலர் பாராட்ட அரும்பெரும் சாதனைகளைச் செய்து இருக்கிறார். இதுவே உண்மை. அந்தப் பெண் குலத்து பொன் விளக்கு, ஹெலன் கெல்லர்.

கெல்லரை, அவரது பெற்றோர், டெலிபோனைக் கண்டுபிடித்த கிரகாம் பெல்லிடம் அழைத்துச் சென்றனர். பாதிப் பார்வை இழந்திருந்த ஓர் ஆசிரியை கெல்லருக்குக் கல்வி கற்பிக்க அவர் ஏற்பாடு செய்தார். அந்த ஆசிரியை ஹெலனுக்கு எல்லா விசயங்களையும் கற்றுக் கொடுத்தார்.

இருபது வயதிற்குள் அனைத்தையும் தெரிந்து கொண்டார். ஹெலன் 1904-இல் முதுகலைப் பட்டம் பெற்றார். தன்னைப் போன்றவர்களின் வளர்ச்சிக்காகதமது வாழ்நாளை செலவிடத் திட்டமிட்டார். தன் போராட்டத்தையும், வெற்றியையும் நூல்களாக எழுதினார். பல நாடுகளுக்குச் சென்றார். சொற்பொழிவுகளாற்றினார்.

பலருக்கு அவர் பொழிவு வாழ்வில் நம்பிக்கையைத் தந்தது. பிறர் பேசுவது ஹெல்லருக்கு கேட்காது அல்லவா...? அவ்வேளை களில் பேசுபவருடைய தொண்டையில் தமது கை விரல் படும்படி வைத்து அங்கு ஏற்படும் அசைவு களிலிருந்து என்னப் பேசப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வார். இப்படியெல்லாம் அற்புத ஆற்றல்களைத் தம்மிடம் வளர்த்துக் கொண்டதால் 'அதிசயப் பெண்' என்று அவரை அழைத்தனர். பார்வை இழந்தவர்களுக்கான பள்ளிகளை ஏற்படுத்தினார்.

இத்தன்னம்பிக்கையின் தலைவி இன்றுதான் (27-06-1880) பிறந்தார்.

❐

## ஜுன்-28 ‘எமிலி’

ரூசோ, ஜெனீவா நாட்டுக் குடிமகனான ஒரு கடிகாரம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த ஐசாக் ரூசோ என்பவருக்கு மகனாகப் பிறந்தார்.

ரூசோ பிறந்த ஒரு சில நாள்களிலேயே தாய் இறந்து விட்டார். ரூசோவின் கல்வி மிக இளமைக் காலத்திலேயே தொடங்கிவிட்டது எனலாம்.

தன் தகப்பனாரின் நூலகத்திலிருந்த நூல்களைப் படித்தறிந்தார். நாவல்கள், கட்டுரைகள், நாடகங்கள் போன்ற வற்றைப் படிக்க ஆரம்பித்தார், ரூசோ. அதன் பயனாக, ப்ளூடார்ச் போன்ற வரலாற்றாசிரியர்களின் படைப்புகள் மற்றும் சில நன்னெறி போதகர்களின் படைப்புகள் போன்றவற்றிலும் மனதைத் திருப்பினார்.

ரூசோ, தன் தந்தையாரின் பணிமனை மற்றும் தொழிலாளர்களின் சங்கங்கள், ஓய்வு இடங்கள் ஆகியவற்றில் நடைபெற்ற விவாதங்களில் பங்கு கொண்ட காரணத்தால், ஜனநாயகக் கோட்பாடுகள் அவரது உள்ளத்தில் ஆழமாய் பதிவாயின.

ரூசோ தன் வாழ்நாளில் பல்வேறு தொழில்களைச் செய்தார்... ஒருவரிடம் செதுக்கும் பணியாளராகவும், கையாளாகவும் பணி செய்தார்.

குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியராகவும், செல்வந்தர்கள் வீட்டுப் பெண்களுக்கு இசைபோதகராகவும், பிரெஞ்சு தூதருக்கு தனிச் செயலர் பணியாளராகவும், இப்படி பல.

மக்களின் மேம்பாட்டிற்காக ரூசோ, நாவல்கள், வரலாறுகள், கட்டுரைகள், கடிதங்கள் என்று பல படைப்பு களை படைத்தார். அவருடைய நாவல்கள் ‘லா நாவல் ஹெலாய்ஸ்’ மற்றும் ‘எமிலி’ என்பவை மிக்க பரபரப்பை உண்டாக்கியவை. அவரது ஏற்புகளும் - சுயசரிதையும் ஒவ்வொருவரும் ஓதவேண்டிய ஒன்றாகும்.

இந்த எழுத்து மேதை ஜெனீவாவில் இன்றுதான் (28-6-1712) பிறந்தார்.

## ஜூன்-29 புள்ளியியல்...

புள்ளியல் மூலம் வானிலையைப் பற்றி மிக நுணுக்கமாக தெரிந்து கொள்ள முடியும் என்று ஆதாரப் பூர்வமாக நிருபித்தவர்,பி.சி.மகளநோபிஸ்.

இவர் கொல்கத்தா பல்கலைக் கழகத்தில், 1912-ஆம் ஆண்டு இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றார். பின் இங்கிலாந்து சென்று கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் 1915-இல் எம்.ஏ.பட்டம் பெற்றார்.

கொல்கொத்தாவிலுள்ள மாநிலக் கல்லூரியில் இயற்பியல் பேராசிரியராகவும், 1922-இல் கொல்கத்தா பல்கலைக் கழகத்தில் இயற்பியல் துறைத் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

வங்காள அரசின் புள்ளியியல் துறை அறிவுரையாளராகவும், இந்திய அரசின் புள்ளியியல் துறை அறிவுரையாளராகவும், இந்திய புள்ளியியல் நிலையத்தின் செயலாளர் மற்றும் இயக்குநராகவும் இப்படி பல பதவிகள் வகித்தார்.

50 ஆண்டுகளாக வடக்கு வங்கத்தின் நதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தின் அளவை புள்ளியியல் மூலம் கணக்கிட்டு சரியான வடிகால் வசதி இல்லாததே சேதத்திற்கு காரணம் என நிருபித்தார்.

அவரது புள்ளியியல் ஆய்வு ஆலோசனையின் காரணமாக வடக்கு வங்கத்தின் வெள்ளப் பெருக்கு கட்டுப்படுத்தப் பட்டது.

புள்ளியியல் துறையில் உலக அளவில் இந்தியாவிற்கு உரிய இடம் கிடைப்பதற்கு, பாடுபட்ட இவர் கொல்கத்தாவில் இன்றுதான் (29-06-1893) பிறந்தார்.

❑

பனாமா கால்வாயைக் கட்டி முடித்த அமெரிக்க பொறியாளரான ஜார்ஜ்.ஜி.கோதல்ஸ் என்பவரும் இன்றுதான் (29-06-1858) பிறந்தார்.

❑

ஹாலிவால் நட்சத்திரத்தைக் கண்டுபிடித்த அமெரிக்க வான சாஸ்திர அறிஞரான ஹாலியும் இன்றுதான் (29-06-1868) பிறந்தார்.

❑

## ஜூன்-30 கவிதை ஆராய்ச்சி

செஸ்லா மிலாஷிற்கு கவிதை உயிர் என்றாலும், கல்லூரியில் படிக்கும்போது சட்டத்துறையையே தெரிவு செய்திருந்தார்.

செஸ்லாவின் முதல் படைப்பு 'உறைபனிக் காலத்துக் கவிதைகள்' எனும் தலைப்பில் 1933-இல் வெளிவந்து, அவருக்கு புகழ் ஒளியைத் தந்தது.

இலக்கியவாதியாக மட்டுமின்றி, அரசியல்வாதியாகவும் இருந்தார். கட்டுரைகள் எழுதுவதிலும் சிறந்தோங்கிய செஸ்லா 1957-இல் 'கவிதை ஆராய்ச்சி' என்ற நூலை வெளியிட்டார்.

கவிதை நடை கட்டுரையாகவே அது இருந்தது. இத்தொகுப்பு நல்ல விற்பனையில் முன் நின்றது. 1959-இல் 'ராப்ஜினா யூரோப்பா' எனும் பெயரில் தன் வாழ்க்கை வரலாற்றை மாறுபட்ட கோணத்தில் எழுத, அது அவரை உலக எழுத்தாளராக்கியது.

கட்டுரை, கவிதை என்பதோடு நாவலும் எழுதத் தொடங்கினார். 'டாலினா இஸ்ஸி' ஓர் ஒப்பற்றதாகப் போற்றப்பட்டது. 1981-இல் 'இஸ்ஸா பள்ளத்தாக்கு' என்ற நாவல் ஆங்கிலத்தில் வெளிவந்தபோது, இவரை உலகமே வியந்து பார்த்தது.

அதேபோல் 'கார்காலத்து மணியோசைகள்' கவிதையும் போற்றப்பட்டது.

இந்த எழுத்தாளர், போலந்துக்குச் சொந்தமாயிருந்த லித்துவேனியாவின் வில்னோவில் இன்றுதான் (30-06-1911) பிறந்தார்.

❑

புகழ்பெற்ற இங்கிலாந்து ஓவியர் சர்.ஸ்டான்லி ஸ்பென்ஸர் என்பவரும் இன்றுதான் (30-06-1891) பிறந்தார்.

❑

[முதல் தொகுதி
நிறைந்தது]